
சாண்டில்யன்
மூங்கில்
கோட்டை
வானதி பதிப்பகம்

# மூங்கில் கோட்டை

சாண்டில்யன்

வானதி பதிப்பகம்
23, தீனதயாளு தெரு,
தி.நகர், சென்னை—17.

| | | |
|---|---|---|
| முதற் பதிப்பு | : | பிப்ரவரி, 1967 |
| பதினான்காம் பதிப்பு | : | ஆகஸ்ட், 1997 |
| பதினைந்தாம் பதிப்பு | : | ஜூலை, 1999 |
| பதினாறாம் பதிப்பு | : | டிசம்பர், 2000 |
| பதிழோம் பதிப்பு | : | ஆகஸ்ட், 2003 |
| பதினெட்டாம் பதிப்பு | : | ஜூலை, 2005 |
| பத்தொன்பதாம் பதிப்பு | : | டிசம்பர், 2006 |
| இருபதாம் பதிப்பு | : | டிசம்பர், 2007 |
| இருபத்து ஒன்றாம் பதிப்பு | : | ஜனவரி, 2009 |
| இருபத்து இரண்டாம் பதிப்பு | : | ஜனவரி, 2010 |
| இருபத்து மூன்றாம் பதிப்பு | : | டிசம்பர், 2010 |
| இருபத்து நான்காம் பதிப்பு | : | ஜனவரி, 2012 |

Copyrights with the Author

திருநாவுக்கரசு தயாரிப்பு

---

விலை : **ரூ.65.00**

| | | |
|---|---|---|
| TITLE | : | **MOONGIL KOTTAI** |
| AUTHOR | : | **SANDILYAN** |
| SUBJECT | : | Historical Novel |
| LANGUAGE | : | TAMIL |
| EDITION | : | Twenty Fourth Edition, January, 2012 |
| PAGES | : | 256 |
| PUBLICATION | : | **VANATHI PATHIPPAKAM**<br>23, Deenadayalu Street,<br>Thyagaraya Nagar, Chennai - 600 017.<br>☎ 24342810 / 24310769<br>E-Mail : vanathipathippakam@gmail.com<br>Website : vanath.in |
| Price | : | **Rs.65.00** |

---

*Laser Typeset at :*
**SM Graphics,** CHENNAI-600 071.
Printed at : Novena Offset Printing Co., Chennai - 5 ☎ 28446891, 28446166

# முன்னுரை

'மூங்கில் கோட்டை' என்ற இந்த நாவல், இளவயதில் அரியணை ஏறிய பாண்டியன் நெடுஞ் செழியன் தலையாலங்கானத்துச் செருவென்ற வரலாற்றை அடிப்படையாகக் கொண்டது. இளவயதுள்ள நெடுஞ்செழியன், சோழர், சேரர் முதலிய எழுவர் படைகளைத் தலையாலங் கானத்தில் முறியடித்து சேரமானான யானைக் கண்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறையையும் சிறைப்பிடித்தான். சிறைப்பிடித்ததன்றி, சிறை வைத்த இடத்தைச் சுற்றிலும் அகழிகளை வெட்டி அவற்றின் மேல் மூங்கில்களைப் பரப்பி மறைத்து வைத்ததால், சேரனை விடுவிக்க வந்த யானைப் படைகள் அந்த அகழிகளில் வீழ்ந்து அழிந்து போனதாக வரலாறு கூறுகிறது. இத்தகைய கொடுஞ்சிறையினின்று யானைக்கண்சேய் தந்திரத்தால் தப்பியதாகவும் குறிப்புகள் காணப் படுகின்றன.

இக்குறிப்புகளை, "பண்டை நாளையச் சேர மன்னர்கள்" என்ற வரலாற்று நூலில் பேராசிரியர் ஔவை சு. துரைசாமிப்பிள்ளை அவர்கள் மிகத் தெளிவாகத் தந்திருக்கிறார்கள். சேரனிடம் அன்பு மிக்க குறுங்கோழியூர்க்கிழார் என்ற புலவர், சேரமான் தப்பியது குறித்துப் பாடிய சிறப்புப்

பாடல்களும் மேற்படி வரலாற்று நூலில் இடம் பெற்றிருக்கின்றன. தவிர இந்த மூங்கில் கோட்டை சம்பவத்தைப் பற்றி ஸ்ரீ புஞ்சா முதலிய ஆசிரியர் களும் குறிப்புகள் எழுதியிருக்கிறார்கள்.

இந்த வரலாற்று நிகழ்ச்சியை அடிப்படை யாகக் கொண்டு புனையப்பட்ட நாவல்தான் 'மூங்கில் கோட்டை.' இதில் கதாநாயகன், கதா நாயகி, சித்தர், பாண்டிய சேனாதிபதி ஆகியவர் களைத் தவிர மற்றவர்கள் வரலாற்றில் இடம் பெற்றவர்கள். இந்தச் சிறு வரலாற்று நிகழ்ச்சி யைப் பெரும் கதையாகவும், நவரசங்களும் இணையும்படியாகவும் அமைக்க, கூடியவரை கற்பனையை ஒட்டியிருக்கிறேன்.

இந்த நவீனம் மலேசியா நாட்டின் 'தமிழ் நேசன்' பத்திரிகையில் தொடர்கதையாக வெளி வந்தது. மலேசிய நாட்டு மக்கள் பெரிதும் ரசித்த இந்த நவீனம் இப்புத்தக வாயிலாகவும் மக்களுக்குச் சமர்ப்பிக்கப்படுகிறது. தமிழ் மக்கள் வழக்கம்போல் இந்தப் புத்தகத்துக்கும் ஆதரவு தருவார்களென்பதில் ஐயமில்லை. இந்த நவீனத்தைத் தொடர்கதையாகப் பிரசுரித்த 'தமிழ்நேசன்' காரியாலயத்துக்கும், புத்தக வடிவில் கொண்டு வந்த வானதி பதிப்பகத்துக்கும் எனது நன்றி உரித்தாகும்.

**சாண்டில்யன்**

# மூங்கில் கோட்டை

## 1

## கதவு திறந்தது! நிலவு தெரிந்தது!

பார் புகழும் புலவருக்கெல்லாம் புகலிடமாகவும் சீர்மிகு கவிதைகளைச் சீர்தூக்கித் தகுதி சொல்லும் சங்கப் பலகை மிதக்கும் பொற்றாமரைப் பொய்கையைப் பெற்றெடுத்த புண்ணிய பூமியாகவும், அங்கயற்கண்ணியின் அருள்விழி நோக்கால் அபரிமிதமான செல்வம் பெற்ற சிறப்புத் தலமாகவும், கிறிஸ்து தோன்றி இருநூற்றுப்பத்து ஆண்டுகளுக்குப் பின்னர் அரசர் எழுவரின் புறமுதுகு கண்ட இளங்கோமானொருவனை அரியணையில் கொண்டதால் அவனியிலே பெரும் வீரத்தளம் எனப் போற்றப்பட்டதுமான மதுரை மாநகரை எல்லையிலிருந்தே ஏறெடுத்து நோக்கிய வீரனான இளமாறனின் கூரிய விழிகளில் வியப்பு மிதமிஞ்சி மண்டிக் கிடந்தது.

தொலை தூரத்திலேயே பெரியதாகத் தெரிந்த அந்த மாநகரத்தின் மாளிகை மகுடங்கள் கிட்ட நெருங்க நெருங்க ஆகாயத்தை அளாவி நின்றதையும், தொலைவிலிருந்த பாதுகாப்பைவிட நகர எல்லைப் பாதுகாப்பு அதிக பலத்துடன் இருந்ததையும் பார்த்த இளமாறன், பத்தொன்பது

ஆண்டுகள் பூர்த்தி பெற்ற பாண்டியன் நெடுஞ்செழியன் அத்தனை சிறுவயதில் பாராளும் வித்தையை எப்படிப் பயின்றான் என்று தன்னைத்தானே பலமுறை கேட்டுக் கொண்டாலும் விடை காணாததால், தான் ஊர்ந்து வந்த புரவியைச் சரேலென நிறுத்தி மதுரை மாநகரின் அழகைக் கண்களால் பருகலானான்.

அப்பொழுது அந்திவேளை நெருங்கிவிட்டதால் காதலனின் முதல் முத்தம் பெற்ற கன்னிப் பெண்ணின் கன்னம்போல் வானம் சிவந்து கிடந்தது. அப்படி அடைந்த நாணத்தை மறைக்க இஷ்டப்படும் பருவப் பெண் தாயிடம் சென்று முகத்தை மறைத்துக்கொள்ளுவதுபோல வானத்தின் சிவந்த பகுதி தூரத்தே மதுரையன்னையின் மடிக்குள் இணைந்து கிடந்தது. அந்தக் கன்னியின் நாணத்தைக் கண்டு எள்ளி நகையாடுவன போல மாளிகை மகுடங்களின் பொந்துகளிலிருந்து தலை நீட்டிய பட்சி ஜாலங்கள் சப்தித்தன. அந்த நகைப்பில் பங்குகொள்ள இஷ்டப்பட்ட மற்றும் சில பறவைகள் வானில் கூட்டமாய்ப் பறந்து திடீரென ஜிவ்வென்று மாளிகைகளின் உச்சிகளில் இறங்கி தங்கள் சிவந்த வாய்களைத் திறந்து பலப்பல விதமாகக் கூவத் தொடங்கின.

காதல் கொண்ட கன்னியரை எள்ளி நகையாடுவது அவர்கள் நாணத்தையும் சங்கடத்தையும் மிகைப்படுத்தி, வேதனையையும் அளிக்குமாகையால், அத்தகைய செயல் களில் ஈடுபடுவதை எச்சரிக்க முற்பட்டனபோல் பாண்டிய மன்னனின் மாளிகையிலிருந்து இசைக் கருவிகள் சில கம்பீரமான இசையொலிகளைக் கிளப்பின. காலத்தால் அழியும் காதலுக்கும் மேற்பட்ட காதலொன்றுண்டு என்பதை பறையறைவிப்பனபோல் அங்கயற்கண்ணியின் ஆலயத்தி லிருந்து புலவர்கள் இசைத்த தெய்வ கீதமும் பெரிதாகக்

கிளம்பி மதுரையம்பதியின் வானத்திலே தவழ்ந்து திசை யெங்கும் பரவியது.

அந்தத் தெய்வ கீதத்துக்குத் தாளம் போடுவதுபோல் சலசலப்புடன் மண்ணை அரித்து ஓடிக்கொண்டிருந்த வைகை மாநதியில் மறையவர் பலர் மாலைக் கடன்களை முடித்துக் கைகளில் நீரை எடுத்து மறையும் ஆதவனை அசுரர்களிடமிருந்து விடுவிக்க மந்திர வாளிகளை வீசிக் கொண்டிருந்தனர். ஆற்று நீரின் மேல் பகுதியில் மறையவர் களிடமிருந்து பெரும்பாலும் தள்ளி நீராடிக்கொண்டிருந்த பருவ மங்கையர்கள் தங்கள் பொன்னிற மேனிகளுக்கு மஞ்சள் பூசியதால் ஏற்பட்ட கைவளை ஒலிகளும், மார்பில் ஆடிய அணிமணியாரங்களின் ஒலிகளும் கலந்து மறையவரின் மந்திரோச்சாடனத்தைச் சிறிதும் காதில் விழாமல் அடிக்கவே செய்தன. இந்தக் காட்சியைப் பார்த்துக் கொண்டே மதுரையின் எல்லையாகிய வைகையாற்றங் கரையில் நின்ற இளமாறன் இருடிகளின் தவத்தைக் கெடுக்க இந்திரன் ஏன் மங்கையரை ஏவினான் என்பதைப் புரிந்துகொண்டான்.

நீராடிய அந்த மங்கையர் அரித்து ஓடிய நீரில் முழுதும் முழுக முடியாததால் சிலர் தரையிலேயே உட்கார்ந்து வெண்கலக் கிண்ணங்களால் நீரை எடுத்துத் தலையில் ஊற்றிக்கொண்டதால் ஆடைகள் பாதி நனைந்தும் நனையாமலிருந்ததையும், இரண்டாவது கிண்ணம் ஊற்றப்படுமுன் அந்த மங்கையர் ஒடுங்கி உட்கார்ந்து சீலைகளை மெல்லக் கசக்கி நனைத்துக்கொண்டதையும் கண்ட இளமாறனின் உணர்ச்சிகள் கட்டுக்கடங்காமல் போய்க்கொண்டிருந்தன.

பருவத்தை அடையாமல் பருவத்தை எட்டிப் பார்த்துக் கொண்டிருந்த சிறுமிகள் பலர் அரித்து ஓடிய நீரில்

மல்லாந்து படுத்துக்கொண்டு வைகையின் குளிர்ந்த நீரை அனுபவித்ததன்றி வாயிலும் நீரை உறிஞ்சி வாணம்போல் மேலே ஊதி இன்பநகை நகைத்தார்களானாலும் பருவத்தைத் தாண்டிய சில நாரிமணிகள் அந்தப் பெண்கள் ஊதிய நீர்த்திவலைகள் அவர்கள் மார்புகளின் மீதே மீண்டும் விழுவது கண்டு, 'சே! சே! எத்தனை சுத்தக் குறைவு!' என்று அலுத்துக்கொண்டனர். ஆனால், சுத்தக் குறைவை எண்ணிப் பார்க்கும் வயதை எட்டாத அந்த இளம்பெண்கள், பெரியவர்களின் அலுப்பை லட்சியம் செய்யாமலே வைகையின் மடியிலே படுத்து விளையாடினர். அந்த விளையாடலைக் கண்டு மகிழ்ந்த வைகைத் தாய் மீண்டும் மீண்டும் தனது தண்புனலை அந்தப் பெண்கள் மீது பாய்ச்சிக்கொண்டிருந்தாள். இப்படி அந்தப் பலதரப் பட்ட பெண்களின் நீரோட்டத்தின் போது களையப்பட்ட நறுமலர்கள் பல, நீரோட்டத்தில் கலந்து ஓடிய வைகை நீரோட்டத்தைப் பூ ஓட்டமாகச் செய்திருந்தது. அந்தப் பூ ஓட்டத்தின் விளைவாக மறையவர் கையில் எடுத்த மந்திர நீரிலும் இரண்டொரு புஷ்பங்கள் இருந்தாலும் கண்மூடி மந்திரமோதிய மறையவர், அந்த அநாசாரத்தைப் பார்க்காமலே ஆதவனை நோக்கி நீர் வீசிவிட்டதைக் கவனித்த இளமாறனின் இதழ்கள் இளநகை கொண்டன. 'அசுரரைக் கொன்று ஆதவனை விடுவிக்கப் போவது, அந்தணர் ஓதிய மந்திர நீரா, அந்த நீருடன் சென்ற மலர்க் கணைகளா?' என்று தன்னைத்தானே கேட்டுக்கொண்ட இளமாறன் வைகை நதியின் அந்த அந்திக் காட்சியைக் கண்டு பெரும் பிரமிப்புக்குள்ளாகி நின்றான்.

மதுரையை அணைத்தோடிய அந்த வைகையில் அத்தனை அழகிருந்ததன்றி அந்த அழகின் பாதுகாப்புக்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததைக் கவனித்தான் இளமாறன்.

வைகை ஆற்றங்கரை ஓரமாகவும், அதன் மீது இரண்டோர் இடங்களில் நிறுவப்பட்டிருந்த மூங்கில் பாலங்கள் மீதும் வீரர்கள் பலர் காவல் புரிந்திருந்ததைக் கண்ட இளமாறன் இங்கு அரச நீதிக்குப் புறம்பாக எதுவும் நடக்க இயலா தென்ற முடிவுக்கும் வந்தான். வைகை மீது கிழக்கிலும் மேற்கிலும் நிறுவப்பட்டிருந்த இரண்டு மூங்கிற்பாலங்களின் கீழ்ப்பகுதியில் பெரு மூங்கில்கள் வெளிப்படையாகத் தெரிந்தனவேயொழிய மேல் பகுதியில் களிமண்ணடைத்துச் செம்மண் நிறுவிச் சாணமும் மெழுகப்பட்டிருந்ததால் பாலம் கல் கட்டடத்தைவிடக் கெட்டிப்பட்டு ஆயுத வண்டிகளும் புரவி வீரர் கூட்டமும் இரதங்களும் செல்லக் கூடிய முறையில் இருந்ததைப் பார்த்த இளமாறன், அந்த இரண்டு பாலங்களையும் தாண்டி நகருக்குள் நுழைவது அத்தனை எளிதல்லவென்பதை பாலங்களைக் கண்ணுக்குக் கண் காவல் செய்துகொண்டிருந்த வீரர் கூட்டத்திலிருந்து புரிந்துகொண்டான். தவிர, பாலத்தைத் தாண்டி வெளியி லிருந்து ஊருக்குள்ளும், ஊரிலிருந்து வெளியேயும் சென்று கொண்டிருந்த அணிவகுத்த காலாட் படையினர் வரிசை களும் நகரத்தைத் திடீரெனத் தாக்குவதோ, அசப்பில் வீழ்த்த முயலுவதோ பெரும் விபரீதத்தையே விளைவிக்கும் என்பதை அறிவுறுத்தின.

வைகையிலிருந்தும், வைகையின் இரு மூங்கிற் பாலங் களிலிருந்தும் கண்களை மதுரை மாநகரின் பெரும் கட்டடங்களை நோக்கித் தூக்கிய இளமாறன், வான் வழியாக வரும் வசதி வாய்ந்த தெய்வக் கூட்டங்கள் கூட பாண்டியன் நெடுஞ்செழியன் அறியாமல் அந்த நகருக்குள் தலைகாட்ட முடியாதென்பதை சந்தேகமற உணர்ந்து கொண்டான். நகரமெங்கணும் எழுந்து நின்ற பெரும் மாளிகைகளின் மகுடங்களையும் மீறி வானத்தைத் தொடுவனபோல் நின்ற

சுமார் பன்னிரண்டு காவற்கூட உப்பரிகைகள் வரிசையாக மேலிருந்து கீழாக மும்மூன்று பெரும் பிறைகளை உடையன வாக இருந்ததையும், அந்தப் பிறைகளில் காவலர் பலர் மதுரையின் எல்லைகளில் கண் வைத்துக் காவல் செய்து வந்ததையும் புள்ளி புள்ளிகளாகத் தெரிந்த உருவங் களிலிருந்து ஊகித்துக்கொண்டான் இளமாறன். அந்தக் காவற்கூட உப்பரிகைகளின் உச்சியிலிருந்து கண்காணித்து வரும் வீரர்களின் பார்வையிலிருந்து அரைக் காதத்திற்கு அப்புறம் வரும் எந்த எதிரிப் படையும் தப்ப முடியா தென்பதையும் உணர்ந்துகொண்ட அந்த வாலிபன், அப்படி எதிரிப்படை ஏதாவது தென்பட்டால் நிமிட மாத்திரத்தில் மதுரையின் பெரும் வாயில்களை அடைத்துவிட ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததையும் தூரத்தே தெரிந்த முதல் வாயிலிலிருந்தே தெரிந்துகொண்டான். அப்படி ஏதாவது எதிரிகள் வரும் பட்சத்தில் வைகையின் மூங்கில் பாலங் களை உடைத்துவிட முடியுமென்றும், மணலில் ஓட முடியாத எதிரி வீரர்களை மதிற்சுவர்களில் இருந்து வேலும் அம்பும் வீசி மாய்த்துவிட முடியுமென்றும், அப்படியும் மாய்த்து விடாமல் மீறி எதிர்க்கரையையடைபவர்கள் மதில் முனையில் காவல் புரியும் வீரர்களால் எதிர்க்கப்படுவார்கள் என்பதையும் மதிலின் மேல்புறத்தையும் கீழ்ப்புறத்தையும் பார்த்துப் புரிந்துகொண்ட இளமாறன், 'இத்தனை பாதுகாப்புள்ள நகரத்தில் நான் என்ன செய்ய முடியும்? எதற்காக என்னை இங்கு வரச் சொன்னார்கள்?' என்று தன்னைத்தானே கேட்டுக்கொண்டான்.

அத்துடன் தனக்கு வந்த ஓலையையும் கச்சையிலிருந்து எடுத்துப் புரவியில் உட்கார்ந்தபடியே படித்துப் பார்த்தான். 'அரச வீதிக்கு முன்னாலுள்ள வணிகர் வீதியில் மகர மாளிகைக்கு வரவும், விஷயம் முக்கியம்' என்ற இரண்டே

வரிகள் அந்த ஓலையில் இருந்தது. சாதாரண ஓலையாய் இருந்தால் அதைக் கிழித்தெறிந்திருப்பான் இளமாறன். ஆனால், அதில் சேரநாட்டு அரச முத்திரை பொறிக்கப் பட்டிருந்தது. வில்லும் வேலும் பொறிக்கப்பட்டிருந்த முறையை மீண்டும் அந்த அந்தி வேளையின் மங்கிய ஒளியில் ஆராய்ந்த இளமாறன், "சந்தேகமில்லை, இது அரச முத்திரைதான். அப்படியானால் அரசர்..." என்று ஏதோ தனக்குள் சொல்லிக்கொள்ளப்போன இளமாறன், 'இருக்காது, இருக்க முடியாது. அரசர் இருக்குமிடந்தான் யாருக்கும் தெரியவில்லையே' என்று தானாக ஏதோ தீர்மானம் செய்துகொண்டு மதுரையின் மூங்கிற்பாலத்தை நோக்கித் தன் புரவியை நடத்தினான்.

புரவியில் மிக அலட்சியமாகவும் கடிவாளக் கயிற்றைக் கூடச் சரியாகப் பிடிக்காமலும் உட்கார்ந்து சென்ற அந்த வாலிபனைக் கண்டு, நீராடிவிட்டுக் கரையோரமாகச் சென்ற மங்கையர் பலரும் தங்களுக்குள் பலப்பல விதமாகப் பேசிக் கொண்டனர். 'எத்தகைய இளைஞன்! என்ன அழகு இவனுக்கு!' என்றாள் ஒருத்தி. 'ஊருக்குப் புதியவன் போலிருக்கிறது!' என்றாள் மற்றொருத்தி. 'ஊருக்கென்ன? பாண்டிய நாட்டுக்கே புதியவனாயிருக்க வேண்டும்' என்றாள் இன்னொருத்தி. 'இல்லாவிட்டால் மதுரையில் நுழைவது சுலபமென்று நினைத்து ஆணவத்துடன் புரவியில் அமர்ந்திருப்பானா இவன்?' என்று கேட்டாள் வேறொருத்தி. இப்படிக் கேள்விகள் பலபடி அவர்களிடமிருந்து வந்தாலும், அவர்கள் அனைவர் மனத்திலும் அந்த வாலிபனின் அழகும் கம்பீரமும் ஊடுருவி நின்றன.

சேர நாட்டவனான இளமாறனுக்கு வயது இருபது ஆகியிருந்தும் முகத்தில் அந்த வயதுக்குண்டான அத்தாட்சி இல்லாமல் குழந்தையின் பால்முகம்போல அவன் வதனம்

காட்சி அளித்தது. அவனுடைய செவ்விய இதழ்கள் பெண் களின் இதழ்கள்போல மென்மையாகவே இருந்ததன்றி மேல் உதட்டின் மேல் உதயமாகிக்கொண்டிருந்த அரும்பு மீசையும் அதிக வீரத்தைக் காட்டவில்லை. இருப்பினும் இதழ்களின் கோடியில் சதா தவழ்ந்துகொண்டிருந்த ஏளன நகையும், கண்களில் விளையாடிக்கொண்டிருந்த விஷமச் சிரிப்பும் அவன் அப்படி ஒன்றும் சாதாரணமாக வசப்பட்டுவிடக் கூடியவனல்லன் என்பதை நிரூபித்தன. அவனது சிறிய இடையில் தொங்கிக் குதிரையின் இடப்பக்கத்தில் அடிக்கடி உராய்ந்த நீண்ட பெரும் வாளும் சற்று அச்சத்தையே தந்தது. குதிரையில் எந்தச் சமயத்திலும் வீழ்ந்துவிடக் கூடிய நிலையில் உட்கார்ந்திருப்பவன்போல் அந்த வாலிபன் தோன்றினாலும் அவன் கால்களிரண்டும் புரவியின் வயிற்றுப் புடைப்பில் அணைத்திருந்த விதத்தைப் பார்த்த வழிப்போக்கர்கள் அவன் புரவிச் சவாரிக்குப் புதியவ னல்லன் என்பதைப் புரிந்துகொண்டார்கள்.

இப்படியாகப் பலரிடை பல கருத்துக்களைக் கிளப்பி விட்டுக்கொண்டும், நாற்புறமும் சுழன்ற தன் பார்வையால் மதுரை மாநகரின் அருள்பலத்தையும், பொருள் பலத்தையும், படைபலத்தையும் எடைபோட்டுக்கொண்டும் புரவியில் சென்ற இளமாறன், மெள்ள மெள்ள வைகை ஆற்றின் மேற்பகுதியிலிருந்த மூங்கில் பாலத்தை நெருங்கியதும் காவல் வீரர்களால் நிறுத்தப்பட்டான். அங்கிருந்த காவலர் தலைவன் இளமாறன் ஊர், பெயர் முதலியவற்றை விசாரித்துக்கொண்டதும் மேலே செல்ல உத்தரவிட்டான். இளமாறனும் பொய்யேதும் சொல்லாமல் உண்மையே சொன்னான். 'நான் சேர நாட்டவன். என் பெயர் இளமாறன். அழைப்பின்மேல் வணிகர் வீதியில் உள்ள மகர மாளிகைக்குப் போகிறேன்' என்று காவலரிடம்

கூறியதும் காவலர் அவனுக்கு மிகுந்த மரியாதையுடன் வழி விட்டதைக் கண்ட இளமாறன், 'இத்தனை கெடுபிடியிலும் காவல் பலத்திலும் மதுரை வீரர்கள் மரியாதையை மட்டும் இழக்கவில்லை. காரணமில்லாமலா பண்டைத் தமிழ் மொழி இங்கு வளர்ந்தது?' என்று பாராட்டிக்கொண்டே தன்னை அழைத்தவர்கள் கூறிய மாளிகையைத் தேடிச் சென்றான்.

மதுரைக்கழைத்தது யாரென்று அவனுக்குத் தெரியாது. ஓலையை அளித்தவன் கருவூர் வஞ்சியில் இருந்த இளமாறன் இல்லத்துக்கு இரவில் வந்தான். திண்ணையில் உறங்கியவனைத் தட்டி எழுப்பினான். ஓலையைத் தந்து இரண்டே வார்த்தைகளில் சொன்னான், 'புறப்படு மதுரைக்கு' என்று. உறக்கம் விழித்த இளமாறன் உள்ளே சென்று விளக்கொன்றைக் கொண்டு வந்து ஓலையைப் படித்தான். அதிலும் வாக்கியங்கள் கச்சிதமாக இருந்தன. 'அரச வீதிக்கு முன்னுள்ள மகர மாளிகையில் சந்திக்கவும். விஷயம் முக்கியம்' என்ற வரிகளை இருமுறை படித்த இளமாறன், "யாரைச் சந்திக்க வேண்டும்? எதற்கு?" என்று வினவினான் வந்தவனை. "சொல்ல எனக்கு அதிகார மில்லை" என வறட்டுக் குரலில் வந்தது பதில்.

"அப்படியானால் நான் ஏன் இந்த ஓலைக்குப் பணிய வேண்டும்?" என்று கோபத்துடன் வினவினான் இளமாறன்.

வந்தவன் பதிலுக்கு ஓலையின் அடியில் இருந்த சேரநாட்டு அரச முத்திரையைச் சுட்டிக் காட்டினான்.

"நான் போகாவிட்டால்...?" இளமாறன் எரிச்சலுடன் கேட்டான்.

"அரசனுக்குத் துரோகம் செய்த குற்றத்திற்கு ஆளாவாய்" என்றான் வந்தவன்.

கடமையின் வழி இளமாறனுக்குத் தெளிவாகத் தெரிந்தது. "சரி, போகிறேன். அரச முத்திரையின் ஆணையை மீற முடியாது" என்று முடிவில் ஒப்புக் கொண்டான்.

"இந்த ஓலையுடன் நேராக மதுரை வணிகர் வீதியை அடைந்ததும், அந்த வீதியின் கோடியில் பெரிய மாளிகை இருக்கும். அதன் மகுடம் பெரும் கடல்மீனைப்போல் அமைக்கப்பட்டிருக்கும். அத்தகைய மீன் மகுடமுள்ள மாளிகைகள் மதுரையில் இரண்டேதான் உண்டு. ஒன்று அரச வீதியில் உள்ள நெடுஞ்செழியன் மாளிகை. இன்னொன்று வணிகர் வீதியிலுள்ள இந்த மாளிகை" என்று விளக்கினான் வந்தவன்.

"இந்த மாளிகையில் யார் இருப்பது?"

"சொல்வதற்கில்லை."

"நீ யார்?"

"அதையும் சொல்வதற்கில்லை."

"சொல்வதற்கு வேறு ஏதாவது இருக்கிறதா?"

"இருக்கிறது கேள். மகர மாளிகையையடைந்ததும் அதன் பிரதான வாயிலுக்குள் நுழையாதே. பக்கவாட்டில் சென்று திட்டிவாயிலை இருமுறை தட்டிக் காத்திரு. கதவு திறந்ததும் அழைப்பவரைத் தொடர்ந்து செல்" என்று முடித்த அந்த மனிதன் திடீரென ஏதோ யோசித்துவிட்டு, "இதோ பார்! விளக்கு வைத்து ஆறு நாழிகைக்குப் பிறகு அந்த மாளிகைக்குப் போ. அதற்கு முன்பு போகாதே" என்று எச்சரிக்கையும் செய்து போனான்.

மதுரையை அடைந்த இளமாறன் அந்த மனிதன் கூறிய படியே நடந்துகொண்டான். அவன் பல காவல்களுக்குப்

பதில் சொல்லி மதுரைக்கு உள்ளே நுழைந்த போது விளக்குகள் வைத்து இரண்டு நாழிகைகளே ஆகியிருந்ததால் ஆரம்ப வீதியிலிருந்த சத்திரமொன்றில் தங்கிய இளமாறன், சத்திரத்திலேயே நீராடி உடைமாற்றிக்கொண்டு நெற்றியில் வீரசந்தனம் அணிந்து சிறிது ஆகாரமும் உட்கொண்டு புரவியை சத்திரக்காரனிடமே ஒப்படைத்துக் கால்நடை யாகவே புறப்பட்டு வணிகர் வீதியை அடைந்தான். வணிகர் வீதியில் மகர மாளிகையை அடைவதில் எவ்விதக் கஷ்டமும் ஏற்படவில்லை அந்த வாலிபனுக்கு. முதல் வீதியில் வரும்போதே அடுத்த வீதியில் பெரிதாகத் தெரிந்தது கடல் மச்ச மகுடம். அந்த அடையாளத்தைப் பார்த்துக்கொண்டு அந்த மாளிகையை அடைந்த இளமாறன் அந்த மாளிகையில் பெரும் கதவுகள் மூடப்பட்டு இருப்பதையும், அந்த மாளிகையில் ஆளரவம் ஏதுமே இல்லாததையும் கவனித்து ஆச்சரியப்பட்டான். ‘நகரம் முழுவதும் அல்லோல கல்லோலப்படும் இந்தச் சமயத்தில் இந்த மாளிகையில் ஏன் இத்தனை அமைதி’ என்று எண்ணினான். அந்த எண்ணத்தி னாலும் மாளிகையில் நிலவிக் கிடந்த விபரீத நிசப்தத்தி னாலும் பலத்த சந்தேகத்துடன் பக்கத்திலிருந்த திட்டி வாசலை நோக்கிச் சென்றான். வழக்கப்படி சிறிதாக இருக்க வேண்டிய திட்டிவாயில் பெரிதாக இருப்பதும் அவனுக்கு அவநம்பிக்கையை விளைவித்தது.

இருப்பினும் தனக்குக் கருவூரில் கிடைத்த கட்டளைப்படி அந்த வாயிலின் கதவை இருமுறை தட்டிவிட்டு நின்றான். சில விநாடிகளே பறந்ததும் அந்த வாயிற்கதவு திறந்தது. அதைக் கண்டு இளமாறன் கண்கள் மிதமிஞ்சிய வியப்பால் மலர்ந்தன. ‘இத்தகைய மர்ம மாளிகையில் இப்படியும் ஒரு தோற்றமா?’ என்று பிரமித்தான் பல விநாடிகள் அந்தச் சேரநாட்டு வாலிபன்.

அழகெல்லாம் திரண்டது போலும் இருளைக் கிழித்துக் கொண்டு வந்த நிலவு போலும் நின்றாள் ஒரு காரிகை. இளமாறன் கண்களைக் கவர்ந்தது அந்த நிலவு! நாசியைக் கவர்ந்து மயக்கத்தை விளைவித்தது அவள் முன்கொண்டையில் சுருண்டு கிடந்த மல்லிகைச் சரம். அது தான் அவர்கள் முதல் சந்திப்பு. ஆனால் அந்தச் சந்திப்பு பிற்காலத்தில் அவனை ஆழ்த்திவிட்ட ஆபத்துக்கள் எத்தனை! எத்தனை!

## 2

## மனங்கவர்ந்த அழகு! மதியைக் குலைத்த பெயர்!

**பா**தி மட்டும் கதவைத் திறந்துகொண்டு பால்நிலவென நின்ற அந்தப் பைங்கிளியைக் கண்டதும் பேச நாவெழாமல் பிரமை பிடித்துப் பல விநாடிகள் அசைவற்று நின்றுவிட்ட இளமாறன் அந்த மோகன உருவத்தையே மேலும் மேலும் கண்களால் பருகினான். பாதிக் கதவைத் திறந்ததால் ஒருபுறம் கதவின் நீண்ட ஓரமும், மறுபுறம் வாயிற்படியின் பட்டை மரமும், மேலும், கீழும் வாயிற்படி மரத்தின் சித்திரச் செதுக்கல்களும் சேர்ந்து, அந்தக் கட்டழகியைச் சுற்றிலும் சட்டம் கட்டப்பட்ட சித்திரப் பாவையென அடித்திருந்ததைக் கண்ட அந்தச் சேரநாட்டு வாலிபன், அந்த வாயிற்படியின் சித்திரச் செதுக்கல்களில், வளைந்து நின்ற பெண் உருவங்கள், அந்தக் கட்டழகியின் எழிலைக் கண்டு நாணித்தான் வளைந்திருக்க வேண்டுமென்று எண்ணினான். வாயிற்படியின் உச்சி மரத்திற்கு சற்றுக் கீழே தெரிந்த அவள்

தலையில் அடர்ந்து வளர்ந்திருந்த கருங்கூந்தல் முன்புறத்தில் பெரியதாக எடுத்துக் கொண்டையிடப்பட்டிருந்ததையும், அந்தக் கொண்டையில் வெள்ளை வெளேரென்று மல்லிகைச் சரம் வெகு சாமர்த்தியமாகச் சுற்றிக் கட்டப் பட்டிருந்ததையும் கண்ட வாலிபன், அந்த அழகி சேர நாட்டவள் என்பதைச் சந்தேகமறப் புரிந்துகொண்டான். அந்தக் கெண்டை விழியாளின் கொண்டையின் பரிமாணம் மிகப் பெரியதாயிருப்பதைக் கவனித்த இளமாறன், அவள் கொண்டை மட்டும் அவிழ்த்து விடப்பட்டால் முன்னும் பின்னும் அழகுகளுக்குக் கறுப்புத் திரைபோட அவள் கார்குழலே போதும் என்பதையும் உணர்ந்து, அப்படி ஒரு வேளை அவள் நின்றால் எத்தனை பிரமிப்பாய் இருக்கும் என்று எண்ணிப் பார்த்தான். அந்தப் பெரும் கொண்டை யைத் தாங்க அவள் அழகிய மென்மைக் கழுத்துக்குத் திறன் எங்கிருந்து வந்தது என்றும் நினைத்த அவன், சிறிது கீழே அதைவிடப் பெரும் சுமைகளைத் தாங்கி நின்ற மின்னல் லிடையைவிட அந்தக் கழுத்து ஏற்றுள்ள சுமை அப்படி யொன்றும் அதிகமில்லை என்று தனக்குள் சொல்லிக் கொண்டான். தலைக்கொண்டைக்குக் கீழே விரிந்த விசாலமான நுதலைத் தடுத்து நின்ற விற்புருவங்களுக்குக் கீழேயிருந்த அழகிய இமைகளில் அடங்கி நிற்க வேண்டிய அவள் கருவிழிகளில் அதிக சலனமில்லாததையும், அந்த விழிகள் தன்னை ஈட்டிகள் போல் குத்தி ஆராய்வதையும் கண்ட அந்தச் சேரநாட்டு வாலிபன், அந்த விழிகளில் பெரும் உறுதியோடு ஓரளவு கருணையும் பரிதாபச்சாயையும் படர முற்பட்டதைப் பார்த்து அதற்குக் காரணம் அறியாமல் தவித்தான்.

கருணை ததும்பி நின்ற கருவிழிகளுக்குக் கீழே அளவுடன் செழித்திருந்த கன்னக் கதுப்புக்களின்

வழவழப்பையும் அவற்றில் திடீரென்று திட்டுத் திட்டாக எழுந்த சிவப்பு அடையாளங்களையும் நோக்கிய இளமாறன், அவள் பார்வை தைரியமாய் இருந்தாலும் உள்ளூரப் பெரு நாணம் ஓடுவதையும் பெண்மைக் குணத்தின் அந்தச் சிறப்பு அவளிடம் பரிபூரணமாயிருப்பதையும் புரிந்துகொண்ட தன்றி என்ன காரணத்தாலோ அவள் தன் இயற்கைக் குணங்களை மறைத்துக்கொண்டிருக்கிறாள் என்பதையும் ஊகித்துக்கொண்டான். அவள் சங்குக் கழுத்துக்குக் கீழே எழும்பிய திண்மை எழில்களும், அவற்றைத் தொடர்ந்த 'பொய்யோ' எனும் இடையும், இடைக்குக் கீழேயிருந்த பெரும் சீலையில் மறைந்து கிடந்தாலும் அவள் சற்றே ஒருக்களித்து நின்றதால் சீலையை அணைத்து நின்ற அவள் உருண்ட துதிக்கை கால்களும் இயற்கைச் சிற்பி எத்தனை அழகிய பிம்பத்தைச் செதுக்கியிருக்கிறான் என்பதை அறிவுறுத்தின.

ஆபரணங்களை அவள் மிகக் குறைவாகவே அணிந் திருந்தாள். காதுகளில் முத்துத் தோடுகள் இரண்டு, கழுத்தில் ஒரு வெண் முத்துமாலை, கைகளில் இரண்டொரு வளையல்கள், இவைதான் அவள் அணிந்திருந்த ஆபரணங் களென்றாலும், அந்த ஆபரணங்களின் மதிப்பையும் அழகையும் அவை இருந்த இடங்கள் பன்மடங்கு உயர்த்திக் காட்டின. மாணிக்கம்போல் சிவந்திருந்த கன்னங்கள், காதணி முத்துக்களுக்குப் புதுச் சோபையை அளித்தன. வெண்மைக் கரங்களில் பூட்டப்பட்டிருந்த வளையல்கள் கைவெண்மையால் விவரணத்துக்கும் அப்பாற்பட்ட புதுத் தோற்றம் பெற்றன. எல்லா நகைகளையும்விட அந்த முத்து மாலை அதிக அதிர்ஷ்டம் செய்திருக்க வேண்டுமென்று எண்ணிய அந்த வாலிபன், மாலையைச் சற்றுத் தூக்கிக் காட்டிய பகுதியில் கண்களைப் புதைப்பது பண்பாட்டுக்கு

முரணானது என்று எண்ணிக் கண்களை நிலத்தில் தாழ்த்தினான்.

எதிரே நின்ற வாலிபனின் அழகிய தோற்றத்தாலும் அவன் கண்கள் செய்த ஆராய்ச்சியினாலும் சில விநாடிகள் சங்கடத்துக்குள்ளான அந்தச் சேரநாட்டுக் கட்டழகி அவன் கண்களை நிலத்தில் தாழ்த்தியதும், அந்த இளைஞன் பண்பு தவறாத பெருங்குடி மகன் என்பதைப் புரிந்துகொண்டா ளாதலால், அவனை மீண்டும் பரிதாபத்துடனும் கருணை யுடனும் நோக்கினாள். பிறகு அவன் சங்கடத்தை ஓரளவு நீக்க முற்பட்டு செம்பருத்தியின் இதழ்களைவிடச் சிவந்து கிடந்த தன் அழகிய இதழ்களைத் திறந்து, "நீங்கள் யார்?" என்று இரண்டே சொற்களை உதிர்த்தாள்.

அமர இசைக் கருவிகள் கிளப்பிய இன்பநாத ஒலிகள் போல் அவள் அதரத்தில் இருந்து உதிர்ந்த அந்தச் சொற்களைக் கேட்டதும் சுரணை வரப்பெற்ற இளமாறன் கண்களை மேலே தூக்காமலே, "நான் சேர நாட்டிலிருந்து வருகிறேன்" என்றான் சற்று சங்கடத்துடன்.

அந்தப் பெண்ணின் அடுத்த கேள்வி நிர்ப்பயத்துடனும் திட்டமாகவும் ஆனால் சுகமான குரலிலும் எழுந்தது. "சேர நாட்டில் எந்த இடமோ?" என்று வினவினாள் அந்த அழகி.

"கருவூர் வஞ்சி" என்று பதிலிறுத்த இளமாறன் அவளது அடுத்த கேள்வியை எதிர்நோக்கி நின்றான். அடுத்த கேள்வி அவள் உதடுகளிலிருந்து பிறக்கத்தான் செய்தது. இருப்பினும் கேள்வி முடியவில்லை. "உங்கள் பெயர் இள..." என்று ஏதோ கேட்க முற்பட்ட அவள், என்ன காரணத்தாலோ அந்தப் பெயரைப் பூர்த்தி செய்யாமல், "உங்களைத்தான் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம்.

உள்ளே வாருங்கள்" என்று அழைத்துவிட்டுத் திரும்பி ஒதுங்கி இளமாறனுக்கு வழிவிட்டு நின்றாள்.

அவள் விட்ட வழியாக உள்ளே நுழைந்த இளமாறன் அந்த வாயிலை அடுத்திருந்தது ஒரு சிறு கூடமே என்பதையோ, அந்தக் கூடத்தின் முகப்பில் பெரும் மாடிப் படியொன்று மேலே போவதையோ கூடக் கவனிக்க வில்லை. அந்தக் கட்டழகி விட்ட வழி பெரிதாயிருந்தும் அவள் வாயிற் கதவைச் சற்று அதிகமாகவே திறந்து அவன் தாராளமாக உள்ளே வர வழிவிட்டிருந்தும், கதவை ஒட்டி அந்தப் பைங்கிளி நின்றிருந்ததால் சிறிது பயத்துடன் விலகியும் உள்ளே நுழைந்த இளமாறன் தன்னை அடுத்துக் கதவை மூட முற்பட்ட அந்த இளமங்கையையே பார்த்துக் கொண்டிருந்தானேயொழிய சுற்றுப்புறத்தைச் சிறிதும் கவனித்தானில்லை. இளமாறன் உள்ளே வந்ததும் அந்தக் காரிகை மிகுந்த எச்சரிக்கையுடனும் சந்தேகமேது மில்லாமலும் கதவைச் சாத்திவிட்டு, எதிரேயிருந்த மாடிப் படியில் காலடி எடுத்து வைத்து, இளமாறனையும் உடன் வரும்படி கையால் சமிக்ஞை செய்தாள்.

அதுவரை சிலைபோல் அசையாமல் நின்றிருந்த அந்தக் கட்டழகியின் அங்க லாவண்யங்கள் அவள் அசைவில் எத்தனை உயிர்த்துடிப்பைப் பெற்றுவிட்டன என்பதைக் கவனித்த இளமாறனின் உணர்ச்சிகள் அலைமோதின. கைகளைச் சிறிதும் உயர்த்தாமல் கதவை அவள் வெகு சாமர்த்தியமாகத் தாளிட்டபோது கச்சையை அடுத்த அவளுடைய விலாப்புறம் அசைந்த அழகையும் அவள் திரும்பியபோது திடீரெனத் தன் முகத்தைத் தாக்கி விடுவதுபோல வந்த எழிலிடங்களையும் கவனித்த இளமாறன் அவள் அழைத்தவுடன் மந்திரவாதியைத்

தொடர்ந்து செல்லும் பித்தனைப்போல் அவளைத் தொடர்ந்து படிகளில் ஏறினான்.

முன்னால் வழிகாட்டி படிகளில் அவள் ஏறிச் சென்ற அழகு உண்மையில் அந்த வாலிபனை உன்மத்தனாக அடித்திருந்தது. அவள் கால்கள் படிகள்மீது மாறிமாறி ஏறியதால் அவள் பின்னெழில்கள் அசைந்த அழகைக் கண்டதாலும் சில சமயங்களில் அவள் வேகம் கொஞ்சம் தடைபட்டதால் பின்னால் வந்த அவன் கண்களுக்கெதிரே அவள் அழகுகள் நெருங்கியதாலும், அடியோடு நிலை குலைந்துவிட்ட இளமாறன் படிகளின் பக்கச் சுவரைப் பிடித்துத் தன்னை ஒரு விநாடி நிதானித்துக்கொண்டான். அவன் உணர்ச்சிகளைக் குலைக்க அவள் படியேறிய நடை யழகுதான் முயன்றதென்றால் பக்கச் சுவர்களில் எரிந்த பந்தங்களுமா அதற்கு உதவ வேண்டும்? பக்கச் சுவர்களில் சற்று தூரத்துக்கொரு முறை எரிந்த பந்தங்களின் வெளிச்சம் அவள் ஒரு பாதி உடலைப் பளிச்சிடச் செய்ததால், அந்தப் பாதி இளமாறன் கண்களுக்குத் திட்டமாகத் தெரிந்ததாலேயே அவன் திணறினான். போதாக்குறைக்கு இருட்டடித்த அவள் உடலின் மறுபுற எழில்களைப்பற்றி அவன் புத்தி செய்த கற்பனை அவனை சுயபலமோ சுய உணர்ச்சியோ அற்றவனாகச் செய்திருந்தது.

ஆகவே, வந்த காரியத்தை அடியோடு மறந்து எதிரே தெரிந்த எழில்களில் மட்டும் மனத்தைத் திளைக்கவிட்டுச் சென்ற இளமாறன் திடீரென ஒரு படியில் சில விநாடிகள் தன்னைத் திடப்படுத்திக்கொள்ள நின்றான். அப்படி அவன் நின்றதை முன்னே சென்ற அவளும் உணர்ந்து கொண்டிருக்க வேண்டும். அது மட்டுமல்ல, அப்படி அவன் நின்றதற்குக் காரணமும் அவளுக்குப் புரிந்திருக்க வேண்டும். அவனை அழைக்கத் திரும்பிய அவள் முகம் புதுப்

பொலிவுற்றுக் கிடந்தது. கடையிதழ்களில் கருணையும் அன்பும் ததும்பிய புன்முறுவல் தவழ்ந்து கிடந்தது. அந்தப் புன்முறுவலில் ஆரம்பத்தில் அவள் பார்வையில் தெரிந்த பரிதாபமும் விரவிக் கிடந்தது.

"ஏன் நின்றுவிட்டீர்கள்? வாருங்கள். இன்னும் சில படிகளே இருக்கின்றன!" என்று அவள் குரல் இசை பாடியது.

அவன் பதிலேதும் சொல்லாமல் அவளைத் தொடர்ந் தான். அவன் சித்தமெல்லாம் அந்தச் சித்தினிப் பெண்ணின் தித்திக்கும் அழகில் லயித்திருந்தாலும், அந்த லயிப்பிலும் ஒரு கேள்வி மட்டும் அவன் மனத்தில் அடிக்கடி எழுந்து நின்றது. அவள் ஆரம்பத்திலிருந்து தன் மீது வீசிய பரிதாபப் பார்வைக்குக் காரணம் அவனுக்கு விளங்கவில்லை. 'ஏன் என்னைக் கண்டு பரிதாபப்படுகிறாள்? எனக்கு என்ன வந்துவிட்டது இப்போது?' என்று தன்னைத்தானே கேட்டுக் கொண்டான் அவன் பலமுறை. ஆனால் அந்த ஒரு கேள்விக்கு அவனுக்குப் பதில் கிடைக்காவிட்டாலும், அந்த மாளிகையில் ஏதோ மர்மமிருப்பதையும், தான் மிகவும் ஆபத்தை விளைவிக்கக்கூடிய பணிக்கு அழைக்கப்பட் டிருப்பதையும் சந்தேகமறப் புரிந்துகொண்டான் இளமாறன்.

இளமாறனை அழைத்துக்கொண்டும், அவன் சித்தத்தை அடியோடு மயக்கியும், அவன் மனத்தில் பல கேள்விகளைக் கிளப்பி விட்டும், அவனுக்கு முன் சென்ற அந்த இளமங்கை மாடிப்படிகள் வழியாக இரண்டு மூன்று முறை திரும்பித் திரும்பிச் சென்றதும் தோன்றிய ஒரு பெரும் தாழ்வாரத்துக்கு வந்து நின்றாள். அந்தத் தாழ்வாரத்தின் ஒரு கோடியில் மற்றொரு சிறிய மாடிப்படி இருந்தது. அந்த மாடிப்படி அநேகமாக மேல்தளத்துக்குப் போவதாக இருக்க வேண்டும் என்று தீர்மானித்தான் இளமாறன். அந்த மாளிகை

மாடியின் முகப்புத் தாழ்வாரம் சுமார் ஆயிரம் பேர் ஏக காலத்தில் தங்கக் கூடிய வகையில் கட்டப்பட்டிருந்ததையும், அத்தகைய தாழ்வாரத்தில் யாரும் இல்லாததால் பேய் அமைதி அங்கு நிலவுவதையும் கண்டான் அந்த வாலிப வீரன்.

அப்படித் தாழ்வாரத்தை ஆராய்ந்துகொண்டு நின்ற இளமாறனை நோக்கிய அந்த இளமங்கை, “இந்த மாளிகை முழுவதையும் பார்க்க உங்களுக்கு அவகாசம் இருக்கிறது. இப்பொழுது இப்படி வாருங்கள்” என்று கூறி அவனைத் தன்னுடன் வரும்படி சைகையும் காட்டி, அந்த தாழ்வாரத்தில் இருந்த கோடி அறையின் சமீபம் அழைத்துச் சென்றாள்.

கோடி அறையைக் கிட்டியதும் சற்று எட்டவே நின்று, “திட்டி வாசலைத் தட்டியதுபோல் இருமுறை அந்தக் கதவைத் தட்டுங்கள். ஆனால், யாருமே திறக்கமாட்டார்கள். நீங்களேதான் திறந்துகொண்டு உள்ளே செல்ல வேண்டும்” என்று கூறினாள் அந்தக் கட்டழகி.

இளமாறன் அவளைப் பொருள்பட நோக்கினான். “அப்படியானால் நீங்கள்?” என்றும் வினவினான்.

“நான் கீழே போகிறேன்” என்றாள் அவள்.

“அங்குதானிருக்கிறீர்களா?” என்று வினவினான் இளமாறன்.

அவள் புன்முறுவல் கொண்டாள். “அங்குதானிருக்கிறேன், மற்ற பணிப்பெண்களுடன்” என்றும் அந்தப் புன்முறுவலின் ஊடே சொன்னாள்.

இளமாறன் கண்களில் வியப்புக்குறி அதிகமாகத் தாண்டவமாடியது. “என்ன நீங்கள்...?” என்று வாசகத்தை முடிக்காமல் விழித்தான்.

"பணிப்பெண்தான்" என்று அவள் கூறி மெள்ள நகைத்தாள்.

"நம்ப முடியவில்லையே என்னால்!" என்றான் இளமாறன்.

"ஏன்?"

"பணிப்பெண் இவ்வளவு..."

"அழகாக இருக்க முடியாதென்று நினைக்கிறீர்களா?" என்று கூறி நகைத்தாள் அந்தப் பெண்.

இந்தக் கேள்வி இளமாறனைத் தூக்கிப் போட்டது. அவள் தன் எழிலின் வன்மையை நன்றாகப் புரிந்து கொண்டிருக்கிறாள் என்பதை உணர்ந்துகொண்டதன்றி தைரியமும் விஷமமும் உள்ளவள் அந்தப் பெண் என்பதையும் சந்தேகமற அறிந்துகொண்டான் அவன். ஆகவே மீண்டும் ஏதோ சொல்ல முற்பட்டு, "அதற்காகச் சொல்லவில்லை. பணிப்பெண்களிலும்..." என்று துவங்கிய வனை இடையிலேயே வெட்டிய அவள், "அழகுண்டு, சேற்றிலும் செந்தாமரை முளைப்பதுண்டு என்கிறீர்கள். இந்தப் பழைய பல்லவிகளைக் கேட்டு நான் அலுத்து விட்டேன். புதிதாகப் பேச ஏதாவது கற்றுக்கொள்ளுங்கள்" என்று கூறி மீண்டும் மெல்ல நகைத்தாள் அவள். திடீரென அந்த நகைப்பு அவள் இதழ்களில் உறைந்தது. அவள் கண்கள் அச்சத்துடன் அறைவாயிலை நோக்கின. அந்த வாயிலின் முகப்பில் நல்ல உயரமுள்ள ஒரு மனிதர் நின்று கொண்டிருந்தார்.

"உம் செல்லுங்கள். அவர் காத்திருக்கிறார்" என்று கூறிப் படிகளில் விடுவிடு என ஓடிவிட்டாள் திட்டிவாசல் திறந்த அந்தக் காரிகை.

இளமாறன் கோடியறை வாயிலில் நின்ற மனிதரை உற்று நோக்கினான். நல்ல உயரமாக இருந்த அவர் தேகம் பெரிதும் இளைத்துக் கிடந்தது. முகத்தைப் பெரிதும் மறைத்துக் கிடந்த தாடி மீசைகளின் காரணமாகவும் கன்னங்கள் ஒட்டிக் கிடந்ததன் விளைவாகவும் அவர் கண்கள் பெரிதும் பிதுங்கி ஈட்டிகளைவிடக் கூர்மையாகப் பளிச்சிட்டன. அவரைப் பார்த்த உடனேயே அவருக்கு வயது அறுபதுக்கு மேலிருக்கும் என்பதை அறிந்துகொண்ட இளமாறன், தன்னை நோக்கிய அவர் கண்களிலும், கதவைத் திறந்த காரிகை வீசிய பரிதாபப் பார்வை இருப்பதைக் கவனித்தான்.

அதனால் குழப்பமுற்ற அவனை அந்தப் பெரியவர் பெயர் சொல்லி அழைத்தார். "இளமாறா, வா" என்ற அவர் குரலில் கருணையும், பரிவும், பரிதாபமும் மண்டிக் கிடந்ததைக் கவனித்த இளமாறன் அவரை நோக்கி நடந்தான். கதவைத் திறந்துகொண்டு அறைக்குள் நுழைந்த அவர், இளமாறன் உள்ளே நுழைந்ததும் கதவைச் சாத்துமாறு அவனுக்குச் சமிக்ஞை செய்தார். அவர் உத்தரவுப்படி கதவைச் சாத்திவிட்ட இளமாறனை நோக்கிய பெரியவர், "நான் யார் தெரியுமா இளமாறா?" என்று வினவினார் கண்களால் அவனை உற்று நோக்கி.

"தெரியவில்லை" என்றான் இளமாறன்.

பெரியவர் தனது பெயரைச் சாவதானமாகச் சொன்னார். ஆனால் அதைக் கேட்ட இளமாறன் நிதானத்தை அடியோடு இழந்தான். அவன் நெஞ்சு திக்திக்கென்று அடித்துக்கொண்டது. ஏதோ சொல்ல நினைத்து உதடுகளைத் திறந்து மூடினான். சொற்கள் வெளிவரவில்லை.

# 3

# பயங்கரத் திட்டம்

மார்ம மாளிகையின் கதவைத் திறந்த கட்டழகி மாடித் தாழ்வாரக் கோடியறை வாயிலில் நின்ற முதியவரைக் கண்டதும் அச்சமுற்றுப் படிகளில் இறங்கிக் கீழே ஓடி விட்டதற்கு ஆரம்பத்தில் காரணம் புரியாத வீரனான இளமாறனுக்கு அறைக்குள்ளே அவனைப் பெரியவர் அழைத்துச் சென்று தமது பெயர் இன்னதென்று சொன்னதும், காரணம் தெள்ளென விளங்கியதன்றி அவன் இதயத்தில் அச்சமும் ஏற்படவே, பேச முயன்ற இதழ்கள் அடைத்தே போயின. அந்த இடத்தில் அவன் சற்றும் எதிர் பாராத பெயர் அது. அந்தப் பெயரால் ஏற்பட்ட பயமும் திகிலும் கோழைத்தனத்தால் ஏற்பட்டவை அல்ல. நெறி, நிர்ணயமுள்ள பெரியவர்களைப் பார்க்கும்போது ஏற்படும் அச்சம் அது. அந்தப் பெயர் அந்த நாளில் வாழ்ந்த தமிழரெல்லாம் காதில் கேட்ட மாத்திரத்தில் தலை வணங்கிய பெயர். அப்பேர்ப்பட்ட பெயரை அந்தப் பெயருக்குரியவர் சாதாரணமாக உச்சரித்தாலும் பெரும் மந்திரம்போல் அச்சொற்கள் இளமாறன் காதுகளில் ஒலித்ததால் பெருமதிப்பு உள்ளத்தில் எழ அச்சமுற்று நின்றான் அவன்.

அவன் கைகள் தாமாகவே மார்பில் சென்று கட்டி அடக்கத்தைக் காட்டின. நீண்ட நேரம் பிரமை பிடித்து எதிரே மஞ்சத்திலமர்ந்திருந்த பெரியவரைப் பார்த்துக் கொண்டே நின்ற இளமாறன் காதுகளில் 'குறுங்கோழியூர்க் கிழார்' என்ற சொற்கள் மிக ரகசியமாகத் திரும்பத் திரும்ப ஒலித்துக்கொண்டிருந்தன.

பண்பாட்டின் சிகரமென்று தமிழகத்தின் மூவேந்த ராலும் கொண்டாடப்பட்ட புலவர் பெருமானான குறுங் கோழியூர்க்கிழாரின் அருள் விழிகள் அந்த வாலிபன் அச்ச முற்று நிற்பதைக் கண்டு பரிதாபப் பார்வை ஒன்றை வீசின. அவன் அழகையும் கம்பீரத்தையும், இடையே அவன் கட்டி யிருந்த நீண்ட வாளையும்கூட அவர் கண்கள் ஆராய்ந்தன.

வந்தவன் தன் காரியத்துக்கு உதவுவான் என்ற திருப்தி அந்தப் பெரியவர் முகத்தில் நன்றாகப் படர்ந்தது. இருப்பினும் ஏதோ காரணத்தினால் அவர் முகத்தில் துயரத்தின் சாயை திடீரென பரவியது. அந்தத் துயரத்தின் சாயையை இளமாறனும் கவனிக்கவே செய்தானானாலும் பரிதாபப் பார்வையின் காரணம் அவனுக்குப் புரியாதது போலத் துயரத்தின் காரணமும் அவனுக்குச் சற்றும் புரிய வில்லை. என்றாலும் எதையும் கேட்கத் திறனற்ற அவன் ஏதும் பேசாமலே அடக்கத்துடன் கைகட்டி அந்தப் பெரியவரின் முன்பு நின்றுகொண்டிருந்தான்.

அவன் நிலையை ஆமோதிப்பதுபோல், திடீரென குறுங்கோழியூர்க்கிழாரின் தலை ஒருமுறை அசைந்தது. தாடியைக்கூட யோசனையுடன் ஒரு விநாடி தடவிவிட்டுக் கொண்டார் அவர். பிறகு அவர் கேட்டார், "இளமாறா! என் பெயரை நீ ஏற்கெனவே கேட்டிருப்பதாகத் தெரிகிறது" என்று.

இளமாறன் கண்கள் பெரியவரை ஏறெடுத்து நோக்கின. "தமிழகத்தின் தலைசிறந்த புலவர் பெருமான் பெயரை அறியாதவர்கள் தமிழகத்தில் இருக்கத் தகுதியற்றவர்கள்" என்றும் அவன் உதடுகள் பயபக்தியுடன் சொற்களை உதிர்த்தன.

புலவர் பெருமானின் இதழ்களில் வருத்தம் கலந்த புன்னகையொன்று விரிந்தது. அந்தப் புன்னகையைத்

தொடர்ந்து உதிர்ந்த அவர் சொற்களிலும் வருத்தத்தின் சாயை பூரணமாகப் பரவிக் கிடந்தது. "பெயரின் உயர்வு எனக்கு மகிழ்ச்சியளிக்கவில்லை இளமாறா?" என்று அவர் மெல்லக் கூறினார்.

இளமாறன் அடக்கத்துடன் பதில் சொன்னான்: "பெயரின் உயர்வு புலவர் பெருமானுக்கு மகிழ்ச்சியைத் தராதது இயல்பு. ஆனால் அது எப்படி மற்றவர்களுக்கு மகிழ்ச்சியைத் தராமலிருக்க முடியும்?"

பெரியவரின் கண்கள் அவன் கண்களைச் சந்தித்தன. "மகிழ்ச்சி தர அதில் என்ன இருக்கிறது இளமாறா?" என்று உதடுகள் கேள்வியொன்றைத் தொடுத்தன.

"பெருமானின் பாடல்களால் தமிழகத்தின் சிறப்பு எங்கும் பரவி இருக்கிறது. அது தமிழ் மொழிக்குச் சிறப்பல்லவா? அந்த மொழி பேசும் தமிழர்களுக்குச் சிறப்பல்லவா?" என்று சற்றுத் தைரியத்துடன் இளமாறனும் வினவினான்.

"இல்லை. சிறப்பில்லை" என்று பெரியவர் திட்டமாகப் பதில் சொன்னார்.

"ஏனில்லை?"

"பாடல்களுக்குப் பயனில்லை."

"என்ன பயனை எதிர்பார்க்கிறீர்கள் கிழாரே?"

"நற்பயனை."

"நற்பயனென்றால்?"

குறுங்கோழியூர்க்கிழாரின் கூரிய விழிகள் ஈட்டிகள் போல் ஒளி வீசின.

"நாட்டில் போரின்மை, அமைதி, மக்களின் நல்வாழ்வு, அறிவின் வளர்ச்சி, வெற்றியின் வீழ்ச்சி இவை நற்பயன்.

இவற்றை எதிர்பார்க்கிறேன்" என்று ஒவ்வொரு சொல்லையும் அழுத்தி அழுத்திச் சொன்னார் புலவர் பெருந்தகை. அதைக் கேட்டதும் அவர் மனத்துயரத்தின் காரணத்தை ஓரளவு புரிந்துகொண்ட இளமாறன் மேற் கொண்டு பேசாமல் மௌனம் சாதித்தானானாலும் கிழார் மட்டும் நிறுத்தாமல் சொன்னார்:

"இளமாறா! ஒரு புலவன், இயல் வல்லன், இவர்கள் பெருமை அவர்கள் நாவினால் வகுக்கும் சொற்றொடரில் இல்லை. அந்தச் சொற்கள் மக்களுக்கு என்ன பயனை விளைவித்திருக்கின்றன என்பதில்தானிருக்கிறது. என் பாடல்களை மூவேந்தரும் பாராட்டுகிறார்கள். மக்கள் புகழ்ந்து பேசுகிறார்கள். தமிழக மக்களில் பலபேர் பாடுகிறார்கள். என் பாடல் நுழையாத இடமில்லை. ஆனால் நுழைந்தும் பயனென்ன? அவை மக்கள் மனத்தையோ, மூவேந்தர் மனத்தையோ ஆழ்ந்து தொடவில்லை. தொட்டிருந்தால் பொன்னித்தாய் உரமூட்டிய பெருநகரான தலையாலங்கானத்தில் பயங்கரப் போர்தான் நிகழ்ந் திருக்குமா! அல்லது வீரர்கள் அநியாயமாக அழிந்திருப் பார்களா? சேரமான் யானைக்கண்சேய் மாந்தரன்சேரல் இரும்பொறை இன்று பாண்டியன் நெடுஞ்செழியனிடம் சிறைப்பட்டிருப்பானா? தமிழகம் இப்படிப் பிரிந்துதான் இருக்குமா? இராது இளமாறா, இராது. என் பாட்டுகள் நாட்டுக்கு நற்பயனை அளிக்கவில்லை; அவை பயனற்றவை."

மிகுந்த பொறுப்பு புலவர் பெருமான் தலையிலிருந்த தாலேயே அவர் தமது பாடல்களைப் பற்றி அப்படி வெறுப்புடன் பேசுகிறார் என்பதைப் புரிந்துகொண்ட இளமாறன், "புலவர் பெருமான் நோக்கின் விசாலம் மற்றவர்களிடம் இருக்க முடியாது. நாட்டு அமைதியையும்

மக்களின் வாழ்வையும் புலவர்கள் எதிர்பார்த்தது சரி. தோள் வலிமையுள்ள அரசர்களிடம் எதிர்பார்ப்பது முறையல்ல" என்று கூறினான்.

"ஏன் எதிர்பார்க்கக் கூடாது?" என்று வினவினார் புலவர் பெருமான்.

"தோள் தினவு அரசர் குருதியில் பாய்ந்தோடுகிறது. ஆகவே போர் தவிர்க்க முடியாதது" என்றான் இளமாறன்.

"போருக்கென்றே தோள் தினவு கொள்பவன் அறவழி வந்த அரசனாக மாட்டான். அறத்தின் அடிப்படையல்லாத போர் அவனுக்குப் புகழையோ மக்களுக்கு நலனையோ அளிக்காது."

"அப்படியானால் போர் எதற்கு நடக்க வேண்டும்?"

"மக்களைப் பாதுகாக்க!"

"மன்னன் புகழுக்காக அல்லவா?"

"அல்லவே அல்ல. மக்களை அமைதியிலும் ஆனந்தத் திலும் வைத்திருக்கும் மன்னனே சிறந்தவன். மக்களைப் பண்பாட்டுக்கும் அறவழிக்கும் தகுதியாக்கும் மன்னனே சிறப்புடையவன். போருக்குப் படை திரட்டி வீண் சண்டை இழுத்து மக்களைப் பலி கொடுக்கும் மன்னன் மாநிலத் துக்குத் தேவையில்லை."

இந்தச் சொற்களைச் சற்று சீற்றத்துடன் சொன்னார் பெரியவர். அத்துடன் நில்லாமல் இளமாறன் கேட்காமல் மேலும் தொடர்ந்த அவர், "இளமாறா! இன்றைய தமிழகத்தின் நிலை கண்டு நாம் தலைகுனிய வேண்டும். இன்று மதுரையையாளும் பாண்டியன் நெடுஞ்செழியன் பதினேழு வயதில் பட்டத்துக்கு வந்தான். சிறு பிராயத்தில் பாண்டிய அரியணையில் சிறப்பு முடிசூடிய அவனைச்

சோழனும் சேரனும் காத்து நிற்கவேண்டும். அதற்கு மாறாக அவன் சிறுபிராயத்தை எண்ணி அவனுடன் போரிட்டு அவன் நாட்டைக் கைப்பற்ற எண்ணினர். சோழனும், சேரமானும் ஐந்து வேளிர்களையும் சேர்த்துக்கொண்டு இந்தச் சிறுவனை அழிக்கத் தீர்மானித்தனர். இந்த எழுவரையும் சென்ற ஆண்டு பாண்டியன் நெடுஞ்செழியன் பொன்னி நாட்டிலுள்ள தலையாலங்கானத்தில் சந்தித்தான். ஏழு களிறுகளை எதிர்க்கும் சிங்கக்குட்டிபோல எழுவரையும் எதிர்த்தான். சோழன் புறமுதுகிட்டு ஓடினான். வேளிர் ஐவர் ஓட்டத்தில் காட்டிய வேகம் இனித் தமிழக மக்கள் மனத்திலிருந்து மறையாது. நமது நாட்டு மன்னன் சேரமானைப்பற்றி என் சொல்ல இளமாறா! என் சொல்ல!" என்று சொல்லிப் பெருமூச்சும் விட்டார்.

புலவர் பெருமான் கூறிய வரலாற்று விவரங்களை மக்கள் அனைவரும் அறிந்திருந்ததால் அதை ஏன் புலவர் மீண்டும் எடுத்துச் சொல்கிறார் என்பது புரியவில்லை இளமாறனுக்கு. வெகு சுலபமாகச் சிறுவனான பாண்டிய மன்னனை வெற்றி கொண்டுவிடலாமென மனப்பால் குடித்து இணைந்த எழுவரையும், தானாகவே சோழநாட்டில் புகுந்து தலையாலங்கானத்தில் சந்தித்துக் கடுமையாக முறியடித்து 'தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன்' என்ற சிறப்புப் பெயரையும் தாங்கிக்கொண்ட மதுரை மன்னனின் வீரத்தைத் தமிழ் நாடே போற்றிக்கொண்டிருந்தது. அந்தப் போரில், யானையின் சிறு கண்களைப்போல் கண்ணைப் படைத்தவனும் ஆனால் யானை பலத்தையும் கூரிய பார்வையையும் பெற்றவனும் அத்தகைய கண் சிறப்பால் "யானைக்கண்சேய் மாந்தரன்சேரல் இரும்பொறை" என்று புகழ் பெற்றவனுமான சேர மன்னனைப் பாண்டியன்

நெடுஞ்செழியன் சிறைப்பிடித்துச் சென்றுவிட்டது பாண்டிய நாட்டுப் புலவர்கள் பாடல்களுக்கு அஸ்திவாரமாகவும் அமைந்திருந்தது. “இதெல்லாம் நாடறிந்த விவரம். இவற்றை ஏன் புலவர் எனக்குத் திருப்பிச் சொல்லுகிறார்?” என்று தன்னைத்தானே கேட்டுக்கொண்டான் இளமாறன். அவன் உள்ளத்திலோடிய எண்ணங்களைப் புரிந்துகொண்ட குறுங்கோழியூர்க்கிழார், “தெரிந்த விவரங்களை ஏன் நான் திருப்பிச் சொல்கிறேனென்று நீ நினைக்கலாம் இளமாறா? ஆனால் அதற்குக் காரணம் இருக்கிறது. வரலாறு குறிக்கப் போகும் தலையாலங்கானத்துப் பெரும் போரின் விளைவு களில் பங்குகொள்ளவே உன்னை இங்கு வரவழைத்து இருக்கிறேன்” என்றார்.

இளமாறனுக்குத் தூக்கிவாரிப் போட்டது. பெரு மன்னர்கள் மோதலில் தனக்கு என்ன பங்கிருக்க முடியு மென்று அவன் எண்ணினான். ஆகையால் வியப்பு விரவிய பார்வையை அவர்மீது வீசவும் செய்தான். அந்தப் பார்வையில் தொக்கி நின்ற கேள்வியைப் புரிந்துகொண்ட குறுங்கோழியூர்க்கிழார் கூறினார்: “இளமாறா! தமிழகத்தின் பெருமை, பிற்காலம் இரண்டும் உன் கையிலிருக்கிறது” என்று.

இளமாறன் வியப்பு பன்மடங்கு அதிகமாயிற்று. “குருவியின் தலையில் பனங்காயை வைக்க முயல்கிறீர் குறுங்கோழியூர்க்கிழாரே! நான் சிறுவன்...” என்று மேலும் ஏதோ சொல்லப் போன இளமாறனை இடைமறித்த புலவர், “நெடுஞ்செழியன் உன்னைவிடச் சிறியவன்” என்று சுட்டிக் காட்டினார்.

“அவர் மன்னர்; படைபலமுள்ளவர்” என்றான் இளமாறன்.

"தலையாலங்கானத்தில் வெற்றி கொண்டது படை பலமல்ல."

"வேறு எது?"

"நெடுஞ்செழியனின் வீரம், அவன் நெஞ்சுத்துணிவு, புத்தியின் கூர்மை."

குறுங்கோழியூர்க்கிழாரின் சொற்கள் எந்தத் திசையில் செல்கின்றன என்பதைப் புரிந்துகொண்ட இளமாறன் மௌனம் சாதித்தான். புலவர் சற்று நிதானித்துவிட்டுச் சொன்னார்: "இளமாறா! நீ பிறந்த குடியை நான் அறிவேன். நான் நினைத்திருக்கும் பணிக்கு வேண்டிய துணிவும் தகுதியும் உனக்கிருக்கிறது என்பதை அறியாவிட்டால் உன்னை இங்கு அழைத்தே இருக்கமாட்டேன். நீ நெடுஞ் செழியனுக்கு எவ்விதத்திலும் குறைந்தவனல்லன். உங்களுக்குள் வித்தியாசம் ஒன்றுதான். அவன் மன்னன். நீ மன்னனில்லை."

"என்ன பணியை முன்னிட்டு வரவழைத்தீர்கள் கிழாரே?" என்று வினவினான் இளமாறன், புலவர் செய்த புகழ்ச்சியால் சற்று சங்கடத்துக்குள்ளாகி.

அவன் சங்கடத்தைக் கவனித்த கிழாரின் இதழ்களில் இளநகை விரிந்தது. "புகழ்வது புலவர்கள் குணந்தான் இளமாறா! ஆனால் உன்னை நான் இப்பொழுது புகழ நேரமில்லை, அதற்கு அவசியமுமில்லை. உண்மையைக் கூறினால் நான் உன்னை வரவழைத்த காரியம் தொல்லை தருவது. ஆனால், நாட்டுக்கு அத்தியாவசியமானது" என்று கூறினார்.

"பணியைக் குறிப்பிடுங்கள் கிழாரே" என்று மீண்டும் கூறினான் இளமாறன்.

குறுங்கோழியூர்க்கிழார் சில நொடிகள் யோசித்தார். சில விநாடிகள் அந்த வாலிப வீரனை உற்று நோக்கினார். பிறகு ஏதோ பெரும் ரகசியத்தைச் சொல்வது போல், "உம் மன்னனைச் சிறை மீட்கும் பணி" என்று சொன்னார்.

அடுத்த பல விநாடிகள் பெரும் மௌனம் நிலவியது அந்த அறையில். இளமாறனும் பேசவில்லை, புலவரும் பேசவில்லை. அந்தப் பயங்கரப் பணியைக் கேட்ட இளமாறன் பயத்துக்குப் பதில் ஆச்சரியமே பட்டான். படைகள் சாதிக்க முடியாததை, தான் எப்படிச் சாதிக்க முடியும் என்று எண்ணிப் பார்த்தான். பாண்டி நாட்டில் எங்கோ ஓர் இடத்தில் சிறை வைக்கப்பட்டிருக்கும் யானைக் கண்சேய் மாந்தரனைச் சிறை மீட்கப் போன இரு பெரும் யானைப் படைகள் நாசமாகி விட்டதையும், தகவல் சொல்லக்கூட யாருமே திரும்பி வராததையும் பற்றிச் சேர நாடே பேசிக்கொண்டிருந்ததை அறிந்திருந்த இளமாறன், 'உண்மையில் புலவர் என் குறுந்தலையில் மலையைத் தான் வைக்கப் பார்க்கிறார்' என்று தனக்குள் சொல்லிக் கொண்டான். பிறகு அதை வெளிப்படையாகவும் கேட்க முற்பட்டு, "புலவரே! இது என்னால் முடிகிற காரியமா?" என்றான்.

"உன்னால் முடிந்தால்தான் உண்டு" என்றார் புலவர்.

"இரு யானைப் படைகள் சிறை மீட்கச் சென்று அழிந்து விட்டனவே" என்று குறிப்பிட்டான் சேரநாட்டு வீரன்.

"ஆம்!"

"படைகளால் முடியாதது தனி ஒருவனால் முடியுமா?"

"முடியும்!"

"எப்படி?"

"படைகள் வருவதைக் காவலர் அறிவது சுலபம். தனி மனிதன் வருவதைப் புரிந்துகொள்ள முடியாது. படை பலத்தைவிட தனிமனிதனின் புத்திபலம், பல விஷயங் களைச் சாதிக்க முடியும்."

இதற்கு இளமாறன் சில விநாடிகள் பதில் சொல்ல வில்லை. பதில் சொன்னபோது அவன் ஒரு முடிவுக்கு வந்துவிட்டான் என்பதைப் புரிந்துகொண்டார் புலவர்.

"உத்தரவிடுங்கள் புலவர் பிரானே" என்றான் இளமாறன்.

உத்தரவிட முற்பட்ட புலவர் மெள்ள மெள்ளச் சொன்னார்: "இளமாறா! தமிழகம் செழிக்கத் தமிழகம் ஒன்றுபட வேண்டும். தமிழகம் ஒன்றுபட தமிழ் மன்னர் களிடையுள்ள விரோதம் அகல வேண்டும். மாந்தரன்சேரல் இரும்பொறை சிறையிலிருக்கும் வரை விரோதம் அகலாது. போர் நெருப்பு அடியில் இருந்துகொண்டே இருக்கும். ஆகவே முதலில் சேர மன்னனை விடுவிக்க வேண்டும்" என்றார்.

"நீங்கள் சொன்னால் பாண்டியன் நெடுஞ்செழியனே விடுதலை செய்வாரே."

"மாட்டான்."

"ஏன் புலவரே?"

"ஒருமுறை மாந்தரன்சேரல் இரும்பொறை தனது சபை நடுவே நெடுஞ்செழியனைச் சிறுவனென்றும் அறிவற்றவ னென்றும் பேசியிருக்கிறான். அந்தப் பழம் பகையை நெடுஞ் செழியன் மறக்கவில்லை. அதுமட்டுமல்ல, பாண்டியன் கருணை காட்டி விடுதலை செய்வதை சேரனும் விரும்ப மாட்டான். தந்திரத்தால் பாண்டியனையும் மீறி அவனை

விடுவிடுப்பதே வழி. அதற்குத் திட்டம் தயாரித்து இருக்கிறேன்" என்று புலவர் கூறினார்.

"அந்தத் திட்டத்தைச் சென்ற ஓராண்டாக ஏன் நிறைவேற்ற முடியவில்லை?" என்று இளமாறன் வினவினான்.

"முயன்றேன் இளமாறா!"

"முயன்றும் பயனில்லையா?"

"இல்லை."

"ஏன்?"

"நான் ஒவ்வொருவராக நான்கு வீரர்களை அனுப்பினேன், திட்டத்தை நிறைவேற்ற."

"அவர்கள் என்ன ஆனார்கள்?"

"போய்விட்டார்கள், நமனுலகுக்கு."

"நான்..."

"ஐந்தாவது."

"நமனுலகு செல்லவா?"

"இல்லை; நீ மாளமாட்டாய் இதில்."

"யார் சொன்னது?"

"என் மனம் சொல்லுகிறது!"

"நால்வர் ஏன் மாண்டார்கள்? திட்டம் பலவீன மானதா?" என்று சற்று உணர்ச்சியுடன் வினவினான் இளமாறன்.

குறுங்கோழியூர்க்கிழார் இளமாறனை உற்று நோக்கினார்.

"இல்லை இளமாறா! பலவீனத் திட்டமல்ல அது, பயங்கரத் திட்டம். அந்தத் திட்டத்தில் உயிர்ப்பலி எந்த

விநாடியிலும் நேரலாம். கேள் விவரிக்கிறேன்" என்று தமது திட்டத்தை விவரிக்கத் தொடங்கினார் புலவர் பெருமான்.

# 4

# பகைச்சுவையில் நகைச்சுவை

**பா**ண்டியன் நெடுஞ்செழியனின் சிறையிலிருந்து சேரமான் யானைக்கண்சேய் மாந்தரன்சேரல் இரும் பொறையை விடுவிக்கத் தாம் ஓராண்டு காலமாக வகுத்து வைத்திருக்கும் பயங்கரத் திட்டத்தை மெள்ள மெள்ள விவரிக்க முற்பட்ட புலவர் பெருமானான குறுங்கோழியூர்க் கிழார், அந்த விவரணத்துக்குப் பூர்வாங்கமாக அதன் தன்மையையும், எத்தகைய சக்திகளை இளமாறன் எதிர் நோக்கிச் சமாளிக்க வேண்டுமென்பதையும் எடுத்து விளக்கினார். மாந்தரன்சேரல் இரும்பொறையின் கதியை எண்ணியதும் சற்றே சோகப் பெருமூச்சுவிட்ட கிழார், "இளமாறா! திட்டம் பயங்கரமானது என்று சொன்னேன் உனக்கு. ஆனால் நிறைவேற்ற முடியாததல்ல. மிகுந்த எச்சரிக்கையுடன் நடந்துகொண்டால் திட்டம் கண்டிப்பாய் நிறைவேறும். ஆனால்..." என்று சற்றே நிறுத்தினார்.

புலவரையே உற்றுப் பார்த்துக்கொண்டிருந்த இளமாறன் முகத்தில் எந்தவித உணர்ச்சியும் தெரியவில்லை. உயிரைப்பற்றி என்றுமே கவலைப்படாத அந்தச் சேரநாட்டு வீரன் மனத்தில் திட்டத்தினால் ஏற்படும் ஆபத்துகளைப் பற்றிக் கவலை ஏதும் எற்படவில்லையாகையால் அவன்

முகம் சர்வசாதாரணமாகவே இருந்தது மட்டுமல்லாமல் அவன் சொற்களும் எந்தவித உணர்ச்சியுமில்லாமலே வெளி வந்தன. "சொல்லுங்கள் புலவரே!" என்று அவன் மேலும் அவரை ஊக்கினான்.

இளமாறனின உணர்ச்சியற்ற உறுதியான சொற்களால் திடமுற்ற கிழார் சொன்னார், "இளமாறா! என் நெஞ்சிலும் அச்சம் லவலேசமும் கிடையாது. ஆனால் தமிழகத்தின் தற்கால நிலை உள்ளத்தில் சோகத்தை எழுப்பியிருக்கிறது. அதுமட்டுமல்ல, இந்தக் கணத்தில் உன்னைப்பற்றிய கவலையும் அதிகமாக என் உள்ளத்தைக் கௌவிக்கொண் டிருக்கிறது" என்று.

"என்னைப்பற்றி என்ன கவலை?" என்று வினவினான் இளமாறன்.

"நீ வயதிற் சிறியவன். உன்னை அனுப்பும் பணியோ..." என்று முழுவதையும் சொல்லாமல் வார்த்தைகளை விழுங்கினார் குறுங்கோழியூர்க்கிழார்.

"பயங்கரமானது, அதில் என் உயிர் போனாலும் போகலாம். என்மீது அதனால் உங்களுக்குப் பரிதாபம். எனக்கும் கதவைத் திறந்த அந்தப் பணிப்பெண்ணுக்கும் பரிதாபம்" என்ற இளமாறனைச் சட்டென இடைமறித்த குறுங்கோழியூர்க்கிழார், "இளமாறா! நிறுத்து நிறுத்து! என்ன பணிப்பெண்ணா! யார் பணிப்பெண்!" என்று பதற்றத்துடன் வினவினார்.

இளமாறன் கண்களில் திடீரெனச் சந்தேகத்தின் சாயை விரிந்தது. அவன் மனத்தில் ஆரம்பத்தில் உதித்த சந்தேகம் மீண்டும் துளிர்விட்டது. "எனக்குக் கதவைத் திறந்தவள்..." என்று இழுத்தான்.

"திறந்தவள்?" கிழாரின் கேள்வியில் வியப்பிருந்தது.

"பணிப்பெண் என்று சொன்னாள்" என்று குறிப்பிட்டான் இளமாறன்.

"அப்படியா?" என்று வியப்பைக் குரலில் காட்டினார் கிழார்.

"ஏன் அவள் பணிப்பெண் அல்லவா?" என்று வினவினான் இளமாறன் தன் விழிகளைப் புலவர் மீது நாட்டி.

பயங்கரத் திட்டத்தை விவரிக்க முற்பட்ட புலவர் தமது தாடியை உருவிவிட்டுக்கொண்டு சற்றுக் குதூகலத்துடன் நகைத்தார். "பணிப்பெண்தான். ஒருவகையில் பார்த்தால் அதுவும் சரிதான்" என்று அவர் கூறிய வார்த்தைகளிலும் நகைப்பு ஒலித்தது.

புலவர் பெருமான் அந்தப் பெண்ணைப்பற்றிய விவரங்களை மறைக்கிறார் என்பதைப் புரிந்துகொண்ட இளமாறன் கேட்டான், "புலவரே! அந்தப் பெண்ணைப் பற்றிய தகவல்களை நானறியக் கூடாதா?" என்று.

புலவர் மீண்டும் யோசனையில் ஆழ்ந்துவிட்டதற்கான அறிகுறிகள் அவர் முகத்தில் தென்பட்டன. சில விநாடிகள் யோசனைக்குப் பிறகு அவர் முகத்தில் சாந்தி நிலவியது. "இறைவன் திருவருள் அப்படியா...!" என்று தமக்குதாமே ஏதோ சொல்லிக்கொண்டார்.

அவர் பேசியதன் பொருள் சிறிதும் விளங்கவில்லை, அந்தச் சேரநாட்டு வாலிபனுக்கு. "இறைவன் திருவருளுக்கு என்ன இப்பொழுது?" என்று சலிப்புடன் வினவினான்.

"ஒன்றுமில்லை, நன்றாக இருக்கிறது. சிறப்பாக இருக்கிறது" என்றார் கிழார் சிறிது மகிழ்ச்சியுடன்.

"என்ன சிறப்பாக இருக்கிறது?" இளமாறனின் இந்தக் கேள்வியில் சிறிது சீற்றமிருந்தது.

"இறைவன் திருவருள்!"

"அதைத்தான் சொன்னீர்களே?"

"ஆம் சொன்னேன்."

"அந்தச் சிறப்பு திடீரென எப்படி வந்தது என்பதை விளக்கவில்லையே நீங்கள்."

"காலம் விளக்கும்."

"இப்பொழுது உங்களுக்கு மட்டும்..."

"விளக்கியிருக்கிறது?" என்ற கிழார், "அந்தப் பெண்ணைப்பற்றி விவரமறிய நீ விரும்பினாய் அல்லவா?" என்றும் கேட்டார்.

"ஆம்."

"அப்பொழுதுதான் விளங்கிற்று" என்று சொன்ன கிழார் மெல்ல நகைத்தார். பிறகு திடீரென நகைப்பை நிறுத்திக்கொண்டார். மீண்டும் தீவிர யோசனையில் ஆழ்ந்துவிட்டுச் சேரமான் சிறைவாசத்தைப்பற்றிப் பேசத் தொடங்கிச் சொன்னார்: "இளமாறா! சேரமான் விடுதலைத் திட்டத்தை விவாதிக்கத் தொடங்கி வேறெங்கோ போய் விட்டோம். அப்படிப் போனதும் நல்லது. என் வேலை இப்பொழுது மிகச் சுலபமாகிறது. அதனால்தான் இறைவன் திருவருளை வியந்தேன். இளமாறா! உனக்குக் கதவைத் திறந்தாளே ஒரு கட்டழகி, அவள் உன்மீது பரிதாபப் பார்வையை வீசியதாகக் கூறினாய் அல்லவா? அந்தப் பரிதாபம் உனக்குப் பெரும் கவசம் இளமாறா! அவள் பார்வை, அவள் கையின் சைகை, அவள் தோழமை உன்னைப் பெரிதும் காப்பாற்றும். ஆனால் அந்தப்

பெண்ணிடம் மிக எச்சரிக்கையுடன் நடந்துகொள். அதிகமாக நெருங்காதே" என்று.

"ஏன் புலவரே? அவள் அத்தனை கொடியவளா?" என்று வினவினான் இளமாறன்.

"கொடியவளல்லள் இளமாறா! அவளைவிடக் கருணை யுள்ளம் படைத்தவள் இந்தத் தமிழகத்தில் இருக்க முடியாது. ஆனால் நீ மட்டும் அவளை அதிகமாக நெருங்காதே" என்றார் புலவர்.

"ஏன்?"

"காரணம் கேட்காதே. காலக்கிரமத்தில் நீ புரிந்து கொள்வாய்."

இளமாறன் ஏதும் புரியாமல் புலவரை நோக்கினான். மீண்டும் இரண்டொரு கேள்விகளை அந்தப் பெண்ணைப் பற்றித் தொடுத்தான். அவள் விஷயமாக மேற்கொண்டு ஏதும் பேச மறுத்த குறுங்கோழியூர்க்கிழார் பேச்சை அடியோடு மாற்றி, "அவளைப்பற்றிப் பிறகு பேசுவோம் இளமாறா! திட்டத்தைப்பற்றிக் கேள். திட்டம் பயங்கரமான தென்றும், எச்சரிக்கையுடன் நடந்துகொண்டால் அதை நிறைவேற்றலாம் என்றும் சொன்னேன். ஆனால் அதை நிறைவேற்றுங்கால் பாண்டியன் நெடுஞ்செழியன் எப்பேர்ப் பட்டவன் என்பதை நீ புரிந்துகொள்ளவேண்டும். இன்றைய தமிழகத்தில் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ் செழியனைவிடப் புத்திக் கூர்மையுள்ளவர்கள் கிடையாது. அவனுக்குக் கண்கள் ஆயிரம் உண்டு" என்றார்.

புலவர் சொன்னது நன்றாகப் புரியவே செய்தது இளமாறனுக்கு. "அதை நானே கவனித்தேன் புலவரே! வரும் வழியில் பாண்டிய மன்னன் காவல் வகுத்திருக்கும்

முறையில் அரசனறியாமல் இந்த நகரத்துக்குள் யாரும் நுழைய முடியாதென்பதைப் புரிந்துகொண்டேன்" என்றான் இளமாறன்.

"ஆம் இளமாறா, மதுரையின் காவல் இணையற்றது. அதுமட்டுமல்ல. நெடுஞ்செழியன் படை வீரர் மட்டுமின்றி ஒற்றர் பலரும் மதுரையைக் காவல் புரிகிறார்கள். மதுரையின் ஊடே இன்று நடந்தால் யார் பிச்சைக்காரன்? யார் ஒற்றன்? யார் வர்த்தகன்? யார் உளவாளி? என்பதை அறிய முடியாது. புதிதாக மதுரைக்குள் நுழைந்த அத்தனை பேர் மீதும் ஒற்றர்கள் கண்காணிப்பு இருக்கிறது" என்றார் புலவர்.

"அப்படியானால் நான் வந்ததுகூட...."

"நெடுஞ்செழியனுக்குத் தெரிந்திருக்க வேண்டும்."

இளமாறன் இதயத்தில் திகைப்புக்குப் பதில் வியப்பு மண்டியது. ஆகவே கேட்டான்: "அப்படியானால் கிழாரே! நான் இருமுறை திட்டிவாசலைத் தட்டுவானேன்? ரகசியமாக நுழைவானேன்? இதிலெல்லாம் பயனென்ன இருக்கிறது?" என்று.

பெரியவர் முகத்தில் புன்முறுவல் தோன்றியது. "இளமாறா! இங்கு யார் நுழைவதும் நெடுஞ்செழியனுக்குத் தெரியாது" என்றார் அவர்.

"ஏன் புலவரே! இந்த இடம் மட்டும் என்ன காவலுக்கு விலக்கா?" என்று வினவினான் அந்த வாலிபன்.

"ஆம் இளமாறா! இந்த ஓர் இடம் காவலுக்கு விலக்கு. இதை யாரும் கண்காணிக்க முடியாது. இங்கு குறுங் கோழியூர்க்கிழார் இருக்கிறார் அல்லவா?"

"இருந்தாலென்ன?"

"அவரிடம் பாண்டிய மன்னனும் அவன் குடும்பத்தாரும் தமிழ் பயில்கிறார்கள். ஒருவகையில் கிழார் அவர்கள் ஆசான்."

"ஆசானா? நண்பரா?"

"இரண்டுந்தான்."

"பாண்டியனுக்கு நண்பரானால் நீங்கள் சேரமானுக்கு..."

"எப்படி நண்பனாக முடியும் என்று கேட்கிறாய், இளமாறா! எனக்குப் பாண்டியனும், சேரனும், சோழனும் மூவரும் ஒன்றுதான். மூவரும் தமிழன்னையின் குழந்தைகள்" என்றார் கிழார்.

புலவர் பெருமானின் பரந்த உள்ளம் தெரிந்தது இளமாறனுக்கு. புலவர் திட்டத்தின் பயங்கரத்தைத் தெரிவித்தாரேயொழிய அதை நிறைவேற்றும் சக்தி அவருக்கிருந்ததைத் தெரிவிக்கவில்லை என்பதை அந்த வாலிபன் புரிந்துகொண்டானானாலும், அத்தனை செல்வாக்குள்ள பெருமான் சேரமானை விடுவிக்கும் திட்டத்தில் ஏன் ஏற்கெனவே நான்கு உயிர்களைப் பறிகொடுத்துவிட்டார் என்பது மட்டும் புரியவில்லை அவனுக்கு. தன் புத்திக்கு நேரிடையாகத் தெரிவதைவிட ஆழமான மூடுமந்திரம் ஏதோ அதில் இருக்கிறதென்பதை மட்டும் உணர்ந்துகொண்ட இளமாறன் அந்த நேரத்தில் அதைப்பற்றி அறிய முயலுவதில் பயனில்லை என்று தீர்மானித்துக்கொண்டானாகையால், "புலவரே! நான் என்ன செய்ய வேண்டும் என்பதைச் சொல்லுங்கள்" என்று வினவினான்.

புலவர் ஆசனத்திலிருந்து எழுந்து அடக்கமாக நின்ற அந்த வாலிபனுக்கு அருகில் வந்து அவன் தோள்மீது

தனது கையை வைத்துக்கொண்டு, "இளமாறா! பாண்டியன் நெடுஞ்செழியனை அணுகிச் சேரனை விடுவிப்பதானால் அதை நாளைக்கே செய்துவிடுவேன். ஆனால் அது நடவாது. பாண்டியன் தயவால் விடுதலை அடைய வீரனான சேரமான் உடன்பட மாட்டான். ஆகவே பாண்டியனையும் மீறித்தான் அந்தப் பணியை நாம் செய்ய வேண்டும். அப்படிச் செய்யும்போது நாம் தமிழகத்தின் பெரும் அறிவாளியுடன் மட்டுமல்ல, பெரும் வீரன் ஒருவனுடன் மோதுகிறோம். அது மட்டுமல்ல, நகைச்சுவையுள்ள ஒரு மன்னனிடம் நாம் மோதுகிறோம்" என்று கூறினார்.

இளமாறன் புலவரை ஏறெடுத்து நோக்கினான். "என்ன! நகைச்சுவையா!" என்று வியப்புடன் கேட்கவும் செய்தான்.

"ஆம்! பாண்டியன் நெடுஞ்செழியன் நகைச்சுவை யுள்ளவன், பகைமையிலும் அதைக் காட்டியிருக்கிறான்" என்றார் புலவர்.

"புரியவில்லை எனக்கு" என்றான் இளமாறன்.

புலவர் விளக்கினார்: "இளமாறா! யானைகளைப் போலவே பலம் உள்ளவனும், யானையின் கண்களைப் போல் கண்களைப் படைத்தவனுமான சேரமான் யானைகளைப் பிடிப்பதில் வல்லவன் என்பதை உலகம் அறியும். அவனைச் சிறைப்பிடித்து வந்து நெடுஞ்செழியன் தன் எதிரே மதுரை நீதி மண்டபத்தில் செருக்குடன் நின்ற சேரமானை நோக்கிக் கேட்டான்: 'உன் பலமும் செருக்கும் என்ன ஆயிற்று?' என்று. 'யானையை அவிழ்த்துவிடு, அது உன்னைத் துவைத்துவிடும்' என்று சேரமான் அந்தச் சபையிலும் தன் யானைப் பலத்தைச் சுட்டிக் காட்டிச் சீறினான். யானையென்று தன்னைச் சொல்லிக்கொண்ட சேரமானை யானையைப் போலவே நடத்த உறுதிகொண்ட

நெடுஞ்செழியன் உள்ளுக்குள் நகைத்துக்கொண்டதல்லாமல் அந்த நகைச்சுவையைச் சேரமானைச் சிறை வைத்ததிலும் காட்டினான். அதுமட்டுமல்ல, நகைச்சுவையுடன் பகைச் சுவையையும் காட்டினான். அதன் விளைவு என்ன தெரியுமா?" என்று கேட்டார் புலவர்.

"தெரியாது" என்றான் இளமாறன்.

புலவர் பெருமான் கண்கள் பளிச்சிட்டன. "விளைவு பயங்கரம் இளமாறா; மூங்கில் கோட்டை, அதன் விளைவு" என்றார் புலவர்.

இளமாறனுக்கு ஏதும் விளங்கவில்லை. "மூங்கில் கோட்டையா?" என்று வினவினான், அவன் பெரும் குழப்பத்துடன்.

"ஆம், மூங்கில் கோட்டைதான்" என்றார் புலவர், வெறுப்பு நிரம்பிய குரலில்.

"அது எங்கிருக்கிறது?"

"இங்கிருந்து இரண்டரை காத தூரத்தில்."

"அப்படியொரு கோட்டை இருப்பதைப்பற்றி நான் கேள்விப்படவில்லை."

"நீ என்ன? பலபேர் கேள்விப்பட்டதில்லை. ஆனால், வரலாறு கேள்விப்படும்."

"அத்தகைய பயங்கரக் கோட்டையா?"

"ஆம், இளமாறா! மிகவும் பயங்கரமான கோட்டை அது!"

"அது எப்படியிருக்கிறது? அமைப்பின் விவரம் என்ன?"

இளமாறன் கேள்விக்குப் புலவர் பதில் சொல்ல வில்லை. "இப்படி வா" என்று அவனை அழைத்துக்

கொண்டு அறைக்கு வெளியே சென்று மாடிப்படியைக் குனிந்து நோக்கி, "இமயவல்லி! இமயவல்லி!" என்று இருமுறை அழைத்தார்.

இளமாறனுக்குக் கதவைத் திறந்த கட்டழகி கீழ் அறையொன்றிலிருந்து வந்து இரண்டு படிகள் ஏறி, "ஏன்? அழைத்தீர்களா?" என்று கொஞ்சும் குரலில் கேட்டாள்.

"ஆம், மேலே வா" என்றார் புலவர்.

அவள் விடுவிடென தலைகுனிந்து படிகளை நோக்கி இடை அசைய எழில்கள் குலுங்க ஏறித் தாழ்வாரத்தை அடைந்தாள். அவள் அருகே வந்ததும், "இமயவல்லி! இவர் மூங்கில் கோட்டையைப்பற்றி அறிய விரும்புகிறார்" என்றார் புலவர்.

"நீங்களே சொல்வதுதானே" என்றாள் அந்தப் பெண்.

"நீ நேரில் பார்த்தவள். நீ சொன்னால்தான் சிறப்பா யிருக்கும்" என்றார் புலவர். "வா இமயவல்லி! வா இளமாறா!" என்று இருவரையும் அழைத்துக்கொண்டு தமது அறைக்குள் மீண்டும் சென்று மஞ்சத்திலமர்ந்துகொண்டு, "இமயவல்லி! சொல் இந்த வாலிபனுக்கு, மூங்கில் கோட்டையைப்பற்றி விவரமாகச் சொல். இவருக்கு பாண்டியன் பகைச்சுவையில் நகைச்சுவை கலந்த அந்த வரலாற்றைச் சொல்" என்றார்.

இமயவல்லி மெள்ள மெள்ளச் சொன்னாள். அவள் சொற்களைக் கேட்கக் கேட்க இளமாறன் விவரிக்க இயலாத வியப்புக்கும் திகைப்புக்கும் இலக்கானான். தான் பெரும் பாதாளத்தில் ஆழ்த்தப்படுவதையும் உணர்ந்துகொண்டான்.

# 5

# மூங்கில் கோட்டையும் வீரர் வேட்டையும்

அழகெல்லாம் திரண்டு அடக்கமே உருவெடுத்தது போல் புலவர் பெருமானுக்கு எதிரே தலைகுனிந்து நின்று அவர் கட்டளைப்படி மூங்கில் கோட்டையைப்பற்றி விவரங்களை எடுத்துச் சொல்ல முற்பட்ட இமயவல்லி, பேச்சைத் துவங்குமுன் சோகங் கலந்த பெருமூச்சொன்றை விட்டாள். அவளிடமிருந்தும் புலவர் வீற்றிருந்த மஞ்சத்தி னின்றும் சற்று எட்ட நின்ற இளமாறன், அவள் நின்ற அழகையும் தலைகுனிந்த அடக்கத்தையும் அவள் அடங்கி நின்றாலும் அடங்க மறுத்த திண்மை எழில்களையும் அவள் பெருமூச்சை அடுத்து அந்த எழிலிடங்கள் எழுந்து தாழ்ந்த வசீகரத்தையும் கண்டு சாபத்தால் இவ்வுலகுக்கு வந்த அப்சர கன்னிகையைப் பார்த்துப் பிரமிக்கும் மானிடனையொத்து வியப்படைந்து நின்றான். அவள் நின்ற தோரணை, அத்தனை அடக்கத்திலும் தெரிந்த கம்பீரம், ஓர் அதிகாரம் அனைத்தும் அவள் அரச குடும்பத்தைச் சேர்ந்தவள் என்பதை அறிவுறுத்தினாலும் அவள் எந்த அரச குடும்பத்தைச் சேர்ந்தவள், எதற்காகப் புலவரிடம் பணி புரிந்து வருகிறாள் என்ற விவரங்களை அறியாததால் வியப்புடன் ஓரளவு குழப்பமும் கொண்டு நின்றான் சேர நாட்டு வீரன். இத்தகைய குழப்பத்தாலும் அவள் வசீகர எழில்கள் இதயத்தே கிளப்பிய உணர்ச்சிகளாலும் இவ்வுலகை மறந்துவிட்ட இளமாறன், அந்தப் பேரழகி ஆரம்பப் பெருமூச்சை அடுத்து விடுத்த கேள்வியைக்கூடக் கவனிக்கவில்லை. ஆகவே அந்தக் கேள்வியை இமயவல்லி

இரண்டாம் முறையும் கேட்டாள்: "சேரநாட்டு வீரரே! நீங்கள் வைகையைத் தாண்டித்தானே வந்தீர்கள்?" என்று. இரண்டாம் முறை சற்று அழுத்தமாகக் கிளம்பிய அந்தக் கேள்வியால் அவள் அழகு விரித்த வலையிலிருந்து மீண்ட இளமாறன் சுரணை வரப்பெற்று, "ஆம் ஆம்! வைகையைத் தாண்டித்தான் வந்தேன்" என்றான்.

தலைகுனிந்த வண்ணமே மீண்டுமொரு கேள்வியைக் கேட்டாள் அவள். "வைகையில் என்ன விசித்திரத்தைக் கண்டீர்கள்?" என்று.

"அதன் இணையற்ற எழிலைக் கண்டேன். அரித்து ஓடிய நீரை எடுத்து அந்தணர் வீசிய அந்திக் கடன் விந்தையைப் பார்த்தேன். பிறகு அந்த அந்திவேளையில் சற்று அப்பால் தள்ளி நீராடிய..." என்று மேலும் ஏதோ சொல்லப் போய் சட்டென சொற்களை நிறுத்திவிட்ட இளமாறனை இடைமறித்த இமயவல்லியின் சொல் வீச்சில் சினம் இருந்தது. "அப்பால் தள்ளி நீராடிய இளமங்கையரைக் கண்டீர்கள். பல்லை இளித்துக்கொண்டு நின்றீர்கள்" என்று சீறிய அவளும் தான் அத்துமீறிவிட்டதை உணர்ந்து சட்டென்று பேச்சை மாற்றி, "இத்தகைய காட்சிகளைப் பற்றிக் கேட்கவில்லை வீரரே! இந்தக் காட்சிகள் அனைவரும் அறிந்தவை! புலவர்களால் ஏற்கெனவே பாடப்பட்டவை. இவற்றில் விந்தையுமில்லை, விசித்திரமுமில்லை. இருந்தாலும் நமது தற்சமய ஆராய்ச்சிக்கு அவை தேவையு மில்லை" என்று சடசடவெனவும் கடுமையாகவும் பேசினாள்.

இளமாறன் பெரிதும் சங்கடத்துக்குள்ளாகிப் புலவரைப் பார்த்தான். புலவர் முகத்தில் சீற்றத்துக்கு பதில் மகிழ்ச்சிக் குறி லேசாகப் படர்ந்து கிடந்தது. மீசை தாடி மறைக்காத இடங்களில் தெரிந்த இதழ்களில் புன்முறுவலும் தோற்ற

மளித்தது. அந்தப் புன்முறுவலைக் கண்டதும் சங்கடம் மேலும் அதிகரிக்கவே, "நான்... நான் பார்த்ததைச் சொன்னேன்..." என்று மெல்ல இமயவல்லியை நோக்கிக் கூறினான் அந்த வாலிபன் தட்டுத் தடுமாறி.

இமயவல்லியின் சீற்றமும் சற்று அடங்கியிருக்க வேண்டும். அவள் உள்ளத்தே ஓடிய உணர்ச்சிகளையும் அவள் கட்டுப்படுத்தி இருக்க வேண்டும். ஆகையால் அடுத்து எழுந்த சொற்களில் சீற்றமோ வேறெவ்வித உணர்ச்சி வேகமோ இல்லை. "மற்றவர்கள் பார்வையைப் போல் வீரரான உங்கள் பார்வை இருக்கக் கூடாது. அதுவும் அபாயப் பணியை முன்னிட்டு வந்திருக்கும் உங்களுக்கு வாழ்க்கையில் சபலங்கள் இருக்கக் கூடாது. ஒருவேளை இந்தப் பணியில் நீங்கள் வெற்றி பெற்று உயிருடன் திரும்புவ தானால் உங்கள் பார்வை நல்ல கூர்மையடைய வேண்டும்" என்ற இமயவல்லி ஏதோ தூதனை நோக்கிப் பேசும் ராணியைப் போல் பேசினாள். அந்தப் பேச்சு முடிந்ததும் தலை நிமிர்ந்து தைரியத்துடன் இளமாறன் கண்களையும் சந்தித்து, "வேறென்ன விந்தையைக் கண்டீர்கள் வைகையில்?" என்று வினவினாள்.

தடங்கலின்றி வந்தது இளமாறன் பதில். அவன் கண்களும் மிகுந்த தைரியத்துடன் அந்தப் பெண்ணின் அழகிய விழிகளைச் சந்தித்தன. அரச சந்நிதானத்தில் உத்தரவைப் பெற்று விரைய நிற்கும் வீரன் முறையில் நின்ற இளமாறன், "மூங்கிற் பாலங்கள் இரண்டைக் கண்டேன்" என்றான்.

அதைக் கேட்ட இமயவல்லியின் அழகிய முகத்தில் மகிழ்ச்சிக்குறி படர்ந்தது. புலவர் பெருமானும் ஆமோதிப்ப தற்கு அறிகுறியாகத் தலையை இருமுறை ஆட்டினார்.

இரண்டையும் கவனித்த இளமாறன், "எல்லோரும் பார்க்கும் படியாக நிர்மாணிக்கப்பட்டிருந்த மூங்கிற் பாலங்களில் என்ன அத்தனை ரகசியம் இருக்க முடியும்?" என்று தன்னைத்தானே கேட்டுக்கொண்டாலும் அதை வெளிப் படையாகச் சொல்லாமல் இமயவல்லியிடமிருந்தே சொற்கள் உதிரட்டும் எனக் காத்திருந்தான்.

உள்ளத் திருப்திக்கு அறிகுறியாக முகத்தில் மகிழ்ச்சி ஒளிவீச இமயவல்லி சொன்னாள்: "எதிர்பார்த்தேன்! வீரனான உங்களிடமிருந்து இதை எதிர்பார்த்தேன்" என்று. அவள் குரலிலும் உள்ளத்திலும் பரவிக் கிடந்த மகிழ்ச்சி பிரதிபலித்தது.

இதற்கெல்லாம் காரணம் புரியவில்லை இளமாறனுக்கு. "மூங்கில் பாலத்தை நான் பார்த்ததில் என்ன கெட்டிக்காரத் தனத்தை இந்தப் பெண் என்னிடம் கண்டுவிட்டாள்?" என்று தன்னைக் கேட்டுக்கொண்ட இளமாறன் இகழ்ச்சி யுடன் பதில் கூறினான் அந்த ஏந்திழைக்கு, "ஆம்! ஆம்! சகலரும் பார்க்கும்படியாக வைகையின் கரைகளை அணைத்து நிற்கும் மூங்கிற் பாலத்தை நான் பார்த்துவிட்டது அபூர்வந்தான்..." என்று.

பதிலுக்கு இமயவல்லி, "மூங்கிற் பாலத்தின் அமைப்பு எப்படியிருக்கிறது?" என்று வினவினாள்.

"பாலத்தின் அடி பல பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருக் கிறது. சுமார் இருபது பெருங் கருங்கல் சதுரத் தூண்கள் இடைவெளிகளில் வைகையை அடைத்து நிற்கின்றன. இந்தத் தூண்களுக்கிடையே பெரும் மூங்கில்கள் அடர்த்தியாக வளைக்கப்பட்டிருக்கின்றன. மூங்கில்களுக்கு மேலே இரண்டு முழம் உயரத்திற்குக் களிமண்ணும் சாணமும் செம்மண்ணும் சேர்த்துப் பூசப்பட்டிருப்பதால்

பாதை அதிகக் கெட்டியாயிருக்கிறது" என்று பதிலிறுத்தான் இளமாறன்.

புலவரும் இமயவல்லியும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள். "நான் சொன்னது என்ன?" என்று கேட்டார் புலவர்.

"முற்றிலும் சரி" என்றாள் இமயவல்லி.

"இவனை நம்பலாமல்லவா?" என்று மீண்டும் வினவினார் புலவர்.

"கண்டிப்பாய் நம்பலாம்" என்று இமயவல்லி கூறினாள். அவர்கள் இருவரும் என்ன சொல்கிறார்கள் என்பதை அறியாத இளமாறன், "மூன்றாமவன் நானிருக் கிறேன். உரையாடலில் என்னையும் கலந்துகொண்டால் நன்றாயிருக்கும்" என்றான்.

"உன்னைக் கலந்துகொள்வதற்கில்லை" என்றார் புலவர்.

"ஏன்?" என்று வினவினான் இளமாறன் சற்றுக் கோபத்துடன்.

"பேச்சே உன்னைப் பற்றியதுதானே" என்று கூறிப் புன்முறுவல் செய்த புலவர் பெருமான், "கேள் இளமாறா! மூங்கிற் கோட்டையில் சேரமானை நாடிச்சென்ற நால்வரும் மாண்டுவிட்ட பிறகு அடுத்தபடி யாரைத் தேர்ந்து எடுக்கலா மென்று நானும் இமயவல்லியும் ஆழ்ந்து யோசித்தோம். உன்னை அழைப்பதென்று நான் முடிவு செய்தேன். உன் வயதையும் இவளிடம் சொன்னேன். முதலில் இமயவல்லி ஒப்பவில்லை. அனுபவம் பெற்ற வீரர் நால்வர் தோல்வி யடைந்த பணியில் ஓர் இளைஞனை அனுப்புவது சரியல்ல என்று மறித்தாள். 'இளைஞனைப் பார்' என்று சொன்னேன். இப்பொழுது பார்த்துவிட்டாள். உன்

நுண்ணறிவையும் உணர்ந்துவிட்டாள். இனி என் கவலை விட்டது" என்றார்.

'உயிரைப் பணயம் வைக்கும் இந்தப் பணிக்குத் தேர்ச்சி வேறா?' என்று உள்ளுக்குள் நகைத்துக்கொண்ட இளமாறன், "இத்தனை விவாதமா என்னைப்பற்றி?" என்று கேட்டான் புலவரை நோக்கி.

இந்தக் கேள்விக்குப் புலவர் பதில் சொல்லு முன்பு இமயவல்லியே பதிலைத் தொடங்கினாள். "ஆம் வீரரே! இத்தனை விவாதம் அவசியமாய் இருந்தது. உங்களுக்கு முன் வந்த வீரர் நால்வரும் பல போர்களைக் கண்டவர்கள், அஞ்சா நெஞ்சம் படைத்தவர்கள். அப்பேர்ப்பட்டவர்களே தோல்வியுற்று மாண்டுவிட்ட பணியில் ஓர் இளைஞரைப் பலிகொடுக்க நான் இசையவில்லை. ஆனால் புலவர் பிடிவாதத்துடனிருந்தார். நீங்கள் ஒருவர்தான் சேர மன்னரைச் சிறை மீட்க முடியுமென்றார். அப்பொழுதும் நான் இணங்கவில்லை. எனக்குத் திருப்தியானால்தான் இந்த அபாயப் பணிக்கு உங்களை இறங்க அனுமதிப்பேனென்று சொன்னேன்" என்றாள் இமயவல்லி.

"உங்கள் பரீட்சையில் நான் தேறிவிட்டேனா?" என்று வினவினான் இளமாறன்.

"நன்றாகத் தேறிவிட்டீர்கள். உங்களுக்கு முன்பு வந்த நான்கு பேரிடமும் இதே கேள்வியை நான் கேட்டேன். நால்வரும் சரியாக விடை கூறவில்லை. அவர்கள் வெற்றியைப்பற்றி எனக்கே சந்தேகம். என் சந்தேகம் சரியாகப் போயிற்று" என்றாள் இமயவல்லி.

"நான் வெற்றியடைவேனா?" என்று வினவினான் இளமாறன்.

"வெற்றியடைவீர்கள் என்ற நம்பிக்கை எனக்குப் பிறந்திருக்கிறது. இல்லையேல் உங்களை..."

"இப்படியே திருப்பி ஊருக்கு அனுப்பிவிடுவீர்கள்."

"ஆம்!"

பதிலுக்குச் சிரித்தான் இளமாறன். "ஏன் சிரிக்கிறீர்கள்?" என்று கேட்டாள் இமயவல்லி.

"பெண்ணே! நீ இன்னும் என்னைச் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை. வேட்டைக்குக் கிளம்பிய சிங்கம் வேட்டை தீர்ந்தாலொழிய குகை திரும்புவது இல்லை. என்று அரச முத்திரையுடன் கூடிய அழைப்பு ஓலையை எனக்குப் புலவர் விடுத்தாரோ, என்று சேரமான் விடுதலைப் பணியை முன்னிட்டு நான் கருவூர் வஞ்சியைவிட்டு மதுரைக்குக் கிளம்பினேனோ, அன்றே நீங்கள் இருவரும் என்னை இந்த அலுவலுக்கு அமர்த்திவிட்டீர்கள். அதுவரையில்தான் உங்களிருவர் பொறுப்பும். இனி சேரன் விடுதலையடைந்தாலொழிய நான் ஊர் திரும்பமாட்டேன். நீங்கள் என்னை இந்தப் பணியிலிருந்து விலக்கினாலும் நான் விலக மாட்டேன். இந்த மதுரையில் தங்கி மூங்கில் கோட்டை மர்மங்களை அறிந்து அதை உடைத்து விடுவேன். அல்லது அந்தப் பணியில் முன் சென்ற நால்வர் திசையில் நானும் செல்வேன். இஷ்டப்படி வேலைக்கழைத்து இஷ்டப்படி விலக்கிவிடக் கூடிய வேலைக்காரனல்லன் இளமாறன். சேரநாட்டின் வீரன். அரச முத்திரைக்குத் தலைவணங்கியிருக்கிறேன். அரச பணி முடிந்தாலொழிய சொந்த நாடு மீளமாட்டேன். நினைப்பிருக்கட்டும்!" என்று திடமும் வீரமும் அதிகாரமும் கலந்த குரலில் பேசிய இளமாறன், "சொல் பெண்ணே! இப்பொழுது விவரமாகவும் தெளிவாகவும் சொல், மூங்கில் கோட்டைக்கும் மூங்கில் பாலத்துக்கும் உள்ள உறவை" என்றும் உத்தரவிட்டான்.

அவன் பேச்சைக் கேட்ட புலவர் கண்கள் பளிச்சிட்டன. உணர்ச்சி வேகத்தில் இளமாறன் இமயவல்லியின் உயர்ந்த

பதவியைக்கூட எண்ணிப் பார்க்காமல் ஏக வசனத்தில் பேசிவிட்டதையும் நினைத்துப் புன்முறுவல் கொண்டார்! இமயவல்லியின் முகத்தில் பூர்ண மகிழ்ச்சி இல்லை. வருத்தமும் பரிதாபமும் கலந்து விரிந்து கிடந்தன. "வீரரே! உங்கள் துணிவை நான் மெச்சுகிறேன். உங்கள் கடமை உணர்ச்சியும் என்னைக் கவர்கிறது. இத்தனை நுண்ணறிவும் கடமை உணர்ச்சியும் வீரமும் உள்ள உங்களைப் பெரும் அபாயத்தில் ஆழ்த்த என் உள்ளம் இடம் கொடுக்கவில்லை. ஆனால், வேறு வழியில்லை. சேரமான் சீக்கிரம் விடுதலையாகாவிட்டால் மறுபோர் ஏற்படும். மறுபோர் ஏற்பட்டால் சேரநாடு சிதைந்துவிடும். அதை முன்னிட்டுத்தான் உங்களை இந்தப் பணியில் இறங்க நான் அனுமதித்திருக்கிறேன்" என்றாள்.

இன்னொரு போர் ஏற்பட்டால் சேரநாடு ஏன் சிதைய வேண்டும் என்பது விளங்கவில்லை அந்த வாலிப வீரனுக்கு. சேரநாட்டில் வீரர்களே இல்லையென்று இமயவல்லி நினைக்கிறாளா என்றும் எண்ணினான் அவன். அவன் மனத்திலோடிய எண்ணங்களை உணர்ந்துகொண்டவள்போல் இமயவல்லி சொன்னாள்: "வீரரே! உங்கள் நாட்டில் வீரர்கள் இல்லை என்று சொல்லவில்லை. ஆனால் அந்த வீரம் மட்டும் வெற்றியைத் தராது உங்களுக்கு. பாண்டிய மன்னர் நுண்ணறிவு இணையற்றது. எந்த சமயத்தில் எப்படிப் படைகளைத் திருப்பினால் வெற்றி நிச்சயம் என்பது அவருக்குத் தெரியும். தன் நாட்டை எத்தனை பலமான எதிரியிடமிருந்தும் காக்கும் வழிகளும் தெரியும்..."

இமயவல்லி தனது சொற்களை முடிக்கு முன்பாக இடைமறித்துச் சொன்னான் இளமாறன், "அதை ஏற்கெனவே நான் புரிந்துகொண்டேன்" என்று.

இமயவல்லியின் கண்கள் ஆச்சரியத்தால் எழுந்தன. “எப்படிப் புரிந்துகொண்டீர்கள்!” என்று கேட்டாள் அவள்.

“மதுரையின் பாதுகாப்பு ஏற்பாடுகளிலிருந்து தெரிந்து கொண்டேன். எந்த எதிரி வந்தாலும் வைகையின் மூங்கிற் பாலங்கள் பெரும் பாதுகாப்பு மதுரைக்கு. எதிரி பாதிப் பாலத்திலிருக்கும்போதே கோட்டை மதிலை அடுத்திருக்கும் பாலப் பகுதியை எளிதில் உடைக்கலாம். உடைத்து அடியே யுள்ள மூங்கில்களுக்குத் தீ வைக்கலாம். மூங்கில் தீயின் தன்மை உங்களுக்குத் தெரியுமல்லவா? பிடித்தால் விடாது. காட்டையே அழிக்கவல்லது. திடீர் தீடீரென பெரு மூங்கில்கள் வெடிக்கும். பாலமும் பிளவு கொடுத்து உட்கார்ந்துவிடும். வரும் எதிரி ரதங்கள் திடீரெனப் பிளவுகளுக்குள் சிக்கி ஆற்றிலேயேகூட இறங்கிவிடும். மூங்கில் வெடிப்பில் ரதங்கள் தீப்பிடிக்கும். வீரர்கள் தீப்புண்ணால் சிதறி ஓடுவார்கள். அப்பப்பா! நிலைமை பயங்கரம்!” என்று விளக்கினான் இளமாறன்.

“பிரமாதம் இளமாறா! பிரமாதம்” என்று குதூகலித்தார் திடீரெனப் புலவர்.

“வீரர்கள் இந்தப் பயங்கரச் சாவுக்குள்ளாவதில் புலவருக்கு இத்தனை மகிழ்ச்சியா?” என்று வினவினான் இளமாறன்.

“அதில்லை மகிழ்ச்சி இளமாறா! மூங்கில் கோட்டையின் மர்மத்தின் அடிப்படையை நாங்கள் சொல்லாமலே நீ புரிந்து கொண்டுவிட்டாயே என்றுதான் சந்தோஷப்படுகிறேன்” என்றார் புலவர்.

இமயவல்லியின் கண்களில் மகிழ்ச்சி இல்லை. இத்தகைய நுண்ணறிவு படைத்தவனைப் பலி கொடுக் கிறோமே என்ற உள்ளத்தில் ஏற்பட்ட சோகம் அவள்

கண்களில் விரிந்து கிடந்தது. அந்தச் சோகம் குரலிலும் ஒலிக்கச் சொன்னாள் அவள்: "வீரரே! மதுரை தாக்கப் பட்டால் நீங்கள் சொன்ன பயங்கர விளைவுதான் எதிரிப் படைக்கு! இதே முறையில் ஆனால் இந்த இரு பாலங்களை விட மிகப் பலமாக அமைக்கப்பட்டிருக்கிறது மூங்கில் கோட்டை. பெயர்தான் மூங்கில் கோட்டை அதற்கு. ஆனால் அது மூங்கிலால் நிர்மாணிக்கப்பட்ட கோட்டை அல்ல. சுண்ணக் கலவை அரைத்துக் கல்கொண்டு கட்டப்பட்டது தான் கோட்டை. சமீப காலம்வரை அதற்குச் சூரன் கோட்டை என்று பெயர். அதை மூங்கில் கோட்டை என்று பாண்டிய மன்னர் சமீபத்தில்தான் மாற்றினார்."

"உம் சொல்லுங்கள்." மீண்டும் மரியாதையிருந்தது இளமாறன் பேச்சில். அவன் உணர்ச்சிகளைத் தீட்டிக் கொண்டு கேட்டான், இமயவல்லி சொல்லிய விவரங்களை. இமயவல்லி விவரித்தாள்: "வீரரே! இங்கிருந்து இரண்டரை காத தூரத்தில் இருக்கிறது அந்தச் சூரன் கோட்டை. அந்தக் கோட்டையைத் தூர இருந்து பார்த்தால் சற்று மேடான இடத்தில் கட்டப்பட்ட ஒரு சிறு கோட்டையாகத்தான் அது தெரியும். மற்றபடி அதைச் சுற்றிப் பெரும் மண்மேடு கட்டாந் தரைதான் இருக்கிறது. ஆனால் அந்தக் கட்டாந்தரை மேல் ரதமோ, வண்டியோ போகக் கூடாது. போனால் அதோகதி தான். கோட்டைக்குச் செல்லும் அந்தப் பரந்தவெளி, அந்த மண்மேடு உண்மையில் அபாயமான அகழி. அதில் முதலைகள் பல இருக்கின்றன."

இதைக் கேட்டுப் பிரமித்த இளமாறன் கேட்டான், "என்ன பூமிக்கு அடியில் அகழியா?" என்று வியப்புடன்.

"ஆம்."

"அது எப்படிச் சாத்தியம்? பூமிக்கடியில் அகழி வெட்ட முடியுமா?"

"பூமிக்கடியில் வெட்ட முடியாது."

"அப்படியானால்...?" சந்தேகமும் ஓரளவு விஷயம் புரிந்ததையும் விளக்கும் குரலில் கேட்டான் இளமாறன்.

"நாம் பார்ப்பது பூமியல்ல. கண்ணுக்கெதிரே கோட்டை முன்னணியில் எழுவது மண்மேடல்ல. அது கவிழ்த்து வைத்த மூங்கில் கூடை."

"மூங்கில் கூடையா?"

"ஆம், மூங்கில் கூடைதான் மூங்கில் கோட்டையாகியது. அதற்குக் காரணம் இருக்கிறது வீரரே! யானை பிடிப்பதில் வல்லவரான சேரமன்னர் 'யானையைப் பிடிப்பதுபோல் இந்தச் சிறுவனை நொடி நேரத்தில் பிடித்து விடுவேன்' என்று பாண்டிய மன்னரை ஏளனம் செய்தார். பாண்டிய மன்னரின் காதுக்கு அது வந்தது. அதை உள்ளூர வைத்துக் கொண்டிருந்த பாண்டிய மன்னர் சேர மன்னரைச் சிறை பிடித்ததும் சூரன் கோட்டையைச் சுற்றிப் பெரும் அகழிகளை வெட்டினார். பக்கத்துக் கால்வாய்களிலிருந்து அந்த அகழி களுக்கு நீரையும் பாய்ச்சினர். அந்த நீரில் முதலைகள் நிரம்ப விடப்பட்டன. பிறகு அகழிகளின் மேல் பாகத்தில் இளமூங்கில்கள் பரப்பப்பட்டன. மூங்கில்களின் மேலே களிமண்ணும் சாணமும் பூசி மணலைத் தூவி பார்வைக்குச் சாதாரண கட்டாந்தரைபோல் செய்துவிட்டார் பாண்டிய மன்னர். 'யானைகளுக்குக் குழி வெட்டி மேலே மூங்கில் பரப்பி இலைகளால் மூடி யானை நடந்து வந்து அதில் விழுந்ததும் இவன் யானை பிடிக்கிறவன், அத்தகைய குழிகளுக்கிடையே இவன் உறையட்டும். வெளியில் இந்த யானை வந்தால் அதைக் கீழுள்ள குழியில் (அகழியில்) தள்ளிவிடுங்கள்' என்று உத்தரவிட்ட பாண்டிய மன்னர், 'நீரில் யானை முதலையிடம் ஒன்றும் செய்ய முடியாது. கஜேந்திர மோட்சம்' கதை தெரியுமல்லவா? அதே கதைதான்

இதுவும். ஆனால் இங்கு யானையை விடுவிக்க திருமால் வரமாட்டார். இப்படியெல்லாம் சொல்லி நகைத்தார். 'இந்த யானை தப்ப் முடியாதது மட்டுமல்ல, இந்த யானையை விடுவிக்க வரும் மற்ற யானைகளும் அகழியில் அழிந்து போகும்' என்று சொல்லியும் சிரித்தார். அவர் நகைச்சுவை யைக் கேட்டு அவர் படைத்தலைவர்கள் நகைத்தார்கள். நான் நகைக்கவில்லை. அவர் பகைமை பயங்கரமாயிருந்தது. உங்கள் நாட்டிலிருந்து வந்த இரு யானைப் படைகள் அவர் எண்ணப்படி மூங்கில் கோட்டையின் அகழிகளில் விழுந்து பயங்கர முடிவை அடைந்தன. அந்தப் பயங்கரத்தை நான் கண்ணால் பார்த்தேன். அகழிகளில் விழுந்த யானைகள் முதலைகளின் கடிபட்டு அலறின. சேர வீரர்கள், கோட்டை யிலிருந்து வீசப்பட்ட பாண்டிய வீரர்களின் அம்புகளாலும் ஈட்டிகளாலும் அகழிகளில் வளைந்து வளைந்து கடித்த முதலைகளின் இம்சையாலும் கதறிக் கதறிக் கோர மரணமடைந்தார்கள். இப்பொழுது அந்தக் காட்சியை நினைத்தாலும் என் உடல் நடுங்குகிறது" என்று உணர்ச்சி யுடன் பேசிய அந்த இளமங்கையின் உடல் ஒருமுறை ஆடியது.

இளமாறன் முகம் உணர்ச்சியற்றுக் கல்லாயிருந்தது.

"அந்த இரு யானைப் படைகள் அழிந்ததும், அகழிகள் மீண்டும் மூங்கில்களாலும் களிமண்ணாலும் மூடப்பட்டன. மறுபடியும் அந்த மண்மேடு அமைதிக்கோலம் கொண் டிருந்தது. அதன் கீழே இப்பொழுது அந்தப் பயங்கர அகழிகள் இருக்கின்றன" என்றாள் இமயவல்லி.

"கோட்டையில் எந்தப் புறம் இருக்கின்றன? எத்தனை அகழிகள்?"

"ஏழு அகழிகள், கோட்டையைச் சுற்றிலும்."

"அப்படியானால் எந்தப் படையும் அந்தக் கோட்டையை அணுக முடியாது."

"முடியாது."

"அதற்குள் எப்படிச் செல்வது?"

"ரகசிய வழி இருக்கிறது. அதன் வழியாகப் பாண்டிய மன்னர் மட்டுமே செல்லலாம்."

"அப்படியா?"

"ஆம். குறுகிய வழி. வழி நெடுக ஆறு வாயில்கள். ஒவ்வொரு வாயிலிலும் காவல் உண்டு."

"அப்படியானால் நான் எப்படிப் போவது?"

"வழி நான் சொல்லுகிறேன்." இமயவல்லி திடமாகக் கூறினாள்.

"எப்பொழுது புறப்படலாம்?" இளமாறனும் தயக்க மின்றிக் கேட்டான்.

"அதைப் புலவர்தான் சொல்ல வேண்டும்" என்றாள் இமயவல்லி.

புலவர் யோசனையில் ஆழ்ந்திருந்தார். கடைசியாகத் தியானத்திலிருந்து மீண்டவர்போல் பெருமூச்சு விட்டு, "அதை நாளை நிர்ணயிப்போம், நீங்கள் போய் இளைப் பாறுங்கள்" என்று கூறிவிட்டு, 'வெளியே போகலாம்' என்பதற்கு அறிகுறியாகக் கையை அசைத்தார்.

இமயவல்லி தன்னுடன் வரும்படி இளமாறனுக்குச் சைகை செய்து அறையை விட்டு வெளியேறினாள். இளமாறனும் ஒருமுறை பெரியவரை நோக்கிவிட்டு இமய வல்லியைத் தொடர்ந்து சென்றான். அறையை விட்டு வெளியே வந்த இமயவல்லி பக்கத்துச் சுவரில் எரிந்த பந்தமொன்றைக் கையில் எடுத்துக்கொண்டு படிகளில்

இறங்கினாள். இளமாறன் ஏதும் பேசாமல் அவளைத் தொடர்ந்தான்.

படிகளின் அடிக்கு வந்ததும் இமயவல்லி பக்கத்தே இருந்த ஒரு குறுகிய வழியில் அவனை அழைத்துச் சென்று அங்கிருந்த ஓர் அறையைத் திறந்துகொண்டு உள்ளே நுழைந்தாள். உள்ளேயிருந்த சிறு விளக்கு ஒன்றை ஏற்றி விட்டு, "வீரரே! இன்றிரவு நீங்கள் இந்த அறையில் தங்குங்கள். நான் வருகிறேன்" என்று கூறிவிட்டு வெளியே செல்ல முயன்றாள்.

அவளை வழிவிட வாயிற்படி வரையில் வந்த இளமாறன் வாயிலை அவள் தாண்ட ஒரு காலை வெளியே எடுத்து வைக்க முற்பட்டதும் "இமயவல்லி!" என்று பெயர் சொல்லி அழைத்தான்.

அவள் திடீரென்று பயத்துடன் திரும்பினாள். இருவர் விழிகளும் சந்தித்தன. சந்தித்த விழிகள் பிரியவில்லை. சந்தித்துக்கொண்டே இருந்தன. அவள் கால்கள் படியைத் தாண்டிச் செல்ல மறுத்தன. அந்தச் சில விநாடிகளில் இளமாறன் மூங்கில் கோட்டையை மறந்தான். அங்கு நடந்த போர் வேட்டையை மறந்தான். அவள் காந்தக் கண்களுக்குத் தன் கண்களைப் பறிகொடுத்து நின்றான்.

## 6

## மர்ம மோதிரம்

**பூ**ங்கரத்தில் பந்தமேந்தி வழிகாட்டி வந்து அறையின் சிறு விளக்கையும் ஏற்றிவிட்டு வெளியே செல்ல முயன்ற

இமயவல்லியை அந்தச் சேரநாட்டு வீரன் பெயர் சொல்லி அழைத்ததும், அந்தக் கட்டழகியின் கருவிழிகள் திடீரென சீற்றத்துடன் அவனை நோக்கித் திரும்பினவென்றாலும் அந்தச் சீற்றம் நீண்ட நேரம் நிலைக்கவில்லை. இளமாறனின் ஈட்டியினும் கூர்மையான விழிகள் அவள் கெண்டை விழிகளை ஊடுருவி அவள் உள்ளத்தையும் பார்த்து விடுவனபோல் இருந்ததால், சீற்றமுற்ற அவள் விழிகளில் சில விநாடிகளுக்குள்ளாகச் சீற்றத்துக்குப் பதில் அச்சம் நிலவி நின்றது. அந்தச் சில விநாடிகளில், அந்தப் பருவ மங்கைக்குத் தன் இதயத்தில் ஏற்பட்ட திடீர் மாற்றம் அச்சமா குழப்பமா என்பதுகூடச் சரியாக விளங்கவில்லை யாகையாலும், தன் கண்களை அவன் கண்களிடமிருந்து விலக்கக்கூடச் சக்தியில்லையாகையாலும் அவள் பிரமை பிடித்து நின்றாள். அப்படிப் பிரமை பிடித்து நின்றாலும், அந்தப் பிரமையின் காரணமாக உணர்ச்சிகள் அவள் வச மில்லையாகையாலும், அவள் வாயிற்படியைத் தாண்ட முன் எடுத்து வைத்த இடது காலைத் தவிர வலது பாதத்தைப் பின்னிலிருந்து வாங்கி முன் பாதத்துடன் சேர்த்துக் கொள்ளவும் சக்தியற்றவளானாள். அப்படி ஒரு கால் வாயிற்படிக்கு அப்புறமும், இன்னொரு கால் இப்புறமும் நின்றிருந்தாலும், அவள் திரும்பியதால் தேகம் சற்று முறுக்கி நின்றதாலும், இயற்கையாகவே செழித்திருந்த அவள் அவயவங்கள் அதிகச் செழிப்பைப் பெற்றுவிட்டனபோல் தென்பட்டன. சில விநாடிகளுக்குப் பிறகு அந்தக் கட்டழகியின் கருவிழிகளை விட்டுக் கழன்ற இளமாறனின் ஈட்டி விழிகள் அந்தச் செழிப்பைக் கண்டு பெரிதும் பிரமிக்கவே செய்தன.

இமயவல்லியின் அழகிய விழிகளுடன் தன் விழிகளை ஆரம்பத்தில் உறவாடவிட்ட இளமாறன், அவற்றில் பெரும்

சீற்றமிருந்ததைக் கவனித்து அதற்குக் காரணத்தையும் உணர்ந்துகொண்டிருந்தானானாலும், அந்தச் சீற்றம் மறைந்து அந்த இடத்தை அச்சமும் குழப்பமும் கலந்த சாயையொன்று பற்றிக்கொள்ளவே சற்றுத் தைரியம் அடைந்தான். அப்படித் தைரியமடைந்த நிலையிலும் தன் கண்கள் அவள் கண்களை ஆட்கொண்டனவா அல்லது அவள் விழிகள் தன் விழிகளை இறுக்கிப் பிடித்து நிறுத்தி விட்டனவா என்பதை நிர்ணயிக்க முடியாமல் திணறினான். அந்தத் திணறலின் விளைவாக சற்றே கண்களைக் கீழே யிறக்கவே அந்தக் கண்கள், அவள் கழுத்துக்குக் கீழ் பெருமூச்சால் ஏறி இயங்கிக்கொண்டிருந்த இருபெரும் பங்கய மொட்டுகளில் ஒரு விநாடி லயித்து அகன்றன. அந்தக் கட்டழகி கையில் பிடித்து நின்ற பந்தத்தின் ஒளி, அந்த இரட்டை எழில்களைக் காத்துக் கிடந்த மேலாடை மீது நன்றாக விழுந்ததாலும் அவற்றின் ஏற்றமும் இறக்கமும் கண்களுக்குப் புலனானதாலும், இளமாறனின் இதயம் படக்படக்கென்று அடித்துக்கொள்ளவே அவன் கண்களைச் சிறிது நிலத்தில் தாழ்த்தவும் செய்தான். நிலத்திலும் அவன் கண்களுக்கோ இதயத்துக்கோ நிம்மதியில்லை. செம்பஞ்சுக் குழம்பு பூசிய அவள் பாதங்கள் நல்ல சிவப்புடன் சின்னஞ்சிறு அழகிய விரல்களுடன் விரிந்த தாமரை மலர்களைப்போல் காட்சியளித்து அவன் விழிகளைத் தங்கள்பால் இழுக்கவே செய்தன; அந்தப் பொல்லாத விழிகள் பாதத்துடன் நிற்கவில்லையே? நிம்மதி மட்டும் எப்படி இதயத்தில் நிற்கும்?

அவன் இதயத்தில் உணர்ச்சி அலைகள் பெரிதாகி மோதிக்கொண்டு இருந்தன. அங்கு நிலவிய மௌன நிலை அடுத்த சில விநாடிகள் நீடித்தால் என்ன ஆகியிருக்குமோ சொல்ல முடியாது. அடுத்த நாளோ அல்லது அதற்கு

அடுத்த நாளோ மரணந் தரும் பணியை நாடிச் செல்ல விருந்த அந்த வீரன் அருகில் தனிமையில் கிடைத்த அழகு மலர்களை என்ன செய்திருப்பானோ சொல்ல முடியாது. ஆனால், மௌனத்தை நல்ல வேளையாகக் கலைத்தாள் இமயவல்லி. "ஏன் அழைத்தீர்கள் வீரரே?" என்று சர்வ சாதாரணமாகக் கேள்வியொன்றையும் வீசினாள் அவள்.

மௌன நிலை திடீரென அந்த மூன்று சொற்களால் கலைக்கப்படவே சுயநிலை அடைந்த இளமாறன் சற்று நேரம் என்ன செய்வதென்பதை அறியாமல் விழித்தான். ஒரே இரவில் அதுவும் அரை ஜாமமே அறிமுகமான ஒரு பெண்ணைப் பெயர் சொல்லி அழைத்தது எத்தனை பெரும் குற்றம் என்பதை அப்பொழுதுதான் புரிந்துகொண்டான் அவன். ஆகையால் பெரிதும் குழம்பி, வகுப்பில் கேள்விக்குப் பதில் சொல்ல முடியாத மாணவனென திருதிருவென்று விழித்தவண்ணம் அவள் முன்பு நின்றான்.

இளமாறனைவிட வெகுவிரைவில் தனது குழப்பத்தை மறைத்துக்கொண்ட இமயவல்லி நன்றாகத் திரும்பி அவனெதிரில் பந்தத்துடன் நின்று, "என்ன பதிலெதையும் காணோம்" என்றாள் இதழ்களின் கோடியில் வலுவில் வரவழைத்துக்கொண்ட இளநகையுடன்.

"இல்லை, ஒன்று கேட்க முயன்றேன்," என்று குளறினான் இளமாறன்.

அவள் புன்முறுவல் அதிகமாக இதழ்களில் பரவியதி லிருந்து அவள் தனது உணர்ச்சிகளைப் பூர்ணமாகக் கட்டுப் படுத்திக்கொண்டுவிட்டாள் என்பதைப் புரிந்துகொண்ட இளமாறன் தனது உணர்ச்சிகள் மட்டும் கட்டுக்கடங்காமல் தவிப்பதை எண்ணி வியந்தான். அவள் அவ்வளவு சீக்கிரத்தில் உணர்ச்சிகளை மறைத்துக்கொண்டதை

எண்ணியதால் அவள் சாதாரணப் பெண் அல்லள் என்பதை உணர்ந்த அந்தச் சேரநாட்டு வாலிபன், 'அந்தப் பெண்ணிடம் அதிகமாக நெருங்காதே' என்று புலவர் தன்னை எச்சரித்ததற்குத் தகுந்த காரணம் இருக்க வேண்டு மென்பதையும் ஊகித்துக்கொண்டானானாலும், அது என்ன காரணமென்பது மட்டும் விளங்கவில்லை அவனுக்கு. இப்படிப் பலவாறாக யோசித்து மனத்துக்குள் கேள்விகளை எழுப்பிக்கொண்டு குழம்பிய இளமாறனை நோக்கிய இமயவல்லி, "ஏன் கேட்பதுதானே?" என்று ஊக்கினாள்.

இளமாறன் மெள்ள மெள்ள சுயநிலையை அடைய முற்பட்டான். இருப்பினும் சிறிய அச்சத்துடனேயே, "கேட்க மனம் துடிக்கிறது. இருப்பினும்..." என்று சொல்லி வாசகத்தை முடிக்காமல் விட்டான் இளமாறன்.

"இருப்பினும் என்ன?" என்றாள் இமயவல்லி சிறிதும் சலனமற்ற குரலில்.

"பயமாயிருக்கிறது" என்ற இளமாறன் உண்மையைச் சொன்னான்.

அவள் முகம் பூராவும் மகிழ்ச்சிக்குறி படர்ந்தது. "வீரர்கள் பயப்படலாமா?" என்று சற்று ஏளனத்துடன் கேட்டாள் அந்தக் கட்டழகி.

"கூடாதுதான்; இருந்தாலும் எனக்கு இந்தச் சமயத்தில் பயமாயிருக்கிறது" என்றான் இளமாறன்.

"ஏன் சமயத்துக்கென்ன?"

"இரவு நேரம்..."

"ஆம்!"

"நாம் தனித்திருக்கிறோம்."

"அதனாலென்ன?"

"இப்பொழுது அதிக நேரம் நீ இங்கு இருப்பதே பிசகு. அதைவிடப் பிசகு நான் உன்னைப் பெயர் சொல்லி அழைத்தது. மேலும் விவரங்கள் கேட்பது..." இதற்குமேல் சொல்லத் தைரியமில்லாததால் வார்த்தைகளை முடிக்காமல் விட்டான் இளமாறன்.

"மிகமிகப் பிசகு," என்று சொன்ன இமயவல்லி லேசாக நகைத்தாள்.

"ஏன் நகைக்கிறாய் பெண்ணே?" என்று வினவினான் இளமாறன்.

"வீரரே! நீர் போரில் வல்லவராயிருக்கலாம். ஆனால் விஷயங்களைச் சரியாக ஊகிக்கும் சக்தியை இழந்து விட்டீர். கதவைத் திருடன்போல் தட்டுகிறீர், திறக்கிறாள் ஒரு காரிகை. பிறகு அவளுடன் உள்நுழைந்து ஒரு பெரியவருடன் பேசுகிறீர். உம்மை அழைத்துச் சென்று அறை காட்ட அந்த பணிப்பெண்ணுக்கு அந்தப் பெரியவர் அனுமதிக்கிறார். இப்பொழுது அவளைக் கேள்வி கேட்கலாமா என்று அஞ்சுகிறீர். யோசித்துப் பாரும், இதுவரை நடந்த விஷயங்கள் உலக ரீதிக்கு ஒத்து வருகிறதா என்று. நாம் அபாயமான அலுவலில் சிக்கியிருக்கிறோம். எந்த விநாடி யிலும் நமது உயிர்கள் இப்பணியில் போய்விடலாம். ஆகவே சாதாரண மனிதர்களுக்கு இருக்கும் பழக்கவழக்கங்கள், சட்ட திட்டங்கள் நமக்குக் கிடையா. ஆகவே கேளுங்கள் வீரரே! அச்சம் இன்றி வேண்டியதைக் கேளுங்கள்" என்றாள் இமயவல்லி.

அவள் வார்த்தைகளால் இளமாறனுக்கும் சிறிது துணிவு வந்தது. கேட்டான் அவன், "நீ யார்?" என்று.

இந்தக் கேள்வியைக் கேட்டதும் அவள் விழிகளில் ஒரு புத்தொளி தோன்றி மறைந்ததை இளமாறன் கவனித்தான்.

ஆனால், அதைப்பற்றி அவன் யோசிக்கும் முன்பாக அவள் பதில் சொல்லிவிட்டாள், "புலவர் பெருமான் குறுங் கோழியூர்க்கிழாரின் பணிப்பெண்" என்று.

"அது தெரியும் எனக்கு" என்றான் இளமாறன்.

"ஓ! தெரியுமா!" என்றாள் இமயவல்லி சற்றே நகைத்து.

அந்த நகைப்பில் ஆழ்ந்த கருத்து ஏதோ இருப்பதாக அவனுக்குத் தோன்றியது. அதைக் கவனிக்காதவன் போல் சொன்னான், "நீங்கள்தானே பணிப்பெண் என்று கூறினீர்கள் உங்களை" என்று.

"ஆம் ஆம். மறந்துவிட்டேன். நான் பணிப்பெண்தான்" என்றாள் அவள்.

"மற்றப் பணிப்பெண்களும் இருப்பதாகச் சொன் னீர்களே!"

"சொன்னேன்."

"அவர்கள்?"

"உள்ளறைகளில் இருக்கிறார்கள். பார்க்க வேண்டு மானால் வாருங்கள், அறிமுகப்படுத்துகிறேன்."

இந்தப் பதிலைக் கேட்ட இளமாறன் உண்மையில் அவள் தன்னைப் பார்த்து நகைக்கிறாள் என்பதைப் புரிந்து கொண்டான். ஆகவே சற்றுக் கோபத்துடன் கூறினான், "அறிமுகம் தேவையில்லை" என்று.

"பணிவிடைக்கு?"

"யாரும் அவசியமில்லை."

"நான் கூடவா?"

"ஆம்."

"ஏன்?"

பதில் சரேலென வந்தது இளமாறனிடமிருந்து. "பொய் சொல்லும் யாரையும் நான் விரும்புவதில்லை" என்றான் சேரநாட்டு வீரன்.

"நான் என்ன பொய் சொன்னேன் வீரரே?" என்று வினவினாள் அவள் புன்முறுவல் அப்பொழுதும் இதழ்களில் தவழ.

"நீ பணிப்பெண் என்பது பொய்" என்றான் இளமாறன் அவளை உற்று நோக்கி.

அவளும் அவனைத் தைரியமாக ஏறெடுத்துப் பார்த்தாள். "அப்படியானால் நான் யார்? அரசகுமாரியா?" என்று கேட்டாள்.

"ஆம்."

"எந்த நாட்டு அரசகுமாரியோ?"

"அதுதான் புரியவில்லை எனக்கு."

"ஏன்?"

"உங்கள் கொண்டை நீங்கள் சேரநாடு என்பதை அறிவுறுத்துகிறது. ஆனால்..."

"சொல்லுங்கள்."

"கழுத்திலுள்ள முத்துமாலை பாண்டிய நாட்டைச் சேர்ந்தவர்கள் என்பதைக் குறிக்கிறது."

"சேரநாட்டுப் பெண்கள் முத்துமாலை போட மாட்டார்களா?"

"மாட்டார்கள்."

"ஏன்?"

"அங்கு அரசர் கீரிடத்தில் முத்துமாலை இருக்கலா மென்று விதி இருக்கிறது!"

"சேர நாட்டிலிருந்து இங்கு வந்துவிட்ட பெண்களுக்கு அந்த விதி ஏது?"

"எங்கிருந்தாலும் எங்கள் நாட்டவரை விதி கட்டுப் படுத்தும்."

"அத்தனை ஒற்றுமையுள்ளவர்களா சேரநாட்டார்?"

"ஆம்."

"நல்லது! நல்லது!" என்று கூறிய இமயவல்லி, "அப்படி யானால் நான் எந்த நாட்டவள்? சேர நாடா? பாண்டிய நாடா?" என்று வேடிக்கையாகக் கேட்டு நகைத்தாள்.

"எனக்குத் தெரியவில்லை, நீதான் சொல்ல வேண்டும்" என்றான் இளமாறன்.

"நான் சொன்னால் நம்புவீர்களா?" என்று வினவினாள் அவள்.

"நம்பாமலென்ன?"

"நான்தான் பொய் சொல்லுபவளாயிற்றே?"

"வேண்டாம், மாற்றிக்கொள்ளுங்களேன்."

"என்ன மாற்றினாலும் உண்மையென்று எப்படி ஒப்புவீர்கள்?"

"உண்மை எதுவென்று என்னால் அறிய முடியும்."

இமயவல்லி சில விநாடிகள் தலைகுனிந்து நின்றாள். பிறகு சொன்னாள்: "வீரரே! நான் இரு நாடுகளுக்கும் சொந்தம்" என்று. இதைச் சொன்ன அவள் குரல் வருத்தத்தால் தழுதழுத்துக் கிடந்தது. அந்தச் சமயத்தில் அவள் இதயத்தில் பெரும் குமுறல் இருந்ததை உணர்ந்த இளமாறனுக்கு அவளைப் பற்றிய விவரங்களை ஏன் கேட்டோமென்று தோன்றியது. ஆகவே அத்துடன் பேச்சை

முடிக்க முயன்று, "உங்களுக்கு இஷ்டமில்லையேல் சொல்ல வேண்டாம். நாளை சந்திப்போம் நாம்" என்று கூறி அறையின் உட்புறத்தை நோக்கித் திரும்பினான் இளமாறன்.

இம்முறை அவனைத் தடுத்து நிறுத்தினாள் இமயவல்லி, "நில்லுங்கள் வீரரே!" என்று. அவனை நிறுத்தித் திரும்பச் செய்த அந்தக் கட்டழகி சொன்னாள்: "வீரரே! நான் இரண்டு நாடுகளுக்கும் சொந்தமானவள் என்பது உண்மை. என் தாய் சேர நாட்டவள். என் தந்தை பாண்டிய நாட்டவர். நான் இளவயதில் தாயை இழந்தேன். பாண்டிய நாட்டில் தந்தையால் வளர்க்கப்பட்டேன். இரு நாடுகளின் இரத்தம் என் உடலில் ஓடுகிறது. அந்த இரண்டு நாட்டவரில் யார் இரத்தம் சிந்தினாலும் என் இரத்தம் கொதிக்கிறது. ஆகவே இந்த இரண்டு நாடுகளுக்கும் சமாதானத்தை ஏற்படுத்த குறுங்கோழியூர்க்கிழார் மேற்கொண்டுள்ள இந்தப் பயங்கரப் பணியில் நான் ஈடுபட்டிருக்கிறேன்..."

இந்தச் சமயத்தில் இடைமறித்த இளமாறன், "உன் தந்தையின் பெயர் என்ன?" என்று வினவினான்.

"அதை நான் இப்பொழுது சொல்ல முடியாது. சமயம் வரும்போது சொல்கிறேன். இவ்வளவுகூட நான் இதுவரை யாரிடமும் சொன்னது கிடையாது. உங்களிடம் ஏன் சொல்கிறேன் என்பது எனக்கே புரியவில்லை. மேற்கொண்டு எதையும் கேட்காதீர்கள். படுத்து உறங்குங்கள்" என்று சொல்லிவிட்டுத் திரும்ப முயன்றாள்.

"இன்னும் ஒரு விஷயம்" என்றான் இளமாறன்.

"என்ன?" என்று அவள் கேட்டாள்.

"இந்த மாளிகையிலிருந்து நான் வெளியே செல்லலாமா?" என்று இளமாறன் வினவினான்.

"பகலில் செல்லலாம்."

“இரவில்?”

“செல்வது அபாயம்.”

“யாருக்கு?”

“நீங்கள் மேற்கொண்டிருக்கும் பணிக்கு.”

“எப்படி அபாயம் வரும் என்பதையும் சொல்ல மாட்டீர்களாக்கும்.”

“சொல்லுவதற்கில்லை.”

“சத்திரத்தில் என் புரவியைக் கட்டியிருக்கிறேன்.”

“அது இங்கே வந்துவிட்டது. பின் கொட்டடியில் இருக்கிறது.”

“யார் வரவழைத்தது?”

“நான்தான்?”

இளமாறன் வியப்புடன் அவளை உற்று நோக்கினான். “எல்லாம் முன் யோசனையுடன் நடக்கிறாப் போலிருக் கிறது?” என்று வியப்புடன் வினவவும் செய்தான்.

“என்னை இம்மாளிகையிலிருந்து வெளியே விடமாட்டீர்களா?”

இமயவல்லி பதில் கோபத்துடன் வந்தது. “இங்கு நீங்கள் சிறையிலில்லை வீரரே! இரவில் போகாதிருப்பது உங்களுக்குத்தான் நல்லது,” என்று சினம் ஒலிக்கும் சொற்களை ஒலித்தாள் இமயவல்லி.

“என் நலத்தைப்பற்றி யாரும் கவலைப்பட வேண்டாம்” என்றான் அவன்.

“அப்படியானால் அவசியம் வெளியே போகத்தான் வேண்டுமா?”

"ஆம், போகத்தான் வேண்டும்."

அவன் பேச்சில் பிடிவாதமிருப்பதைக் கவனித்தாள் அவள். பிறகு பெருமூச்சு விட்டுச் சில விநாடிகள் யோசித்தாள். கடைசியில் ஒரு முடிவுக்கு வந்து தன் இடதுகை விரலிலிருந்து ஒரு மோதிரத்தை எடுத்து அந்த வாலிபனிடம் நீட்டி, "இந்த மோதிரத்தை அணிந்து கொள்ளுங்கள். உங்களை யார் மறித்தாலும் 'புலவர் மாளிகை' என்று சொல்லுங்கள். அப்படியும் மறிப்பவர்கள் அடம் செய்தால் இதைக் காட்டுங்கள். இது உங்களைப் பாதுகாக்கும்" என்று கூறியதன்றி மோதிரத்தை அவன் கையில் கொடுத்தாள்.

அந்த மோதிரத்தைக் கையில் வாங்கிப் பார்த்த இளமாறன் விழிகளில் மிதமிஞ்சிய கலவரமும் திகிலும் தெரிந்தன. அந்த மோதிரத்தைத் தான் அணிவதால் அது தன்னைக் காப்பதற்குப் பதில் அழித்துவிடும் என்பதைச் சந்தேகமறப் புரிந்துகொண்டதால் அந்த மோதிரம் அந்தப் பெண்ணிடம் எப்படிச் சிக்கியது என்று பெரும் சந்தேகத்துக்கும் உள்ளானான். அந்தச் சந்தேகத்தின் சாயை விழிகளில் பரவ இமயவல்லியை நோக்கினான் இளமாறன். இமயவல்லி புன்முறுவல் பூத்தாள். அடுத்த விநாடி அங்கு நிற்காமல் அறைப்படியைத் தாண்டி வெகுவேகமாகச் சென்றுவிட்டாள். இளமாறன் விழிகள் மீண்டும் மீண்டும் அந்த மோதிரத்தின் மீதே நிலைத்தன. அந்த மோதிரம் மகர மாளிகையின் மர்மத்தை மேலும் அதிகமாக்குவதை அவன் சந்தேகமற உணர்ந்துகொண்டான்.

# 7

## வாள் பயிற்சி

மயக்கும் விழிகளைப் படைத்த மங்கையர்க்கரசியான இமயவல்லி மோதிரமொன்றைக் கழற்றிக் கொடுத்ததுமே பெரும் திகிலுக்கும் கலவரத்துக்கும் உள்ளான இளமாறன் அவள் மந்தகாச மலர்க்கணையொன்றை அவன் மீது வீசிவிட்டு நடந்த நீண்ட நேரத்துக்குப் பின்பும் அறை வாயிற் படிக்கருகிலேயே நின்று மீண்டும் மீண்டும் கையில் விரல்கள் பிடித்து நின்ற மோதிரத்தையே உற்றுப் பார்த்துக்கொண் டிருந்தான். அப்படி உற்றுப் பார்க்கப் பார்க்க அந்த மோதிரம் சொல்லிய விவரத்தைச் சிந்திக்கச் சிந்திக்க மகர மாளிகையின் மர்மம் பெரிதாகிக்கொண்டு போவதை உணர்ந்தான் அந்தச் சேரநாட்டு வீரன்.

இடது கையில் பந்தத்தை ஏந்தியவண்ணமே அந்த ஏந்திழை மோதிரத்தைக் கழற்றிக் கையில் கொடுத்ததும் அதன் அமைப்பைப் பார்த்துப் பெரும் பிரமைக்குள்ளான இளமாறன், அந்த மோதிரம் தன்னைக் காக்கும் என்று அவள் சொன்னதும் ஆரம்பத்தில் பெரும் வியப்பு உணர்ச்சிக்கே இலக்கானாலும், அதை மேன்மேலும் உற்றுப் பார்த்ததும் ஓரளவு கிலியையும் அடைந்தான்.

மோதிரம், கிழாரின் பணிப்பெண் என்று சொல்லிக் கொண்ட அந்த அழகியின் விரலுக்குப் பொருந்தும்படி அளவில் சிறியதாயிருந்தாலும் அது நல்ல பட்டையாகவும் ஒரு முழு கழஞ்சுக்கு மேற்பட்ட பொன்னையுடையதாகவும் இருந்ததையும், அந்த மோதிரத்தின் நட்டநடுவில் பெரும் கோமேதகக் கல் ஒன்று மீனைப்போல் கடைசல் பிடிக்கப்

பட்டு வளைந்து கண்ணைப் பறித்ததையும் கண்ட இளமாறன் அந்த ஒரு கல்லைக் கொண்டு சிற்றரசையே விலைக்கு வாங்கிவிட முடியும் என்பதைப் புரிந்து கொண்டான். கல்லைச் சோதித்து மதிப்புக் கூறும் வணிகர் இனத்தில் அவன் பிறக்கவில்லையே தவிர, மேல்நாட்டு வாணிபம் தமிழகத்தில் நுழையும் வாயிலெனத் திகழ்ந்த தொண்டித் துறைமுகத்தையுடைய சேர நாட்டவனான தாலும், அந்த நாட்டில் மேல்நாட்டின் பெரும் நவமணிகள் கணக்கின்றி நடமாடியதால் அந்நாட்டுச் சாதாரண மக்கள் கூட கல்லுக்கு விலை சொல்லும் திறனுடையவர்களாயிருந்த படியாலும், அந்தத் திறனை இளமாறனும் பெற்றிருந்தான். ஆகவே, பார்த்த மாத்திரத்தில் மிக விலைமதிப்புள்ள மோதிரத்தைத் தான் தாங்கி நிற்பதை உணர்ந்துகொண்டான். அதுமட்டுமல்ல; அந்த மோதிரம் பாண்டிய மன்னர் குலத்தின் முத்திரை மோதிரங்களில் ஒன்று என்பது புலனாகியது அந்த வாலிப வீரனுக்கு. அந்த மச்ச கோமேதகத்தின் முதுகில் பொறிக்கப்பட்ட இரண்டொரு சின்னஞ்சிறு எழுத்துக்களிலிருந்தும் தான் கையில் தாங்கி நிற்பது பாண்டிய மன்னனின் முத்திரை மோதிரந்தான் என்பதைச் சந்தேகமறப் புரிந்துகொண்ட இளமாறன் இதயத்தில் பல சந்தேகங்கள் உதயமாயின.

'சேரமான் இரும்பொறையை விடுதலை செய்ய வேண்டுமானால் இவர்கள், ஒன்று பாண்டியன் நெடுஞ் செழியனுக்கு விரோதிகளாக நடந்துகொள்ள வேண்டும். அல்லது அவனை உறவாடிக் கெடுக்க வேண்டும். புலவர் பெருமானைப் பார்த்தபோதும் சரி, இமயவல்லியைப் பார்த்தபோதும் சரி அவர்கள் உறவாடிக் கெடுக்கக்கூடிய ஈன குணம் படைத்தவர்களாகத் தெரியவில்லை. தவிர, இருவர் பேச்சிலிருந்தும் அவர்கள், பாண்டியன் நெடுஞ்

செழியனிடம் பூர்ண பக்தி கொண்டிருப்பதாகவே தெரிகிறது. இருப்பினும் தமிழக நலனை முன்னிட்டு அவனை எதிர்க்கத்தான் துணிந்திருக்கிறார்கள். பாண்டியனை எதிர்ப்பவர்களிடம் இந்த முத்திரை மோதிரம் எப்படிச் சிக்கியது? நான் மதுரைக்குள் நுழைந்ததுகூட நெடுஞ்செழியனுக்குத் தெரிந்திருக்கும் என்று நம்பும் இவர்கள் மன்னனுக்குத் தெரியாமல் முத்திரை மோதிரத்தை எப்படிக் கைப்பற்றினார்கள்?' என்று பலவாறாக யோசித்து யோசித்துக் குழம்பி அந்த மோதிரத்தைப் பலமுறை திருப்பித் திருப்பிப் பார்த்தான். பார்க்கப் பார்க்க பாண்டியன் நெடுஞ் செழியன் தமிழகத்தின் மாவீரன், தலையாலங்கானத்துச் செருவென்ற பராக்கிரமசாலி அவன் மோதிரத்தைக் கையில் வைத்திருக்கிறோமென்ற பேருணர்ச்சி அவன் நரம்புகளை ஊடுருவிச் சென்றது. அச்சத்தால் ஏற்பட்டதல்ல அந்த உணர்ச்சி; பாண்டியனின் வீர சரித்திரத்தை, தமிழ்நாடு வியந்த அரும்பெரும் செயல்களைத் திரும்பத் திரும்பச் சொல்லிக் காட்டியது. அந்தக் கோமேதகம் பேசியது, காட்சி களையும் தன் மூலம் காட்டியது.

நெடுஞ்செழியனின் வீரச் செயல்களை எண்ணி அந்த மோதிரத்தை ஆர்வத்துடன் தடவிக்கொடுத்தான் இளமாறன் சில விநாடிகள். பிறகு அதை வாளிருக்கும் வலக்கை விரலிலணிந்துகொண்டு அறைக் கதவைச் சாத்திவிட்டு அங்கிருந்த பஞ்சணையில் படுத்தான். பஞ்சணை மலரணையென மிக மிருதுவாக இருந்தது. அறையிலிருந்த விளக்கின் வேலைப்பாடுகூட பிரமாதமா யிருந்தது. புலவர் பெருமான் மாளிகையின் சுக வசதிகளுள் அரச வசதிக்கு எள்ளத்தனையும் குறைவில்லையென்பதை அறிந்துகொண்ட இளமாறன் கண்களை மூடி உறங்க முயன்றான்.

உறக்கம் அவனுக்கு எப்படி வரும்? கண்ணை மூடியதும் இமயவல்லி அவன் மனக்கண்ணில் தோன்றினாள். மோதிரத்தைக் கொடுத்தாள், மந்தகாசம் செய்தாள். அன்ன நடை நடந்து அழகெலாம் குலுங்கச் சென்றாள். கண்ணைத் திறந்தாலோ தனியறை, கையில் சுடர்விட்ட மோதிரம், இவற்றின் காட்சி! இவற்றுடன் அறை மூலையில் சதா கிழார் இருந்துகொண்டு அவனை உற்றுப் பார்ப்பது போன்ற ஒரு பிரமை! இத்தகைய அல்லல்களுக்கு இடையே பஞ்சணையில் புரண்ட இளமாறன் திடீர் திடீரென இருமுறை எழுந்து கட்டிலின் முகப்பில் உட்கார்ந்து கொண்டான். பல தடவை ஏதேதோ யோசித்த பிறகு வாளை எடுத்துக் கச்சையில் கட்டிக்கொண்டு அறையை விட்டு வெளியே வந்தான். அந்த அறையின் எதிரே நீண்ட சுவர் இருந்ததால் பக்கத்தில் வரிசையாக அறைகள் இருக்க வேண்டும் என்பதைத் தீர்மானித்துக்கொண்ட இளமாறன் தனது அறை வாயிலின் வலதுபுறத்தில் வாயிலும், தான் ஏறிய மாடிப்படியும் இருப்பதைக் கவனித்தான். பிறகு இடதுபுறம் திரும்பி நீளத் தாழ்வாரத்தின் வழியே நடந்து பக்க அறைகளைப் பார்த்துக்கொண்டே சென்றான். பக்கத்து அறைகள் எல்லாம் பூட்டப்பட்டுக் கிடந்தன. அறைகளுக் கெதிரே கோட்டைச் சுவர்போல் உயரமாயிருந்த சுவரில் அந்தத் தாழ்வாரத்திற்கு மட்டும் தேவையான ஒளிவீச, ஓர் ஒற்றைப் பந்தம் எரிந்துகொண்டிருந்தது. அந்தப் பந்தத்தின் பிடியில் தொங்கிக்கொண்டிருந்த வெண்கலப் பானை யையும் கரண்டியையும் பார்த்த இளமாறன் அவ்வப் பொழுது பந்தத்துக்கு எண்ணெய் ஊற்றப் பணியாள் யாராவது வருவான் என்பதை ஊகித்துக்கொண்டு மெள்ள அறைகளை ஒவ்வொன்றாகப் பார்த்துக்கொண்டு நடந்தான். மொத்தம் பத்து அறைகளைத் தாண்டியதும் திடீரெனப்

பெரும் சுவர் ஒன்று குறுக்கிடவே சில விநாடி மலைத்து நின்றான் இளமாறன். தனது அறையைத் தவிர வேறு அறைகள் பூட்டப்பட்டிருப்பதையும், அறைகளின் வரிசைக் கோடியில் குறுக்கே பெரும் சுவர் அடைத்துக்கொண்டிருந்த படியால் யாரும் அப்புறம் போக வழியில்லை என்பதையும் அறிந்த இறமாறன், 'இமயவல்லி எங்கு சென்றாள், எப்படிச் சென்றாள்?' என்று தன்னைத்தானே கேட்டுக்கொண்டு விடை காணாமல் தவித்தான். அந்தக் குறுக்குச் சுவரில் மர்மக் கதவு ஏதாவது இருக்குமோ என்றும் சுவரில் சோதித்துப் பார்த்தான். அப்படியும் எதுவும் தெரியாததால் ஆழ்ந்த யோசனையுடன் வலதுபுறம் திரும்பி வாயிற்கதவைத் திறந்துகொண்டு மாளிகைக்கு வெளியே வந்தான். அப்பொழுது இரண்டாம் ஜாமம் முடிய இருந்ததை வானிலிருந்த நட்சத்திரக் கூட்டத்தின் அமைப்பால் அறிந்த இளமாறன், மெல்ல அந்த வாயிற் கதவைச் சாத்திக்கொண்டு படிகளில் மெல்ல மெல்லக் கீழே இறங்கித் தெருவில் நின்றபடி அந்த மாளிகையை ஏறெடுத்து நோக்கினான்.

அப்பொழுதும் அந்த மாளிகை நிசப்தமாயிருந்தது. அளவுக்கதிகமாயிருந்த அந்தத் திட்டி வாயிற் கதவுகள் பெரும் பிசாசுகள்போல் அந்த இருட்டில் நின்றுகொண் டிருந்தன. அந்த மாளிகையின் பெருங் கதவுகளும் முன் போல் சாத்தப்பட்டிருந்ததையும், தான் நின்றிருந்த எதிர்ப்புற மிருந்த மாளிகைப் பகுதியில் சாளரம் எதுவுமில்லாததால் உள்ளிருந்த விளக்குப் பந்தம், இவற்றின் வெளிச்சம் சிறிதுகூட வெளியே தெரியாதிருந்ததையும் கவனித்த இளமாறன், 'எதற்காக இப்படியொரு மாளிகையைக் கட்டி யிருக்கிறார்கள்!' என்று தன்னைத்தானே கேட்டுக்கொண்டு மதுரை மாநகரின் வீதிகளைக் கண்டு வருவோமென்று வீதி நெடுக நடக்க முற்பட்டான்.

அந்த வணிகர் வீதியில் புலவர் மாளிகையிலிருந்த முக்கோண முகப்பு ஒன்றைத் தவிர, மற்ற எல்லாப் பகுதிகளிலும் பெரும் அரவம் இருந்தது. வாணிபமும் நடந்து வந்தது. அந்த வீதியில், முக்கால் வீதியில் இப்படியிருந்த அத்தனை வாணிபமும், அரவமும் புலவர் மாளிகைக்கு வெகு முன்னரே நின்றுவிட்டதையும், அந்த மாளிகை யிலிருந்த இடத்துக்குப் பல அடி முன்பாகவே மனித நடமாட்டம் இல்லாததையும், வாணிபப் பொருள்களை வாங்கிச் செல்பவர்கூட வீதியின் குறுக்கு வீதிகளில் திரும்பிப் போய்க்கொண்டிருந்ததையும் கவனித்த இளமாற னுக்குப் புலவர் விடுதியிலிருந்து மக்கள் ஒதுங்கிச் செல்லும் காரணம் அறவே புரியவில்லை. புலவர் மாளிகையை மக்கள் விரும்பி அடைய வேண்டியது இருக்க, அதைவிட்டு அவர்கள் விலகிச் செல்வது பெரும் ஆச்சரியத்தையே தந்தது அந்த வாலிபனுக்கு. இருப்பினும் மதுரை மாநகரின் அழகு, அவன் சிந்தனையைகூட புலவர் விடுதியிலிருந்து விலக்கித் தன்னிடம் இழுத்துக்கொண்டது.

ஆதிகாலத்திலிருந்து இன்றுவரை இரவும் பகலும் வாணிபமும் மனிதர்கள் நடமாட்டமும் இருப்பதால், இரவிலும் உறங்காத மதுரையெனப் பெயர் படைத்த அந்தக் கயல்கொடி நகரம் இராக் காலத்தில் இளமாறன் கண்களைப் பறித்தது.

அதன் வணிகர் வீதியில் கடைகளில் குவிக்கப்பட்டிருந்த ரத்தினங்களும் பட்டாடைகளும் விளக்கொளியில் பெரிதும் பளபளத்து மதுரையன்னையின் அலங்கார அறையாக அந்த வீதியை அடித்திருந்தது. புஷ்பக் கடைகளில் காணப்பட்ட பலதரப்பட்ட வண்ண மலர்கள் வைரம் போலும், மாணிக்கம் போலும், மரகதம் போலும் காட்சியளித்ததன்றி, அந்த நவரத்தினங்களுக்கில்லாத வாசனையையும் கிளப்பி

அந்தப் பக்கம் வருபவர்களின் நாசியில் புகுந்து மதிக்கு மயக்கத்தைக் கொடுத்துக்கொண்டிருந்தன.

அந்த இரண்டாம் ஜாம முடிவில் களவியற் காதலை ருசிக்க முயன்ற வாலிபர் சிலர் அந்த வண்ண மலர்களைக் கொள்ளையாக வாங்கிக்கொண்டிருந்தனர்.

அந்த வீதியையும் அரச வீதிக்குச் சென்று அங்கும் சுற்றியடித்து அந்த வீதியின் பெரு மாளிகைகளில் கண்களை ஓட்டிக்கொண்டே வேறு இரண்டு வீதிகளைத் தாண்டி மதுரையின் மறுபுறம் சென்ற இளமாறன் இதயத்தில் பெருமை மிகைப்பட்டும் கிடந்தது.

ஒவ்வொரு வீதியும் யாரும் சுதந்தரமாக நடமாடும் படியாகக் கட்டுக் காவல் இல்லாததுபோல் தெரிந்தாலும், உண்மையில் காவல் பலமாயிருந்ததையும், ஆயுதந்தரித்த வீரர் சிலரும், சாதாரண உடையிலிருந்த கண்காணிப்பாளர் பலரும், யாரையும் கவனிக்காததுபோல் மூலை முடுக்கி லிருந்தாலும் அவர்கள் கண்கள் பல பக்கங்களிலும் பாய்ந்திருந்ததையும் கவனித்துக்கொண்டு வந்த இளமாறன் பாண்டிய மன்னன் தமிழகத்துக்கே சிறந்த அணிகலன் என்று தீர்மானித்து, அத்தகைய மன்னன் பிறந்த தமிழ் மண்ணில் தானும் பிறந்ததுபற்றிப் பெருமையும் கொண்டான்.

அந்தப் பெருமையுடன் நடந்துகொண்டு இரண்டு தெருக்களைத் தாண்டி மூன்றாம் தெருவொன்றுக்கு வந்ததும் பிரமை பிடித்துச் சில விநாடிகள் நின்றான். அந்த மூன்றாம் தெருவின் மூலை, வணிகர் வீதியின் மூலை போலவே நிசப்தமாயிருந்தது. அங்கும் வீரர் நடமாட்ட மில்லை. தெருவின் அந்தப் பகுதி மட்டும் இருட்டடித்துக் கிடந்தது.

இத்தகைய இடம் மகர மாளிகை பக்கமாகத்தான் இருக்கும் என்று நினைத்த இளமாறன், அந்தத் தெரு மூலையும் அதே மாதிரி இருப்பதைக் கண்டு மேற்கொண்டு நடந்து அந்த மூலைக்கு வந்தான். அங்கும் நிசப்தமான பெரு மாளிகை இருந்தது. அங்கும் ஒரு திட்டிவாசல் இருந்தது.

ஆனால், அந்த மாளிகைச் சிகரத்தில் மச்சம் மட்டும் இல்லை. மகர மாளிகையைப் போலவேயிருந்த அந்த மாளிகைத் திட்டி வாசலையும் தட்டிப் பார்க்கத் தீர்மானித்த இளமாறன், அந்த இடத்தை நோக்கிக் காலடி நடந்து அங்கிருந்த படிகளில் ஏறப்போனான்.

அதே சமயம் அந்த மூலையில் எங்கிருந்தோ வந்த இரு முக்காடிட்ட உருவங்கள் திரும்பின. அவற்றில் திடகாத்திரமா யிருந்த பெரிய உருவம், "நில் அப்படியே?" என்று இளமாறனை அதட்டி நிறுத்தியது.

அந்த அதட்டலைக் கேட்டதும் பரம நிதானமாக திரும்பிய இளமாறன் அந்த இரு உருவங்களின் மேலும் இரண்டு விநாடி தன் கூரிய விழிகளை நாட்டினான். பிறகு ஏறின படிகளிலிருந்து மீண்டும் இறங்கி அந்த இரு உருவங்களை நோக்கி நடக்கவும் முற்பட்டான். அப்படி நடந்து அருகே வர முயன்ற அவனை எட்டவே நிற்க வைக்க முயன்ற அந்த ராட்சத உருவம், "இன்னும் ஓர் அடிகூட எடுத்து வைக்காதே! நில் அப்படியே" என்று உத்தரவிட்டது. அந்த உத்தரவுக்குக் கீழ்ப்படியாமல் மேலும் மேலும் நடக்க இளமாறன் முயலவே, அந்தப் பெரிய உருவம் தன் இடையி லிருந்த வாளை உருவி அவனை எட்டத் தேக்கி நிறுத்த முற்பட்டது. அது வாளை உருவி நீட்டியதற்கும் 'ஹா' என்ற வியப்புக் கூச்சலுக்கும் இடைக்காலம் ஏதுமே இல்லை, கண்ணிமைக்கும் நேரத்திற்குள் வெளிவந்த இளமாறன்

வாள் ஏதோ மந்திரத்தால் சுழல்வதுபோல் அந்தப் பெரிய உருவத்தின் வாளைச் சரேலென்று தூக்கி விடவே அந்த வாள் ‘விர்’ என்று பறந்து வெகு தூரத்தில் போய் பெரும் சத்தத்துடன் விழுந்தது. இத்தகைய வாள் வித்தையை அந்தப் பெரிய உருவம் ஆயுளில் பார்த்திருக்கவில்லை என்பது அதன் முகக்குறியிலிருந்து மட்டுமல்ல, அந்த ‘ஹா’வில் கலந்து வந்த ஒலியிலும் புலனாகியது.

அத்துடன் இளமாறன் வாளை உறையில் போட்டுக் கொண்டு மீண்டும் படிகளில் ஏறத் திரும்பினான். ஆனால் இந்தச் சண்டையில் கலவாது சற்று எட்டவே நின்றிருந்த முக்காடிட்ட சிறு உருவம், “அந்த வித்தையைச் சற்று நானும் அனுபவிக்கலாமா வீரரே?” என்று அன்பு ததும்பும் குரலில் வினவவே படிப்புறத்தை விட்டுத் திரும்பிய இளமாறன், “நான் இங்கு போராட வரவில்லை” என்றான்.

“பாதகமில்லை; எனக்கும் அந்தப் பயிற்சியைக் கொடுங்களேன்” என்று கூறிக்கொண்டே தனது இடையி லிருந்து நீண்ட மெல்லிய வாளொன்றை உருவியது அந்தச் சிறிய உருவம். முக்காடிட்ட அந்தச் சிறு உருவத்தின் பேச்சிலும் தோரணையிலுமிருந்த ஒலியைக் கேட்டதும் சற்றே பிரமித்த இளமாறன், அந்த முக்காட்டுக்குள்ளிருந்த முகத்தை உற்றுப் பார்க்க முயன்றான். தூர இருந்த தெரு விளக்கின் ஒளி மங்கலாயிருந்தபடியால் அந்த முகம் விளக்கமாகத் தெரியவில்லை இளமாறனுக்கு. நீட்டிய வாள் மட்டும் கண்களுக்கெதிரே நன்றாகப் பளபளத்தது. அந்த வாளைப் பிடித்த கையின் உறுதியைக் கவனித்த இளமாறன், முக்காட்டுக்குள் மறைந்து இருந்த உருவம் சிறியதானாலும் வாள் பயிற்சியில் அது இளைத்ததல்ல என்பதைப் புரிந்து கொண்டதால், “வாள் பயிற்சியளிக்கவும் நான் இங்கு வரவில்லை” என்றான்.

"அப்படியானால் நான் உங்களுக்குப் பயிற்சியளிக்கிறேன், சிறிது வாளை உருவுங்கள்," என்று கூறிய அந்தச் சிறு உருவத்தின் பதிலில் ஏளனமிருந்தது.

அந்த ஏளனத்தைக் கவனித்ததும் இளமாறன் சித்தத்தில் சினம் ஏறியது. அவன் வாள் வெகு துரிதமாக வெளிப் போந்து எதிரியின் வாளை முன்னைவிடப் பலமாகத் தாக்கியது. ஆனால் எதிரியின் வாள் கையை விட்டுச் சிறிதும் அகலவுமில்லை, பறந்தோடவுமில்லை. ஒரு குழந்தையின் விளையாட்டு வாளைத் தடுப்பதுபோல் இளமாறன் வாளை மிக அலட்சியமாகத் தடுத்து நின்றது அந்த மெல்லிய வாள்.

# 8

# தாமதிக்க நேரமில்லை

முக்காடிட்ட சிறு உருவத்தின் கையிலிருந்து நீண்ட அந்த மெல்லிய வாள் தன் பலமான வாளை மிக அலட்சியத்துடன் தடுத்துத் தேக்கிவிட்டதையும், தனக்கு வாள் பயிற்சி அளித்த குருநாதர் அந்த வீச்சை தந்திர வீச்சு என்றும் அந்த வீச்சுக்கு முன்னால் எந்த வாளும் நிற்க முடியாது என்றும் சொல்லி இருந்தாரே அந்த மர்ம வீச்சு, எதிரே வாளேந்தி நின்ற அந்தச் சிறு உருவத்தினிடம் லவலேசமும் பலிக்கவில்லை யென்பதையும் உணர்ந்த இளமாறன் பெரும் பிரமிப்புக்கும் ஓரளவு எச்சரிக்கைக்கும் உள்ளானான். ஆகவே, எதிரியின் மெல்லிய வாளிலிருந்து தன் வாளைப் பின்னுக்கு இழுத்து மறுபடியும் தாக்கத் தீர்மானித்துச் சரேலென வாள் பிடித்த

கையை பின்னால் இழுத்தான். ஆனால், அந்தச் சிறு உருவத்தின் வாளில் ஏதோ மந்திரமிருக்க வேண்டும். அது பாம்புபோல் வளைந்து சுழன்று இளமாறன் வாளைக் கௌவிக்கொண்டுவிட்டதால் வாளைப் பின்னுக் கிழுப்பதும் கஷ்டமாகிவிட்டது, சேரநாட்டின் அந்த வாலிப வீரனுக்கு. இப்படித் தன் வாளைச் சிறைப்படுத்திக் கொண்டதால் சிறு உருவத்திடம் பெரும் சீற்றம் கொண்ட இளமாறன் தன் முழு பலத்தையும் உபயோகித்துத் தன் வாளைச் சுழற்றிப் பின்னுக்கு இழுத்து அதை விடுதலை செய்துகொண்டான். அப்படி விடுதலை செய்து கொள்வதி லிருந்த சிரமத்தையும் அப்படி வாள் விடுதலை அடைந்த சமயத்தில் எதிரியின் வாள் கிர்ரென்ற ஒலியுடன் தன் வாளைப் பலமாக ராவியதையும் கண்ட இளமாறன் எதிரியின் கை பார்வைக்கு மெல்லியதே தவிர மிகவும் திடமானது என்பதையும் புரிந்துகொண்டு அடுத்த தாக்குதலை மிகுந்த எச்சரிக்கையுடன் துவங்கினான்.

பின்னுக்கு வாங்கிய வாளை அவன் மீண்டும் மேலோங்கி கீழிறக்கித் தாக்காமல் அதை நீட்டிப் பிடித்த வண்ணம் பக்கவாட்டில் அப்படியும் இப்படியும் மாறிமாறிப் பாய்ச்சி எதிரியின் விலாப்பக்கங்களை அணுக முயன்றான். ஆனால் இந்தச் சிறு உருவத்தின் பொல்லாத வாள் மின்னல்போல பல முனைகளிலும் சுழன்று இளமாறன் வாளை ஒவ்வோர் இடத்திலும் தடுத்து நின்றது. அது மட்டுமல்ல, குறிகளை அவ்வப்பொழுது மாற்ற இளமாறன் அங்கும் இங்கும் நகர்ந்து போரிட்டானே தவிர, அந்தச் சிறு உருவம் மட்டும் நின்ற இடத்திலிருந்து சிறிதும் அசையாமல் வாளை மட்டும் பலபடி வளைத்து வளைத்து சிலம்ப வித்தைக்காரன்போல் சுழற்றிக்கொண்டிருந்தது. அப்படிச் சுழற்றிய சமயங்களில் அது எவ்விதப் பிரயாசை

யையோ ஆயாசத்தையோ காட்டாததைக் கண்ட இளமாறன் இதயத்தில் சினம் மேலும் மேலும் பொங்கி எழுந்ததால் அவன் திடீரெனப் போர் முறையை மாற்றிக்கொண்டான். வாளின் வேகத்தைத் திடீரெனக் குறைத்துத் தற்காப்புக்காக மட்டும் போரிட முற்பட்டான்.

வாளுடன் வாள் விடாமல் உராய்ந்து போர் ஒலிகளை அந்த இருட்டடித்த தெரு மூலையில் கிளப்பிக்கொண் டிருந்த அந்தச் சண்டை சில விநாடி தொடர்ந்தது. இளமாறன் ஓரளவு எச்சரிக்கை அடைந்துவிட்டதையும் தற்காப்புப் போரில் இறங்கிவிட்டதையும் உணர்ந்த அந்தச் சிறு உருவமும் தன் போர் முறையை மாற்றி வாள் சுழற்சியில் சிறிது வேகத்தைக் காட்டத் துவங்கியது. இதை அறிந்த இளமாறன் உள்ளத்தில் மெல்ல மெல்ல மகிழ்ச்சி உதயமாயிற்று. எதிரியின் வாள் வேகம் உள்ளத்தின் வேகத்தையும் அவசரத்தையும் குறிக்கிறதென்பதை உணர்ந்து கொண்ட இளமாறன் உள்ளூரப் பெரும் பூரிப்படைந்து மிகுந்த நிதானமாகவும் பதற்றம் இல்லாமலும் போரிட்டுக் கொண்டே வந்தான். எதிரியின் வேகம் சிறிது கால அளவை மீறியதும் திடீரென வேகத்துடன் தன் வாளை உயரத் தூக்கிக் கண்ணிமைக்கும் நேரத்தில் இரண்டு மூன்று பலமான அடிகளை எதிரி வாளுக்குக் கொடுத்தான்.

அந்த மூன்று அடிகளைப் பெற்ற எதிரி சினத்துக்குப் பதில் சந்தோஷமே அடைந்தான். அந்த அடிகளைத் தடுக்க அவன் இரண்டு மூன்று முறை அப்படியும் இப்படியும் மாறிமாறிக் குதிக்க நேரிட்டபோதெல்லாம் நல்லது நல்லது என்று இளமாறன் போர் முறையை சிலாகித்துக்கொண்டே குதித்தான். நின்ற நிலையிலிருந்து அசையாமல் இடித்த புளிபோல் நின்று போராடிய அந்தச் சிறு உருவம் அப்படியும் இப்படியும் குதித்துப் போராட முற்பட்டதும்

இளமாறனும் முன்னேறி வேகமாகத் தாக்கத் தொடங்கினான். அந்தச் சந்தர்ப்பத்திலும் எதிரி சக்கர வட்டமாகச் சுழற்றிய வாள் இட்ட பாதுகாப்பு கோட்டைக்குள் இளமாறன் வாள் உட்புக முடியவே இல்லை. மூன்று முறை புக வாய்ப்பு இருந்தது. அந்த மூன்று முறையும் இளமாறன் வாள் புகுந்துதான் இருக்க வேண்டும். அதையும் புகாமல் தடுத்துவிட்டானே எதிரி! எப்படித் தடுத்தான்? வாளில் ஏதாவது மந்திரம் வைத்திருந்தானா?

இத்தகைய கேள்விகளைத் திரும்பத் திரும்பக் கேட்டுக் கொண்டே போராடிய இளமாறன் மெல்ல மெல்ல எதிரியை எதிர்ப்புறமாக விரட்டிக்கொண்டு சென்றான். எதிரியும் இளமாறனுக்கு இடம் கொடுத்துக்கொண்டே சென்றான். எதிரியின் கை சளைத்துவிட்டதற்கான அறிகுறி இவன் வாளின் தாக்குதலில் கிடைத்த அடிகளின் பலவீனத்திலிருந்து நன்றாகப் புலனாகியது. இன்னும் சில விநாடிகளில் அந்த வாளைத் தட்டிவிடலாமெனத் தீர்மானித்தான் இளமாறன். ஆனால், அவன் நினைத்தது வேறு, நடந்தது வேறு. சளைத்த எதிரியின் கை திடீரென மின்னல் போல் எழுந்தது. அடுத்த விநாடி இளமாறன் வாள் அவன் கையில் இருந்து விடுபட்டு இரண்டடி தள்ளி தெருப் புழுதியில் விழுந்தது. இளமாறன் நிலை குலைந்து பிரமை பிடித்து நின்றான். அதுவரை கையில் இருந்து விலகாத அவன் வாள், கையிலிருந்து விலகி விழுந்ததால் திகைத்தான். அந்தத் திகைப்பினாலும், அடைந்த அவமானத்தினாலும் மனம் குமுற, சொல் தடுமாறச் சொன்னான், "முடித்து விடுங்கள் காரியத்தை" என்று.

அந்தச் சிறு உருவம் பதிலுக்கு மிகுந்த மரியாதையுடன் தூரத்திலிருந்த இளமாறன் வாளிடம் சென்று அதை எடுத்து வந்தது, "உங்கள் வாள் வீரரே!" என்று நீட்டவும் செய்தது.

வாளை இளமாறன் கையில் வாங்கவில்லை. "அது இனி தேவையில்லை எனக்கு" என்றான்.

"வேறெது தேவை?"– அன்புடன் வினவியது அச்சிறு உருவம்.

"மரணம்!"

"வீரர்களுக்கு அது என்றுமிருக்கிறது!"

"இன்றே எனக்குத் தேவை."

இளமாறனின் இந்தச் சொற்களைக் கேட்ட அந்தச் சிறு உருவம், பலவந்தமாக அவன் வாளை அவன் கையில் திணித்தது. பிறகு ஆதரவாக அவன் தோளையும் அணைத்துக்கொண்டது. அத்துடன், "உள்ளே வாருங்கள் வீரரே" என்று மிக மரியாதையுடன் அவனை அழைத்துக் கொண்டு எதிரே இருந்த திட்டிவாசலை நோக்கி நடந்தது. இளமாறன் கனவில் நடப்பவன்போல் அந்தச் சிறு உருவத்தின் பக்கத்தில் நடந்து சென்றான். திட்டிவாசலை நெருங்கிய சிறு உருவம் இருமுறை மெல்லக் கதவைத் தட்ட அங்கும் ஒரு பணிப்பெண் வந்து கதவைத் திறந்தாள். அந்த வாயிலுக்குள் சிறு உருவத்தைத் தொடர்ந்து சென்ற இளமாறன் பிரமை பிடித்து நின்றான். உள்ளே அந்த இடமும் நூற்றுக்கு நூறு புலவர் மாளிகை போலவே இருந்தது. எதிரே மாடிப்படி ஓடியது மேலே தெரிந்தது. அதேவிதமான தாழ்வாரம்! மூன்று அறைகளும் அங்கு வரிசையாய்த் தெரிந்தன. கண்ணுக்குப் பட்டது அத்தனையே என்றாலும் மாடிப்படிக்குப் பின்னால் வரிசையாக அறைகள் இருக்கும் என்பதைப் புரிந்துகொண்டான் இளமாறன். முன்னரே தெருவின் இருட்டடித்த மூலையையும் திட்டிவாசலையும் கண்டு பிரமித்த இளமாறன், உட்புறமும் அந்த இடம் மகர மாளிகை போலிருப்பதைக் கண்டு

எதற்காக நகரத்தின் இருபுறங்களிலும் ஒரே மாதிரியான இரு மாளிகைகளைக் கட்டியிருக்கிறார்கள் என்பதை அறியாமல் தவித்தான்.

அத்தகைய தவிப்புடனும் பிரமிப்புடனும் பின்தொடர்ந்த இளமாறனை மாடித் தாழ்வாரத்தின் கடைசி அறைக்கு அழைத்துச் சென்ற அந்தச் சிறு உருவம் உள்ளே சென்றதும் அங்கிருந்த விளக்கொன்றைத் தூண்டிவிட்டுத் தன் முக்காட்டையும் எடுத்து இளமாறனை நோக்கிப் புன்முறுவலும் செய்தது.

முக்காட்டைத் திறந்ததும் முழுவதும் தெரிந்த அந்த முகமும் அந்த மோகனப் புன்முறுவலும் இளமாறன் பிரமிப்பை உச்சநிலைக்குக் கொண்டுபோகவே செய்தன.

அவ்வளவு அழகும் கம்பீரமும் கலந்த முகம் ஒன்று இருக்க முடியுமென்று சொப்பனத்திலும் நினைத்திராத இளமாறன் அந்த முகத்தை நீண்ட நேரம் கவனித்தான்.

முகம் விசாலமாக செக்கச் செவேலென்று இருந்தது. அந்த முகத்தை, தலையிலிருந்து இறக்கி வெட்டப்பட்டிருந்த சுருட்டை மயிர்கள் சூழ்ந்து நின்றன. பெண்களின் அதரத்தைப் போல் மிகச் சிவந்திருந்த அதரங்களிலிருந்த புன்னகை யாரையும் வசீகரிக்கும் தன்மையைப் பெற் றிருந்தது. மேலுதட்டில் லேசாக முளைத்திருந்த அரும்பு மீசை அந்தச் சிறு உருவத்தின் வயது இருபதுக்கு மேலிருக்க முடியாது என்பதை அறிவுறுத்தியது. அந்த முகத்தின் புருவங்கள் சரேலென்று வளைந்து கிடந்தன. கீழிருந்த கருமைக் கண்கள் மட்டுமே அவன் ஆண்மையையும் திட சித்தத்தையும் வலியுறுத்தின.

அந்தக் கண்களிலிருந்த கூர்மையும் பளபளப்பும் அதிகார வேகமும் அவன் யாருக்கும் பணியக்கூடிய

பேர்வழியல்லன் என்பதை அறிவுறுத்தின. அந்தக் கண் களைப் பார்த்த இளமாறன் அதிலேயே வசப்பட்டிருந்தா னாகையால் தனக்குப் பின்னால் அந்தப் பெரிய உருவமும் உள்ளுக்குள் நுழைந்துவிட்டதையும், அது அறைக் கதவைச் சாத்திக் காவலாகக் கையில் வாளை உருவிப் பிடித்து நின்றதையுங்கூடக் கவனிக்கவில்லை. ஆள் வரும் ஒலியைக் கூடக் காதில் வாங்கும் நிலையிலில்லை இளமாறன் அந்தச் சமயத்தில். அத்தகைய அவன் பிரமிப்பை அந்தச் சிறு உருவமே அறுத்தது.

அறை விளக்கைத் தூண்டிவிட்டதும் அங்கிருந்த மஞ்சத்திலமர்ந்துகொண்டு அச்சிறு உருவம், "வீரரே" என்று சற்று எட்ட இருந்த ஓர் ஆசனத்தையும் காட்டியது.

கனவில் நடப்பவன்போல் நடந்த இளமாறன் ஆசனத்தில் அமர்ந்தான், "நீங்கள் யாரென்பதை நான் அறியலாமா?" என்று வினவியது அந்தச் சிறு உருவம்.

தலையிலிருந்த முக்காட்டை எடுத்துவிட்டதால் மிக அழகுடன் விளங்கிய அந்த வாலிபனைப் பார்த்த இளமாறன், "என் பெயர் இளமாறன்" என்று உண்மையே சொன்னான். "இளமாறன், இளமாறன்" என்று அந்த வாலிபனின் அழகிய இதழ்கள் அந்தப் பெயரை இருமுறை உச்சரித்தன. "நல்ல பெயர். பெயரின் இளமை முகத்திலும் தெரிகிறது" என்றான் அந்த வாலிபன், அந்த உச்சரிப்பைத் தொடர்ந்து.

"தங்கள் முகத்தைவிட இளமை முகமல்ல என்னுடையது" என்றான் பதிலுக்கு.

"உண்மைதான் வீரரே! உமது முகத்தின் இளமைக்கும் கையின் உறுதிக்கும் நிரம்ப வித்தியாசம் இருக்கிறது. பல

போர்களைக் கண்ட பெருவீரர்களின் கையுறுதி உமது கைகளில் இருக்கிறது" என்றான் அந்த வாலிபன்.

அந்த வாலிபனை இளமாறன் ஏறெடுத்து நோக்கினான். அந்த வாலிபன் வதனத்தில் ஏளனக்குறி ஏதுமில்லை. அவன் பாராட்டுதல் உண்மையானது என்பதை முகம் சந்தேகமறக் காட்டியது. அதனால் சற்று வருத்தம் தோய்ந்த குரலில் கூறினான் இளமாறன்: "தங்கள் பாராட்டு பெருந்தன்மை யைக் குறிக்கிறது" என்று.

"உண்மையைச் சொல்வதில் பெருந்தன்மை எங்கிருந்து வருகிறது?" என்று வினவினான் அந்த வாலிபன்.

"உறுதியுள்ள கையிலிருந்த வாள் பறக்குமா?" என்று வினவினான் இளமாறன்.

இதைக் கேட்ட அந்த வாலிபன் சில விநாடிகள் இளமாறனை உற்று நோக்கினான். பிறகு சொன்னான்: "வீரரே! இப்போது நான் கூறுவது தற்பெருமையல்ல. என்னிடம் இத்தனை நேரம் எதிரில் நின்று போராடிய வர்கள் கிடையாது. எதிரியின் வாளைத் தட்டிவிட என் வாள் இத்தனை நேரம் முயன்றதும் கிடையாது. ஆனால் உமது வாளைத் தட்டுவதற்குள் என் பிராணனே போய் விட்டது. தட்டியபோது உமது வாள் இரண்டடிக்கு அப்புறமே விழுந்தது. உமது கையின் உறுதி இணையற்றது" என்று.

இளமாறன் பதிலேதும் சொல்லவில்லை சில விநாடி களுக்கு. பிறகு சொன்னபோது குரலில் பிரமையிருந்தது. "என் கையின் உறுதியை நீங்கள் பாராட்டினால், தந்திரமாக என் வாளடிகளை லட்சியம் செய்யாத உங்கள் கை உறுதியைப்பற்றி என்ன சொல்லட்டும்" என்றான் இளமாறன்.

அத்துடன் எதிரி வாளின் பேச்சை மாற்றிவிட்டு, "அதிருக்கட்டும் வாலிபரே! உங்கள் சொந்த ஊர் எது?" என்று வினவினான்.

"கரூர்!" என்று பதிலளித்தான் இளமாறன்.

"வஞ்சிமா நகரா?"

"ஆம்."

"சேரநாட்டவரா?"

"ஆம்."

"மதுரைக்கு ஏன் வந்தீர்?"

அதுவரை உண்மையைச் சொல்லி வந்த இளமாறன் திடீரென உண்மையை மறைத்தான். "மதுரையின் சிறப்பைப் பற்றிக் கேள்விப்பட்டேன். பார்த்துப் போக வந்தேன்" என்று கூறினான்.

அதைச் சிறிதும் நம்பாத எதிரி வாலிபன், "அப்படியா! மகிழ்ச்சி. மதுரை அனைவரும் பார்க்க வேண்டிய நகரம். இப்பொழுது எங்கு தங்கியிருக்கிறீர்கள்?" என்று வினவினான்.

இம்முறை உண்மையைச் சொன்னான் இளமாறன். "புலவர் மாளிகையில்" என்ற சொற்கள் தடங்கலின்றி வெளிவந்தன.

அந்தப் பதிலைக் கேட்டதும் எதிரி வாலிபன் முகத்தில் சந்தேகச் சாயை படர்ந்ததைக் கண்ட இளமாறன்— இமய வல்லியின் சொற்களை நினைவுபடுத்திக்கொண்டான். 'புலவர் மாளிகையென்று சொல்லுங்கள். அப்படியும் மறுத்தால் மோதிரத்தைக் காட்டுங்கள்' என்று இமயவல்லி கூறியதை எண்ணி, "சந்தேகமிருந்தால் இதைப் பாருங்கள்,"

என்று கையிலிருந்த முத்திரை மோதிரத்தைக் கழற்றிக் காட்டினான் இளமாறன்.

அதைக் கண்டதும் மஞ்சத்திலிருந்து வெகு வேகமாக எழுந்து நடந்து இளமாறனை அணுகிய அந்த வாலிபன் அந்த மோதிரத்தைக் கையில் வாங்கி ஒரு விநாடி பார்த்தான். அப்படிப் பார்த்த சமயத்தில் உள்ளூர உணர்ச்சிகள் ஏதாவது ஓடியிருந்தால், அதை அவன் முகம் காட்டவில்லை. மோதிரத்தை மீண்டும் இளமாறனிடம் திருப்பிக் கொடுத்துவிட்டு வாயிற்படியை அடைத்து நின்ற தன் சகாவை சமிக்ஞை செய்து அருகில் வரும்படி அழைத்தான் அந்த வாலிபன். அருகில் வந்த ராட்சத உருவத்தை நோக்கி, "சேரநாட்டு வீரர் மதுரைக்குப் புதிது. புலவர் மாளிகையருகில் விட்டு வா," என் கட்டளை யிட்டான்.

அந்தக் கட்டளையைக் கேட்டதும் அந்தப் பெரிய உருவம் மீண்டும் முக்காட்டை எடுத்துத் தலையில் போட்டுக் கொண்டதன்றி, "வாருங்கள் வீரரே" என்று பணிவுடன் அழைக்கவும் செய்தது. அந்த அழைப்பின் விளைவாகப் புறப்பட எழுந்த இளமாறனை எதிரி வாலிபன் ஆர்வத்துடன் முதுகில் தட்டிக்கொடுத்து, "வீரரே! மதுரையில் உமக்கு எந்த உதவி தேவையானாலும் நீர் என்னிடம் வரலாம். நான் எப்பொழுதும் நள்ளிரவில் இங்கு இருப்பேன்" என்றும் கூறினான். இளமாறன் பதிலேதும் சொல்லாமல் தலைவணங்கிச் சென்றான். அவனைத் தொடர்ந்து பெரிய உருவம் புலவர் மாளிகை வரையில் அவனைக் கொண்டுவந்துவிட்டு வாயிலிலேயே அவனைப் பிரிந்து சென்றது.

தீர்க்காலோசனையுடன் மகர மாளிகையின் திட்டி வாசலைப் பழையபடி தட்டி உள்ளே நுழைந்த இளமாறன்

இரவு இரண்டு ஜாமங்கள் பறந்துவிட்ட அந்தச் சமயத்திலும் இமயவல்லியே கதவைத் திறந்தது கண்டு வியந்து, "நீங்கள் இன்னும் உறங்கவில்லையா?" என்று வினவினான்.

"இல்லை" என்றாள் இமயவல்லி.

"ஏன்?" மீண்டும் வியப்புடன் எழுந்தது இளமாறன் கேள்வி.

"உங்களுக்குக் கதவைத் திறக்கும் பொறுப்பு என்னுடையது" என்றாள் அவள். அத்துடன், "தங்களுக் காகப் புலவர் காத்திருக்கிறார்" என்றும் கூறினாள்.

அந்த இருவரும் தனக்காக விழித்திருக்கும் காரணத்தை அறியாத இளமாறன் படிகளில் ஏறி இமயவல்லி பின்தொடரப் புலவர் அறைக்குள் நுழைந்தான். புலவர் அவனை அன்புடன் வரவேற்று, "மதுரையைப் பார்த்தாயா இளமாறா?" என்றும் வினவினார்.

"பார்த்தேன். மதுரையை மட்டுமல்ல; அதன் இணையற்ற வீரத்தையும் பார்த்தேன்!" என்றான் இளமாறன்.

புலவர் முகத்தில் கவலை பாய்ந்தது. "என்ன சொல்கிறாய் இளமாறா?" என்று கவலை குரலில் பாய்ந்தோடக் கேட்டார்.

இளமாறன் நடந்ததை ஒளிவு மறைவு இல்லாமல் கூறினான். அவன் கூறக் கூறப் புலவரின் முகம் கவலையில் ஆழ்ந்தது. அவன் முடித்ததும், "கெட்டது குடி" என்று இரைந்தே கூறினார் புலவர். காரணம் தெரியாத இளமாறன் இமயவல்லியை நோக்கினான். அவள் விழிகளில் விவரிக்க இயலாத திகில் படர்ந்து நின்றது. "இனித் தாமதிக்க நேரமில்லை" என்ற சொற்களும் திகிலுடன் உதிர்ந்தன அவள் கொவ்வை இதழ்களிலிருந்து.

# 9

# துணை இவள்

அந்த இரவில் மதுரையம்பதியில் தனக்கேற்பட்ட அனுபவத்தை விவரித்ததும் குறுங்கோழியூர்க்கிழார் 'கெட்டது குடி' என்று அலுத்துக்கொண்டதையும் இமய வல்லியும் முகத்தில் திகில் படர, "இனி தாமதிக்க நேர மில்லை" என்று முணுமுணுத்ததையும் கண்ட இளமாறன், அப்படி என்ன நடக்கக்கூடாத காரியம் நடந்து விட்டது என்பதை எண்ணிப் பார்த்து ஏதும் புரியாமல் கலங்கினான். 'மதுரையின் தெருக்களைப் பார்க்கச் சென்றேன், வீரனொருவன் சண்டைக்கு இழுத்தான், சண்டையிட்டேன். திரும்பினேன். இதிலென்ன தவறு இருக்க முடியும்?' என்று தன்னைத் தானே ஒரு விநாடி கேட்டுக்கொண்டான். ஒருவேளை மோதிரத்தை அந்த வீரனிடம் காட்டியதில் இவர்களுக்கு ஆட்சேபணை இருக்குமோ என்பதையும் நினைத்துப் பார்த்து, 'இருக்க முடியாதே, இமயவல்லிதானே அவசியமானால் மோதிரத்தைக் காட்டும்படி கூறினாள்' என்றும் தன்னைச் சமாதானப்படுத்திக்கொண்டான்.

ஆனால் அவனுக்கெதிரே இருந்த இருவர் மட்டும் சமாதானப்பட்டதாகத் தெரியவில்லை. அன்றைய இரவின் ஆரம்பம் வரை மிகுந்த நிதானத்தைக் காட்டி வந்த புலவர் பெருமான் முகத்தில் கவலை பெரிதாக விரிந்து கிடந்தது. இமயவல்லியின் அழகிய முகமோ பயத்தால் பெரும் பொலிவு பெற்றிருந்தது. இந்த இக்கட்டான சமயத்திலும் பெண்களுக்கு, தைரியத்தைவிட பயம் எத்தனை அழகைக் கொடுக்கிறது என்பதை எண்ணி வியந்தான் இளமாறன்.

ஆனால் இமயவல்லியின் அழகிலோ முகபாவத்திலோ தினையளவும் மனதை ஓட்டாத புலவர் மட்டும், "உன்னை யார் இந்த மாளிகையைவிட்டு வெளியே போகச் சொன்னது?" என்று எரிந்து விழுந்தார் இளமாறன் மீது.

இதைக் கேட்ட இளமாறன் மேலும் வியப்பே எய்தி, "இமயவல்லியைக் கேட்டுக்கொண்டுதான் போனேன்" என்று பதில் கூறினான். புலவர் மனம் மட்டும் தெளிவா யிருந்திருந்தால் இமயவல்லியை இளமாறன் பெயர் சொல்லி அழைத்ததைக் கவனித்திருப்பார். தவிர அந்தப் பெயரைச் சொன்னபோது குரலில் இருந்த கனிவையும் கவனித் திருப்பார். ஆனால், புலவர் மனம் அந்தச் சமயத்தில் இருந்த நிலையில் அவர் எதையுமே கவனிக்காமல் இரவில் இளமாறனின் மதுரை நடமாட்டத்தை மட்டுமே திரும்பத் திரும்ப நினைத்துக்கொண்டிருந்தாராகையால், "இமயவல்லி! இது உண்மையா? இந்த வாலிபனுக்கு வெளியே செல்ல நீ அனுமதி கொடுத்தாயா?" என்று வினவினார்.

இமயவல்லி பதில் சொல்லத் தன் அழகிய அதரங்களை மெள்ளத் திறக்கும் முன்பாக இளமாறனே பதில் கூறினான்: "இல்லாவிட்டால் இந்தப் பாண்டிய முத்திரை மோதிரம் ஏது எனக்கு?" என்று.

பதிலுக்குப் புலவர் அர்த்தம் புரியாதபடி ஏதோ ஒரு விதமாகத் தலையை அசைத்தார். பிறகு வருத்தந்தோய்ந்த குரலில் கூறினார், "இன்னும் இரண்டு நாள் அவகாச மிருந்தால் நன்றாகயிருந்திருக்கும். ஆனால் அதற்குள் கெடுத்துவிட்டாயே இமயவல்லி" என்று.

இமயவல்லி குற்றவாளி நீதிபதியை நோக்குவது போல் புலவரை ஏறெடுத்து நோக்கினாள். "நானென்ன செய்யட்டும் தந்தையே? சேரநாட்டு வீரர், தாம் இங்கு

சிறைப்பட்டிருப்பதுபோல் பேசினார். சிறைப்படவில்லை, சுதந்தரத்துடன்தானிருக்கிறார் என்று வலியுறுத்தினேன். வெளியில் போக வேண்டுமென்று பிடிவாதம் செய்தார்..." என்று வாசகத்தைப் பாதியிலேயே விட்டு மீதியைப் புலவரையே ஊகிக்கச் செய்தாள்.

புலவர் ஊகிக்க மறுத்து, "எதற்காக?" என்றொரு கேள்வியையும் கேட்டு வைத்தார்.

"பாதுகாப்புக்கு இருக்கட்டும் என்று மோதிரத்தைக் கொடுத்து வைத்தேன்" என்றாள் இமயவல்லி.

"மோதிரத்தை பார்க்கக் கூடாதவர் பார்த்துவிட்டால் விளைவு என்னவென்பது உனக்குத் தெரியுமல்லவா?" என்று சீறினார் புலவர்.

"தெரியும்" என்றாள் இமயவல்லி அடக்கத்துடன்.

"தெரிந்துமா மோதிரத்தைக் கொடுத்தாய்?"

"ஆனால்..."

"சொல்."

"இது அவரிடம் போகுமென்று எனக்கெப்படித் தெரியும்?"

"எச்சரிக்கையுடனிருக்க வேண்டியது உனது கடமை யல்லவா?"

"ஆம்."

"கடமையைத் தவறவிட்டாயே பெண்ணே? என் ஏற்பாடுகள் இன்னும் பூர்த்தியடையவில்லை" என்று ஏக்கத்துடன் கூறினார் புலவர். அந்த ஏக்கத்திற்கறிகுறியாகப் பெருமூச்சும் விட்டார்.

அதுவரை அவ்விருவர் சம்பாஷணையையும் கேட்டுக் கொண்டிருந்த இளமாறன், புலவர் ஏக்கப் பெருமூச்சு விட்டதும் சற்றுக் கோபத்தின் வசப்பட்டு, "புலவர் பெருமான் ஏக்கப்படுவதற்கு என்ன நேர்ந்துவிட்டது இப்பொழுது?" என்று சீற்றத்துடன் கேட்டான்.

புலவரின் விழிகள் முன்னைவிட அதிகமாகப் பளிச்சிட்டன. "இன்னும் என்ன நேரிட வேண்டும்?" என்று வினவினார் அவரும் கோபத்துடன்.

"வீரர்கள் புது நாடுகளில் நுழையும் போது இம்மாதிரி சில்லறைச் சண்டைகள் விளைவது சகஜம் தானே?" என்று வினவினான் இளமாறன்.

"இது சில்லறைச் சண்டையா?" கிழாரின் கேள்வியில் வியப்பு இருந்தது.

"வேறென்ன? நானும் ஒரு வாலிபனும் போரிட்டோம். என் கைவாள் அதில் பறந்தது. நீ யார் என்று கேட்டான். பெயர் சொன்னேன், ஊர் சொன்னேன், மதுரையைப் பார்க்க வந்திருப்பதாகச் சொன்னேன்..."

"புலவர் மாளிகையைச் சொன்னாய், முத்திரை மோதிரத்தைக் காட்டினாய்..."

"ஆம் காட்டினேன். அவன் ஒரு விநாடிதான் மோதிரத்தைப் பார்த்தான். பிறகு வழிகாட்ட எனக்குத் துணையும் அனுப்பினான்..."

இதைக் கேட்ட குறுங்கோழியூர்க்கிழார் திடீரென பைத்தியம்போல் பேய்ச் சிரிப்புச் சிரித்தார். பிறகு இளமாறனை மரியாதையின்றியும் பேசத் தொடங்கி, "அட முட்டாள்! உனக்கு இன்னும் விளங்கவில்லையா?" என்று

வினவினார், அந்தப் பேய்ச் சிரிப்புக்கிடையே கடினமான குரலில்.

புலவரின் அந்த உக்ர சொரூபத்தை அதுவரை கண்டிராத இளம்மாறன் பிரமிப்புக்குள்ளானான். தயை நிறைந்த முகத்தில் வெறியும் கோபமும் தாண்டவ மாடியதையும் அந்தக் கோபத்தால் உதடுகள் துடிக்கவே மீசையும் தாடியும்கூட குதித்ததையும் கண்டான். அவருடைய மரியாதையற்ற பேச்சு அவனுக்குக் கோபத்தைச் சற்று அளித்ததனாலும் அவர் வயது, புலமை, பெருமை இவற்றை நினைத்துத் தன்னைப் பெரிதும் அடக்கிக்கொண்டான். ஆகவே மிகவும் நிதானமான குரலில் கேட்டான்: "என்ன விளங்கவில்லையா எனக் கேட்கிறீர்கள்?" என்று.

புலவர் உடனே பதில் சொல்லவில்லை. ஒருமுறை எழுந்தவர் மீண்டும் மஞ்சத்திலமர்ந்து கொண்டார். சில விநாடி இளமாறனை உற்று நோக்கினார். பிறகு, "வாலிபனே, நீ அதிர்ஷ்டசாலியா துரதிர்ஷ்டசாலியா என்பதே எனக்கு விளங்கவில்லை" என்று கூறினார் புலவர்.

"அதிலென்ன சந்தேகம் உங்களுக்கு?" என்று வினவினான் இளமாறன்.

"ஒருவிதத்தில் பார்த்தால் நீ பெரிய அதிர்ஷ்டசாலி. இன்னொரு விதத்தில் பார்த்தால் பெரிய துரதிருஷ்டசாலி" என்றார் புலவர்.

"எந்த விதத்தில் அதிர்ஷ்டசாலி?" என்று வினவினான் இளமாறன்.

புலவர் சற்றுத் தயங்கினார். பிறகு மெள்ளப் பேச்சைத் துவங்கி, "இளமாறா! எந்தப் பாக்கியத்துக்குப் பெரும் வீரர்கள் தோள் தினவு எடுத்துத் துடிக்கிறார்களோ

அந்தப் பாக்கியம் உனக்குக் கிடைத்திருக்கிறது. நீ இன்று போரிட்டது...?" என்று சொன்னவர் மீண்டும் தயங்கினார்.

"போரிட்டது?" வியப்புடன் எழுந்தது இளமாறன் கேள்வி, புலவரின் தயக்கத்துக்குக் காரணம் புரியாமல்.

புலவர் பதில் இடியென இறங்கியது இளமாறன் தலையில். "தமிழகத்தின் மாபெரும் வீரன், மன்னாதி மன்னன், இளமைச் செம்மல், பாண்டியன் நெடுஞ் செழியனுடன் போரிட்டிருக்கிறாய் இளமாறா! அந்த வாளுடன் தங்கள் வாட்களை மோத எத்தனை வீரர்கள் ஆசைப்படுகிறார்கள் தெரியுமா? அவனை எந்த விதத்திலும் அணுகிப் பேச முடியாததால் எத்தனை வீரர்கள் தாங்கள் துர்ப்பாக்கியசாலிகள் என்று நினைக்கிறார்கள் தெரியுமா? அத்தகைய வீரர் தொகை அனந்தம். அப்பேர்ப்பட்ட வீரன் பாண்டியன் நெடுஞ்செழியன் வாள் உன் வாளுடன் உராய்ந்திருக்கிறது. அந்த விதத்தில் நீ பெரும் பாக்கியசாலி" என்று புலவர் உணர்ச்சிகள் கொந்தளிக்க முகம் ஜொலிக்கப் பேசினார்.

இளமாறன் சில விநாடி பிரமை பிடித்து நின்றான். 'பால் வதனத்துடன் பாலகன்போல் காட்சியளித்த அந்த வாலிபன் பாண்டிய மன்னன் நெடுஞ்செழியனா!' என்று தன்னை ஒருமுறைக்கிருமுறையாகக் கேட்டுக்கொண்டான். 'பாண்டியன் நெடுஞ்செழியனாயிருந்தால் என்ன, யாரா யிருந்தாலென்ன? நான் அடைந்தது தோல்விதானே' என்று அப்பொழுதும் தன் வாள் கையை விட்டு விலகியதை நினைத்துப் பொருமிய இளமாறன், "இதில் பாக்கியமென்ன இருக்கிறது புலவரே?" என்று சர்வசாதாரணமாகக் கேட்டான்.

"பாக்கியமென்ன இருக்கிறதா?" புலவர் வியப்பினால் வாயைப் பிளந்தார். அவர் மீசைக்கும் தாடிக்குமிடையே வாய் செவ்விய குகைபோல் தெரிந்தது.

இளமாறன் சற்றும் அவர் வியப்பை லட்சியம் செய்யாமலே கேட்டான், "ஆம். இதில் பாக்கியமென்ன இருக்கிறது. வாட்போரில் தோல்வியுற்றது பெரும் பாக்கியமா?" என்று.

புலவர் வியப்பு திகைப்பாக மாறியது. அந்தத் திகைப்பையும் மறைத்துக்கொண்டு கேட்டார்: "வாட்போர் எவ்வளவு நேரம் நடந்திருக்கும்?" என்று.

"ஒரு நாழிகை நேரம் நடந்திருக்கும்."

"ஒரு நாழிகை நேரமா?"

"ஆம். நான் மன்னர் வாளைத் தட்ட முயன்றேன், முடியவில்லை. பல விநாடிகள் தாக்கிப் பார்த்தேன், பயனில்லை!"

"அப்புறம்?"

"மன்னர் திரும்பத் தாக்கினார். ஏதோ வலிய முறையில் என் வாளைத் தட்டினார். கையிலிருந்து கழன்றது."

"பிறகு?"

"இரண்டடி தள்ளி விழுந்தது."

"இரண்டே அடிகளா!"

"ஆம். ஏன், பல அடி பறக்காதது வியப்பாயிருக்கிறதாக்கும் உங்களுக்கு?"

இந்தக் கேள்விக்கு 'ஆம் ஆம்' என்று குறிப்பிடும் வகையில் புலவர் தமது தலையைப் பலமுறை ஆட்டினார்.

"சந்தேகமில்லை. பெரும் வியப்பாய் இருக்கிறது. பாண்டியன் நெடுஞ்செழியனுடன் போரிட்ட பல வீரர்களைப் பார்த்திருக் கிறேன். கண்ணிமைக்கும் நேரத்தில் அவர்கள் வாள் காற்றில் பறந்திருக்கிறது. ஒரு முழு நாழிகை போரிட்டிருக்கிறாய். பிறகு தட்டப்பட்ட வாள் இரண்டடியில் விழுந்திருக்கிறது. அந்த அனுபவம் நெடுஞ்செழியனுக்கே புதிது. அதில்தான் இருக்கிறது ஆபத்து" என்றார் புலவர்.

"அதில் ஆபத்து என்ன இருக்கிறது?" என்று வினவினான் இளமாறன்.

"சேரநாட்டு வீரன் ஒருவன் மதுரையில் புகுந்திருப்பதை ஒற்றர்களே சொல்லியிருப்பார்கள் நெடுஞ்செழியனுக்கு. உன்மேல் பாண்டியன் கண் வைக்க அதுவே போதும். அடுத்தபடி அவன் நகர சோதனை வருகையில் அதே வீரன் அவனுக்குக் குறுக்கே வருகிறான். அவன் கல்வி ஸ்தலத்தின் வாயிலைத் தட்டப் போகிறான். அவனைத் தடுக்க முயலு கிறான் பாண்டிய சேனாதிபதி மருதன். சேனாதிபதியின் வாளைத் தட்டி விடுகிறான் சேரநாட்டவன். பிறகு தானே போரிடுகிறான் பாண்டியன். மிகுந்த சிரமத்துக்குப் பிறகு தான் சேரநாட்டு வீரன் கைவாளை அவனால் தட்ட முடிகிறது. வந்திருப்பவன் தனக்கு நிகரான வீரன் என்பதை நெடுஞ்செழியன் புரிந்துகொள்கிறான். பிறகு என்ன நடக்கும் என்று எண்ணுகிறாய் இளமாறா?" என்று விளக்கினார், புலவர் பெருமான்.

புலவரின் விளக்கம் இளமாறன் கண்களைப் பெரிதும் திறந்தது.

திறக்கப்பட்ட கண்கள் மீண்டும் பாண்டியன் நெடுஞ் செழியனை அப்பொழுதும் சுற்றுமுற்றும் கண்டன. அந்த வீர வதனம், இளமை முகம், இதழ்களின் புன்முறுவல்

எல்லாம் கண்முன் தெரிந்தன. தன்னிடம் தோல்வியுற்ற அந்தப் பெரிய வீரன் பாண்டிய மண்டலப் படைத் தலைவனா? இப்படிப் பாண்டியன் நெடுஞ்செழியனையும் அவன் துணைவனையும் மனக்கண்களில் கண்டும் பல கேள்விகளைத் தன்னைக் கேட்டுக்கொண்டும் பிரமை தட்டி நின்ற இளமாறனை நோக்கிப் புலவர் சொன்னார்: "இளமாறா! பாண்டியன் நெடுஞ்செழியனுக்கு உன் வருகை, உன் வீரம் இரண்டும் தெரிந்துவிட்டன. வந்த காரணத்தை அவன் ஊகித்துக்கொண்டிருப்பான். ஆகவே எந்த விநாடியிலும் உன்னைச் சிறை செய்ய வீரர்கள் இங்கு வருவார்கள். அல்லது உன் அசைவு ஒவ்வொன்றையும் கவனிக்க உத்தரவுகள் பறக்கும். ஆகவே தாமதிக்க நமக்கு நேரமில்லை."

அதுவரை அவர்கள் உரையாடலில் கலவாத இமய வல்லியும் குறுக்கே புகுந்து, "ஆம், தாமதிக்க நேரமில்லை புலவரே! விநாடிகூட நேரமில்லை" என்றாள் உணர்ச்சி பொங்க.

"தாமதித்தால்?" இளமாறன் கேட்டான்.

"மாந்தரஞ்சேரல் இரும்பொறை நிரந்தரமாகச் சிறையி லிருப்பார். எங்கள் திட்டங்கள் தவிடு பொடியாகிவிடும்" என்றாள் இமயவல்லி.

அவர்கள் திட்டங்கள் என்ன என்பது தெரியாததாலும் அது எப்படித் தவிடுபொடியாகுமென்பதை அறியாத தாலும், "இப்பொழுது என்ன செய்ய வேண்டும்?" என்று வினவினான் இளமாறன்.

குறுங்கோழியூர்க்கிழார் இயமவல்லியை நோக்கினார். "இப்பொழுது என்ன செய்ய வேண்டும் இமயவல்லி?" என்று வினவவும் செய்தார்.

"இவரை உடனே மதுரையை விட்டு வெளியேற்ற வேண்டும்" என்றாள் இமயவல்லி, புலவரை நோக்கி.

"எந்த இடத்துக்குக் கொண்டுபோகலாம்?"

"சத்திரத்துக்கு."

"நல்லது! நல்லது!" என்று குதூகலித்த புலவர், "சரி இளமாறா புறப்பட ஏற்பாடு செய்துகொள். இன்னும் ஒரு நாழிகைக்குள் வண்டி வந்துவிடும்" என்றார்.

இருவர் சம்பாஷணையையும் கேட்ட இளமாறன் சற்றுக் கோபம் அடைந்தான். சடப்பொருளை அகற்றுவதுபோல் தன்னை அவ்விருவரும் அகற்றப் பேசியது வெறுப்பா யிருந்தது அவனுக்கு. "இதில் என் சம்மதம் தேவையில்லை போலிருக்கிறது" என்று சீறினான் அவன்.

"தேவையில்லை" என்று சிறிதும் லட்சியம் செய்யாமலே சொன்ன குறுங்கோழியூர்க்கிழார், "இளமாறா, வேண்டிய தொல்லைகளை நீ ஏற்கெனவே கொடுத்துவிட்டாய், இனியும் தொல்லை கொடுக்காதே. புறப்பட சித்தம் செய். போ உனது அறைக்கு" என்றார் வீரனை உத்தரவிடும் தளபதிபோல்.

அப்பொழுதும் அசையாத இளமாறன், "சத்திரம் என்கிறீர்களே, அது எங்கிருக்கிறது?" என்று வினவினான்.

"இமயவல்லிக்குத் தெரியும்" என்றார் புலவர்.

"அப்படியானால்..." சந்தேகத்துடன் கேட்டான் இளமாறன்.

"இமயவல்லி உன்னுடன் வருகிறாள்."

"அவளுக்குத் துணை?"

"அவளுக்குத் துணை நீ, உனக்குத் துணை அவள். சரி சரி போ" என்று துரிதப்படுத்தினார் புலவர்.

அதற்கு மேல் ஏதும் பேச வழியில்லாததால் அறையை விட்டு வெளியே சென்றான் இளமாறன். அடுத்த நாழிகைக்குள் இமயவல்லி அவன் அறைக்கதவைத் தட்டினாள். அவளை அவன் தொடர்ந்து சென்றான். அந்த மகர மாளிகையின் வேறொரு வழியாக அவனை அழைத்துச் சென்று இமயவல்லி ஒரு தோட்டத்தில் அவனைக் கொண்டு வந்து நிறுத்தினாள்.

அங்கு பயணத்துக்குத் தயாராக நாற்புறமும் முக்காடிட்ட இருபுரவித் தேரொன்று தயாராக நின்றது. அதில் ஒரு பகுதித் திரையை நீக்கிக்கொண்டு இமயவல்லி ஏறி உட்கார்ந்தாள். இளமாறனும் ஏறப்போன சமயத்தில் புலவர் தோட்டத்துள் வந்தார். இளமாறன் அவரை வணங்கினான். அவர் அவனை ஆசீர்வதித்ததன்றி, "செல் இளமாறா, உனக்கு வெற்றியைக் கடவுள் அளிக்கட்டும். இமயவல்லி கிழித்த கோட்டைத் தாண்டாதே. அவள் சொற்படி நட" என்றும் கூறினார்.

இளமாறன் வண்டியிலேறி இமயவல்லியின் அருகில் அமர்ந்தான். அடுத்த விநாடி அதுவரை திறந்திருந்த திரையும் மூடப்பட்டது! மூடுதேர் பறந்து சென்றது.

# 10

# சாலைப் போர்

அன்றிரவு பிற்பகுதியில் நேரிட்ட நிகழ்ச்சிகளாலும், அவற்றைப்பற்றி புலவர் அளித்த விளக்கத்தாலும், அந்த விளக்கத்தில் வெளிவந்த உண்மைகளாலும், உணர்ச்சிகள்

பெரிதும் நெகிழ்ந்து கிடக்கப் பிரமை பிடித்தவன்போல் மூடுதேரில் உட்கார்ந்திருந்த இளமாறன் திரும்பத் திரும்ப அந்த இரவின் சம்பவங்களை அலசிப் பார்த்தான். மதுரையிலிருந்து கருவூருக்கு வந்த அழைப்பின் முறையே மர்மமாக இருந்ததென்றால் மதுரை வந்தபின் ஏற்பட்ட நிகழ்ச்சிகள் மர்மத்தின் இருளை அதிகப்படுத்தினவேயொழிய சிறிதும் அதில் ஒளி வீசாததை நினைக்க, 'இந்தப் பெண் யார்? இவளும் ஒரு புலவரும் மட்டும் சேர்ந்து பாண்டியன் நெடுஞ் செழியனின் பயங்கரச் சிறையான மூங்கில் கோட்டையிலிருந்து சேர மன்னனை விடுதலை செய்வது நடக்கிற காரியமா? இவர்களுக்குப் படைகளின் உதவியோ வேறு பாண்டிய மக்களின் உதவியோ இருப்பதாகத் தெரியவில்லையே!' என்று திரும்பத் திரும்பத் தன்னைப் பலமுறை கேட்டுக்கொண்டான்.

அத்துடன் புலவரும் இந்த இளமங்கையும் வாழ்ந்த முறை, வாழ்ந்த மாளிகை இவை அனைத்துங்கூடப் பெரும் மர்மமாயிருந்தது இளமாறனுக்கு. 'இவள் புலவருடன் ஏன் அந்த மர்ம மாளிகையில் வாழ்கிறாள்? இவளுக்கு உற்றார் உறவினர் யாருமே இல்லையா?' என்ற கேள்விகளையும் அவன் தன்னைக் கேட்டுக்கொண்டான்.

பிறகு மதுரையின் பெரும் காவலையும் கண்காணிப்பையும் எண்ணிப் பார்த்த அவன், இத்தகைய கடுமையான காவலையும் கண்காணிப்பையும் கடந்து, "மூடுதேர் ஓடிவிடுமா? தவிர இந்த மூடுதேர் ஏது இவர்களுக்கு?" என்றும் தன் இதயத்தில் கேள்விகளை எழுப்பிக்கொண்டான் இளமாறன்.

இந்தக் கேள்விகள் கிளப்பிய சந்தேகங்களுக்கும் உணர்ச்சிக் குழப்பத்துக்கும் இடையே சிறிது சங்கடமும்

அவனுக்கு நேரிட்டது. மூடுதேர் கணவேகத்தில் பறந்து சென்றதால் இடையிடையே சாலைப் பள்ளங்களில் வண்டிச் சக்கரம் புகுந்து தள்ளி அவனைத் திடீர் திடீரெனப் பலமுறை தூக்கித் தள்ளியதால் அவன் உடல் இரண்டு முறை இமயவல்லியின் உடலுடன் மோத ஏற்பட்டதன் விளைவாகப் பெரும் சங்கடத்துக்குள்ளான இளமாறனுக்கு அத்தனை சங்கடத்திலும் சிறிது மனத்திருப்தியுமிருந்தது. திருப்தியிருந்ததேயொழிய மனம் அந்தத் திருப்தியையும் சந்துஷ்டியையும் ஒப்புக்கொள்ள மறுத்தது. 'சே, சே, யாரோ அபலைப் பெண்ணை நம்மிடம் நம்பி ஒப்படைத்திருக்கிறார் புலவர். இந்த எண்ணமே பிசகு' என்று தன்னை மேலுக்குக் கண்டித்துக்கொண்டான். இப்படிப் பலவாறாக யோசித்து யோசித்து மௌனம் சாதித்ததைச் சற்றுத் தள்ளி உட்கார்ந் திருந்த அந்தப் பைங்கிளியும் கவனித்தாளானாலும் அந்த மௌனத்தை அவள் சிறிதும் கலைக்கவில்லை. அவள் முகத்தில் மட்டும் ஏதோ சிறிது கவலைக்குறி இருந்ததே தவிர, அவளுக்கு அந்தப் பயணத்தைப்பற்றிப் பெரிய கவலை இருந்ததாகத் தெரியவில்லை. ஏதும் பேசாமல் மார்பில் கையைக் கட்டிக்கொண்டு தேரின் ஆசனத்தில் மல்லாந்து சாய்ந்து கிடந்த அந்த வாலிபனை இருமுறை தன் கடைக்கண்ணால் பார்த்தாள் அந்தப் பெண். பிறகு மெல்லப் புன்முறுவல் கொண்டாள். அவ்வளவுதான். அவளும் பேசவில்லை. இத்தகைய மௌனத்தைக் கலைக்கத் தானோ என்னமோ திடீரென சாலை மடிப்பு ஒன்றைத் தாண்டிக் குதித்த மூடுதேரின் பேரசைவு அந்தப் பருவப் பெண்ணை ஒரே தூக்காகத் தூக்கி இளமாறன் கைகளில் விட்டெறிந்தது.

எதிர்பாராதவிதமாகத் தன்னை நோக்கி எழும்பி வந்த அந்தப் பூவுடலை அப்படியே இரு கைகளாலும் இறுக்கிப்

பிடித்த இளமாறன், "நல்லவேளை!" என்று ஏதோ மேலும் சொல்லப்போய்ப் பேச்சைச் சட்டென்று நிறுத்திக் கொண்டான்.

அந்த நல்லவேளையைச் சொன்னபோதும் சரி, கைகளால் அவளை இறுக்கிப் பிடித்தபோதும் சரி, பெரும் கவலையைக் குரலில் இளமாறன் காட்டியதைக் கண்ட அந்தப் பைங்கிளி மெல்ல அவன் பிடியிலிருந்து விலகிக் கொண்டு, "ஒன்றுமில்லை..." என்று கூறி மூடுதேரின் தனது பழைய மூலைக்கு நகர்ந்தாள்.

அந்த 'ஒன்றுமில்லை' என்பது அர்த்தமற்ற சொல் என்பதை இளமாறன் உணர்ந்திருந்தான். உணர்ச்சிகள் குழம்பும்போது புத்தியும் குழம்புமாதலால் அர்த்தமற்ற சொற்கள் வெளிவருவது இயற்கையே என்பதை இளமாறன் புரிந்துகொண்டதால் அந்தச் சொல்லைப்பற்றி விவாதிக்காமல், "சாலை மிகவும் மேடு பள்ளமாயிருக்கிறது" என்றான்.

அவள் பதிலுக்கு 'ஆம்' என்று ஒரு சொல்லை மட்டும் சொன்னாள். அந்த 'ஆம்' என்ற சொல்லில் பெரும் சங்கட மிருந்ததை உணர்ந்த இளமாறன் அதன் காரணத்தைப் புரிந்துகொண்டதன்றி, இருவர் சங்கடத்தையும் தீர்த்துக் கொள்ள உரையாடலே சிறந்த முறை என்று கருதிப் பேச முற்பட்டு, "மதுரையின் நெடுஞ்சாலை நான் பார்த்த வரையில் நன்றாகத்தானே இருந்தது?" என்றான்.

"மதுரையின் பெருஞ்சாலையில் பழுதிருந்தால் மன்னர் வெகுண்டெழுவார்" என்றாள் இமயவல்லி.

"அப்படியானால் இது மதுரையின் நேர் சாலை யல்லவா?" என்று வினவினான் இளமாறன்.

"அல்ல."

"இந்தச் சாலை எந்த ஊருக்குச் செல்கிறது?"

இளமாறனின் இந்தக் கேள்விக்கு அவள் நேரடியாகப் பதில் சொல்லவில்லை. "சேரநாடு நோக்கிச் செல்கிறது" என்றாள் அவள்.

அந்தப் பதில் அவனுக்குப் பெரும் வியப்பை அளித்தது. 'சேரநாட்டுப் புறம் செல்ல வேண்டுமானால் வைகையின் இருபெரும் மூங்கிற் பாலங்களில் ஒன்றையாவது கடந்திருக்க வேண்டும். அப்படிக் கடப்பதானால் அங்குள்ள பெரும் காவலைத் தாண்ட வேண்டும். வீரர்கள் கண்டிப்பாய் மடக்கிச் சோதனை செய்திருப்பார்களே?' என நினைத்த இளமாறன் கேட்டான், "பெருஞ்சாலை இல்லாவிட்டாலும் வைகையை எப்படியும் தாண்டித்தானே ஆகவேண்டும்?" என்று.

"ஆம்"– ஒற்றைச் சொல் பதிலையே இமயவல்லி சொன்னாள்.

"நாம் தாண்டிவிட்டோமா?"

"இல்லை."

"எப்படித் தாண்ட முடியும்?"

"தாண்டுவதில் கஷ்டம் என்ன இருக்கிறது?"

"பாலங்களில் காவல் பலமாயிற்றே?"

"அது பெரும் பாலங்களில்!"

"வேறு சில பாலமும் இருக்கிறதா?"

"இருக்கிறது."

"எங்கே?"

"சிறிது வடக்கே தள்ளி."

"சிறிதென்றால்?"

"கால்காத தூரம் தாண்டியதும்."

"வைகைக்குப் பல பாலங்கள் இருக்கின்றனவா?"

"பத்து பாலங்களுக்கு மேல் இருக்கின்றன."

"அந்தப் பத்திலும் காவல் உண்டா?"

"உண்டு."

"நீங்கள் எதிர்பார்க்கும் இந்தச் சிறு பாலத்தில்...?"

"உண்டு... அதிகமில்லை."

இதற்கு மேல் மீண்டும் யோசனையில் ஆழ்ந்தான் இளமாறன். மூடுதேர் நேர் சாலையில் மதுரையைத் தாண்டாமல் அதிகமாகப் படைப்பகுதி உபயோகப்படுத்தாத கிளை வழியாகச் சென்று கால்காதத் தூரத்துக்குப் பிறகு நதியைக் கடக்க முயலுகிறதென்று உணர்ந்தானானாலும், அந்தப் பகுதியிலும் காவலிருப்பதால் எப்படி இந்தத் தேர் அதைக் கடந்து போக முடியும் என்று நினைத்துப் பார்த்து ஏதும் புரியாமல் விழித்துக்கொண்டே உட்கார்ந்திருந்தான்.

அவன் எண்ணங்களை இமயவல்லி புரிந்துகொண்டிருக்க வேண்டும். அவளே விளக்கத் தொடங்கி, "இந்த வண்டியை மதுரையில் பெருஞ்சாலையிலுள்ள பெரும் மூங்கிற் பாலக் காவலர்கூட தடுக்கமாட்டார்கள் வீரரே! ஆகவே அஞ்சாதீர்கள்" என்றாள்.

இளமாறனுக்கு அவள் விளக்கம் எதையும் விளக்காததால் கேட்டான்: "ஏன்? இந்த வண்டி ஏதாவது மந்திரம் போட்டுவிடுமோ?" என்று.

"ஆம்."

"என்ன?"

"இது மந்திர வண்டிதான். இதனருகே யாருமே வர மாட்டார்கள்."

"ஏன்?"

"வந்தால் தண்டிக்கப்படுவார்கள்."

"ஏன் தண்டிக்கப்பட வேண்டும்?"

"அதுதான் சொன்னேனே, இது மந்திர வண்டியென்று."

"நீங்கள் சொல்வது பெரும் மூடுமந்திரமாயிருக்கிறது."

"இது மூடுதேரல்லவா? அதுதான் மூடுமந்திரமாயிருக் கிறது." இதைச் சொன்ன இமயவல்லி தன் அழகிய வாயைத் திறந்து கலகலவென நகைத்தாள்.

அவள் நகைப்பதன் காரணத்தை அறியாத இளமாறன் மெள்ள கோபத்தின் வசப்பட்டான். "இதில் நகைப்பதற்கு என்ன இருக்கிறது?" என்று அந்தக் கோபத்துடன் வினவவும் செய்தான்.

அவள் மெள்ள மெள்ளப் பேசினாள். குரல் குழையக் குழையப் பேசினாள். அந்தக் குரலே இன்பமாயிருந்தது. அவள் இதழ்களை விரித்துச் சொற்களை உதிர்த்தபோது அவள் வழவழத்த கன்னங்களில் குழி பெரிதாக விழுந்து அவள் அழகை ஆயிரம் மடங்கு அதிகப்படுத்தியது. அந்த அழகை அவன் விழுங்கி விடுவதைப்போல் பார்ப்பதைக் கடைக்கண்ணால் கண்டாலும் காணாதவள்போல் நடித்த அவள், "வீரரே! சொன்னால் தவறாக நினைத்துக்கொள்ள மாட்டீர்களே!" என்று துவங்கினாள் மெள்ள.

"சொல் பெண்ணே!" என்றான் இளமாறன் அவள் அழகில் பூர்ணமாக லயித்து.

"உங்கள் பார்வை..." என்று இழுத்தாள் அவள்.

"என் பார்வையா! அதற்கென்ன?" என்று வினவினான் அவன் சந்தேகத்துடன்.

"இந்த இரவின் ஆரம்பத்திலிருந்ததுபோல் இல்லை" என்று கூறினாள் இமயவல்லி.

"இப்பொழுது எப்படி இருக்கிறது?"

"சற்று மங்கியிருக்கிறது."

"இமயவல்லி!" கோபத்துடன் எழுந்தது இளமாறன் சொல்.

"கோபிக்காதீர்கள். நீங்கள் வந்தபோது, அதாவது நான் கதவைத் திறந்தபோது..." என்ற இமயவல்லி சற்றுத் தயங்கினாள்.

"திறந்தபோது..."

"உங்கள் பார்வை...!"

"உம்."

"கூர்மையாயிருந்தது..."

"என்ன சொன்னாய்?"

"ஆராய்ச்சி செய்யும் சக்தியுடனிருந்தது."

"அப்படியா?"

"ஆம்."

"அது உனக்குத் தெரிந்ததாக்கும்?"

"வேறு யாருக்குத் தெரியும்? நான்தானே கதவைத் திறந்தேன்."

"அந்தப் பார்வைக்கு இப்பொழுதென்ன பழுது வந்துவிட்டது?"

"அதுதான் எனக்கும் தெரியவில்லை. ஆனால் பழுது வந்துவிட்டது என்பதென்னவோ உண்மை."

"அதெப்படித் தெரிகிறது உனக்கு?"

"இந்த வண்டியை நீங்கள் சரியாகப் பார்க்காததி லிருந்து."

இளமாறன் சற்று யோசித்துவிட்டுக் கேட்டான்: "நான் பார்க்கவில்லை என்பது உனக்கு எப்படித் தெரியும்?" என்று.

இமயவல்லி தயக்கமில்லாமல் பதில் சொன்னாள்: "இந்த வண்டியைக் காவலர் ஏன் நிறுத்தமாட்டார்கள் என்று கேட்பதிலிருந்து தெரிகிறது" என்று.

"எப்படித் தெரிகிறது?" சீற்றத்துடன் கேட்டான் சேர நாட்டு வாலிபன்.

இமயவல்லியின் பதில் தெளிவாகவும் உறுதியுடனும் வந்தது. "வீரரே! இந்த வண்டியை மட்டும் நீர் உற்றுப் பார்த்திருந்தால் இது பாண்டிய அரண்மனையின் அந்தப்புர மகளிர் செல்லும் வண்டி என்பதை உணர்ந்துகொண் டிருப்பீர்கள். இதன் புரவிகளையும் மூடிவிடப்பட்ட சீலை களையும் நீங்கள் கண்டீர்களே தவிர, இதன் சக்கரத்தி லிருக்கும் பாண்டிய ராஜ சின்னத்தை நீங்கள் கவனிக்க வில்லை. இந்த வண்டியை யாரும் தடுக்க முடியாது வீரரே! தடுத்தவர்களுக்கு மரண தண்டனை விதிப்பது பாண்டிய வம்ச பரம்பரை வழக்கம். இப்பொழுது புரிகிறதா இதை ஏன் மந்திரத் தேர் என்று சொன்னேன் என்பது?" என்றாள் இமயவல்லி.

பிரமித்து ஆசனத்தில் சாய்ந்தான் இளமாறன். இமய வல்லியின் முறைகளும் வழிகளும் மேலும் மர்மத்தை அதிகப்

படுத்துவதை உணர்ந்தான். ஆகவே கேட்டான், "இந்த வண்டி உனக்கு ஏது?" என்று.

"மன்னர் கொட்டடியில் இருந்து தருவித்தோம்" என்றாள் இமயவல்லி.

"மன்னர் கொட்டடியிலிருந்தா?"— இளமாறன் வியப்பின் எல்லையை எய்தினான்.

"ஆம்" என்றாள் இமயவல்லி சர்வசகஜமாக.

"மன்னர் இதை அனுமதித்தாரா?"

"இந்த வண்டியைக் கொணர்ந்தது மன்னருக்குத் தெரியாது."

"தெரியாமல் எப்படி அரண்மனைக் கொட்டடியி லிருந்து வண்டியைக் கொணர முடியும்?"

"புலவர் கட்டளையிட்டார்!"

"புலவர் என்ன அரசரா?"

"அரசரால் மதிக்கப்பட்டவர். அவர் கட்டளை எதையும் தன் கட்டளைபோல் பாவிக்க வேண்டுமென்பது பாண்டியன் நெடுஞ்செழியன் ஆக்ஞை."

"அந்தப்புர மகளிர் பயண வண்டியைப் புலவர் எடுத்துச் சென்றதை மன்னன் அறிந்தால்...?"

"ஆபத்துதான்."

"அந்தப்புர வண்டி எதற்கு என்று கேள்வி எழாதா?"

"எழாது. புலவர் செய்கை எதையும் மன்னர் பகிரங்கமாக விசாரிக்க மாட்டார்."

"வேறென்ன செய்வார்?"

"இந்த வண்டியை மடக்க வீரர்களை அனுப்புவார்."

இளமாறனுக்கு விஷயம் தெளிவாகப் புரிந்தது. "அப்படியானால் இந்த மூடுதேர் திருட்டுத்தனமாக அரசன் அளித்த சலுகையைத் துர்விநியோகப்படுத்தி எடுத்துச் செல்லப்படுகிறதா?" என்று கேட்டான்.

"ஆம்" என்றாள் இமயவல்லி, அந்தத் தேரைத் திருடியது சரியான காரியம்போல.

"அகப்பட்டுக் கொண்டால்?"

"ஆபத்துதானென்று முன்னமே சொன்னேனே!"

"அகப்பட்டுக் கொள்ள..." என்று இளமாறன் மெள்ள புருவங்களைக் கேள்வி கேட்கும் பாவனையில் உயர்த்தினான்.

"மாட்டோம்" என்றாள் இமயவல்லி.

அவள் சொல் அடுத்த விநாடி பொய்யாகியது. மூடுதேரை ஓட்டியவன் திரையை சற்றுத் தள்ளி உள்ளே எட்டிப் பார்த்து, "அவர்கள் வந்து விட்டார்கள்" என்றான்.

இமயவல்லி ஆசனத்தில் எழுந்து உட்கார்ந்து, "உன் தேர் பறக்கட்டும்" என்று கட்டளையிட்டாள். மீண்டும் திரை விழுந்தது. சுளீர் சுளீர் என்ற சவுக்கடிகளின் ஒலி திரும்பத் திரும்பத் திரைக்குள்ளும் வந்தது.

குலுங்கி, ஆடி அதிர்ந்து தேர் பறந்தது. அத்துடன் பின்னால் பல புரவிகள் வரும் குளம்படி ஒலிகளும் கேட்டன. இளமாறன் நிலைமையைப் புரிந்துகொண்டான். நெடுஞ்செழியன் வீரர்கள் வெகு சீக்கிரம் அந்த வண்டியைப் பிடித்துவிடுவார்கள் என்பதில் சந்தேகமில்லை அவனுக்கு. அப்படி ஆபத்து நெருங்கியது ஒரு விஷயத்துக்கு நன்மையாகவும் முடிந்தது. அவன் புத்தி குழப்பம் மறைந்தது.

போரிடும் கட்டம் நெருங்குவதிலிருந்த ஆவல் அவன் உணர்ச்சிகளுக்கு முறுக்கேற்றியது. தனது வாளை உருவிப் பிடித்துக்கொண்டு போருக்குச் சித்தமும் ஆனான் அவன்.

அடுத்த அரை நாழிகைக்குள் வீரர்கள் அந்த ரதத்தைச் சூழ்ந்துகொண்டார்கள். "இருவரும் இறங்குங்கள் கீழே" என்று பெருங்குரல் ஒன்று அதட்டியது வெளியிலிருந்து. திரை மறைவிலிருந்து இளமாறன் வாள் மட்டும் வெளியே நீண்டது. அதை அணுக முயன்ற ஒரு வீரன் அலறி மண்ணில் விழுந்தான். ஏதோ மந்திர வித்தைபோல் நிகழ்ந்து விட்ட அந்த வீரச்செயலை நினைத்து மற்ற வீரர்கள் வியப்பெய்தி பிரமித்த அவகாசத்தை உபயோகப்படுத்திக் கொண்டு மூடுதேரிலிருந்து கீழே குதித்த இளமாறன் வாள் அடுத்த விநாடி பயங்கரமாகச் சுழன்றது. சுமார் எட்டு வீரர்கள் அவனைச் சூழ்ந்துகொண்டார்கள். சாலையில் துவங்கிய அந்த விநோதச் சண்டையை உள்ளிருந்து பார்த்த இமயவல்லி வியப்பை எய்தினாளா? அல்லது பயத்தை அடைந்தாளா? அவளுக்கே புரியவில்லை.

# 11

# இமயவல்லி சீறினாள்

மூடுதேரைத் துரத்திக்கொண்டு பாண்டியன் நெடுஞ் செழியன் படைவீரர்கள் வருகிறார்களென்றதைக் கேட்டதும் அதைப்பற்றிச் சிறிதும் பயமோ கவலையோ காட்டாமல் இளமாறன் தன் இடைக் கச்சையிலிருந்து வாளை உருவிப்

பிடித்துக்கொண்டு சண்டைக்குச் சன்னத்தமாகி விட்டதைக் கண்ட இமயவல்லி பெரும் ஆச்சரியத்துக்கே உள்ளானாள். 'எத்தனை வீரர்கள் வருகிறார்கள், அவர்களைத் தன்னந் தனியாகச் சமாளிக்க முடியுமா?' என்பதை எல்லாம் எண்ணிப் பார்க்காமல் சண்டை வருகிறதென்றவுடன் அதற்குச் சன்னத்தமாகிவிட்ட அந்த வாலிப வீரனின் உறுதியைக் கண்டதும் சண்டையென்பது அவனுக்குச் சர்வ சகஜமென்பதையும் அதற்காகத் தனிப் பிரயாசை எதையும் எடுத்துக்கொள்ளும் பழக்கம் அவனிடம் கிடையாதென்ப தையும் புரிந்துகொண்ட இமயவல்லி, தாங்கள் மேற் கொண்டுள்ள அபாயப் பணிக்குச் சரியானதொரு வீரனையே வரவழைத்திருக்கிறார் புலவர் என்பதையும் உணர்ந்துகொண்டாள். தவிர, இந்த வாலிபன் பண்பின் சிகரமாக இருக்கவேண்டுமென்பதையும் அவள் சந்தேகமறத் தெரிந்துகொண்டாள். 'இதற்கு முன்பு வந்த வீரர்களை இப்பணிக்கு அனுப்பியபோதெல்லாம் தன்னுடன் துணையாக வேறு நான்கைந்து வீரர்களை அனுப்பி வந்த புலவர் இந்த முறை மட்டும் ஏன் இந்த வாலிபனுடன் என்னை ஏன் இருளில் அதுவும் ஒரு மூடுதேரில் தனிமையில் அனுப்பத் துணிந்தார்?' என்று தன்னைத்தானே கேட்டுக்கொண்ட இமயவல்லி, அந்த வீரனின் பண்பு அத்தனை உயர்ந்ததாகவும் மாசுமறு இல்லாததாகவும் இருக்க வேண்டுமென்பதையும் புரிந்துகொண்டாள். அதுவரை பணிக்கு வந்த வீரர்களுக்கும் இளமாறனுக்கும் அதிக வித்தியாசமிருந்ததையும் அவள் அறிந்தாள். 'இதுவரை வந்த வீரர்களும் நிகரற்ற வீரர்களானாலும் பின்னால் காவலர் துரத்தியதும் பதறுவார்கள். வண்டியை வேகமாக விடச் சொல்வார்கள். பிறகு போருக்குத் தாங்கள் மட்டுமின்றி, மற்ற வீரர்களையும் சன்னப்படுத்துவார்கள். இவரோ எதைப் பற்றியும் லட்சியம் செய்யாமல் மூடுதேரைத் துரிதப்படுத்தக்

கூடச் சொல்லாமல் வாளை உருவிக்கொண்டு ஆசனத்தில் சாய்ந்து விட்டாரே! என்ன துணிவு இவருக்கு?' என்று பெரிதும் இளமாறன் போக்கை இமயவல்லி ஆராய்ந்து கொண்டிருந்த சமயத்தில் வண்டி பாண்டிய வீரர்களால் சூழப்பட்டு நிறுத்தப்பட்டது. வண்டி நின்றதைத் தொடர்ந்து கீழே இறங்கச் சொல்லி ஆணை வந்தபோது, இளமாறன் அதைச் சிறிதும் லட்சியம் செய்யாமல் தன் வாளை மட்டும் வெளியே நீட்டியதைக் கண்ட இமயவல்லி, 'எந்தக் குறியை நாடி வெளியே நீட்டுகிறார் வாளை?' என்று தன்னைத் தானே கேட்டுக்கொண்ட சமயத்தில் திடீரென வெளியே ஒரு வீரன் அலறும் சத்தம் அவள் செவிகளில் விழுந்ததும், அந்தச் சாகசச் செயலுக்குக் காரணம் கற்பிக்க முடிய வில்லை அவளால். 'மூடியிருந்த திரைக்கு அப்புறம் நின்றவனை எப்படி இவர் பார்க்க முடிந்தது? எப்படிக் குறிவைத்து வாளைச் செலுத்த முடிந்தது?' என்று தன்னைத்தானே கேட்டுக்கொண்டு விடை காணாமல் தவித்தாள்.

அந்தத் திடீர் நிகழ்ச்சி அவளுக்குத்தான் வியப்பா யிருந்ததேயொழிய, இளமாறனுக்கு அது ஒரு பெரிய விஷயமாகத் தெரியவில்லை. காவல் வீரர்கள் தொடரு கிறார்கள் என்று அறிந்ததுமே அவன் உணர்ச்சிகள் மேலுக்கு அடங்கியிருந்தாலும் உள்ளூரக் கிளம்பி ஊசிமுனையில் நின்றுகொண்டிருந்தன. அப்படி நின்றதன் விளைவாக எதிரிப் புரவிகளின் குளம்படிச் சத்தங்கள் விளக்கமாக அவன் காதில் விழுந்தன. அந்த ஒலிகளிலிருந்து சுமார் எட்டுப் பேரிலிருந்து பத்துப் பேர் வரை வண்டியைத் துரத்தி வருகிறார்கள் என்பதைப் புரிந்துகொண்டான். திடீரென வண்டியை ஓர் ஓரமாக நிறுத்தித் தான் மட்டும் எதிரிகளைச் சமாளிப்பதால் திடீரெனத் தான் நாற்புறமும் சூழப்படலா

மென்பதை உணர்ந்துகொண்டானாகையால் வண்டியைத் தனக்குப் பின்னால் சார்பிடமாகக் கொண்டே போரிடத் தீர்மானித்தான். அந்தத் தீர்மானத்துடன் உட்கார்ந்திருந்த இளமாறன் வண்டி நின்றதும் புரவி வீரன் புரவியிலிருந்து கீழே குதித்ததையும் வண்டியை நோக்கி வருவதையும் காலடிச் சத்தத்தினால் உணர்ந்தான். அந்தக் காலடிச் சத்தம் சட்டென்று நின்றதும் எதிரி வீரன் வண்டியை அணுகி விட்டான் என்பதையும் திரைக்கு வெகு அருகில் நிற்கிறா னென்பதையும் அடுத்த விநாடி திரை விலக்கப்படலாம் என்பதையும் ஊகித்துக்கொண்ட இளமாறன், திரைச் சீலையை திடீரென விலக்கி கத்தியைப் பாய்ச்சியதால் எதிரி வீரன் திடீரென அலறிப் பின்னடைந்தான். அந்த அலறலைக் கேட்டு மற்ற வீரர்கள் பிரமித்த விநாடி நேரத்தில் இளமாறன் குருதி தோய்ந்த கத்தியைப் பின்னுக்கிழுத்து வெளியே குதித்து வண்டியின் மீது சாய்ந்து போருக்குத் தயாராக நின்றான்.

அப்படிச் சாய்ந்து நின்று அணுகிவந்த வீரர் கூட்டத்தைத் தன் நீண்ட வாளால் சமாளித்துக்கொண்டே எதிரிகளின் எண்ணிக்கையைக் கவனித்தான். வீரர்கள் மொத்தம் பத்துப்பேரிருந்தாலும் அவர்களில் இருவர் பந்தம் பிடித்து நின்றதாலும், மீதி எட்டுப். பேரிலும் ஒருவன் தரையில் சாய்ந்து கிடந்ததாலும் தான் போரிட வேண்டியவர் ஏழு பேருடனே என்பதைத் தீர்மானித்துக் கொண்ட இளமாறன் வாளை வெகு வேகமாகச் சுழற்றினான். வாளைச் சுழற்றிக்கொண்டிருந்த நேரத்தில் வந்த வீரர்களும் அற்ப சொற்பமானவர்கள் அல்லர் என்பதையும் புரிந்துகொண்டான் இளமாறன்.

வந்த வீரர்கள் மூவர் மூவராக அவனை அணுகி வந்தார்கள். மற்ற மூவர் அவர்களுக்குப் பின்னால்

நின்றார்கள். இந்த அணிவகுப்பின் காரணத்தை வெகு சீக்கிரம் அறிந்துகொண்டான் இளமாறன். இரண்டு நிமிடங்கள் போராடிய பிறகு இருவர் வாள்களைச் சுழற்றிக் காற்றில் பறக்கவிட்ட இளமாறன், அந்த இருவர் வாளை நோக்கி ஓடியதும் பின்னாலிருந்த இருவர் அந்த இருவர் இடத்துக்கு நகர்ந்து விட்டதைக் கண்டான். அதுமட்டுமல்ல, வாளை எடுத்துக்கொண்ட இருவர் போரிட்ட இருவருக்குப் பின்னால் போர் சன்னத்துடன் நின்றுகொண்டார்கள்.

இப்படிப் போர் நடந்தால் விடியும் மட்டும் போர் நடக்கும் என்பதை அறிந்த இளமாறன் திடீரெனப் போர் முறையை மாற்றிக்கொண்டான். அநாவசியமான கொலையில் என்றுமே நம்பிக்கை இல்லாததால் வீரர்களை நிராயுதபாணிகளாக்கி ஓட வைத்து விடலாமென நினைத்த அந்தச் சேரநாட்டு வீரன், வந்த வீரர்களின் போர் முறை நீடித்தால் அவர்கள் ஓட வேண்டிய அவசியமே இருக்கா தென்று தீர்மானித்தான்.

ஆகவே கத்திகளைச் சுழற்றி எறியும் முறையை மாற்றி வாளை நீட்டி நீட்டி நெடுந்தாக்கலில் முனைந்தான்.

முதல் வீரர் மூவர் கைகளிலும் திடீர் திடீரென அவன் வாள் புகுந்து விட்டதால் அவர்கள் வாட்களைக் கீழே எறிந்து பின்னால் நகர்ந்தனர்.

அடுத்த மூவர் அந்த வாலிப வீரனைத் தாக்க முற்பட்டனர். அவர்கள் வாட்களைத் தனது வாளால் தடுத்துக்கொண்டே பந்தத்தின் வெளிச்சத்தில் நாலா பக்கமும் பார்த்த இளமாறனுக்குத் திடீரென ஒரு யோசனை தோன்றியது.

முதன் முதலில் தன் கத்தியால் காயப்பட்டவன் வண்டிச் சீலைக்கருகில் தரையில் விழுந்து கிடந்ததைக் கண்டதும்

இளமாறன் பெரும் வியப்படைந்தான். அந்த வியப்பின் விளைவாகத் திடீரெனப் போர் முறையை மாற்றி வாளை பலமாகப் பாய்ச்சி மற்றும் இரண்டு வீரர்களைக் காயப் படுத்தினான்.

அடுத்த விநாடி திடீரெனத் துள்ளிக் குதித்துக் கீழே விழுந்து கிடந்த வீரன் மார்பு மீது காலை வைத்துக்கொண்டு இரைந்து கூவினான்: "நிறுத்துங்கள் தாக்குதலை! இல்லையேல் பாண்டிய நாடு அதன் படைத்தலைவரை இழக்கும்" என்று.

அந்தக் கூச்சலைக் கேட்டு வீரர்கள் மந்திரத்தால் தள்ளப் பட்டவர்களைப்போல் பின்னடைந்தார்கள். அவர்கள் பல அடிகள் பின்வாங்கும் வரையில் காலை பாண்டிய சேனாதிபதி மார்புமீதும், வாளை அவன் கழுத்துக்கு நேரும் வைத்திருந்த இளமாறனின் சொற்கள் ஆணி அறைந்தது போல் தொடர்ந்தன: "வீரர்களே! நீங்கள் யாரென்பது எனக்குத் தெரியும். இதோ மண்ணில் இரத்தமிழந்து மூர்ச்சையுற்றிருக்கும் பாண்டிய தளபதி மருதரை நான் இதே இரவில் சந்தித்திருக்கிறேன். இந்த மகா வீரரைக் கொல்ல எனக்கு இஷ்டமில்லை. என் வாள் இவர் இடையில் பாய்ந்திருக்கிறது. இவருக்குச் சீக்கிரம் சிகிச்சை தேவை. நீங்கள் பழையபடி திரும்பிச் சென்றால் இவருக்குச் சிகிச்சை செய்து அனுப்புகிறேன். இல்லை மீண்டும் போரென்றால் இந்த வாள் இவர் ஊட்டியில் பாய்ந்துவிடும். என்ன சொல்கிறீர்கள்?" என்று வினவினான் இளமாறன், ஒளிவிட்ட தன் ஈட்டிக் கண்களால் அவர்களை வளைத்து நோக்கி.

வீரர்கள் சில விநாடிகள் கலந்து யோசித்தனர். பிறகு அவர்களில் ஒருவன் சொன்னான், "சரி செல்கிறோம், அவரை எடுத்துச் செல்கிறோம்" என்று.

இளமாறன் பதில் திடமாக வந்தது. "இப்பொழுது அவர் சிகிச்சை இல்லாமல் பத்து அடிகூடப் பயணம் செய்ய முடியாது. எத்தனை குருதி மண்ணை நனைத்திருக்கிறது பாருங்கள்" என்றான் அவன்.

முதலில் பேசிய வீரன், "இப்பொழுது எங்களை என்னதான் செய்யச் சொல்கிறீர்கள்?" என்று வினவினான்.

"நான் இவர் காயத்தைக் கட்டி குருதியை நிறுத்தும் வரை இந்த வண்டியிலிருந்து நீங்கள் அனைவரும் இருபதடி தள்ளி நிற்க வேண்டும்" என்றான் இளமாறன்.

அதற்கு அவர்கள் உடன்படவே திரைச்சீலையை அகற்றி இமயவல்லியை வெளியே வரச்சொல்லி வீரர்களின் கைகளிலிருந்த பந்தங்களில் ஒன்றை வாங்கி அவள் கையில் கொடுத்துவிட்டு, "வீரர்களே! உங்கள் கத்திகளைக் கீழே எறியுங்கள், புரவியிலிருப்பவர்கள் இறங்குங்கள்" என்று உத்தரவிட்டான்.

அதுவரை வண்டியை அணுகிப் போரிடாமல் புரவியில் அமர்ந்திருந்தவர்கள் அவன் சொற்படி கீழே இறங்க அத்தனை வீரரும் வாட்களைக் கீழே எறிந்தார்கள். அந்தக் கத்திகளை எல்லாம் பொறுக்கி எடுத்து மூடுதேரில் கால் வைக்குமிடத்தில் சேர்த்துக்கொண்ட இளமாறன் அந்த வீரர்களனைவரையும் இருபதடி பின்னடையச் சொல்லி விட்டு இமயவல்லி பந்தம் காட்ட கீழே உட்கார்ந்து மருதன் காயத்தைப் பரிசோதித்தான். வாள் மருதன் விலாவில் ஆழமாகப் பாய்ந்திருந்தது. திடீரென வாள் பாய்ச்சப் பட்டதால் ஏற்பட்ட அதிர்ச்சியில் ராட்சதன் போலிருந்த மருதன் மயக்கமுற்றிருந்தான். காயத்தைப் பரிசோதித்த இளமாறன், "இமயவல்லி! வாள் ஆழமாகத்தான் பாய்ந்திருக்

கிறது. இதில் துணியைத் திணித்துத்தான் இரத்தத்தை நிறுத்த வேண்டும்" என்று கூறிக்கொண்டே தனது மேலங்கியைக் கழற்றிக் கிழித்துச் சிறிதளவு சுருட்டித் திணித்துப் பிறகு காயத்தின் மேற்பகுதியில் அங்கியின் மீதியை மடித்து வைத்து அழுத்தினான். அங்கியை மடித்துவிட்டதால் காயத்தைக் கட்ட எதுவுமில்லாமல் போகவே தனது கண்முன் தொங்கிக்கொண்டிருந்த இமயவல்லியின் முந்தானையைத் திடீரென நீட்டத்தில் கிழித்து அந்தக் காயத்தை அழுத்தி இடையைச் சுற்றிக் கட்டினான். "போதும் இது! இனி ஒரு ஜாமத்திற்கு அபாயமில்லை" எனக் கூறிய இளமாறன், தூரமிருந்த வீரர்கள் இருவரை அழைத்து மருதனைத் தூக்கி மூடுதேரின் ஆசனத்தில் கிடத்தும்படி உத்தரவிட்டான்.

இதற்கு ஆட்சேபணை எழுந்தது வீரர்களிடமிருந்து. "நாங்கள் தலைவரை எடுத்துச் செல்கிறோம்" என்றான் வீரன் ஒருவன்.

"எப்படி எடுத்துச் செல்வீர்கள்?" இளமாறன் கேள்வியில் கோபத்தின் ஒலி இருந்தது.

"புரவியில்." வீரன் பதிலும் திடமாக இருந்தது.

"புரவியில் கொண்டு போனால் மாளிகையில் இறக்கும் போது படைத்தலைவன் பிணத்தைத்தான் இறக்க முடியும்."

"ஏன்?"

"குதிரையின் அசைவில் ரணத்தின் வாய் விரிந்து இரத்தம் மீண்டும் கசியும்."

வீரர்கள் சற்று யோசித்தார்கள். அவர்கள் யோசனையைப் பயன்படுத்திக்கொண்ட இளமாறன் கூறினான்:

"வீணாக யோசிக்க வேண்டாம். பாண்டிய நாட்டுப் படைத் தலைவரின் நன்மையை முன்னிட்டே சொல்லுகிறேன். என்னிடம் இவரை ஒப்படைத்துச் செல்லுங்கள். என் வாள் மீது ஆணையாகச் சொல்லுகிறேன் இவருக்கு எந்தத் தீங்கும் நேரிடாது" என்று.

முதலில் பேசிய வீரன் மீண்டும் யோசித்துவிட்டுக் கேட்டான்: "படைத்தலைவரை மீண்டும் எங்கு சந்திப்பது?" என்று.

இதற்குப் பதில் சொல்ல இளமாறனுக்குத் தெரியாத தால் இமயவல்லியை நோக்கினான் அவன். இமயவல்லி சற்று யோசித்துவிட்டு, "நீங்கள் போகும் வழியில் சித்தர் மடத்தில் இவரை ஒப்படைத்துவிட்டுச் செல்லலாமா?" என்று வினவினாள் வீரர்களை நோக்கி.

சித்தர் மடம் என்ற பெயரைக் கேட்டதும் ஒருமுறை தலைவணங்கினார்கள் வீரர்கள். பிறகு இளமாறனை நோக்கி, "மீண்டும் அரண்மனை செல்கிறோம். நாளை சித்தர் மடத்தில் படைத்தலைவரைச் சந்திக்கிறோம். அவர் அங்கில்லையேல்..." என்று கூறி மேலே ஏதும் பேசாமல் விட்டான்.

இளமாறன் இதழ்களில் புன்முறுவல் தவழ்ந்தது. "மிரட்டல் வேண்டாம் வீரனே! இளமாறன் வார்த்தை தவறுபவனல்லன். நான் மட்டும் இஷ்டப்பட்டிருந்தால் உங்கள் படைத்தலைவனை முன்பே கொன்றிருக்கலாம். பகைவனுக்கும் அருள் புரியும் பண்பு எனக்கிருக்கிறது. அஞ்சாதீர்கள்!" என்றான் இளமாறன். இந்த உறுதியாலும், அவன் காட்டிய காரணத்திலிருந்த உண்மையை உணர்ந்த தாலும், வீரர்கள் தங்கள் படைத்தலைவரை எடுத்து மூடுதேரின் ஆசனத்தில் நெடுக்கப் படுக்க வைத்தார்கள்.

மூடுதேரில் இருவர் உட்காரவே வசதியிருந்ததால் கால்களை முடக்கியே மருதனைப் படுக்க வைக்க வேண்டியிருந்தது. அப்படிப் படுக்க வைத்த பிறகு வீரர்கள் தலைநகரை நோக்கிப் பயணப்படவே இளமாறனும் இமயவல்லியும் பழையபடி மூடுதேரில் ஏறி மருதன் படுத்துக் கிடந்த ஆசனத்தின் முகப்பில் உட்கார வண்டி நகர்ந்தது.

வண்டியை ஓட்டு முன்பாகக் கூடியவரையில் நிதானமாக வண்டியைச் செலுத்தும்படி சாரதிக்கு உத்தர விட்டான் இளமாறன். அப்படியே மெல்லச் சென்றான் சாரதி. அந்த மூடுதேரின் ஆசனத்தின் முகப்பில் உட்கார்ந் திருந்த அந்த இருவரும் பல விநாடிகள் பேசவே இல்லை. கடைசியில் இமயவல்லி பேச்சைத் துவங்கி, "பாண்டியத் தளபதிக்கு நினைவு வர எத்தனை நேரம் பிடிக்கும்?" என்று வினவினாள்.

"முதலில் நான் போட்டிருக்கும் கட்டை அகற்றி, மருந்து வைத்துக் கட்டினால் கொஞ்ச நஞ்சமுள்ள குருதிக் கசிவும் நின்றுவிடும். பிறகு கண்களை நீரால் துடைத்துப் பால் சிறிது கொடுக்க வேண்டும். அப்பொழுதுதான் கண் திறப்பார்" என்றான் இளமாறன்.

"அத்தனை நேரம் ஆகுமா?" என்று வினவினாள் இமயவல்லி.

"ஆகும்!"

"அப்படியானால் சத்திரத்தில்தான் விழிப்பார்."

"சத்திரமா?"

"ஆம், அங்கு போகத்தான் புலவர் உத்தரவு."

"சித்தர் மடமென்று ஏதோ சொன்னாயே!"

"சொன்னேன்."

"அங்கு போகவில்லையோ?"

"இல்லை."

"அப்படியானால் நான் வீரர்களுக்குக் கொடுத்த வாக்கு?"

"காப்பாற்றப்படும்."

"எப்படி?"

"நீங்கள் குறிப்பிட்ட நேரத்தில் படைத்தலைவர் அங்கிருப்பார்."

"எப்படியிருக்க முடியும்? நாம்தான் அங்கு போக வில்லையே?"

"இவரை அங்கு அனுப்பிவிட ஏற்பாடு செய்கிறேன். வீரர்களுக்கு வேண்டியது தளபதியே தவிர நீங்களோ நானோ அல்ல."

இதைத் திட்டமாகக் கூறினாள் இமயவல்லி. அவள் பேசிய தோரணையில் இருந்து எந்தக் காரணத்தை முன்னிட்டும் அவள் சத்திரத்தின் மார்க்கத்தை விட்டுத் திரும்பமாட்டாள் என்பதைப் புரிந்துகொண்டான் இளமாறன். அதன் விளைவாக ஒரு சந்தேகமும் எழவே கேட்டான்: "இமயவல்லி! சத்திரமும், சித்தர் மடமும் அருகிலிருக்கின்றனவா?" என்று.

"ஆம்" என்றாள் இமயவல்லி.

"சித்தர் மடம் என்றதும் வீரர்கள் ஏன் தலையை வணங்கினார்கள்?"

இதை வெகு சாதாரணமாகத்தான் கேட்டான் இளமாறன். ஆனால் இதைக் கேட்ட இமயவல்லி அடியோடு

புது மங்கையாக மாறினாள். அவள் முகத்தில் குரோதம் குபீரென எழுந்தது. விழிகள் சீறின. "நிறுத்துங்கள் உங்கள் கேள்விகளை" என்ற சொற்களும் சுடச்சுட உதிர்ந்தன.

# 12

# மந்திரச் சொல்

சித்தர் மடம் என்றதும் வீரர்கள் ஏன் தலை வணங்கினார்கள் என்று கேட்டவுடன் இமயவல்லியின் கோபம் பீறிட்டெழுந்ததையும், 'நிறுத்துங்கள் உங்கள் கேள்விகளை' என்று அவள் சீறியதையும் கண்ட இளமாறனுக்கு அவள் சீற்றத்தின் காரணம் புரியவில்லையே தவிர, சித்தர் மடத்துக்கும் தாங்கள் உத்தேசித்துச் செல்லும் அலுவலுக்கும் நிரம்ப தொடர்பிருக்க வேண்டும் என்பதை மட்டும் திட்டவட்டமாகப் புரிந்துகொண்டான். இமயவல்லி தன்னைச் சீறி விழுந்துவிட்ட பிறகு தனக்குப் பக்கத்திலிருந்து எழுந்துவிட்டதைக் கண்ட இளமாறன், அவள் மேற்கொண்டு சம்பாஷணையையும் விரும்பவில்லை என்பதை உணர்ந்து கொண்டான். ஆகையால் அவனும் தன் கண்களை அவளிடமிருந்து நீக்கித் தனக்குப் பின்னால் கிடத்தப் பட்டிருந்த பாண்டிய சேனாதிபதியை நோக்கித் திருப்பினான். பாண்டிய சேனாதிபதியின் காயமிருந்த இடத்தைச் சிறிது அழுத்திப் பார்த்துப் பிறகு அவன் நாடியையும் பரிசோதித்த சேரநாட்டு வாலிபன், "பாதக மில்லை. பிரயாணத்தை நன்றாகவே தாங்குகிறார்" என்று இரைந்தே பேசினான்.

அந்தப் பேச்சு தன்னை உத்தேசித்துப் பேசப்பட்டது என்பதை அறிந்துகொண்டதனால் அத்தனை கோபத்திலும் சற்றுப் புன்முறுவல் கொண்டாள் இமயவல்லி. அத்துடன் எதிரே உட்கார்ந்திருந்த அந்த வீரனைக் கடைக்கண்ணால் பார்த்து அவன் இருந்த நிலைமையைக் கண்டதால் அந்தப் புன்முறுவல் சிரிப்பாக மாறும் நிலைக்கு வரவே, வாயைக் கையால் பொத்திக்கொள்ளவும் செய்தாள். அவளுக்குச் சிரிப்பு வந்த காரணத்தை அவன் நன்றாக அறிந்தே இருந்தான். தன் அங்கியில் முக்கால்வாசி கிழிக்கப்பட்டு, பாண்டிய சேனாதிபதியின் காயத்தை மறைக்கப் போய் விட்டதால் கால் அங்கி மட்டும் இடது தோளில் தொங்க இடுப்புக் கச்சம் தவிர மற்றபடி தனது உடல் திறந்து கிடந்ததால் தான் பார்வைக்கு விநோதமாயிருப்பதையும், அந்த விநோத சேவையே அவள் நகைப்புக்குக் காரணம் என்பதையும் புரிந்துகொண்டான். அந்த எண்ணத்துடன் எதிரே உட்கார்ந்திருந்த அழகியையும் அவன் கண்கள் அளவெடுத்தன.

மூடுதேருக்கு வெளிப்பக்கத்தில் செருகப்பட்டிருந்த பந்தத்தின் வெளிச்சம் உள்ளேயும் சிறிது அடித்ததால் இமயவல்லி இரவில் திடீரெனத் தோன்றிய அப்சர மங்கை போல் காட்சியளித்தாள். காற்றின் சலனத்தால் பட்டபட் டென்று மாறிமாறி உள்ளே வந்த பிரகாசம் அவ்வப் பொழுது அவள் கன்னத்தைத் தாக்கிச் சென்றதால் அவளைக் காட்டிக் காட்டி மறைப்பது போன்ற பிரமையே அளித்தது. நன்றாக வழவழத்துக் கவிழ்க்கப்பட்ட அரைமதி யென வளைந்து கிடந்த அந்தக் கன்னமும் வளையாமல் அடங்காமல் நிமிர்ந்து சீலையையும் திமிறிய மார்பகமும் அந்த ஒளியில் மாறிமாறித் திடும் திடுமெனத் தெரிந்ததால் சில விநாடிகள் நிலைகுலைந்தான் இளமாறன். அந்த

நிலைகுலைந்த சமயத்திலும் கிழிந்த உடையுடனிருப்பது தானல்லவென்பதையும் அவள் சீலை முந்தானைகூட கிழிந்து தொங்கிக்கொண்டிருந்ததையும் கண்டு அவனும் களுக்கென்று சிரித்தான்.

புன்முறுவல் கொண்டிருந்த இமயவல்லி அந்தப் புன்முறுவலை மறைத்து மீண்டும் கோபச் சாயையை முகத்தில் படரவிட்டுக்கொண்டு, "எதற்காகச் சிரிக்கிறீர்கள்?" என்று வினவினாள்.

"நீ எதற்காகச் சிரித்தாய் இமயவல்லி!" என்று பதிலுக்கு வினவினான் இளமாறன்.

அந்த இரவின் ஆரம்பத்தில் அவன் காட்டி வந்த மரியாதையும் 'நீங்கள், போங்கள்' என்ற சொற்களை அடியோடு கைவிட்டதையும் மிகவும் சொந்தத்துடன் பெயர் சொல்லி அழைப்பதையும் கண்ட அவள் மனத்தில் உணர்ச்சிகள் புரண்டன. அந்த உணர்ச்சிகளின் புரட்சி கோபத்தினால் ஏற்பட்டதா என்பதை ஆராய்ந்த அவளுக்கு விடை தெளிவாகக் கிடைக்கவில்லை. அவன் பேச்சு விளைவித்தது கோபமில்லை என்பதை மட்டும் தீவிர ஆராய்ச்சிக்குப்பின் அறிந்தாள். அதுமட்டுமல்ல, அப்படி அவன் மரியாதையின்றியும் பெயர் சொல்லி அழைத்ததில் தனக்கு ஓரளவு இன்பம்கூட இருந்ததை உணர்ந்தாள். அந்த இன்பம்கூட அவள் கோபத்தை மீண்டும் கிளறவே அவள் சொன்னாள்: "நான் சிரித்த காரணத்தை நீங்கள் கேட்க வேண்டிய அவசியமில்லை" என்று.

அர்த்தமற்ற அந்தப் பதில் அவன் சிரிப்பை உள்ளூர அதிகப்படுத்தியதானாலும் அதை வெளிக்குக் காட்டாமல் "நான் சிரித்த காரணத்தை மட்டும் நீங்கள் கேட்க

வேண்டியது அவசியம் போலிருக்கிறது" என்றான் மேலுக்கு சர்வசகஜமாக.

அந்தப் பதிலில் ஏளனமிருப்பதை அவள் விநாடி நேரத்தில் புரிந்துகொண்டாள். ஆகவே சொற்களில் சூடு பறக்க, "ஆம் அவசியந்தான்" என்றாள்.

"ஏன் அவசியமோ?" என்று வினவினான் அவன்.

"உங்கள் மேலங்கி..." என்று அவள் இழுத்தாள்.

"ஆம், அதற்கென்ன?"

"பெயருக்குத்தான் மேலே இருக்கிறது."

"ஆமாம்."

"முக்கால்வாசி கிழித்துக் கட்டியாகிவிட்டது படைத் தலைவர் காயத்தில்."

"ஆமாம்."

"என்ன ஆமாம்? நான் சொல்வது புரியவில்லையா உங்களுக்கு?"

"புரியவில்லையே."

"சிறிது மேலங்கி மட்டும் கிழிந்து தொங்க உடலைக் காட்டிக்கொண்டு உட்கார்ந்திருப்பது பண்பாடா? அதுவும் ஒரு..." மேலே பேச வார்த்தைகள் வரவில்லை அவளுக்கு. வெட்கம் ஆட்கொண்டது அவளை.

இளமாறன் வார்த்தையை முடித்தான், "அதுவும் ஒரு பெண் முன்பாக" என்று. பிறகு பதிலேதும் சொல்லாமல் அவளைக் கூர்ந்து நோக்கினான். தன் கையால் கிழித்த முந்தானை பட்டையாகவும் தாறுமாறாகவும் அவள் மார்பைத் தொட்டுக்கொண்டிருந்தது. இழுத்து இடுப்பில்

செருகக்கூடிய பாகத்தைத் தான் கிழித்துவிட்டதே அதற்குக் காரணமென்பதைப் புரிந்துகொண்ட இளமாறன், தனது அந்த அவசரச் செய்கையால் மார்பகத்தை இழுத்து மூட முடியாத அவள் எத்தனை அவஸ்தைப்படுகிறாள் என்பதைக் கவனித்தான். அந்த அவஸ்தைக்குத் தான் காரணமென்பதும் அவனுக்குத் தெரிந்திருந்தது. அந்த அவஸ்தையை அவள் படுவதில், அவள் படும் அவஸ்தைக்குத் தான் காரணமாயிருந்ததில் அவனுக்குப் பெரும் ஆனந்தமிருந்தது. அப்படி ஆனந்தப்படுவது தவறு, பண்பாட்டுக்கு விரோதமானது என்பதை அந்த வாலிபன் அறிந்தே இருந்தான். அவளிருந்த நிலையில் அவள் மார்புப் பிரதேசங்களில் கண்களை ஓட்டுவதும் நாணயமான வீரன் செய்யக்கூடிய காரியமல்லவென்பதும் அவனுக்குத் தெரிந்தே இருந்தது. இருப்பினும் அந்தப் பண்பாட்டுக்கு விரோதமான வழியில் நாணயத்துக்குப் புறம்பான மார்க்கத்தில், தன் எண்ணங்களும் புலன்களும் செல்வதை உணர்ந்தான். அவற்றால் இழுக்கப்பட்ட அவன் மெள்ள, "நீ சொல்லலாம் இமயவல்லி. நான் சொல்லக் கூடாது" என்று ஆரம்பித்தான்.

"எதை நீங்கள் சொல்லக்கூடாது, நான் சொல்லலாம்" என்று சீறினாள் அவள்.

"எதையுந்தான்" என்றான் அவன்.

அவன் குரலிலிருந்த ஏதோ ஓர் ஒலி அவள் சந்தேகத் தைக் கிளப்பவே கேட்டாள் அவள், "எதையுந்தா னென்றால்?..." என்று.

"உதாரணமாக..."

"உம் சொல்லுங்கள்."

"நானிருக்கும் நிலை கண்டு நீ நகைத்தாய்?"

"ஆம், நகைத்தேன்." திட்டமாகச் சொன்னாள் இமயவல்லி. 'இன்னுங்கூட நகைப்பேன்' என்று சொல்வது போலிருந்தது அவள் குரல்.

"அந்த உரிமை உனக்கு மட்டும்தானா?" என்றான் இளமாறன்.

"எந்த உரிமை?"

"என் ஆடை கிழிந்து கிடப்பதைச் சுட்டிக்காட்டும் உரிமை."

இளமாறன் எங்கு பேச்சைக் கொண்டு போகிறான் என்பதைப் புரிந்துகொண்ட இமயவல்லி, திடீரென முந்தானையை இழுத்துப் போர்த்திக்கொள்ள முயன்றாள். அப்பொழுதுதான் முந்தானையை இளமாறன் கிழித்து விட்டது அவளுக்கு நினைவு வந்தது. சட்டென்று கால்கள் இரண்டையும் தூக்கி ஆசனத்தில் வைத்துக்கொண்டு குறுகி உட்கார்ந்து கைகளைக் கட்டி மார்பகத்தை மூடிக்கொண்டு, "நீ நீ" என்று பேச முயன்று உணர்ச்சி மிகுதியால் திணறினாள்.

"நான், நான், நான், என்ன? வாய்விட்டுச் சொல்லிவிடு."

"அயோக்கியர்."

"இல்லை இல்லை."

"வேறென்ன?"

"பரம அயோக்கியன்" என்று தன்னைத்தானே சொல்லிக்கொண்ட இளமாறன் எழுந்திருந்து எதிராசனம் சென்று குறுகிக் கிடந்த அவள் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டு தன் கைகளிரண்டையும் அவள் தோளில் வைத்தான். அவள் கண்கள் நெருப்பைக் கக்கின. "எழுந்து போய்விடு..." என்றாள் அவள்.

"இல்லாவிட்டால்?" இளமாறன் நகைத்தான்.

"வண்டியிலிருந்து கீழே தள்ளிவிடுவேன்" என்றாள் அவள்.

"தள்ளிவிடு" என்று அவனும் பதில் கூறினான்.

அவள் தள்ளவில்லை. மார்பகத்தை மூடியிருந்த கைகளையும் எடுக்கவில்லை. 'கைகளை எடுத்துத்தான் தள்ள வேண்டும்; எடுத்தால் இவன் கண்கள்...' அதற்கு மேல் நினைக்க முடியவில்லை அவளால். முகத்தை அவள் குவிந்து கிடந்த முழந்தாளில் புதைத்துக்கொண்டாள். அவள் தலையை மெள்ள வருடினான் இளமாறன். அவன் இடதுகை அவள் முதுகில் தவழ்ந்து சென்றது. திடீர் திடீரென்று சாலைப் பள்ளங்கள் மூடுதேரைத் தூக்கித் தூக்கியெறிந்ததால் அவள் விழவொட்டாமல் தடுக்க அவன் இடது கையை அவள் இடையில் இறுக்கி அழுத்திப் பிடித்தான்.

பிறகு, அவள் காதுக்கருகில் குனிந்து, "இமயவல்லி" என்று மெல்ல அழைத்தான்.

அவள் பதில் சொல்லவில்லை. இடையில் அழுந்திக் கிடந்த அந்த ஆண்மகனின் கரம் அவளுக்கே ஏதோ வேதனைகளை விளைவித்துக்கொண்டிருந்தது. குழலைக் கோதிய அவன் வலது கைவிரல்கள் தலையின் நரம்புகளில் விவரிக்க முடியாத உணர்ச்சிகளைக் கிளப்பிவிட்டன. உணர்ச்சிகளின் இந்தக் கொந்தளிப்பின் காரணம் அவளுக்கே புரியவில்லை. இதே மாதிரிப் பயணங்களை அவள் ஏற்கெனவே நான்கு முறை மேற்கொண்டிருக்கிறாள். ஆனால் கூடவந்த வீரன் எவனும் தன்னை நெருங்கக்கூடத் துணிவில்லாதிருந்ததை நினைத்துப் பார்த்த அவள், 'இவருக்கு மட்டும் எப்படி வந்தது இந்தத் துணிச்சல்?' என்று தன்னைத்தானே கேட்டுக்கொண்டாள்.

இத்தனையிலும் அவன் துணிச்சல் தனக்கு வெறுப்பை அளிக்கவில்லை என்பதை உணர்ந்து அவள் திகைத்தாள். அவன் பண்பற்ற பேச்சும் குதர்க்கமும் தனக்கு வெறுப்பை அளிப்பதற்குப் பதில் இன்பத்தையே அளித்ததையும் தான் மேலுக்குக் காட்டிய வெறுப்பு சக்தியில்லாததென்பதையும் உணர்ந்த அவள் பிரமித்தாள். அந்தத் திகைப்பினாலும் பிரமிப்பினாலும் இளமாறன் கைகளிரண்டையும் ஒதுக்கிக் கூடத் தள்ளாமல் உட்கார்ந்திருந்தாள். அவள் இடுப்பு ஒருமுறை வளைந்து கொடுத்தது. கிடைத்த இடைவெளியில் ஊர்ந்தது அவன் இடதுகை. தலை ஒருமுறை அசைந்தது. அவன் வலது கைவிரல்கள் கழுத்தின் பின்புறம் இறங்கின.

அவள் இதயத்தில் இன்ப வேதனை விளையாடிக் கொண்டிருந்தது. இளமாறனும் அவள் உடலின் ஸ்பரிசத்தால் தலைகுனிந்தான். இருவரும் அதுவரை அறியாத நிலை அது. அறிந்தபோது உணர்ச்சிகள் வெள்ளமெடுத்து அவ்விருவரையும் இன்பலோகத்துக்கு அடித்துக்கொண்டு போயின. அந்த இன்ப வெள்ளத்தின் ஊடே ஒலித்தது இளமாறன் இன்பநாதம், “இமயவல்லி!” என்று.

அப்போதும் அவள் பதில் சொல்லாது இருக்கத்தான் முயன்றாள். அவளையும் மீறி எழுந்தது ஓர் ‘உம்.’

“இமயவல்லி... நான்... நான்...” என்று இளமாறன் அவள் காதுக்கருகில் தடுமாறினான்.

“நீங்கள்?” தலையை முழந்தாள்களில் புதைத்தபடியே கேட்டாள் அவள்.

“தவறுதான்... செய்துவிட்டேன்” ரகசியம் சொன்னான் இளமாறன்.

“தவறா! என்ன தவறு?” அவள் கேட்டாள் தழுதழுத்த சொற்களால்.

“உன்னைப் பார்த்து...!”

“உம்.”

“நகைத்திருக்கக் கூடாது.”

“ஆம்! ஆம்.”

“மன்னித்து விடு. இமயவல்லி இனிமேல்...”

“நகைக்க மாட்டீர்களே?”

“மாட்டேன்.”

மீண்டும் இருவரிடையே மௌனம் நிலவியது. கழுத்திலிருந்து இறங்கிய வலது கைவிரல்கள் முதுகை மெல்ல வருடிவிட்டு அவள் தோள்பட்டையைத் தொட்டன. அவன் இடது கைவிரல்கள் அவள் இடுப்பில் விரிந்தன. அவள் மெள்ள நெளிந்தாள். அத்துடன், “நானும்” என்று ஏதோ துவங்கினாள்.

“நீ” என்று கேட்டான் இளமாறன்.

“தவறுதான் செய்துவிட்டேன்.”

“இல்லை இல்லை, நீ எந்தத் தவறும் செய்யவில்லை.”

“இல்லை செய்திருக்கிறேன்.”

“என்ன தவறு?”

“நீங்களே சுட்டிக் காட்டினீர்களே?”

“எதைச் சுட்டிக் காட்டினேன்?”

“நான் நகைத்தது தவறென்பதை!”

“தவறென்று நான் சொல்லவில்லையே.”

"வாயால் சொல்லவில்லை. பொருள் அதுதானே."

"எது பொருள்?"

அவளுக்குப் பதில் சொல்லத் தெரிந்தது. ஆனால் சொல்லவில்லை. அந்தச் சமயத்தில் அவ்விருவருக்கும் எதற்கும் எந்தப் பொருளும் புரியாத நிலை இருந்ததால் அவள் மௌனமானாள். அவன் அவளை உந்திக் கேட்டான், "எது பொருள்?" என்று மீண்டும்.

"புரியவில்லை?" என்றாள் அவள்.

"எது புரியவில்லை?"

"பொருள் எதுவென்று?"

"புரிந்தது போல் தோன்றுவதெல்லாம் புரியவில்லை. புரிவதும் தவறாக இருக்கிறது." அவள் மனம் ஓடும் திக்கை அவன் புரிந்துகொண்டான். இருப்பினும் அவள் வாயால் வரட்டும் என்று கேட்டான், "எது புரியவில்லை, எது தவறாகப் புரிந்தது?" என்று.

இமயவல்லி கவிழ்ந்த தலை கவிழ்ந்தபடியே, "முதலில் உங்கள் மீது ஏற்பட்டது கோபம் என்று நினைத்தேன்" என்றாள்.

"அது தவறாகப் போய்விட்டதா?" என்று வினவினான் இளமாறன்.

"ஆம்" என்றாள் அவள்.

"தவறாகப் போய்விட்டால், சரி எது?"

அவள் ஏதோ சொல்ல வாயெடுத்திருக்க வேண்டும். பிறகு சொல்ல முடியாதென்பதற்கு அறிகுறியாக அவள் தலையை ஆட்டியதிலிருந்து அவள் உண்மை நிலையைப் புரிந்துகொண்டான் இளமாறன். ஆகவே அவள் காதில்

தன் இதழ்களைப் புதைத்து, "நான் சொல்லட்டுமா?" என்றான்.

"சொல்லுங்கள்" என்பதற்கு அறிகுறியாக அவள் தலையை அசைத்தாள். அப்படி அசைத்ததால் அவள் கன்னம் இருமுறை வந்து காதுக்கருகிலிருந்த அந்த வாலிபன் உதடுகளைத் தடவிச் சென்றது. அவன் உணர்ச்சிகள் கொந்தளித்தன. அவன் மனம் சொர்க்கலோகத்தில் சஞ்சரித்துக்கொண்டிருந்தது. அந்த உலகத்தில் இருந்தே இன்ப மொழிகளை உதிர்க்கத் தொடங்கி, "சொல்லட்டுமா? சொல்லி விடட்டுமா?" என்றான்.

"உம்... உம்."

"நீ சொல்ல முற்பட்ட வார்த்தை எனக்குத் தெரியும்."

"ஊஹூம்."

"ஆமாம்."

"என்னவாம்?"

"நேசம்."

இந்த வார்த்தையை மிக இன்பமாக உதிர்த்தான் அவள் காதில் இளமாறன். அவள் உடல் புல்லரித்தது. அவள் தலை மீண்டும் ஆடியது, இல்லையென்பதற்கு அறிகுறியாக. அவள் இதழ்கள் அந்தச் சாக்கை முன்னிட்டு அவள் கன்னத்தை நாடித் தைரியத்துடன் சென்றன. சென்ற அலுவலை முடித்துத் திரும்பி, காதுக்கருகில் சொன்னான்: "நீ கொண்டது கோபமல்ல. நேசம் என்றேன், அதுவும் அல்லவா?" இந்தத் தடவை அவன் சொற்கள் தைரியமாக வெளிவந்தன.

அவள் தலைநிமிர்ந்து அவனை நோக்கினாள். அவள் கண்களில் புதிய ஒளி இருந்தது! "வேறொரு சொல்லும் இருக்கிறது" என்றாள் அவள் அவனை நோக்கி.

"நேசத்தை விடவா!"

"ஆம்."

"என்ன சொல்லோ அது?"

அவள் அவன் காதுக்கருகில் சென்று சொன்னாள். அந்த மர்மச் சொல்லால் பிரமை பிடித்த அவன் அவள் கழுத்தில் தன் தலையைப் புதைத்தான். அவள் அசைய வில்லை. எதிர்க்கவில்லை. இருவரும் உலகை மறந்தார்கள். நேரம் போனது அவ்விருவருக்குமே தெரியவில்லை. அப்பேர்ப்பட்ட மந்திரச் சொல்லை அவள் சொல்லி யிருந்தாள்! மந்திரச் சொல் நேரத்தை நீண்ட அளவுக்கு ஓட்டியது.

யாரோ ஒருவர், "மன்னிக்க வேண்டும்; மன்னிக்க வேண்டும்" என்று இருமுறை சொன்ன பிறகுதான் இருவருக்கும் சுரணை வந்தது. சங்கடப்பட்டுப் பிரிந்து உட்கார்ந்தார்கள் இருவரும். வண்டியின் திரைச்சீலையை நீக்கி உள்ளே தலை நீட்டி ஒருவர் நின்றுகொண்டிருந்தார்.

# 13

# சித்தர்

"காதல்" எனும் மந்திரச் சொல்லை இமயவல்லி இளமாறன் காதுக்கருகே சொன்னதன் விளைவாக உணர்ச்சிகள் அலைமோத, கைகள் பிணைந்து கிடக்க நேரம்

போவதோ, வண்டி நின்றதோ தெரியாமல் சுயநிலை இழந்து கிடந்த அந்த இருவரும் 'மன்னிக்க வேண்டும்' என்று வண்டிக்கு வெளியே இருந்து வந்த குரலால் திடீரெனப் பிரிக்கப்பட்டதும் தனித்தனியாகத் தள்ளி உட்கார்ந்த அந்த இருவரில், இளமாறன் கோபத்துக்கும், இமயவல்லி பயத்துக்கும் உள்ளானார்கள். மூடுதேரின் திரையை விலக்கி நின்றவர் ஒரு பெரியவர் என்பதையும், நல்ல உயரமுள்ளவ ரென்பதையும், அவர் தலையை மிகவும் தாழ்த்தி உடல் வளையத் திரைக்குள் நுழைந்திருந்த முறையிலேயே புரிந்து கொண்ட இளமாறன் அத்தகைய துணிவுடன் அரச மகளிர் செல்லும் தேரை நிறுத்தும் மனிதர் யாராயிருக்க முடியும் என்று எண்ணிப் பார்த்தான். யாராயிருந்தாலும் அவர் மதிப்புக்குரியவர் என்பது தெளிவாகத் தெரிந்தது. அவர் முகத்திலிருந்த பெருந் தோரணையிலிருந்தும், கண்களில் வீசிய பேரொளியிலிருந்தும், யாரையும் விநாடியில் அலசிவிடும் வல்லமையுள்ள கண்கள் இளமாறனை நோக்கின. இளமாறன் கண்களும் அவரை மேற்கொண்டு ஆராய்ந்தன.

உயர்ந்த, மெல்லியதான ஆனால், உயரமான உடலைப் படைத்த அவர் வடநாட்டிலிருந்து யாத்திரை வரும் துறவிகளைப்போல் ஒரே துணியை இடுப்பில் சுற்றி அதன் இரு முனைப்புகளையும் எடுத்துக் கழுத்தில் முடிந் திருந்ததால் அவர் விசால மார்பு மூடி முழந்தாள் வரையில் மட்டுமே துணி உடலை மறைத்திருந்தது. அந்தத் துணி அதிக வெளுப்பாகவோ காவியாகவோ இல்லாததாலும், உடுத்தியிருந்த முறை வடநாட்டு யாத்திரிகர்போல் இருந்ததாலும் அவர் துறவியா, குடும்பியா, வடநாட்டவரா, தென்னாட்டவரா என்று தீர்மானிக்க முடியாதிருந்தது. அவர் தலையிலிருந்த மயிர் ஆலம்பாலால் முனைகளில் சுருட்டி

விடப்பட்டு, உருண்டை உருண்டையாகத் தோள்வரையில் தொங்கி அவர் துறவியாயிருக்கலாம் என்ற சந்தேகத்துக்கு இடங்கொடுத்தாலும், தலையின் உச்சி நடுவில் எடுக்கப் பட்டிருந்த வகிடு அந்த ஊகத்துக்கு இடங்கொடுக்கவில்லை. அவர் நெற்றியில் எந்தக் குறியும் தரிக்காததால் நெற்றி சூன்யமாயிருந்தது.

கண்களில் நல்ல ஒளியிருந்த போதிலும், பார்வையில் தீட்சண்யமிருந்த போதிலும், கண்களில் வெளுப்பாக இருந்த பாகம் நன்றாகச் சிவந்து குடிகாரன் கண்கள் போலிருந்தன. சீலையை விலக்கி நின்ற நீண்ட கைகள் வயிரம் பாய்ந் திருந்தன. ஒரு கையில் வாளின் காயத்தால் ஏற்பட்ட பலமான தழும்பு இருந்தது. முழந்தாளுக்குக் கீழே வெளிப்படையாகத் தெரிந்த நீண்ட கால்கள் மெல்லியனவா யிருந்தாலும் எஃகுத் தூண்கள் போலிருந்தன.

இந்த உருவத்தைப் பார்த்த இளமாறன் பெரிதும் வியந்தான். அந்த மனிதர் துறவியாயிருந்தாலும், நல்லவரா யிருந்தாலும், பொல்லாதவராயிருந்தாலும், வீரராயிருந் தாலும், ஆத்திகராயிருந்தாலும், நாத்திகராயிருந்தாலும் அவருடைய பலம் மட்டும் அசாதாரணமானதென்பதைப் புரிந்துகொண்ட இளமாறன் அப்படி அந்த அசாதாரண பலத்தைப் பார்த்து வியந்தாலும் கலங்காத அவன், "யார் நீங்கள்?" என்று வினவினான் கோபத்துடன்.

அந்தப் பெரியவர் அந்தக் கோபத்தைச் சிறிதும் லட்சியம் செய்யாமலே சொன்னார், "இமயவல்லிக்குத் தெரியும்" என்று.

இளமாறன் இமயவல்லியைத் திரும்பி நோக்கினான். அதுவரை அருகில் உட்கார்ந்திருந்த இமயவல்லி ஆசனத்தின் கோடியில் நகர்ந்து உட்கார்ந்திருந்தாள். அவள் முகத்தில்

திகில் மண்டிக் கிடந்தது. அந்தத் திகிலின் காரணத்தை அறியாத இளமாறன் கேட்டான்: "யார் இவர் இமயவல்லி?" என்று.

இதற்கு இமயவல்லியிடமிருந்து பதிலேதும் வர வில்லை. அதுவரை நிமிர்ந்து இருந்த தலையைக்கூட குனிந்துகொண்டாள். அவள் அப்படிப் பயப்பட்டதன் விளைவாகவும் அதனால் உண்டான கோபத்தில் பின்னால் இருந்த திரையை நீக்கிய இளமாறன் மேற்பீடத்திலமர்ந் திருந்த தேரோட்டியை நோக்கி, "உன்னை யார் வண்டியை நிறுத்தச் சொன்னது?" என்று சீறினான்.

சாரதி பதில் சொல்லுமுன்பாகப் பெரியவரே முந்திக் கொண்டார். "அவன்மேல் பிசகில்லை. நான்தான் ரதத்தை நிறுத்தினேன்" என்றார்.

"நீங்கள் நிற்கச் சொன்னால் அவன் நிறுத்துவானேன்?" என்று மீண்டும் சீறினான் இளமாறன்.

பதிலுக்கு உக்கிரமாகப் புன்முறுவல் கொண்ட அந்தப் பெரியவர், "அவன் நிறுத்தாவிட்டால் தேரை நான் கட்டாயமாக நிறுத்திவிடுவேன் என்று அவனுக்குத் தெரியும்" என்று கூறினார். அந்தப் பயங்கரப் புன்முறுவலைத் தொடர்ந்த அவர் சொற்களில் உறுதியிருந்தது. சொன்னதை அவர் செய்யக்கூடியவர் என்ற ஒலி அவற்றில் தெளிவாகத் தென்பட்டது இளமாறனுக்கு. ஆகவே அவன் தன்னைச் சற்று நிதானப்படுத்திக்கொண்டு, "ஆமாம், ஓடும் புரவிகளை நிறுத்தும் திறன் உமது கையில் இருக்கிறது" என்று சிலாகித்தான் இளமாறன்.

பெரியவர் மெல்ல நகைத்தார். "அதை நீங்கள் புரிந்து கொண்டதால் இனித் தேரோட்டி மீது கோபம்கொள்ள வேண்டாம். தவிர அவன் கடமையைத்தான் அவன்

செய்திருக்கிறான்'' என்றும் கூறினார் பெரியவர், சிரித்துக் கொண்டே.

"உங்களைப் பார்த்தவுடன் தேரை நிறுத்த வேண்டியது அவன் கடமை போலிருக்கிறது?'' இந்தக் கேள்வியை இகழ்ச்சியுடன் கேட்டான் இளமாறன்.

"ஆம்.'' இம்முறை பெரியவர் குரலில் அதிக உறுதி இருந்தது.

"தேர் யாருடையதாயிருந்தாலும் நீங்கள் நிறுத்தச் சொன்னால்...''

"நின்றுவிட வேண்டியதுதான்.''

"அரச மகளிர் செல்லும் அந்தப்புரத் தேராயிருந் தாலும்...''

"நிற்க வேண்டியதுதான்.''

"அரசர் தேராயிருந்தால்?''

"அதற்கும் விதி ஒன்றுதான்.''

"யார் விதித்த விதி?''

"அரசர் விதித்த விதி.'' இதை மிகவும் சாதாரணமாகச் சொன்னார் பெரியவர்.

அந்தச் சொற்களைக் கேட்டதும் பெருவியப்புடன் பிரமிப்புக்கும் உள்ளான இளமாறன், "பாண்டிய மன்னர் நெடுஞ்செழியர்...'' என்று ஏதோ சொல்லப் புகுமுன்பு அந்தப் பெரியவரே குறுக்கிட்டு, "ஆம் வீரரே! நெடுஞ் செழியன் ஆணைதான் அது'' என்று முடித்தார்.

"அப்படி அரசராலேயே மதிக்கப்பட்ட நீர் யார்?'' என்று வினவிய இளமாறன் குரலில் லேசான சங்கடம் தொனித்தது.

"சீக்கிரம் புரிந்துகொள்வீர்கள். நான் இல்லாத சமயத்தில் இமயவல்லி எடுத்துச் சொல்லுவாள் உமக்கு. ஆகவே அவள் மூலமாகவே அறிந்துகொள்ளுங்கள் அதை. என் வாயால் வருவதைவிட அவள் வாயால் வருவது இனிப்பாயிருக்கும் உங்களுக்கு" என்று பதில் கூறிய பெரியவர், லேசாக ஏளனம் சொட்ட நகைத்தார்.

ஒரு துறவி பேசக்கூடிய பேச்சாக இல்லை அது. குரல் அந்தச் சந்தர்ப்பங்களில் துறவிகள் உபயோகப்படுத்தக்கூடிய குரலாக இல்லை. விழிகளின் பார்வைகூட சுவாரஸ்யமாக இல்லை. அந்தச் சொற்களை அவர் உதிர்த்தபோது அவர் கண்களில் சற்றே கடுமையிருந்ததைக் கவனித்தான் இளமாறன். இளமாறன் சிந்தையில் மீண்டும் கோபம் துளிர்த்தது. "சரி அவளிடமிருந்தே தெரிந்துகொள்கிறேன். சென்று வாருங்கள்" என்று கூறிய இளமாறன், "தேரை ஓட்டு" என்று சாரதிக்கு உத்தரவிட்டான்.

இளமாறன் உத்தரவை சாரதி நிறைவேற்றவில்லை. பேசாமல் இடித்த புளிபோல் தேர்த்தட்டில் உட்கார்ந்திருந்தான். பெரியவர் உள்ளே எட்டிப் பார்த்த தலையை வெளிக்கிழுக்காமலும், சென்றுவர எந்த முயற்சியை எடுக்காமலும், "நான் முன்பே சொன்னேன் உங்களுக்கு" என்றார்.

"என்ன சொன்னீர்கள்?" என்று வினவினான் இளமாறன் சினம் தலைக்கேற.

"தேரோட்டி நான் சொல்வதை செய்யக் கடமைப் பட்டவன் என்று சுட்டிக் காட்டினேன்" என்றார் பெரியவர் சாவதானமாக.

"ஆம். சுட்டிக் காட்டினீர்கள்" என்றான் இளமாறன் அந்த நிலையில் என்ன செய்வதென்று அறியாமல்.

"ஆகவே புத்திசாலியான நீங்களும் என் சொற்படி கேட்பதுதான் அழகு."

"கேட்காவிட்டால் என்ன செய்வீர்?"

"தங்களைப் பலவந்தப்படுத்திக் கேட்கச் செய்ய வேண்டியிருக்கும்."

"என்னைப் பலவந்தப்படுத்தும் மனிதன் உலகில் இனிமேல்தான் பிறக்க வேண்டும்."

"தவறு."

"எப்படித் தவறு?"

"முன்னரே பிறந்துவிட்டான். அவன்தான் நான்" என்ற பெரியவர் மேலும் சொன்னார்: "வீரரே! நீர் யாரென்பது எனக்குத் தெரியும். உமது புஜபலம் எப்பேர்ப்பட்டது என்பதும் எனக்குத் தெரியும்! ஆனால் இந்த எல்லைக்குள் உமது புஜபலம் எந்தப் பயனையும் அளிக்காது. என் இஷ்டமிருந்தால்தான் இந்த எல்லையை விட்டு நீர் நகர முடியும்."

இளமாறன் இதழ்களில் கோபப் புன்முறுவல் படர்ந்தது. அத்துடன் முகத்தில் சிறிது சந்தேகச் சாயையும் தெரிந்தது. அந்த இரண்டையும் கவனித்த அந்தப் பெரியவர், "உமக்கு சந்தேகமிருந்தால் இமயவல்லியைக் கேளும்" என்றார்.

இளமாறன் இமயவல்லியை நோக்கித் திரும்பிக் கேட்டான், "ஏன் இமயவல்லி! இவர் அனுமதியில்லாமல் நாம் மேலே செல்ல முடியாதா? இவர் சொல்வதெல்லாம் உண்மையா?" என்று.

இமயவல்லி குனிந்த தலையை நிமிராமலே பெருமூச்சு விட்டாள். "அவர் சொற்படி செய்யுங்கள்" என்ற சொற்களும் தட்டுத் தடுமாறி வந்தன.

"யார் இவர் என்று சொல்லமாட்டாயா? கண்ட பேர்களுக்கெல்லாம் நாம் வணங்கிச் சென்றால் போக வேண்டிய இடத்துக்கு எப்படிப் போய்ச் சேருவது?" என்று வினவினான் இளமாறன். அவளைப் பார்த்துப் பேசிய இந்தச் சொற்களிலும் அவன் கோபம் நன்றாகத் தொனித்தது.

ஆனால் அடுத்த விநாடி அவன் கோபம் பறந்தது. அவன் முகத்தில் மிதமிஞ்சிய வியப்பு படர்ந்தது. "நான் கொண்டு போய்ச் சேர்க்கிறேன்" என்றார் பெரியவர்.

பிரமிப்புடன் கேட்டான் இளமாறன், "நான் எங்கே போகிறேன் தெரியுமா?" என்று.

"இமயவல்லியுடன் வரும் வீரர்கள் செல்லுமிடம் ஒன்றுதான்" என்றார் பெரியவர்.

"எது?"

"அதற்கு இரண்டு பெயர்கள் உண்டு."

"இரண்டு பெயர்களா?"

"ஆம், ஒரு பெயர் அழிவு! இன்னொரு பெயர் மூங்கில் கோட்டை!" என்ற பெரியவர் முகத்தில் விசனக்குறி படர்ந்தது. இதைக் கேட்டு இணையிலா பிரமிப்பின் வசப்பட்ட இளமாறனை நோக்கி அதுவரை கையாண்ட மரியாதையையும் கைவிட்ட பெரியவர், "ஆம்! இளமாறா! அழிவு வேறு; மூங்கில் கோட்டை வேறு அல்ல; இரண்டும் ஒன்றுதான். இதுவரை இமயவல்லியுடன் சென்ற நான்கு வீரர்களை அது பலி வாங்கியிருக்கிறது. நீ ஐந்தாமவன். நீ பிழைப்பாயோ சாவாயோ எனக்குத் தெரியாது. ஆனால், வீணாக உயிர்ப் பலியை விரும்புவதில்லை நான். அது இமய வல்லிக்குத் தெரியும். எவ்வளவோ தடுத்துப் பார்த்தேன்

இவளை, வீரர்களைப் பலிக்கு அழைத்துச் செல்லாதே யென்று. இவள் கேட்கவில்லை. மீண்டும் மீண்டும் இளைஞர்களை அழிவுக்கு அழைத்துச் செல்கிறாள். ஆனால் அதைப்பற்றி எனக்கென்ன? அது அரசியல். எனக்கும் அரசியலுக்கும் சம்பந்தமில்லை" என்று உணர்ச்சியுடன் சொன்னார்.

அவர் தன்னைப்பற்றியும் இமயவல்லியைப் பற்றியும் சகல விவரங்களையும் அறிந்திருப்பதைக் கண்டு வியந்த இளமாறன், "அரசியலில் சம்பந்தமில்லையென்றால் இந்தத் தேரை ஏன் நிறுத்தினீர்கள்?" என்று வினவினான்.

"இது இராக்காலம்" என்றார் அவர்.

"உங்களுக்கு மட்டும்..."

"நான் வெளியே நடமாடும் வேளை இதுதான்."

"இரவில்தான் நடமாடுவீர்களா?"

"ஆம்."

"ஏனோ?"

"பகலில் ஜனக்கூட்டம் இருக்கிறது. உலகின் பாச பந்தங்களைக் காண நேரிடும். இரவு அமைதியானது. உலகம் உறங்கும் நேரம் அது. ஆகவே, அப்பொழுது நான் விழித்திருக்கிறேன், நடமாடுகிறேன்."

இம்முறை பெரியவர் பேசியது வேதாந்தம் போலிருந்ததால் இளமாறன் அதற்கேதும் பதில் சொல்லாமல், "நீங்கள் நடமாடும் சமயங்களில் பாதையில் ரதம் போகக் கூடாதா?" என்று கேட்டான்.

"ஆம்..."

"ஏதோ தயங்குகிறீர்களே?"

"தயக்கமில்லை. ரதம் சாதாரண ரதமாயிருந்தால் தடுத்திருக்க மாட்டேன், காயமுற்றவர் இருப்பதால் தடுத்தேன்."

இதைக் கேட்ட இளமாறன் மேலும் பிரமிப்பை அடைந்தான். "உள்ளே காயமுற்றவர் இருப்பது உங்களுக்கு எப்படித் தெரியும்?" என்று வினவினான்.

"தேர் அதிகமாக விரைந்து வரவில்லை. பாதையில் பள்ளங்கள் வரும். இரண்டு சமயங்களில் சாரதி கடிவாளத்தை இறுக்கிப் பிடித்து நிறுத்திப் பிறகு அதை செலுத்தினான். தூரத்திலிருந்து பார்த்தேன். புரிந்து கொண்டேன்" என்றார் பெரியவர்.

அவரின் ஊகத்தின் கூர்மையைப் புரிந்துகொண்ட இளமாறன் மேலும் அவரிடம் சர்ச்சை செய்ய இஷ்ட மில்லாமல் "அடுத்தபடி என்ன செய்ய உத்தேசம்?" என்று வினவினான்.

"உங்களிருவருடன் ரதத்தில் பயணம் செய்ய உத்தேசம்" என்றார் பெரியவர்.

"இடம் கொடுக்க மறுத்தால்?"

"கண்டிப்பாய் கொடுப்பாய் இளமாறா!"

"என்ன அப்படி உறுதியாகச் சொல்கிறீர்கள்?"

"இமயவல்லி என்னிஷ்டப்படிதான் நடப்பாள்."

அதற்குமேல் வாளாவிருக்காத இமயவல்லி, "அவரைத் தடை செய்யாதீர்கள். அவரும் வரட்டும்" என்றாள் இளமாறனை நோக்கி.

இதைக் கேட்ட பெரியவர், "நன்றி இமயவல்லி, நீ முன்பே பேசியிருந்தால் இத்தனை பேச்சும் காலமும்

விரயமாயிருக்காது" என்று கூறிவிட்டு சர்வ சுதந்தரத்துடன் ரதத்தில் ஏறி இமயவல்லிக்கும் இளமாறனுக்கும் எதிரில் இருந்த ஆசனத்தில் காயமுற்றுக் கிடந்த பாண்டிய சேனாதிபதிக்கு இடைஞ்சலில்லாமல் முகப்பில் உட்கார்ந்து கொண்டார். பிறகு சாரதியை அழைத்து "அப்பனே ஓட்டு" என்றார்.

"எங்கு ஓட்டச் சொல்கிறீர்கள்?" என்று இளமாறன் வினவினான்.

"அவனுக்குத் தெரியும். மடத்துக்கு ஓட்டுவான்" என்றார் பெரியவர்.

"எந்த மடம்?"

"சித்தர் மடம்."

இளமாறன் கண்களில் வியப்பு பெரிதும் படர்ந்தது. "அப்படியானால் நீங்கள்தான்?..." என்று இழுத்து வாசகத்தை முடிக்காமல் விட்டான்.

"சித்தன்" என்று வாசகத்தை முடித்தார் பெரியவர்!

# 14

# சொல்லாசிரியனும் வில்லாசிரியனும்

எந்தச் சித்தர் மடத்தின் பெயரைச் சொன்னதும் பாண்டிய வீரர்கள் தலைவணங்கிச் சென்றார்களோ அந்த மடத்தின் அதிபதிதான் அந்தப் பெரியவர் என்றும், தமது

மடத்துக்கே அவர் மூடுதேரை ஓட்ட உத்தரவிட்டிருக்கிறார் என்றும் அறிந்துகொண்ட இளமாறன், எதிரே உட்கார்ந் திருந்த அந்தச் சித்தரை மீண்டும் தன் கண்களால் நோக்கினான். மடத்துக்குத் தேரை ஓட்டச் சொன்ன அடுத்த விநாடி அந்த மனிதர் பாண்டிய சேனாதிபதியான மருதன் மீது சற்றே சாய்ந்து தேரின் ஆசனப் பின்பகுதியில் தலையை வைத்துக்கொண்டும், கண்களை மூடிக்கொண்டும் தியானத்தில் இருப்பவர்போல் காட்சி அளித்தார். அவர் கண்களை மூடியிருந்ததால் அவரைப்பற்றி ஏதாவது ரகசியமாகக் கேட்கலாம் என்று இமயவல்லியை நோக்கித் திரும்பிய இளமாறன், இமயவல்லியின் முகத்தில் அப்பொழுதும் பயத்தின் சாயை பரவிக் கிடந்ததையும் அவள் எவ்வித சம்பாஷணைக்கும் தயாராயில்லை என்பதையும் முகபாவத்திலிருந்தே தெரிந்துகொண்டான்.

'இப்படி அரசரையும் அரச மகளிரையும் ஒருங்கே ஆட்ட இந்தச் சித்தருக்கு அப்படியென்ன அபார சக்தியிருக்கிறது?' என்று தன்னைப் பலமுறை கேட்டுக் கொண்ட இளமாறனுக்கு அந்தச் சமயத்தில் விடை கிடைக்காதது மட்டுமின்றி மடத்தைச் சேர்ந்த பின்பும் விடை கிடைக்கவில்லை.

சுமார் ஒரு நாழிகைப் பயணத்துக்குப் பின்புதான் மூடுதேர் சித்தர் மடத்தை அடைந்தது. அந்த ஒரு நாழிகைக் காலமும் சித்தர் வாயையோ மூடிய கண்களையோ திறக்காமலே பிரயாணம் செய்தார். ஆகையால் அவரிட மிருந்து மேற்கொண்டு எந்தத் தகவலும் கேட்பதற்கு இயலாததாயிற்று இளமாறனுக்கு.

அவனருகே உட்கார்ந்திருந்த இமயவல்லியும் பேசா மடந்தையாகி விட்டதால் அந்த மௌனப் பிரயாணம்

பெரும் வேதனையாயிருந்தது சேரநாட்டு வீரனுக்கு. மெள்ள ஆசனத்திலிருந்து திரையை விலக்கி மேற்படியிலேறித் தேரோட்டியைக் கீழே தள்ளிவிட்டு ரதத்தைத் தானே ஓட்டினாலென்ன என்று ஒரு விநாடி யோசித்த இளமாறன் அப்படிச் செய்தாலும் பலனேதுமில்லை என்பதையும், பின்னாலிருந்த சித்தர் தாக்கினால் தான் செய்யக் கூடியதும் அவர் யோசனைப்படி ரதத்தைச் செலுத்துவதே என்பதையும் புரிந்துகொண்டதால் ஆசனத்தின் பின்னால் சாய்ந்து கொண்டு தன் இடது கையை மட்டும் பின்புறமாக நீட்டி இமயவல்லியின் கையைத் திருட்டுத்தனமாகப் பிடித்து ஆறுதலாக அழுத்திக்கொடுத்தான். இமயவல்லியின் கை அவன் கையுடன் இணைய மறுத்தது. பிடிபட்ட கை பலவந்தமாகப் பின்னால் இழுத்துக்கொண்டது. இமயவல்லி பரிபூரண அச்சத்தில் இருக்கிறாள் என்பதைக் கை பிடிபட்ட போது இருந்த சங்கடத்தாலும், இழுத்துக்கொண்டபோது ஏற்பட்ட லேசான சிரமத்தாலும் புரிந்துகொண்ட இளமாறன், மூடுதேர், மடத்தை அடையும் வரையில் எவ்வித விஷமத்திலும் ஈடுபடாமல் காலத்தைக் கடத்தினான்.

காயம் விளைவித்த மூர்ச்சையால் மௌனமான பாண்டியத் தளபதி மருதுவையும், சூழ்நிலை கிளப்பிய உணர்ச்சிகளால் மௌனமாகிவிட்ட மற்ற மூவரையும் தாங்கிய அந்த மூடுதேர் ஒரு நாழிகைக்குப் பின்பு சித்தர் மடத்துக்குள் நுழைந்து வாயிலில் நின்றதும், முதலில் இறங்கிய சித்தர் சேரநாட்டு வீரனை நோக்கி, "இளமாறா! வா!" என்று சர்வசகஜமாகவும் பெயர் சொல்லியும் அழைத்தார். அதற்குப் பதிலேதும் சொல்லாமல் கீழே இறங்கிய இளமாறன் சுற்றுமுற்றும் பார்த்து, மடத்தின் கட்டடமெல்லாம் கூரைக் கட்டடமாயிருந்தாலும் கூரை முகப்பு உயர்ந்திருந்ததையும், மடத்தின் நீளமும் அகலமும்

ஒரு மாளிகைக்கு வேண்டிய நீள அகலத்துடன் இருந்ததையும் கவனித்தான். சுற்றிலுமிருந்த வேலி நீண்ட தூரம் இருந்ததாலும் மரங்கள் பல நெடுந்தூரம் மட்டும் கண்ணுக்குத் தெரிந்ததாலும் அதன் நிலப்பரப்பும் அதிக மென்பதை அறிந்து கொண்ட இளமாறனுக்கு அந்த மடத்தில் காவலேதுமில்லாதது மட்டும் பெரும் வியப்பாயிருந்தது. அரசரும் மதிக்கும் பெரிய மடாதிபதிக்குக் காவலாளிகள் கூட இல்லையென்பதை நினைத்துப் பார்த்த இளமாறன் ஒருவேளை உட்புறத்தில் வீரர்கள் இருக்கலாம்; பின்னால் வரலாம் என்று நினைத்தான் முதலில். அதுவும் இல்லை என்பது பின்னால் புரிந்தது.

மூடுதேர் வந்து நின்ற பல விநாடிகளுக்குப் பிறகும் காவலரோ சீடப்பிள்ளைகளோ யாரும் வெளிவரவுமில்லை, மடத்துக் கதவைத் திறக்கவுமில்லை. சித்தரும் யாரையும் குரல் கொடுத்து அழைக்கவுமில்லை. இளமாறனையும் இமய வல்லியையும் ரதத்தை விட்டு இறங்கச் சொன்ன சித்தர், காயமுற்றிருந்த பாண்டிய சேனாதிபதியின் பெரு உடலை ஒரு சிறு குழந்தையைத் தூக்குவதுபோல் தமது கைகளில் தூக்கிக்கொண்டு குதிரைகளை அவிழ்த்து விடும்படி சாரதிக்கும் உத்தரவிட்டுத் தம்மைத் தொடர்ந்து வரும்படி மற்ற இருவருக்கும் உத்தரவிட்டு மடத்தின் வாயிலை நோக்கி நடந்தார். வாயிலை அடைந்ததும் வாயிற்கதவைத் தமது வலது காலால் மெல்ல உதைத்துத் திறந்தார். அதுவரை மௌனமாகக் கிடந்த அந்த மடத்திலிருந்து பலவித முனகல்களும் இம்சைப்படுவதற்கும் அடையாளமான தீன சுரங்களும் வெளிக் கிளம்பியதைக் கண்ட இளமாறன் அவற்றுக்குக் காரணம் அறியாமல் திணறினான். கதவு திறந்து மூவரும் உள்ளே சென்றதும் அந்தச் சத்தங்கள் மிகவும் அதிகமாயின. இளமாறன் நாலாபுறமும் பார்த்தான்.

ஆனால் யாரும் இருப்பது அவன் கண்களுக்கு மட்டும் புலப்படவில்லை. இம்சை ஒலிகள் மட்டும் நாலா பக்கங்களிலும் இருந்து வந்துகொண்டிருந்தன. இளமாறன் சேர நாட்டவனாதலாலும் மந்திரம், மாயம், பில்லி, சூனியம், பிசாசு, பூதம் முதலியவற்றில் நம்பிக்கையுள்ளவனாதலாலும், சித்தர் ஒருவேளை பலதரப்பட்ட பிசாசுகளை மந்திரத்தால் கட்டி வைத்திருக்கிறாரோவென்றும் நினைத்தான். சித்தர் ஒருவேளை கொடூரத்தின் உருவமோ, ஏவல் முதலியவற்றில் சமர்த்தரோ என்றுகூடச் சந்தேகப்பட்டான். ஆனால் அடுத்த சில விநாடிகளில் அந்தச் சந்தேகம் தீர்ந்தது இளமாறனுக்கு.

இளமாறனும் இமயவல்லியும் பின்தொடர மடத்துக்குள் நுழைந்து இருட்டில் நிதானத்தின் மேலேயே நடந்த சித்தர் மெள்ள ஒரு கூடத்தில் வந்து நின்றதும், எங்கிருந்தோ ஒரு விளக்குடன் ஒரு துறவி வந்தார். அந்த விளக்கு வீசிய வெளிச்சத்தில் அந்தக் கூடத்துக்கு எதிரிலும் ஒரு பெரும் கூடமிருந்ததையும், இரண்டு கூடத்திலும் ஒரு பத்தடி விட்டுப் பெரும் கறுப்புச் சீலைகள் தொங்கவிடப்பட்டு இருந்ததையும், இந்தக் கறுப்புச் சீலைகளுக்கு அப்புறமிருந்தே இந்த இம்சை ஒலிகள் வருவதையும் உணர்ந்துகொண்ட இளமாறன் சந்தேகத்துடன் சித்தரை நோக்கினான். அவன் சந்தேகத்தைக் கண்ட சித்தர் புன்முறுவல் செய்தாரானாலும் பதிலேதும் சொல்லவில்லை. அவர் செய்த சைகையைத் தொடர்ந்து எதிரே நின்ற துறவி விளக்கைக் கீழே வைத்துவிட்டு தமது கைகளை நீட்டவே, அந்தக் கைகளில் தமது கைகளில் கிடந்த பாண்டிய சேனாதிபதியை மாற்றிவிட்ட சித்தர், குனிந்து அந்த விளக்கைத் தாம் எடுத்துக்கொண்டு இளமாறனையும் இமயவல்லியையும் தம்மைத் தொடர்ந்து வருமாறு சைகை செய்துகொண்டு, இரண்டு கூடத்துக்கும் இடையே இருந்த

தாழ்வாரத்தில் இறங்கி, மடத்தின் பின்புறத்தை நோக்கி நடந்தார். அவரைப் பின்தொடர்ந்து பல கட்டுகளைத் தாண்டியதும் பின் கதவு திறக்கப்பட்டதையும், அதையும் தாண்டியதும் தனிச் சிறு விடுதியொன்றில் விளக்கு ஒன்று எரிந்துகொண்டிருந்ததையும் கண்டான் இளமாறன். அந்த விடுதியைத் திறந்துகொண்டு உள்ளே நுழைந்த சித்தர், இமயவல்லிக்கும் இளமாறனுக்கும் ஓர் அறையைக் காட்டி முதல் முதலாக வாய் திறந்து பேசினார்.

"இதில் நீங்களிருவரும் தங்கலாம்" என்று, அதைக் கூறிவிட்டுப் பதிலுக்குக் காத்திராமல் வெளியே செல்ல முயன்ற சித்தரை, "ஒரு நிமிஷம்" என்று கூறித் தடுத்தான் இளமாறன், சந்தேகம் கேட்க.

வாயிற்படியைத் தாண்ட ஒரு காலை வெளியே எடுத்து வைத்த சித்தர் தலையைப் பின்னுக்குத் திருப்பி, "என்ன வேண்டும்? இங்கு உங்களுக்கு வேண்டியது சகலமுமிருக் கிறது. ஏதாவது தேவையானால் இமயவல்லியைக் கேளப்பனே" என்றார்.

"நீங்கள் விளக்கிவிடுவது நல்லது" என்றான் இளமாறன் சற்றே சினத்துடன்.

"மனிதனுக்கு விளக்கந்தான் தேவை. யார் விளக்கினா லென்ன?" என்று கேட்டார் சித்தர், அவன் சினத்தைச் சிறிதும் லட்சியம் செய்யாமல்.

"உங்கள் வாயாலேயே கேட்க வேண்டுமென்பது என் விருப்பம்" என்று வீம்புக்குச் சொன்னான் இளமாறன்.

சித்தரின் கூரிய கண்கள் இளமாறனைச் சில விநாடி ஆராய்ந்தன.

“அப்படியானால் சிறிது நேரம் விழித்திருங்கள், வந்து விடுகிறேன்” என்றார்.

“இப்பொழுது எங்கே போகிறீர்கள் அவசரமாக?”

“வேலை இருக்கிறது.”

“அவசரமாகக் கவனிக்க வேண்டியது என்ன இருக்கிறது?”

“மருதனின் காயம்” என்று பதில் கூறிய சித்தர், மேற்கொண்டு ஏதும் பேசாமல் கதவைச் சாத்திக்கொண்டு போய் விட்டார்.

அவர் சென்றதும் இமயவல்லியைச் சற்றுத் தூரத்திலிருந்த ஒரு மரமஞ்சத்தில் உட்காரச் செய்த இளமாறன் தானும் அவள் எதிரே மற்றொரு மஞ்சத்தில் உட்கார்ந்து கொண்டு அவளை நோக்கினான். மூடுதேரில் சித்தரைக் கண்டதும் முதலில் தெரிந்த அதே பயம் அவள் முகத்தில் அப்பொழுதும் தெரிந்தது. அவளைத் தேற்ற முயன்ற இளமாறன், “இமயவல்லி, ஏனிந்தப் பயம் உனக்கு நானிருக்கும்போது?” என்று கேட்டான்.

இமயவல்லி சில விநாடிகள் கழித்தே பதில் சொன்னாள். அப்படிப் பதில் சொன்னபோதே அவள் குரலிலும் அச்சமிருந்தது. “சித்தர் வல்லவர்” என்றாள் அவள் இரண்டே சொற்களில்.

“எதில் வல்லவர்? வாட்போரில் வல்லவரா? விற்போரில் வல்லவரா? மற்போரில் வல்லவரா?” என்று வினவினான் சற்றுக் கோபத்துடன் இளமாறன்.

“மூன்றிலும் வல்லவர்!” என்றாள் இமயவல்லி சர்வ சாதாரணமாக.

"அதற்காகத்தான் பாண்டிய மன்னர் இவரிடம் பயப்படுகிறாரா?" என்று மீண்டும் சினம் தணியாமலே வினவினான் இளமாறன்.

"பாண்டிய மன்னர் யாருக்கும் அஞ்சுவது கிடையாது." இந்தச் சொற்களைச் சினத்துடன் உதிர்த்தாள் இமயவல்லி.

"அப்படியானால் எதனால் கொடுக்கிறார் இந்தச் சித்தருக்கு இத்தனை அதிகாரத்தை?"

"மதிப்பினால்."

"என்ன மதிப்பு?"

"ஆசிரியரிடம் சீடனுக்கு இருக்க வேண்டிய மதிப்பு!"

"இவர் பாண்டிய மன்னனுக்கு ஆசிரியரா?"

"ஆம்."

"குறுங்கோழியூர்க்கிழார் தாம்தான் ஆசிரியர் என்று சொன்னாரே!"

"அவரும் ஆசிரியர்தான்!"

"விந்தையாய் இருக்கிறது எனக்கு," என்ற இளமாறன் சொற்களில் வியப்பிருந்தது.

இமயவல்லி தலையை நன்றாக நிமிர்ந்துகொண்டாள். "இதில் விந்தையென்ன இருக்கிறது? புலவர் பெருமான் ஒருவகை ஆசிரியர், இவர் ஒருவகை ஆசிரியர்" என்று இமயவல்லி அதுவரையிருந்த பயத்தை கைவிட்டுச் சற்றுத் தைரியமாகவே பேசினாள்.

"இரண்டு வகை ஆசிரியர்களா?" மீண்டும் வியப்பைக் காட்டினான்.

"ஆம்" என்ற இமயவல்லி, இருவரும் எத்தகைய ஆசிரியர்கள் என்பதை விளக்கினாள். அந்த விளக்கத்தைக்

கேட்ட பின்புதான் மெள்ள மெள்ள சித்தரைப் பற்றிய மதிப்புக்கான உண்மைகள் தெரியலாயின இளமாறனுக்கு. இமயவல்லி தன் மரமஞ்சத்திலிருந்து எழுந்து நின்று கொண்டு விளக்கினாள் விஷயத்தை. "சேரநாட்டு வீரரே! பாண்டிய மன்னனுக்கு இரண்டு ஆசிரியர்கள் உண்டு. ஒருவர் சொல்லாசிரியர். இன்னொருவர் வில்லாசிரியர் இந்த விந்தைச் சித்தர். பாண்டிய மன்னருக்குத் தமிழ் போதித்தார் குறுங்கோழியூர்க்கிழார். அவருக்கு வில்லையும் வாளையும் கையாளும் வகையையும் போர் முறைகளையும் கற்பித்தார் விந்தைச் சித்தர். தலையாலங்கானத்துச் செருவில் சிதைத்தாரே எழுவரைப் பாண்டிய மன்னர், அதற்கு மூலகாரணம் இந்தச் சித்தர்தான். மன்னர் எழுவரைச் சந்திக்கத் தலையாலங்கானத்தைத் தேர்ந்தெடுத்ததே இந்தச் சித்தர்தான்" என்றாள் இமயவல்லி.

இளமாறன் பெரும் பிரமிப்புக்குள்ளானான். "சித்தர் அத்தனை அறிந்தவரா?" என்று வினவினான் இளமாறன்.

"ஆம்" என்றாள் இமயவல்லி.

"அப்படியானால் இவர் இருக்கவேண்டிய இடம் மதுரை அல்லவா!"

"தலைநகருக்கு இவர் என்றாவது ஒருநாள்தான் வருவார். மற்றபடி மடத்தைவிட்டு நகருவதில்லை."

"அப்படியானால் பாண்டிய மன்னர்..."

"இங்கு வந்துதான் பயிற்சி பெறுகிறார்."

"பெறுகிறாரென்றால்?"

"இன்னும் பயிற்சி பெறுகிறார். பாண்டிய நாட்டுப் படைத்தளபதிகளின் மக்கள்கூட இவரிடம் பயிலு கிறார்கள்!"

"அப்படியானால் இந்த மடம் போர்ப் பயிற்சிக் கூடமா?"

"அதுவும் இருக்கிறது பின்னால்!"

"பின்னாலென்றால்?"

"காலையில் பார்த்தால் தெரியும் வீரரே! இந்த மடத்தில் கூரை வேய்ந்த கூடங்கள் மூன்று இருக்கின்றன. வீரக்கூடம், ஞானக்கூடம், கருணைக்கூடம் ஆகிய மூன்று உண்டு இங்கே!"

இளமாறன் வியப்பு மேலும் விரிந்தது. "என்ன, கருணைக் கூடமா? அது எங்கேயிருக்கிறது?" என்று வினவினான்.

"அதுதான் முதற்கூடம். அங்குதான் நாம் நுழைந்தோம்" என்றாள் இமயவல்லி.

"அந்த இடத்தில் ஏதேதோ ஒலிகள் கேட்டனவே?"

"வியாதியஸ்தர்கள் முனகும் ஒலிகளைக் கேட்டீர்கள்."

"வியாதியஸ்தர்கள் கண்ணுக்குத் தென்படவில்லையே?"

"அவர்கள் இருக்குமிடங்கள் கறுப்புச் சீலைகளால் மறைக்கப்பட்டிருக்கின்றன. அவர்கள் இருக்குமிடங்களில் இரவில் ஓரிருவரைத் தவிர யாரும் போகக் கூடாது."

"ஓரிருவரென்றால் சிகிச்சை செய்பவர்களா?"

"இல்லை. சிகிச்சையைச் சித்தரே செய்கிறார். அவர் உதவியாளர் ஓரிருவர் இருப்பார்கள்."

சித்தரின் அந்த வாழ்க்கையை நினைக்கப் பெரும் வியப்பாயிருந்தது இளமாறனுக்கு. "ஒருபுறம் விற்பயிற்சியும், வேல் பயிற்சியும், கத்திப் பயிற்சியும் அளிக்கிறார். இன்னொரு புறம் கத்திக் காயத்துக்கும் வேறு வியாதிக்கும்

சிகிச்சை செய்கிறார். இவர் எத்தகைய கொள்கையை உடையவர்?" என்று தன்னைத்தானே இருமுறை கேட்டுக் கொண்ட இளமாறன், தனது மஞ்சத்தில் நீண்ட நேரம் உட்கார்ந்துவிட்டான். பிறகு ஏதோ நினைத்துக்கொண்டு கேட்டான், "இவர் பாண்டிய நாடா?" என்று.

"தெரியாது" என்றாள் இமயவல்லி.

"எங்கிருந்து வந்தவர்?" என்று வினவினான் இளமாறன்.

"அதுவும் தெரியாது" என்று கூறினாள் இமயவல்லி.

"உனக்குத்தான் தெரியாதா?"

"யாருக்குமே தெரியாது."

இந்தப் பதில் அவனுக்கு மேலும் ஆச்சரியத்தை விளைவிக்கவே, "நானே கேட்கிறேன் அவரை, வரட்டும் அவர்" என்றான் இளமாறன்.

"வந்துவிட்டேன்" என்று சொல்லிக்கொண்டே உள்ளே நுழைந்த சித்தர் சற்று எட்ட இருந்த ஓர் ஆசனத்தில் அமர்ந்து கொண்டு, "இன்னும் இமயவல்லி சொல்லவில்லையா சொல்லாசிரியனையும் வில்லாசிரியனையும் பற்றி?" என்று கேட்டுப் புன்முறுவல் கொண்டார். அத்துடன், "என்னை என்ன கேட்கவேண்டும் வீரனே?" என்றும் வினவினார்.

"உங்களைப் பற்றிய விவரங்களை அறிய விரும்பு கிறேன்" என்றான் இளமாறன் குரலில் உறுதியுடன்.

பதிலுக்குச் சித்தரின் புன்முறுவல் விரிந்தது. "அது கிடக்கட்டும். அவளைப் பற்றிய விவரங்களை அறிந்தாயா இளமாறா?" என்று வினவினார் சித்தர் இமயவல்லியை நோக்கிக் கைநீட்டி.

"இல்லை" என்றான் இளமாறன்.

"நான் சொல்லட்டுமா?" என்று கேட்டார் பாண்டிய மன்னனின் வில்லாசிரியர்.

அதுவரை வாளாவிருந்த இமயவல்லி உட்கார்ந்திருந்த ஆசனத்தில் ஒரேயடியாகக் குறுகி உட்கார்ந்து அச்சம் துலங்கிய கண்களைப் பரிதாபத்துடன் சித்தர் மீது வீசி, "வேண்டாம் சித்தரே! வேண்டாம்" என்று கூறினாள்.

வில்லாசிரியர் பிடிவாதமாகச் சொன்னார். இளமாறன் வியப்பு உச்சநிலைக்கு ஓடிவிட்டது.

# 15

## சித்தரின் மாயம்

தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டிய நெடுஞ்செழியனின் வில்லாசிரியரான அந்த விந்தைச் சித்தர், இமயவல்லி 'வேண்டாம் வேண்டாம்' என எத்தனையோ கதறியுங்கூட அவளைச் சிறிதும் லட்சியம் செய்யாமலே அவளைப்பற்றிய விவரங்களைக் கூற முற்பட்டு, "இளமாறா! மாந்தரஞ்சேரல் இரும்பொறையை விடுவிக்க நீ எடுத்திருக்கும் இந்த முயற்சியில் நீ அறியாத விஷயங்கள் பல இருக்கின்றன. அவற்றை நீ அறிந்து கொண்டு இந்த முயற்சியில் இறங்குவது நல்லது. முதன் முதலாக நீ அறியவேண்டியது இவள் யாரென்பது?" என்று சொன்னார்.

"யாரென்பது எனக்குத் தெரியும்" என்றான் இளமாறன் பதிலுக்கு, இமயவல்லியை அந்தச் சித்தரின் முன்பாக விட்டுக் கொடுக்கக்கூடாது என்ற எண்ணத்தினால்.

சித்தர் இதழ்களில் இகழ்ச்சிப் புன்முறுவல் அரும்பியது. "என்ன தெரியும் உனக்கு? இவள் கிழாரின் இல்லத்தில் இருந்ததால் அவருடைய பணிமகள் என்று அறிந்திருப்பாய்" என்றார்.

இள்மாறன் தன் ஆசனத்தைவிட்டு எழுந்து சிறிதளவு தள்ளி நின்றுகொண்டு சித்தரைச் சில விநாடிகள் நோக்கிவிட்டுச் சொன்னான், "முதலில் அப்படித்தான் நினைத்தேன்" என்று.

சித்தர், பொருள் விரியும் நோக்கமொன்றை அவன் மீது வீசினார். அந்த நோக்கில் முதலில் தெரிந்த இகழ்ச்சிப் புன்முறுவலும் நன்றாக விரிந்து நின்றது. "பிறகு என்ன நினைத்தாய் இளமாறா?" என்று வினவினார், அந்த புன்முறுவலில் விரிந்த இகழ்ச்சி குரலிலும் ஒலிக்க.

"அவள் அரச குடும்பத்தைச் சேர்ந்தவள் என்பதை புரிந்துகொண்டேன்," என்று இளமாறன் கூறினான் அழுத்தந்திருத்தமான குரலில்.

இதைக் கேட்ட சித்தர் முகத்தில்கூட உணர்ச்சிகள் மாறின. அதுவரை அதில் விரவிக் கிடந்த இகழ்ச்சிக்குறி மறைந்து அவன் ஓரளவு இமயவல்லியைப் புரிந்துகொண் டிருக்கிறான் என்பதை அறிந்துகொண்ட சித்தர் குரலை சர்வசாதாரணமாக்கிக்கொண்டு, "அதை எப்படிப் புரிந்து கொண்டாய்?" என்று வினவினார். அதைக் கேட்ட அவர் குரலில் வியப்பு மட்டுமின்றிக் கவலையும் லேசாகத் தொனித்ததைக் கண்டான் இளமாறன். வியப்புக்குக் காரணம் அவனுக்குப் புரிந்தது. கவலைக்குக் காரணம்

மட்டும் அவனுக்குப் புரியாததால் அலட்சியமாகவே பதில் சொன்னான் சேரநாட்டு வீரன், "எப்படிப் புரிந்துகொண்டா லென்ன? புரிந்துகொண்டேன் என்பது தெரிகிறதல்லவா?" என்று.

விந்தைச் சித்தர் சில விநாடி வாளாவிருந்தார். மீண்டும் அவனை நோக்கி, "இளமாறா! எப்படிப் புரிந்தது என்பதைக் கூறமாட்டாயா?" என்று கவலை குரலில் அலைபாயக் கேட்டார்.

"சொல்ல வேண்டிய அவசியமில்லை" என்று பிடிவாத மாகக் கூறினான் இளமாறன்.

"அவசியமிருக்கிறது" என்று வலியுறுத்தினார் சித்தர்.

"என்ன அவசியம்?" இளமாறன் பொறுமையை இழந்த குரலில் மெள்ள சூட்டைக் காட்டினான்.

விந்தைச் சித்தர் சில விநாடி தமது கூரிய கண்களை இளமாறன் முகத்திலிருந்து நீக்கி நிலத்தில் தாழ்த்திச் சில விநாடிகள் தீவிர ஆலோசனையில் இறங்கினார். பிறகு ஏதோ முடிவுக்கு வந்தவர்போல் கூறினார். "இளமாறா! உன் நன்மையை முன்னிட்டுத்தான் இத்தனையும் நான் விசாரிக்கிறேன்; நீ பயங்கரமான அலுவலை நாடிச் செல்கிறாய். சேரநாட்டு யானைப்படை புக முடியாத மூங்கில் கோட்டையில் நீ நுழையச் செல்கிறாய், யானைப் படைக்கு நேர்ந்த அழிவு உனக்கு ஏற்படாதிருக்க வேண்டு மானால் நீ யாருடன் செல்கிறாய், எந்த வசதிகளை எதிர் பார்த்துச் செல்கிறாய் என்ற விவரங்களைப் பூர்ணமாகத் தெரிந்துகொள்ளவேண்டும். அவற்றைப் பூர்ணமாக உனக்கு உணர்த்தவேண்டுமானால் நீ மதுரை மாநகரில் கால் வைத்தது முதல் நடந்த அனைத்தும் எனக்குத் தெரிய வேண்டும்."

அவர் சொன்னதெல்லாம் இளமாறன் கோபத்தை மேலும் தூண்டுவதற்குப் பதில் கோபத்தை அகற்றி வியப்பையே தூண்டியது. "என் விஷயத்தில் உங்களுக்கு ஏன் இவ்வளவு அக்கறை?" என்று கேட்டான் இளமாறன்.

விந்தைச் சித்தரின் விழிகளில் திடீரென ஒரு புத்தொளி தோன்றி மறைந்தது. "அதைப்பற்றிச் சொல்ல முடியாத நிலையிலிருக்கிறேன்" என்றார் சித்தர்.

"ஏன்!" என்று கேட்டான் இளமாறன், அவர் குரல் ஒலித்த மாதிரியைக் கண்டு.

"என் தற்சமய நிலை அப்படி."

"சித்தருக்கும் இந்த மாதிரிப் பலப்பல நிலைகள் உண்டா?"

"உண்டு."

"நீங்கள் முற்றும் துறந்த முனிவர்தானே?"

"இல்லை, பலவற்றைத் துறக்காதவன்."

"துறக்காதவரா?"

"ஆமாம் இளமாறா!" என்ற சித்தர் நீண்ட சோகப் பெருமூச்சு விட்டார். "துறவியாய் இருப்பவனுக்கு முதலில் நாட்டில் என்ன வேலை? நாட்டிலிருந்தாலும் இந்தப் பெரிய கட்டடங்கள் எதற்கு? பணிமக்கள் எதற்கு? இத்தனை நேரம் இமயவல்லி சொல்லியிருப்பாள் உனக்கு, நான் அரசனுக்கும் மற்றோருக்கும் ஆயுதப் பயிற்சியளிக்கிறேன் என்பதை. அது துறவியின் வேலையா? குடும்பத்திலிருப்பவர்களைவிட அதிக ஆட்கள் இந்த மடத்தின் எல்லைக்குள்ளிருக்கிறார்கள். இது துறவறமா? ஒருவகையில் துறவறம் பலவகையில் இல்லறத்தைவிட மோசமான அறம். பல தொல்லைகள்,

பல மனிதர்களைப்பற்றிய கவலைகள், இதெல்லாம் எதற்குத் துறவிக்கு?" என்று கேட்டார் சித்தர்.

"இவற்றை ஏன் உதற முடியவில்லை?"

"மனம் இடம் கொடுக்கவில்லை. உலகத்திலிருக்கும் பிணிகள், இயற்கையான பிணிகள் மட்டுமல்ல; மனிதன் மனிதனைத் தாக்கி விளைவிக்கும் காயங்கள் என் மனதைப் புண்ணாக்குகின்றன இளமாறா! அவற்றுக்குச் சிகிச்சை செய்கிறேன்."

"அப்படியானால் அந்தக் காயத்தை விளைவிப்பதற்கு வழியும் ஏன் சொல்லிக் கொடுக்கிறீர்கள்? ஆயுதப் பயிற்சிக் கூடத்தை எதற்காக ஏற்படுத்தியிருக்கிறீர்கள்?"

"கற்ற வித்தையைச் சொல்லித்தர மறுப்பது அதர்மம் என்று சாஸ்திரங்கள் கூறும். என் வித்தையை முதலில் பாண்டிய மன்னன் விரும்பினான், சொல்லிக்கொடுத்தேன். பிறகு மற்றவர்களும் விரும்பினார்கள். கூடமமைத்தேன்" என்றார் சித்தர்.

அந்தச் சித்தரின் விந்தையான கருத்துக்களை எண்ணிப் பெரும் வியப்பு அடைந்தான் இளமாறன். ஆனால் அவர் சொல்வதில் தவறு ஏதும் இருப்பதாகப் புலப்படவில்லை அவனுக்கு. ஆகவேதான் ஏதும் சொல்லாமல் அவரையே பேசவிட்டான்.

சித்தரும் அவன் மனப்போக்கை அறிந்துகொண்டு தங்கு தடங்கல் இல்லாமல் பேசினார்: "இளமாறா! நான் கூறுவ தெல்லாம் உனக்கு விளங்குவது கஷ்டம். நீ சாதாரண உலகில் சாதாரண முறையில் வாழ்பவன். நான் வாழும் முறை வேறு. என்னைப் பற்றி எதுவும் அறிய முயலுவதில் பயனில்லை. பல விஷயங்களை நான் சொல்லவும்

முடியாது. உதராணமாக உன் நலனில் எனக்கு ஏன் இத்தனை அக்கறை என்று கேட்டாய். அதற்கும் நான் பதில் கூற முடியாது. இறைவனருள் இருந்தால் ஒரு காலத்தில் நீ புரிந்துகொள்வாய். புரியாத விஷயங்களைப் பற்றிக் கவலைப்படாதே. இதுவரை பல விஷயங்களைப் பற்றி நீ கவலைப்படவில்லை..."

சித்தர் மேலும் பேசியிருப்பார். ஆனால் இளமாறன் அதை இடையில் வெட்டினான். "என்ன! பல விஷயங் களைப் பற்றி நான் கவலைப்பட்டதில்லையா?" என்று கேட்டான் இடைபுகுந்து.

சித்தர் தமது ஆராய்ச்சி விழிகளை அவன்மீது நன்றாக நாட்டினார். "ஆம் இளமாறா! பல விஷயங்கள் உனக்குப் புரியவில்லை. அதைப்பற்றி நீ கவலைப்படவுமில்லை" என்றார்.

"என்ன அவை?" என்று கேட்டான் இளமாறன்.

"உன்னை யார் பாண்டிய நாட்டுக்கு வரவழைத்தது?" என்று கேட்டார்.

"புலவர் பெருமான் குறுங்கோழியூர்க்கிழார்."

"புரிந்துகொண்டுதான் வந்தாயா அதை?"

"இல்லை, முதலில் தெரியாது. ஒரு வீரன் ஓலை கொண்டு வந்தான். அதில் வரும்படி பணித்திருந்தது."

"யார் பணித்தது?"

"அரசர்."

"எப்படித் தெரியும் உனக்கு?"

"ஓலையில் அரசர் முத்திரையிருந்தது."

"அதை ஏன் புலவர் பொறித்திருக்கக் கூடாது?"

"பொறித்திருக்கலாம். அரச முத்திரைக்குப் பணிய வேண்டியது என் கடமை."

"அது சரி, ஓலையைக் கொண்டு வந்தவன் யார்?"

"யாரோ ஒரு வீரன்."

"அவன் ஊர், பெயர்?"

"தெரியாது."

சித்தர் திடீரெனக் கடுமையாகச் சிரித்தார்! "ஓலை கொண்டு வந்தவன் ஊர் பெயர் யாது, அவனை அனுப்பியவர் யாரெனத் தெரியாது. அலுவல் யாதெனத் தெரியாது. அவை யாதும் தெரியாது. என்னைப் பற்றி மட்டும் தெரிந்துகொள்ள ஆசைப்படுகிறாய்?" என்று கடுமையாகவே சொன்ன சித்தர், "இளமாறா! வேறொரு முக்கிய விஷயத்தையாவது யோசித்தாயா?" என்று வினவினார். அவர் குரலின் கடுமையால் சிறிது சங்கடப் பட்ட இளமாறன் கேட்டான்: "என்ன சித்தரே?" என்று.

"நீ சேரநாட்டில் பெரிய படைத்தலைவனா?" என்று கேள்வியொன்றை வீசினார் சித்தர்.

இளமாறன் சிந்தையில் மெள்ள மெள்ளத் தெளிவு உதயமாயிற்று. "இல்லை" என்றான் அதன் விளைவாக.

"ஆயிரக்கணக்கான வீரர்களில் நீ ஒருவன்தானே?" என்று கேட்டார் சித்தர்.

"ஆம்."

அப்படியானால் உன்னை ஏன் அழைத்தார் புலவர் இப்பெரும் பணிக்கு, படைத்தலைவர்கள் பலர் இருக்கும் போது?"

இந்தக் கேள்வியால் நிலைகுலைந்து போனான் இளமாறன். ஆகவே வியப்பு மண்டிய கண்களை இமய வல்லி மீது திருப்பினான். இமயவல்லி தலைகுனிந்து உட்கார்ந்துகொண்டிருந்தாள். மீண்டும் சித்தரை நோக்கினான் இளமாறன்!

விளக்கொளி நன்றாயிருந்தும் மீண்டும் அவர் முகம் கல்லாகிவிட்டது. அவர் திடீரெனத் தமது இருப்பிடத்தி லிருந்து எழுந்துகொண்டார். பிறகு தமது தீட்சண்யமான கண்களை இளமாறன் மீது நிலைநிறுத்தி, "இளமாறா! இப்பொழுது தெரிந்திருக்க வேண்டும் உனக்கு, பல விஷயங்கள் உனக்குப் புரியவில்லை என்பது. மதுரையில் நடந்த விஷயங்களைப்பற்றி நீ சொல்ல மறுத்தாலும் பாதக மில்லை. நாளை நானறிந்து விடுவேன். ஆனால் ஒன்று நினைவில் வைத்துக்கொள். நீ இறங்கியிருக்கும் பணியில் அசைவது நீ அல்ல; உன்னைப் பெரும் சக்திகள் அசைக் கின்றன. உனக்குத் தெரியாத பல விஷயங்கள் இடையில் நடக்கும். உனக்கு ஏற்படக்கூடிய இடர்கள் அனந்தம். அவை அனைத்திலிருந்தும் உன்னை நான் காக்க முடியாது. ஆனால் சில விஷயங்களில் நீ கண்ணைத் திறந்துகொண்டு இந்தப் பணியில் இறங்குவது நல்லது. உதாரணமாக இதோ இருக்கிறாளே இமயவல்லி, இவள் அரசகுல மகள்தான். ஆனால் எப்படி அரசகுல மகள் என்பதையும் அறிந்து கொள்..." என்று சொல்லிக்கொண்டே போனவரை, "சித்தரே!" என்ற இமயவல்லியின் தீனமான குரல் தடுத்தது.

சித்தர் ஒரு விநாடிதான் இமயவல்லியை நோக்கினார். பிறகு நன்றாக நிமிர்ந்து நின்று, "இளமாறா! இமயவல்லி அரசகுலத்தின் சாதாரண மகளல்லள். பாண்டியன் நெடுஞ்செழியனின் சகோதரி" என்றார் உணர்ச்சி மிகுந்த குரலில்.

இளமாறன் சிலையென நின்றான். அவன் எதை எதிர்பார்த்திருந்தாலும் இதை மட்டும் எதிர்பார்க்கவில்லை. இருந்தாலும் பல விஷயங்கள் அவனுக்கு அந்தச் சமயத்தில் தெளிவுபட்டன. இமயவல்லியிடம் ராஜ முத்திரை மோதிரம் இருந்ததற்கும், அதைப் பார்த்ததும் பாண்டியன் நெடுஞ் செழியனின் கண்களில் தெரிந்த ஒரு புத்தொளிக்கும், அந்தச் சந்தர்ப்பங்களில் புரியாத காரணம் அப்பொழுதுதான் புரிந்தது அவனுக்கு. இமயவல்லி பாண்டிய மன்னனின் சகோதரி என்றறிந்ததும் அவளிடம் தான் நடந்துகொண்ட முறையைப்பற்றிப் பெரிதும் கலங்கினான் இளமாறன். 'சாதாரண வீரனான தான் எங்கே? மன்னன் சகோதரியான அவளெங்கே?' என்று நினைத்த அவன் இருவருக்கும் எந்தவிதத் தொடர்பும் சாத்தியமில்லை என்பதை சந்தேகமற அறிந்தான். ஆகவே சோகங்கலந்த பெருமூச்சு ஒன்று அவனிடமிருந்து வந்தது. அதைக் கவனித்த சித்தர் திருப்தி யுடன் தலையசைத்துவிட்டுச் சொன்னார்: "ஆம் இளமாறா! உனக்கு எட்டாப் பழம்தான் அது. இருப்பினும் அதுவல்ல முக்கியம். நீ அவள் யாரென்பதைப் புரிந்துகொண்டு இந்த அலுவலில் இறங்கவேண்டும் என்பதற்காகச் சொன்னேன். உண்மையில் எனக்கு இதில் சம்பந்தமேது மில்லை. ரதத்தில் சந்தித்தபோதே சொன்னேன், எனக்கும் அரசியலுக்கும் சம்பந்தமில்லை என்பதை. ஆனால் உனக்கு விஷயத்தைத் தெரிவிக்க ஆவலுள்ளவனாயிருந்தேன், தெரிவித்துவிட்டேன். அதற்காகவே ரதத்தை மடக்கினேன்" என்று.

இளமாறன் கண்களில் சிந்தனை படர்ந்தது. "இந்த ரதம் வரும் என்பது உங்களுக்குத் தெரியுமா?" என்று வினவினான் வியப்புடன்.

"தெரியும்."

"எப்படித் தெரியும்? இன்று மாலைதானே நான் மதுரைக்குள் நுழைந்தேன்."

சித்தர் புன்முறுவல் காட்டினார். "பாண்டியன் நெடுஞ் செழியனை என்னவென்று நினைத்தாய் இளைஞனே? மதுரைக்குள் நீ வந்ததும் அவனுக்குத் தெரியும் அதைப்பற்றி. உடனே எனக்குத் தகவலும் வந்தது. இந்த மடத்தில் செய்தி கொண்டுவந்த ஒற்றன் இன்னுமிருக்கிறான்" என்று கூறினார் சித்தர்.

"ரதம் இப்படித்தான் வருமென்று எப்படித் தெரியும்?" என்று வினவினான் இளமாறன்.

"இது கிளை வழி. திருட்டுத்தனமாகச் செல்வதற்கு இந்த வழிதான் சிறந்தது. தவிர முதல் நால்வர் சென்ற வழியும் இதுதான். அந்தச் சமயங்களிலும் ரதம் வந்தது. ஆனால் உயிர் இழக்கப்போன வீரனைத் தவிர இமயவல்லிக்குத் துணை வீரரும் வந்தார்கள். இந்தச் சமயம் இவள் உன்னுடன் தனித்து வந்திருக்கிறாள். தவிர ரதத்தில்..." என்று சொல்லப் போன சித்தர் வார்த்தையை அடக்கினார்.

"சொல்லுங்கள் சித்தரே!" இளமாறன் குரல் கடுமை யுடன் ஒலித்தது.

சித்தர் சிறிதும் சளைக்காமல் பதில் சொன்னார்: "உங்கள் இருவர் நிலையையும் கண்டேன் இளமாறா! இவள் உன்னை விரும்புகிறாளா அல்லவா என்பது எனக்குத் தெரியாது. முதன் முதல் ஓர் ஆடவனுடன் இவள் தனித்து வருவது இம்முறைதான். இவள் சாதாரணமாக நிலை குலையாதவள். ஆகவே ஒருவேளை உன்னிடம் இவளுக்கு ஆழ்ந்த அன்பிருக்கலாம். இருந்தால் நீ பிழைக்கலாம் ஒருவேளை. இல்லையேல் அழிந்துவிடுவாய். உன் உயிர் இவள் கையிலிருக்கிறது. இவள் சாதாரணப் பெண்ணல்ல..."

என்று கூறிய சித்தர், "அதைப்பற்றி இப்பொழுது நாம் பேசவேண்டாம். ஒன்று மட்டும் சொல்வேன் உனக்கு. நீ புலவரை நம்புவதைவிட என்னை நம்பலாம். அதை நாளையே புரிந்துகொள்வாய். இப்பொழுது படுத்துறங்குங்கள்" என்று சொல்லிவிட்டுச் சரேலென எழுந்து வெளியே சென்றுவிட்டார்.

இளமாறன் பெருவியப்பில் ஆழ்ந்திருந்தான். இமயவல்லியிருந்த மாதிரியிலிருந்து சித்தர் சொன்னது அத்தனையும் உண்மையே என்பது விளங்கிற்று அவனுக்கு. அடுத்தபடி ஏதோ பேச்சைத் துவங்க முற்பட்டான். இமயவல்லி அதற்கு இணங்கவில்லை. எதற்கும் பதில் சொல்லாமல் மௌனமாகிவிட்டாள். ஆகையால் இளமாறன் சற்று எட்ட இருந்த ஆசனத்தில் சென்று படுத்துக் கொண்டான்.

இரவு வெகு சீக்கிரம் ஓடிப் பொழுது புலர்ந்தது. ஆனால் அவர்கள் இருந்த விடுதியின் வெளிக்கதவு அடைத்தே இருந்தது. சூரிய வெளிச்சம் சாளரத்துக்குள் அடித்த பிறகுதான் இரண்டு பணியாளர்கள் வந்து கதவைத் திறந்தார்கள். அவர்களில் ஒருவன் சொன்னான்: "சித்தர் அவசர வேலையாக வெளியே போயிருக்கிறார். இரவில் சந்திப்பார் உங்களை" என்று.

"நாங்கள் எப்பொழுது புறப்படலாம்" என்று கேட்டான் இளமாறன் அந்தப் பணிமகனை.

"எங்களுக்குத் தெரியாது" என்று பதில் வந்தது.

அதே பதில்தான் அன்று பூராவும் கிடைத்தது இளமாறனுக்கு மற்றவர்களிடமிருந்தும். இமயவல்லி அன்று பூராவும் களையிழந்த மதிபோலிருந்தாள். இளமாறன் கேள்விகளுக்கு ஏதோ அரையும் குறையுமாகப் பதில்

சொன்னாள். மற்றபடி தீவிர சிந்தனையிலேயே ஆழ்ந்து கிடந்தாள். அவ்வப்பொழுது அவளுக்கு வேண்டிய பல சௌகரியங்களையும் பணிமக்கள் செய்து கொடுத்தார்கள். ஆனால் அந்த விடுதியைவிட்டு வெளியே போக மட்டும் அனுமதி கிடைக்கவில்லை. இருமுறை பணிமக்களை நோக்கிச் சீறினான் இளமாறன். அதை இமயவல்லியே தடுத்தாள். "அவர்களைக் கோபிக்காதீர்கள். நாம் இப்பொழுது சித்தர் கையிலிருக்கிறோம். அவர் இஷ்டப் பட்டால்தான் இங்கிருந்து போகமுடியும்" என்று கூறினாள் அவள்.

இளமாறன் வியப்பும் கோபமும் கலந்த உணர்ச்சி களுடன் அன்றையப் பொழுதை சித்தர் மடத்தின் அந்த விடுதியில் கழித்தான். அன்று பூராவும் சித்தர் தென்பட வில்லை. அன்று இரவு ஏறிச் சிறிது நேரத்திற்குப் பின்தான் உள்ளே நுழைந்தார். அவர் கைகளில் இரண்டு பெரும் கிண்ணங்களில் பால் இருந்தது. அவர் எதுவும் பேசாமல், "இன்று பூராவும் இருவரும் சரியாக உணவருந்தவில்லை என்று கேள்விப்பட்டேன். இதை அருந்துங்கள்," என்று இருவரிடமும் நீட்டினார் கிண்ணங்களை.

"அவசியமில்லை" என்றான் இளமாறன்.

"உம் அருந்துங்கள்" அதிகாரத்துடன் ஒலித்தது சித்தர் குரல். அவர் பார்வையிலும் அந்த அதிகாரம் பூர்ணமா யிருந்தது. அவருடைய ஆராய்ச்சிக் கண்களால் கவரப்பட்ட அந்த இருவரும் பதிலேதும் பேசாமல் பாலை அருந்தி னார்கள். "படுத்து உறங்குங்கள்" என்று அதே அதிகாரக் குரலில் கூறிவிட்டு வெளியே சென்றுவிட்டார் சித்தர்.

இளமாறன் தூர இருந்த மஞ்சத்தில் சென்றமர்ந்தான். இமயவல்லி அசதியால் கண்களை மூடி மஞ்சத்தில் சாய்ந்து

உறங்கத் தொடங்கிவிட்டதைக் கவனித்தான். தானும் மெள்ளக் கண்களை மூடிக்கொண்டான். இன்பமான கனவுகள் பல எழுந்தன. பிறகு அவையும் மறைந்தன.

மறுநாள் காலை கண்விழித்த போது திடீரெனப் பிரமை பிடித்து அலறி எழுந்து உட்கார்ந்தான் இளமாறன். அவனுடன் வியப்புக் கூச்சலிட்டு எழுந்தாள் இமயவல்லியும். அவர்கள் கண்களுக்கெதிரே மிக ரமணீயமாக ஆனால் பயங்கரமாய் எழுந்தது மூங்கில் கோட்டை. "இதென்ன சித்தரின் மாயமா?" என்று வாயைப் பிளந்தான் இளமாறன்.

# 16

## கடமையும் உடைமையும்

சித்தர் மடத்தின் தனி விடுதியில் உறங்கி, முன்பின் அறியாத வேறோர் இடத்தில் எழுந்த இளமாறன் பல விநாடி பிரமை பிடித்துக் கண்களுக்கெதிரே விரிந்த அற்புதக் காட்சியைக் கண்டுகொண்டே இருந்தான். அவனிருந்த இடம் ஒரு காட்டின் முகப்பு. எதிரே தெரிந்தது வெறும் பொட்டல் வெளிக்கிடையே ஒரு சிறு கோட்டை. இமயவல்லி புலவர் இல்லத்தில் செய்த விவரணத்திலிருந்து அதுதான் மூங்கில் கோட்டையாக இருக்க வேண்டுமென்று தீர்மானித்தான் இளமாறன்.

கோட்டை அப்படியொன்றும் பெரிய கோட்டையா யில்லாவிட்டாலும் அதன் சுவர்கள் பெரும் கோட்டைச் சுவர்களின் கனத்துக்கு அமைக்கப்பட்டிருப்பதைத் தூரத்தி லிருந்தே புரிந்துகொண்ட அவன், அது உண்மையில்

பழங்காலத்துக் கோட்டை என்பதையும், சமீபத்தில் பழுது பார்க்கப்பட்டிருக்கிறதென்பதையும், சுவரிலும் உட்கோட்டைச் சிகரங்களிலுமிருந்த புது ஓடுகளிலிருந்து ஊகித்துக்கொண்டான். பழங்கோட்டையைப் பாண்டிய மன்னன் சமீபத்தில் புதுப்பித்ததற்குக் காரணமும் நன்றாகப் புரிந்திருந்தது அவனுக்கு. மாந்தரஞ்சேரல் இரும்பொறைக்கு அதை வாசஸ்தலமாக்கவே அக்கோட்டையை நெடுஞ் செழியன் பழுது பார்த்திருக்கிறானென்பதை அறிந்து கொண்ட அந்தச் சேரநாட்டு வீரன், அதை வளைத்து நின்ற கட்டாந்தரையை உற்று நோக்கினான். அதில் லேசாக முளைக்கத் தொடங்கிய புற்களின் நுனிகளும், ஆங்காங்கு தெரிந்த பெரும் மரங்களின் அடிக்கட்டைகளும் அந்தப் பகுதி கட்டாந்தரையாகி அதிக நாள் ஆகவில்லை என்பதையும், காட்டுக்கு நடுவிலிருந்த அந்தப் பழங் கோட்டையைச் சுற்றிலும் காடு அப்பொழுதுதான் வெட்டப் பட்டிருக்கிறதென்பதையும் அறிந்துகொண்ட இளமாறன், அந்தத் தரையின் கீழ் இமயவல்லி கூறிய பெரும் அகழிகள் இருக்க முடியுமா என்றும் சிந்தித்தான். அப்படிச் சிந்தித்த அவன், அந்தத் தரையின் கீழ் அத்தகைய அகழிகள் இருக்கும் பட்சத்தில் அது விந்தைதான் என்பதை உணர்ந்து கொண்டான்.

காட்டின் முகப்பிலிருந்து இத்தனையும் பார்த்த இளமாறன் அந்தக் கோட்டையை நடைமூலம் அணுகுவதில் ஆபத்து ஏதுமில்லை என்பதை மட்டும் தரையின் கெட்டியைப் பார்த்துத் தீர்மானித்துக்கொண்டான். "சாதாரண வீரர்கள் கோட்டையை நோக்கி நடந்துவிடலாம் மெதுவாக. ஆனால் சுற்றுமுற்றும் பொட்டல் வெளியா யிருப்பதால் கோட்டைக் காவலர் கண்களில் அகப்படாமல் கோட்டையை அணுக முடியாது" என்று தனக்குத்தானே

சொல்லிக்கொண்டான் இளமாறன். இப்படிப் பல சிந்தனை களில் ஈடுபட்டு நின்ற அவன் அப்பொழுது பொழுது விடிந்து பல நாழிகைகள் ஆகிவிட்டதன் அடையாளமாக நன்றாக எழுந்து கோட்டைக்குப் பின்னிருந்து காட்சியளித்த பகலவன், கோட்டைப் பிரதேசத்துக்குத் தனியொரு மெருகைக் கொடுத்துக்கொண்டிருப்பதையும் கவனித்தான். கோட்டை மேற்பார்வைக்கு அழகாக இருந்தது. ஆனால் அந்த அழகைச் 'சுற்றி எத்தனை பயங்கரம் இருந்தது?

அந்தப் பயங்கரத்தை ஏற்கெனவே இமயவல்லி விவரித் திருந்தாளாகையால் அதைப்பற்றி அதிக சிந்தனையை ஓட்டாத இளமாறன் தாங்கள் கிடத்தப்பட்டிருந்த இடத்தைக் கவனித்தான். அந்த இடத்தில் இலைச்சருகுகள் அழகாகப் பரப்பப்பட்டிருந்தன. சுற்றிலும் முட்கள் முதலியன விலக்கப்பட்டுச் சுத்தமும் செய்யப்பட்டிருந்தது. அங்கு வந்த விதம் அவனுக்குச் சந்தேகத்துக்கு இடமின்றித் தெரிந் திருந்தது. இரவில் சித்தர் கொடுத்த பாலில் மயக்க மருந்து கலந்திருக்க வேண்டுமென்பதிலோ, மயக்கம் கொடுத்த சித்தர்தான் தங்களை அங்கு கொண்டுவந்து கிடத்திவிட்டுப் போயிருக்கிறார் என்பதிலோ சிறிதும் சந்தேகமில்லை சேரநாட்டு வீரனுக்கு. தாங்கள் படுத்திருந்த இடத்தைச் சுற்றுமுற்றும் கவனித்த இளமாறன் அங்கு சில காலடிகளே இருப்பதைக் கவனித்ததும் தங்களிருவரையும் யாரோ தூக்கிவந்து கிடத்திவிட்டுப் போயிருக்கவேண்டுமென்று தீர்மானித்தான்.

ஆயுத வண்டிகள் நெருங்காமலிருப்பதற்காகப் பழைய காலத் தமிழகக் கோட்டைகளைச் சுற்றிலும் அடர்ந்த காடுகளை வளர்ப்பது வழக்கமாதலால் அந்த வழக்கத்தை யொட்டியே அந்தச் சிறு கோட்டைகளைச் சுற்றிலும் காடு வளர்க்கப்பட்டிருப்பதால், ரதம் வர இயலாமல் சித்தர்

ஆட்களை விட்டுத் தங்களைத் தூக்கிவரச் செய்திருக்கிறார் என்பதைப் புரிந்துகொண்ட இளமாறன் மேற்கொண்டு என்ன செய்வது, எங்கு போவது என்பதை அறியாமல் இமயவல்லியை நோக்கினான். இமயவல்லியின் முகம் பிரமிப்பில் ஆழ்ந்திருந்தது. அவளுக்குப் புரியாத பல விஷயங்கள் நிகழ்ந்திருப்பதையும் அவள் முகக்குறி உணர்த்தியது. ஆகவே இளமாறன் அவளை நோக்கி, "இமயவல்லி! இதுதானே மூங்கில் கோட்டை?" என்று கேட்டான்.

'ஆம்' என்பதற்கு அறிகுறியாக அவள் தலையை மட்டுமே அசைத்தாள்.

"நாம் இருக்கும் இந்தக் காடுதான் நாம் அடைய வேண்டிய இடமா?" என்று மீண்டும் வினவினான் இளமாறன்.

ஆமோதிப்பதற்கு அறிகுறியாக மறுபடியும் தலையையே அசைத்தாள் இமயவல்லி.

இளமாறன் அவள் மௌனத்தினால் சற்றே சினமடைந் தாலும் அதைக் காட்டாமலே கேட்டான்: "அடுத்து நாம் என்ன செய்ய வேண்டும்?" என்று.

இமயவல்லி மெல்ல அவனை நோக்கிக் கண்களை உயர்த்தினாள். பிறகு மிகவும் அவநம்பிக்கை உதிர்த்த குரலில், "இந்தக் காட்டில் நண்பர்கள் இருக்கிறார்கள், அவர்களைச் சந்திக்க வேண்டும்" என்றாள்.

"அப்படியானால் வழியைக் காட்டிச் செல்" என்று இளமாறன் சற்றுக் கடினமாகக் கூறினான்.

அவள் பேசாமல் வழிகாட்டி, காட்டுக்குள் நடந்தாள். இளமாறனும் மௌனமாகப் பின்தொடர்ந்தான். உள்ளே செல்லச் செல்லக் காடு மிகவும் அடர்த்தியாகவும்,

ரமணீயமாகவும் இருந்தது. புஷ்பக் கொடிகள் மரங்கள் மீது தாவிச் சென்று கொத்துக்களைக் கீழே தொங்கவிட்டு அவ்விருவர் முகங்களையும் தடவித் தடவி வழிவிட்டன. சற்றுத் தூரத்துக்குப் பின் வந்ததும் அடர்ந்திருந்த ஒரு கொடிக் கூட்டத்தை விலக்கிக் காட்டினாள் இமயவல்லி. எதிரே எழுந்தது ஓர் அற்புதப் பூம்பொழில். அந்தக் காடும் கோட்டையும் இருந்தது ஒரு மலைச் சரிவாதலால் பூம்பொழிலிலிருந்தது சுனைநீர் என்பதைப் புரிந்துகொண்ட இளமாறன், அதை விடுவிடென்று நாடிச் சென்று பக்கத்தி லிருந்த விழுதொன்றை வெட்டிப் பல் துலக்கி முகம் கழுவிச் சுனைநீரை எடுத்து இரண்டு மூன்று கைகள் பருகி எழுந்தான்.

தன்னைப் போலவே பல் துலக்கி முகம் கழுவி எழுந்த இமயவல்லி தனக்கு முன்பு கரை சேர்ந்து கொடிகளுக்கு அருகில் நின்றுகொண்டிருப்பதைக் கண்டு கண்களால் அவளை அப்படியே விழுங்கினான் இளமாறன். இமய வல்லியின் அழகு அந்தக் காலை நேரத்தில் பன்மடங்கு அதிகமாகத் தெரிந்தது. கொண்டையில் முன்னாளிட்ட மல்லிகைச் சரத்தை அவள் எடுத்து எறிந்துவிட்டதால் அவள் கொண்டையைக் கொடிகளிலிருந்த பூங்கொத்துக்கள் தடவிக் கொண்டிருந்தன. பக்கவாட்டில் இருந்த ஒரு பூங்கொத்து அவள் கன்னத்தைத் தடவியது. மரங்களை ஊடுருவி வந்த கதிரவனின் இரண்டொரு கதிர்கள் அவள் கண்களைக் கூசச் செய்ததால் கண்களை மூடினாள். அவள் கண் கூச்சம் நிற்கவே மெல்லக் கண்களைத் திறந்தாள். அவள் கூச்சம் மறைந்த காரணம் அப்பொழுதுதான் புரிந்தது. கதிரவன் கண்களை மறைத்து நின்றான், அவளெதிரே சேரநாட்டுக் கட்டழகன். கதிரவன் கண்களைத்தான் அவன் மறைத்துத் தடுக்க முடிந்தது; மாறன் கணைகளையல்ல.

தனித்த காடு, தருண வயதுள்ள இருவர், தடுக்க யாரும் இல்லையென்ற துணிவு. பஞ்சும் நெருப்பும் சேர்ந்த கதை, பற்றிக்கொண்டதில் வியப்பென்ன இருக்கிறது? இயற்கையின் வேகம் அவ்விருவரையும் ஆட்கொண்டது. அவன் அவளை உடனே இறுகத் தழுவவில்லை; மெள்ள மெள்ள அவள் மலர்க் கன்னங்களை வருடினான். அந்தக் கன்னங்களுக்கு அருகேயிருந்த புஷ்பக் கொத்துக்களைக் கன்னங்களோடு சேர்த்துத் தன் கைகளால் அழுத்தினான். மலர்கள் மென்மையாயிருந்தன. மலர்களைத் தாங்கிய காம்புகள் கடினமாயிருந்தன. மலர்கள் வழவழத்தன. கன்னங்களில் காம்புகள் உறுத்தி இம்சைப்படுத்தி நீளச் சிவப்புக் கோடுகளை உற்பத்தி செய்தன.

அந்த இம்சையைவிட அதிக இம்சையும் இன்பமுமிருந்தன அந்த வாலிபன் கரங்களில். கன்னத்தை வருடினானா கிள்ளினானா என்று அவளுக்குத் தெரியவில்லை. அடுத்த விநாடி அவள் உடல் பலமாக இழுக்கப் பட்டது. இரும்புக்கரங்கள் புஷ்ப உடலை வளைத்துக் கொண்டன. இதழ்கள் இரண்டு அவளைப் பேசவிடாமல் தடுத்தன. பக்கத்திலிருந்த மலர்க்கொடிகள் ஆடிப் பரிகசித்துப் பல் இளித்தன. சற்று அருகேயிருந்த மரக் கிளையிலிருந்த ஒரு மைனா தனது மஞ்சள்நிற மூக்குடன் தலையைத் தாழ்த்திக் கீழே நடப்பதை உற்றுப் பார்த்தது. காட்டு மான்களின் காலடி அரவமும் இதர பட்சி ஜாலங்களின் கூச்சலும் கேட்டன. ஆனால் இருவரும் செவி இழந்தனர், பார்வையிழந்தனர். உணர்ச்சிகள் பெருக்கெடுத்தோடிக்கொண்டிருந்தன. அந்த நிலையில் மெள்ளக் கொடிகளின் மறைவுக்கு நகர்ந்துவிட்ட இருவரும் சற்று நேரங்கழித்து ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர். ‘இமயவல்லி ஒரு முறையே கண்களைத்

திறந்தாள். பிறகு மூடிவிட்டாள். இளமாறன் அவள் முகத்தைச் சில விநாடி உற்றுப் பார்த்தான். பிறகு மெள்ளத் தன் கைகளை நீக்கிப் பெருமூச்செறிந்தான். நீக்கிய கைகளை அவள் கைகள் எடுத்து உடலைப் பலவந்தமாக வளைத்துக் கொண்டன.

"வேண்டாம் இமயவல்லி, ஆபத்தான கட்டத்திலிருக் கிறோம்" என்றான் இளமாறன்.

அவள் கண்களை அரைவாசித் திறந்து, "ஆம்" என்றாள்.

அந்த ஆமில், அர்த்தங்கள் ஆயிரம் இருந்தன. "நீ நினைக்கும் ஆபத்தைச் சொல்லவில்லை இமயவல்லி" என்று குளறினான் இளமாறன்.

இமயவல்லி காமப் புன்முறுவல் கோட்டினாள். "நான் நினைக்கும் ஆபத்து என்ன?" என்று கேட்டாள் மெல்லிய குரலில்.

"என் வாயால் சொல்லமாட்டேன்."

"பயமாயிருக்கிறதா?"

"ஆம்."

"ஆண்மகன் பயப்படலாமா?"

"பயப்படலாம்!"

"பயப்படுபவர் மூங்கில் கோட்டைக்குள் எப்படி நுழையப் போகிறீர்கள்?"

"உயிரைத் துறப்பதற்கு நான் என்றும் பயப்பட்ட தில்லை."

"வேறு எதற்குப் பயப்படுகிறீர்கள்?"

"உணர்ச்சிகளைத் துறப்பதற்கு. கடமையைத் துறப்பதற்கு."

இமயவல்லி இன்பமாக நகைத்தாள். "உணர்ச்சிக்கரை உடைந்துவிட்டது வீரரே! இனி கடமையை நிறைவேற்றுவது உமது பொறுப்பு" என்றாள் அவள்.

"என்ன, கடமையா?"

"அணைத்தவளை ஏற்பது வீரர் கடமை."

இளமாறன் மீண்டும் பெருமூச்செறிந்தான். "நீ சொல்வது புரிகிறது இமயவல்லி. கந்தர்வ மணம் போர் இனத்தினருக்கு அனுமதிக்கப்பட்டிருக்கிறது. உன்னிடம் மனத்தைப் பறிகொடுத்தேன். பார்த்த விநாடியே உணர்ச்சி களைச் சற்றுத் துறந்தேன் மூடுதேரில். அடியோடு உதறி விட்டேன் இப்பொழுது. இருப்பினும் உன்னை நான் இப்பொழுது ஏற்கமுடியாது" என்றான் இளமாறன்.

"காரணம்?" இமயவல்லியின் குரல் வருத்தந் தோய்ந்து கிடந்தது.

"இமயவல்லி! நீ மட்டும் பாண்டிய மன்னன் சகோதரி என்று அறிந்திருந்தால் உன்னிடமிருந்து விலகி நின்றிருப்பேன். தெரியாமல் மனத்தைப் பறிகொடுத்தேன். தெரிந்தபின்பு எச்சரிக்கையாயிருந்திருப்பேன். ஆனால், அது விஷயத்தில் எச்சரிக்கை செய்த சித்தர் எந்தக் காரணத்தாலோ நம்மிருவரையும் இங்கு கொண்டு தள்ளி விட்டார். உன் அருகாமை என் உணர்ச்சிகளை அலை மோதச் செய்துவிட்டது" என்று சொன்ன இளமாறன், அங்கிருந்த மரத்தடியில் உட்கார்ந்துவிட்டான்.

இமயவல்லி அவனுக்கு அருகில் உடலோடு உடல் உராய உட்கார்ந்துகொண்டாள்; அவன் கையை எடுத்துக்கொண்டு தலையை அவன் தோள்மீது சாய்த்தாள். அப்படியே தலையை மெள்ளத் திருப்பி அவன் காதுக்கருகில்

சொன்னாள்: "வீரரே! அதையெல்லாம் அலசிப் பார்க்க இப்பொழுது சமயமில்லை" என்று.

"வேறெதை அலசிப் பார்க்க வேண்டும்?" என்று வினவினான் இளமாறன்.

"காலம் ஓடுவதை."

"எதற்காக எண்ணிப் பார்க்க வேண்டும்?"

"இன்றிரவு நீங்கள் அநேகமாக எதிரே தெரியும் அந்தப் பயங்கரக் கோட்டைக்குள் இருப்பீர்கள். உயிருடன் திரும்பி வருவீர்களோ என்னவோ தெரியாது..."

"அதனால்?"

"உயிர் இருக்கும்போதே..."

"என்ன இமயவல்லி?"

"உடைமையை ஏற்றுக்கொண்டு விடுங்கள்."

"நான் உயிரிழந்தால் உடைமை என்ன ஆவது?"

"அதைப்பற்றி நீங்கள் கவலைப்படாதீர்கள்."

இளமாறன் அவளை உற்று நோக்கினான். "தவறு இமயவல்லி" என்றான்.

"எது தவறு?" என்று கேட்டாள்.

"நாளை உயிர் துறக்கக்கூடியவன் இன்று ஒரு பெண்ணை ஏற்பது" என்று திட்டமாகக் கூறினான்.

"நாளை உயிர் துறக்கப் போகிறவர் இன்றொரு பெண்ணைத் தழுவலாம் போலிருக்கிறது."

"தவறுதான்."

"தவறு என்று சொல்லிவிட்டால் சரியாகிவிடுமா வீரரே! சில தவறுகளைத் திருத்த முடியாது. என்மேல்

இதுவரை எந்த ஆடவன் கரமும் பட்டது கிடையாது. இனிமேலும் படாது. எதற்கும் பூர்த்தி என்பது ஒன்று உண்டு. காலத்துக்கோ வேளைக்கோ அது காத்திருப்ப தில்லை.”

இமயவல்லி இதைச் சொல்லித் தலையை அவன் தோளிலிருந்து எடுத்து மரத்தில் நன்றாகச் சாய்த்து, கால்களை நெடுக நீட்டினாள். அந்த மலர்க் கால்களை உற்று நோக்கிய இளமாறன், மெள்ள அவளை நோக்கி மீண்டும் தலை தாழ்த்தினான். அதே சமயத்தில் பக்கத்தில் கொடிகளின் சலசலப்பு ஏற்பட்டது. மனிதர் நடமாடும் அரவம் கேட்டது. இளமாறன் திடீரென எழுந்து கச்சையி லிருந்து வாளை இழுத்துக்கொண்டு கொடியை விலக்கினான்.

# 17

# கடைசி முயற்சி

**ப**ரஸ்பர அணைப்பில் பரவசப்பட்டு உணர்ச்சிகளின் ஓட்டத்துக்கு இடங்கொடுத்து விட்டிருந்த அந்த இருவரும் பக்கத்துக் கொடிகளில் ஏற்பட்ட சலசலப்பைக் கேட்டதும் பதறி விலகி எழுந்திருந்ததன்றி, அவ்விருவரில் இளமாறன் வாளை உருவிக்கொண்டு கொடிகளை விலக்கி வெளிப் புறத்தை நோக்கி வெகு வேகமாகச் சென்றான். கொடி மறைவை விட்டு அவன் வெளியே வந்ததும் அந்தக் கொடியின் பக்கப் பகுதிகளை நாலைந்து வீரர்கள் விலக்கி விலக்கி பார்ப்பதைக் கண்டதும் சினத்தின் வசப்பட்டு,

"யார் நீங்கள்? என்ன செய்கிறீர்கள் இங்கே?" என்று அதிகாரத்துடன் விசாரித்தான். இதைக் கேட்டதும் கொடிகளின் மறைவைச் சோதனை செய்துகொண்டிருந்த வீரர்கள், சோதனையை விட்டுச் சரேலெனத் திரும்பி வாளும் கையுமாக நின்ற இளமாறனை ஏறிட்டுச் சில விநாடி நோக்கினார்கள். அவர்கள் பார்வையில் கோபம் இல்லாததையும் வியப்பே இருந்ததையும் கவனித்த இளமாறன், அந்த வியப்புக்குக் காரணத்தை அறியாததால், "என்ன அப்படி ஆச்சரியத்துடன் பார்க்கிறீர்கள்? புதிதாக இப்பொழுதுதான் மனிதப் பிறவியைப் பார்க்கிறீர்களா?" என்று மீண்டும் வினவினான் அதட்டலாக.

அந்த அதட்டல் அவர்களுக்கு அதிக வியப்பை அளித்திருக்க வேண்டும். அவர்கள் ஒரு விநாடி பதிலேதும் சொல்லாமல் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டார்கள். பிறகு அவர்களில் தலைவனாயிருந்தவன் சொன்னான்: "இங்கு மனிதப் பிறவிகள் பல வருவதைப் பார்த்திருக்கிறோம். ஆனால் உயிருடன் இங்கு நின்று வார்த்தையாடும் மனிதப் பிறவியை இன்றுதான் புதிதாகப் பார்க்கிறோம்" என்று.

வீரர்களின் தலைவன் பேச்சு அதிக விசித்திரமாயிருந்தது இளமாறனுக்கு. "இதற்கு முன்பு பிணங்களைத்தான் பார்த்திருக்கிறீர்களா?" என்று வினவினான் கோபக் குரலை ஏளனக் குரலாக மாற்றிக்கொண்ட இளமாறன்.

"ஆம்" என்று சர்வசாதாரணமாகச் சொன்னான் வீரர் தலைவன்.

"என்ன ஆம்?" எரிச்சலுடன் எழுந்தது இளமாறன் கேள்வி.

"இதுவரையில் இந்த இடத்திலே பிணங்களைத்தான் பொறுக்கியெடுத்துச் சென்றிருக்கிறோம்."

"பிணங்களையா! பன்மையிலிருக்கிறதே விளக்கம்."

"ஆம் பிணங்களைத்தான். இந்த இடத்துக்கு வந்த ஒவ்வொருவரும் கொல்லப்பட்டிருக்கிறார்கள். சுமார் நூறு பிணங்களை நாங்களே தூக்கிச் சென்று புதைத்திருக் கிறோம்."

"இங்கு வருபவர்கள் ஏன் இறக்கிறார்கள்?" என்று வினவினான் இளமாறன்.

வீரர் தலைவன் குழப்பம் நிறைந்த பார்வையொன்றை அவன் மீது வீசினான். பிறகு கேட்டான், "நீங்கள் பாண்டிய நாட்டுக்குப் புதிதோ?" என்று.

"ஆம், ஏன் கேட்கிறீர்கள்?" என்று வினவினான் இளமாறன்.

"இந்த இடம் மூங்கில் கோட்டைக்கு நேர் எதிரில் இருக்கிறது. இங்கு வரும் யாரையும் பார்த்த மாத்திரத்தில் வெட்டிப் போடும்படி பாண்டிய மன்னன் உத்தரவிருக்கிறது. சுமார் நூறு ஒற்றர்கள் சேரநாட்டிலிருந்து இங்கு வேவு பார்க்க வந்து மாண்டிருக்கிறார்கள். நீங்கள் பிழைத்திருப்பது தான் விசித்திரமாயிருக்கிறது" என்று பதில் கூறினான் வீரர் தலைவன்.

நிலைமையை நன்கு புரிந்துகொண்டான் இளமாறன். மூங்கில் கோட்டையில் மட்டுமின்றி அதன் எதிரிலிருக்கிற காட்டிலும் பாண்டிய நாட்டுக் காவலர் நடமாட்டம் பலமாக இருக்கிறதென்பதையும், மூங்கில் கோட்டைக்கு அருகே வரத் துணிந்தவர்கள் யாரும் உடனடியாக அழிக்கப்படுகிறார்கள் என்பதையும் உணர்ந்துகொண்ட இளமாறன் அந்த வீரர்கள்

யாரென்பதை அறிய விரும்பி, "நீங்கள் யார்? கொடிகளின் மறைவில் என்ன தேடுகிறீர்கள்?" என்று வினவினான்.

"நாங்கள் யாரென்பதைச் சீக்கிரம் புரிந்து கொள்வீர்கள்."

"ஏன், இப்பொழுது என்ன?"

"எப்படியும் நீங்கள் எங்களுடன் வந்துதான் ஆக வேண்டும்" என்றான் வீரர் தலைவன்.

"உங்களுடன் வரவேண்டும் என்று கட்டாயம் உண்டா?" சற்றுக் கோபத்துடன் கேட்டான் இளமாறன்.

பதிலுக்கு வீரர் தலைவன் சகாக்களைப் பார்த்துப் புன்முறுவல் செய்தான். பிறகு அதே புன்முறுவல் இதழ்களில் தவழ இளமாறனை நோக்கி, "அப்படியொன்றும் கட்டாயமில்லை, தங்களிஷ்டம்தான்" என்றான்.

அவன் புன்முறுவலும் பேச்சும் எரிகிற கொள்ளியை ஏறத் தள்ளியதால், "என்ன என் இஷ்டம்?" என்று வினவினான் இளமாறன், விழிகள் சினத்தால் சீற.

"எங்களுடன் உயிருடன் நடந்து வருவதா அல்லது நாளை நாங்கள் வந்து உங்களைப் பிணமாகத் தூக்கிச் செல்வதா என்பது உங்களிஷ்டம்" என்று நகைச்சுவையைக் காட்டினான் வீரர் தலைவன்.

அந்த வீரர்களின் போக்கும் பேச்சும் விசித்திரமா யிருந்தது இளமாறனுக்கு. வாளை உருவி நின்ற அவர்கள் அவனைத் தாக்க முன்வரவில்லை. யாரோ வழிப் போக்கனிடம் பேசுவதுபோல் பேசினார்கள். அவர்களைத் தொடர்வதற்கு இளமாறன் இணங்கவில்லை என்று அவர்களுக்குத் தோன்றியதால் வீரர் தலைவன் மற்றவர் களை நோக்கி, "சரி சரி, வாருங்கள். நாம் அவர்களைத்

தேடுவோம், நேரமாகிறது" என்று சொல்லிக்கொண்டு மீண்டும் கொடிவீடுகளை விலக்கிச் சென்றான். அப்படிச் சென்றவனை "நில்" என்ற இளமாறனின் அதிகாரக் குரல் தடுத்தது.

வீரர் தலைவன் திரும்பிக் கேட்டான், "ஏன்? இன்னும் ஏதாவது அறிய விரும்புகிறீர்களா?" என்று.

"ஆம். நீங்கள் யாரைத் தேடுகிறீர்கள் என்பது தெரிய வேண்டும்."

"உங்களுக்கு என்ன அவசியமோ அது?"

"உங்களுக்கு ஒருவேளை நான் உதவலாம்."

"முடியாது."

"ஏன் முடியாது?"

இதைக் கேட்ட வீரர் தலைவன் சிறிது யோசித்துவிட்டுக் கேட்டான்: "அப்படியானால் சொல்லுங்கள். இங்கு யாராவது பெண்ணைப் பார்த்தீர்களா?" என்று.

இளமாறன் இதழ்களில் புன்முறுவல் அரும்பியது. "பார்த்தேன்" என்றான் அந்த முறுவலுடன்.

"தனியாகவா?"

"இல்லை."

"ஓர் ஆண்பிள்ளையும் கூட இருந்தாரா?"

"இருந்தார்."

"நல்லவேளை. எங்கே அவர்கள்?"

"ஆண்மகன் உங்கள் கண்ணுக்கெதிரே இருக்கிறார்."

"பெண்?"

"இதோ" என்ற சொல் கொடிகளுக்கிடையே இருந்து வெளிவந்தது. கொடிகளை விலக்கிக்கொண்டு வந்த இமயவல்லியும் அந்த வீரர்களை வியப்புடன் நோக்கினாள்.

"யார் நீங்கள்?" என்று வினவினாள்.

"வனவாசிகள்" என்று பதில் வந்தது வீரர் தலைவனிட மிருந்து.

"சரி வழிகாட்டிச் செல்லுங்கள்" என்ற இமயவல்லி அவர்களைத் தொடர முற்பட்டதன்றி, "வாருங்கள். இவர்கள் நமது நண்பர்கள்" என்றாள் இறமாறனையும் நோக்கி.

"நண்பர்கள் என்று எப்படித் தெரியும் இமயவல்லி?" என்று வினவினான் இளமாறன்.

"அவர் பதில் சொன்னதைக் கவனிக்கவில்லையா நீங்கள்?"

"கவனித்தேன். வனவாசிகள் என்று பதில் சொன்னார்."

"அந்தப் பதில் போதும் எனக்கு" என்ற இமய வல்லி மறுவார்த்தை பேசாமல் வீரர்களைத் தொடர்ந்து சென்றாள். இளமாறனுக்கு எல்லாம் விசித்திரமாயிருந்தது. 'வனவாசிகள்' என்ற சொல்லில் என்ன பிரமாதப் பொருளைக் கண்டுவிட்டாள் இமயவல்லி என்று தன்னைத் தானே கேட்டுக்கொண்டான் பலமுறை. ஓர் ஆணையும் பெண்ணையும் அவர்கள் தேடியதாகச் சொன்னதும் தங்களைத்தானிருக்க வேண்டுமென்று அவன் ஊகித்துக் கொண்டான். ஆனால் ஓர் ஆணையும் பெண்ணையும் சேர்த்துத் தேடவேண்டிய பிரமேயம் என்னவென்று புரிய வில்லை அவனுக்கு. அதுவும் தாங்கள் காலையில் படுத்துக் கிடந்த முகப்புக்கு அருகிலுள்ள சுனையருகில் தேட

வேண்டிய அவசியம் விளங்கவில்லை அவனுக்கு. தாங்கள் வந்தது தங்களுக்கே தெரியாதிருக்கக் காட்டிலிருக்கும் இவர்களுக்கு எப்படித் தெரிந்தது என்று சிந்தித்துப் பார்த்தான் இளமாறன். தங்களை அத்தனை அக்கறையுடன் தேடும் இவர்கள் புலவரின் சதிப்படையா அல்லது சித்தரைச் சேர்ந்தவர்களா என்று யோசனை செய்து பார்த்தும் ஏதும் புரியாமல் மிகுந்த குழப்பத்துடன் வீரர்களைப் பின்தொடர்ந்து இமயவல்லியின் பக்கத்தில் மௌனமாகச் சென்றான்.

வீரர்கள் அந்த மலைக் காட்டுக்குள் நீண்ட தூரம் சென்றார்கள். காடு வரவர அடர்த்தியாகிக்கொண்டு வந்தது. சில இடங்களில் காட்டுப் பாதை மிகக் குறுகலாயிருந்த படியால் ஒருவர் பின் ஒருவராகவும் அவர்கள் செல்ல நேர்ந்தது. அந்த வழியில் மிகவும் பழக்கப்பட்டிருந்த அந்த வீரர்கள் சர்வசாதாரணமாக முட்களிலிருந்தும் புதர்களி லிருந்தும் விலகி நடந்தார்கள். இப்படி இரண்டு நாழிகை பயணம் செய்தபின் ஒரு பெரும் மரக் கூட்டத்திடையே வந்த வீரர்களின் தலைவனானவன் வாயிலிருந்து ஏதோ விபரீத சத்தமொன்றை மெல்லக் கிளப்பினான். அடுத்த விநாடி காட்டின் அந்தப் பகுதி திடீரென உயிர் பெற்றுத் துடித்தது. புதர்களின் மறைவுகளிலிருந்து சுமார் நாற்பது ஐம்பது வீரர்கள் வெளிவந்தார்கள். அந்தக் கூட்டத்தி லொருவனை நோக்கி வீரர் தலைவன், "இதோ இவர்களைப் படைத்தலைவரிடம் அழைத்துச் செல்லுங்கள்" என்றார்.

அந்த வீரன் தலைவணங்கி வழிகாட்ட இளமாறனும் இமயவல்லியும் அவனைத் தொடர்ந்து சென்றனர்; மீண்டும் ஒரு நாழிகைப் பயணம் காட்டினூடே நடந்தது. கடைசியாகக் காட்டின் மிக அடர்த்தியான ஒரு சோலைக்குத் தாங்கள் வந்து சேர்ந்துவிட்டதையும் அந்த இடத்தில் பல வீரர்களும்

நடுவில் ஒரு பர்ணசாலையும் இருந்ததைக் கண்ட இளமாறன், பர்ணசாலையின் அழகைக் கண்டு பிரமித்தான். வீரன் வழிவிட்டு நிற்கப் பர்ணசாலைக்குள் நுழைந்த இளமாறன் அந்தப் பர்ணசாலையின் உட்புறம் எழுந்த தோற்றத்தைக் கண்டு பிரமித்தான். அந்தப் பர்ணசாலை பெரும் போர்ப் பாசறைபோல் காட்சியளித்தது. சுற்றிலும் போர்க்கலங்கள் சார்த்தப்பட்டிருந்தன. இடையேயுள்ள மஞ்சத்தில் புலவர் குறுங்கோழியூர்க்கிழார் முகத்தில் கவலை அலைபாய உட்கார்ந்திருந்தார். அவரெதிரே சேரநாட்டுப் பிரதான படைத்தலைவரான வீரமார்த்தாண்ட தேவர் தலைகுனிந்து நின்றுகொண்டிருந்தார். அவர் முகத்திலும் கவலைக்குறி பெரிதாகப் படர்ந்தது.

உள்ளே நுழைந்த இமயவல்லியையும் இளமாறனையும் கண்ட புலவர் முகத்தில் ஆசுவாசத்துக்குப் பதில் கவலை அதிகமாகவே மண்டியது. அந்தக் கவலை குரலிலும் தொனிக்க அவர்களை வரவேற்ற புலவர் பெருமான், "இளமாறா! வா. நீ உயிருடன் வந்தது எனக்கு மிகவும் மகிழ்ச்சியை அளிக்கிறது" என்றார்.

இளமாறன் புலவருக்கும் அவரெதிரே நின்ற சேர நாட்டுத் தளபதிக்கும் தலைவணங்கினான். "புலவர் பெருமான் ஆசியிருக்கும்போது என் உயிருக்கு என்ன ஆபத்து நேரிடப் போகிறது?" என்று கூறவும் செய்தான்.

அந்த உபசார வார்த்தை சாதாரண சமயத்தில் பெரும் திருப்தியை அளித்திருக்கும் புலவர் பெருமானுக்கு. ஆனால் அவர் அப்பொழுது இருந்த நிலையில் வெறுப்பே ஏற்பட்டது அவருக்கு. "என் ஆசி மட்டும் பயனளிப்பதில்லை இளமாறா! ஆண்டவன் ஆசியைக் கேள்" என்றார் அவர் சலிப்புடன்.

"ஏனப்படிச் சொல்கிறீர்கள்?" வினயத்துடன் வினவினான் இளமாறன்.

"என் ஆசியால் பிழைக்க முடியுமானால் உனக்கு முன்னே இந்தப் பணிக்கு வந்த நால்வரும் பிழைத்திருக்க வேண்டும். ஒருவர்கூடப் பிழைக்கவில்லை. உன்போல்தான் அந்த நால்வரும் என் முன் நின்றார்கள். மறுநாள் அவர்கள் பிணத்தைத்தான் நான் பார்க்க முடிந்தது. ஆனால்..." என்ற புலவர் இளமாறனை வருத்தத்துடன் பார்த்தார்.

"என்ன புலவரே?" என்று வினவினான், அவர் வருத்தத்தால் நெஞ்சம் நெகிழ்ந்த இளமாறன்.

"உன் நிலைமை அவர்கள் நிலைமையைவிட மோசமாகி விட்டது" என்றார் புலவர்.

"எப்படி?"

"அந்த நால்வரையும் நெடுஞ்செழியன் அறியாமல் தங்கு தடையின்றி இந்த இடத்திற்குக் கொண்டுவர முடிந்தது. அவர்களே பிழைக்கவில்லை. நீ என் கையிலிருந்து எங்கோ தவறி மீண்டிருக்கிறாய். நீ இந்தப் பணியில் பிழைப்பா யென்று தோன்றவில்லை" என்றார் புலவர்.

"உங்கள் கையிலிருந்து தவறியது உங்களுக்கு எப்படித் தெரியும்?" என்று வியப்புடன் வினவினான் இளமாறன்.

"இந்த இடம் மதுரையிலிருந்து சரியாக இரண்டரை காதம். இங்கு வர எந்தச் சப்பையான புரவி வண்டிக்கும் ஓரிரவு போதும். ஆனால், அந்த இரவு நீ இங்கு வரவில்லை. நீ வந்திருப்பாய் என்று நினைத்து ஓர் இரவு விட்டு மறு இரவே இங்கு வந்தேன். வரும் வழியில் மூடுதேர் அச்சு முறிந்து விழுந்து கிடந்தது. நீங்களிருவரும் இங்கு

வரவில்லை என்பதை அறிந்ததும் தேடச் செய்தேன்" என்று விளக்கினார் புலவர்.

இளமாறன் தங்களுக்கு நேர்ந்ததை விவரமாகக் கூறினான். அவன் கூறியதைக் கேட்ட புலவர் மட்டுமின்றி, சேரர் தளபதியும் பிரமித்து வாயடைத்து நின்றார்கள். கடைசியாகப் புலவர் முனகினார். "விசித்திரம், விசித்திரம்" என்று.

இளமாறனுக்கும் நடந்த நிகழ்ச்சிகள் விசித்திரமாகத் தான் இருந்தன. ஆனால் புலவர் எந்த விசித்திரத்தைக் குறிப்பிடுகிறார் என்பது புரியாததால், "எந்த விசித்திரத்தைக் குறிப்பிடுகிறீர்கள் புலவரே?" என்று வினவினான்.

"சித்தருக்கு இதிலென்ன சிரத்தை?" என்று வினவினார் புலவர். அவர் குரலில் அப்பொழுதும் பிரமையின் ஒலி இருந்தது.

"எதில்?" ஏதும் புரியாமல் கேட்டான் இளமாறன்.

"சேரனை விடுவிக்கும் பணியில்?" புலவர் கேள்வி சந்தேகத்துடன் எழுந்தது.

"சிரத்தையிருப்பதாக யார் சொன்னது?"

"யார் சொல்ல வேண்டும்? சித்தரின் செயலே சொல்லுகிறதே."

"என்ன செயல்?"

"உன்னை ஏன் அவர் பாண்டிய மன்னனிடம் ஒப்புவிக்கவில்லை?"

"எதற்காக ஒப்புவிக்க வேண்டும்?"

புலவர் பதிலில் பெரும் சீற்றமிருந்தது. "இதை ஊகிக்கக் கூட சக்தியில்லாதவன் நீ என்ன செய்யப்போகிறாய்?"

என்று கூறிய புலவர் திடீரெனக் கோபத்தைத் தணித்துக் கொண்டு, "இளமாறா! சித்தர் பாண்டிய மன்னரின் ஆயுதப் பயிற்சி ஆசிரியர். தவிர அவனுக்குப் போர் யோசனை சொல்பவருங்கூட. தலையாலங்கானத்தைப் போரிடும் இடமாகத் தேர்ந்து எடுத்ததே அவர்தான். உண்மையைச் சொல்லப்போனால் இன்று சேர மன்னன் அவரால்தான் சிறையிலிருக்கிறான். அந்தச் சேர மன்னனை விடுவிக்க நீ வருகிறாய். ஆனால் அவர் உன்னை மயக்க மருந்து கொடுத்து இங்கு எங்கள் மடியில் தள்ளுகிறார். ஏன், அவருக்கு என்ன சிரத்தை சேரன் விடுதலையில்? சேரன் விடுதலையில்தான் சிரத்தையா அல்லது நமது விடுதலைத் திட்டங்களை நான்கு முறை பொறுத்த அவர் ஒரேயடியாக இந்த விடுதலைப் படையை அவிழ்த்துவிடப் பார்க்கிறாரா? எனக்கு ஒரே குழப்பமாயிருக்கிறது இளமாறா! நான் இத்தனை தூரம் என் ஆயுளில் குழம்பியது கிடையாது" என்று கூறினார். பிறகு ஏதோ யோசித்துவிட்டு, "சரி, நீங்கள் சென்று நீராடி உணவருந்தி இளைப்பாருங்கள்" என்று கூறி அவர்களை அழைத்துச் செல்லும்படி வீரர்களுக்குப் பணித்தார்.

வீரர்கள் அந்தப் பர்ணசாலையிலிருந்து சற்றுத் தூரத்தில் தனித்தனியாகக் கட்டப்பட்டிருந்த இரு பர்ண சாலைகளில் தனித்தனியாக இமயவல்லியையும் இளமாற னையும் தங்க வைத்தார்கள். இளமாறனுக்கு வேண்டிய சகல வசதிகளையும் வீரர்கள் செய்து கொடுத்தார்கள். அன்று பகல் முழுவதையும் அந்த வீரர் முகாமைச் சுற்றி வருவதிலேயே காலங் கழித்தான் இளமாறன். வீரர்கள் சேர நாட்டை மட்டும் சேர்ந்தவர்களில்லை என்பதையும் சோழ நாட்டிலிருந்து வந்த சிலரும் அதில் சேர்ந்திருந்ததையும் கண்டான். அப்படி இரு நாட்டைச் சேர்ந்தவர்களாயிருந்

தாலும், அவர்களிடை ஓர் ஒற்றுமையும் கட்டுப்பாடும் இருந்ததையும் கவனித்தான். அன்று பிற்பகல் நடமாட்டத்தின் போது அந்த வீரர்கள் அனைவரும் தனக்குத் தலை வணங்கியதைக் கண்டதும் தன்னைப்பற்றி ஏதோ அவர்களுக்கு அறிவிக்கப்பட்டிருப்பதை அறிந்து கொண்டான்.

புலவருக்கு அன்று காலையில் எழுந்த சந்தேகங்கள் அவனுக்கும் அன்று பூராவும் எழுந்து அவன் சித்தத்தில் வலம் வந்துகொண்டிருந்தன. சித்தரின் விபரீதப் போக்கை நினைத்து நினைத்து அவன் பேராச்சரியப்பட்டான். சித்தர் மூடுதேரை அச்சு முறித்து வழியில் போட்டதற்குக் காரண மிருக்க வேண்டுமென்று அவன் நினைத்தாலும் அந்தக் காரணம் என்னவென்பதை அறிய அவனால் முடிய வில்லை. சித்தரை நினைத்துப் புலவர் சிறிது குழப்பம் மட்டுமின்றி, அச்சமும் அடைந்திருப்பதை எண்ணி சித்தர் விவகாரங்களில் ஏதோ யாரும் அறியாத பெரும் மர்மங்கள் புதைந்து கிடப்பதை அவன் புரிந்துகொண்டான். இந்த நிலையில் திட்டம் அடுத்தபடி என்ன என்பதை அறியாமலேயே அதைப்பற்றி யோசித்து யோசித்து அன்றைய பகல்பொழுதை ஓட்டிய அவனுக்கு இரவு சூழ்ந்ததும் புலவரிடமிருந்து அழைப்பு வந்தது.

முதன் முதல் இமயவல்லியுடன் நுழைந்த அதே பர்ண சாலைக்குள் புலவரைச் சந்தித்தான் இளமாறன். புலவர் முகத்தைக் கூர்ந்து நோக்கிய இளமாறன் அவர் ஒரு முடிவுக்கு வந்துவிட்டார் என்பதையும் புரிந்துகொண்டான். அவன் உள்ளே நுழைந்ததும் ஆசனத்தை விட்டு எழுந்த புலவர் இரண்டே வார்த்தைகளைச் சொன்னார்: “இளமாறா! உன் வாழ்வின் முக்கிய கட்டம் நெருங்கி விட்டது” என்று.

இளமாறன் பதில் சொல்லவில்லை, ஒப்புவதற்கு அறிகுறியாகத் தலையைத் தாழ்த்தினான்.

புலவர் நன்றாக நிமிர்ந்துகொண்டு கூரையை நோக்கிச் சில விநாடி கண்களை உயர்த்தினார். "இப்பொழுதே நீ மூங்கில் கோட்டைக்குப் பயணமாகிறாய்" என்று உணர்ச்சி மேலிட்டுச் சொன்னார். மீண்டும் தலைவணங்கினான் இளமாறன். "மார்த்தாண்டா! இவனை அழைத்துச் செல். ஆண்டவன் இவனுக்கும் சேரனுக்கும் அருள் புரியட்டும். இதுதான் நமது கடைசி முயற்சி!" என்று கட்டளையிட்டார்.

வீரமார்த்தாண்டன் தன்னைத் தொடர்ந்து வரும்படி இளமாறனுக்கு சைகை செய்ய, இளமாறன் அவனைப் பின்தொடர்ந்து வெளியே சென்றான்.

அவர்களைப் பார்த்துக்கொண்டே நின்ற புலவர் அவர்கள் மறைந்ததும் தொப்பென தனது ஆசனத்தில் அமர்ந்து முகத்தை கைகளில் புதைத்துக்கொண்டார்.

# 18

# புறப்பாடு

**பு**லவரின் பர்ணசாலையைவிட்டு வெளியே வந்து சில அடிகள் நடந்ததுமே இளமாறனை நோக்கித் திரும்பிய சேர நாட்டுத் தளபதியான வீரமார்த்தாண்டன் ஆகாயத்தை நோக்கிவிட்டு, "முதல் ஜாமத்தில் பாதிதான் ஆகியிருக்கிறது. முதல் ஜாமத்தின் முடிவில் கிளம்பலாம். உனக்கு ஏதாவது அலுவலிருந்தால் கவனித்துவிட்டு வரலாம்" என்று கூறினான்.

இளமாறனும் வானத்தை உற்று நோக்கிவிட்டு, “ஆம், இருட்டி அரை ஜாமந்தான் ஆகிறது. சிறிது அலுவலும் எனக்கு இருக்கத்தான் செய்கிறது” என்று கூறினான்.

அதற்குமேல் ஏதும் பேச முடியாத வீரமார்த்தாண்டன் இளமாறனைவிட்டுத் தனது இருப்பிடத்தை நோக்கிச் செல்ல காலை எடுத்து வைத்தான். ‘ஒரு வார்த்தை’ என்று இளமாறனின் குரல் அவனைத் தடுக்கவே அவன் திரும்பி, “என்ன வீரனே! என்ன தேவை உனக்கு?” என்று வினவினான்.

இளமாறன் அவனை உற்று நோக்கினான். “தளபதி அவர்களுக்கு என்னை யாரென்று தெரியுமா?” என்று கேட்டான்.

“தெரியாது.” அலட்சியத்துடன் வந்தது வீர மார்த்தாண்டன் பதில்.

“உங்கள் படையில் ஒரு வீரன்.”

“அது மட்டும் தெரியும்.”

“எப்படித் தெரியும்?”

“புவலர் சொல்லியிருக்கிறார்.”

“மேற்கொண்டு ஏதும் அறிந்துகொள்ள விருப்ப மில்லையா உங்களுக்கு?”

வீரமார்த்தாண்டன் இகழ்ச்சியுடன் பார்த்தான் இளமாறனை ஒரு விநாடி. பிறகு, “உன் உயிர் இன்னும் இரண்டு ஜாமங்களுக்குள் சொர்க்கமோ நரகமோ இரண்டி லொன்றை நோக்கிப் பறக்கப் போகிறது. அற்குள் உன் வரலாற்றைத் தெரிந்துகொண்டு என்ன செய்யப் போகிறேன்?” என்று கூறிவிட்டு மேற்கொண்டு சம்பாஷ

ணைக்குத் தயாரில்லை என்பதைப் பார்வையாலேயே உணர்த்திவிட்டு சற்று தூரத்திலிருந்த தனது கொட்டகையை நோக்கி நடந்தான். அவனைப் பார்த்துக்கொண்டே நின்ற இளமாறன் இதழ்களிலும் புன்முறுவல் அரும்பியது. 'கடமையை நோக்கிச் செல்லும் வீரனிடம் தளபதிக்கு என்ன அக்கறை!' என்று உள்ளுக்குள் வினவிக்கொண்டு இமய வல்லியிருந்த சிறு குடிலை நோக்கி நடந்தான்.

இளமாறன் உள்ளே நுழைந்தபோதுதான் இமயவல்லியும் குடிலை விட்டு வெளியே வந்துகொண்டிருந்தாளாகையால் வாசற்படிக்கருகிலேயே இருவரும் மோதிக்கொள்ளும் நிலை ஏற்பட்டதால் லேசாக நகைத்தான் சேரநாட்டு வாலிபன். இமயவல்லியின் முகத்தில் நகைப்பின் குறிக்குப் பதிலாகப் பெரிய சோகமே படர்ந்து நின்றது. புத்துடையும் வாளும் அணிந்து பயணம் சொல்லிக்கொள்ள வந்திருக்கும் அந்த வீரனைப் பார்த்ததும் அச்சம் அவள் இதயத்தை ஆக்கிர மித்துக்கொள்ளவே கேட்டாள் அவள், "பயணப்பட்டு விட்டீர்களா?" என்று.

"பயணப்பட்டது போலத்தான். உன்னிடம் சொல்லிக் கொள்ளத்தான் வந்தேன்" என்றான் இளமாறன், முகத்தில் அப்பொழுதும் புன்முறுவல் படர.

வெளியே புறப்பட முற்பட்டு இளமாறனுடன் மோதும் தறுவாயில் அப்படியே எதிரே நின்றுவிட்ட இமயவல்லி சரேலென்று திரும்பிக் குடிலுக்குள் நடந்து நாலடி சென்றாள். குடிலின் கதவைச் சாத்திவிட்டு அவளைத் தொடர்ந்த இளமாறன் அவளை அணுகாமல் சற்று எட்டவே நின்றான். அவன் அப்படித் தங்களிருவருக்கும் இடைவெளி விட்டு நின்றதன் காரணத்தைப் புரிந்துகொள்ளாத இமய வல்லி, "ஏன் அங்கேயே நிற்கிறீர்கள்? கசந்துவிட்டதா

உங்களுக்கு?" என்று வினவினாள் வருத்தம் நதியெனப் பாய்ந்த குரலில்.

அவள் குரலிலிருந்த அந்த வருத்த வெள்ளங்கூட அவன் இதயத்தைத் தொட மறுத்தது. "கரும்பு கசக்குமா இமய வல்லி?" என்று கேட்ட அவன் குரலில் உணர்ச்சியில்லை. குரல் மிகவும் உறுதியாக இருந்தது.

அதை இமயவல்லி கவனிக்கவே செய்தாள். ஆகவே தன் விழிகளை நன்றாக அவனை நோக்கி உயர்த்திய இமய வல்லி கேட்டாள், "உண்மையில் உங்கள் எதிரில் நிற்பது கரும்புதானா?" என்று.

"ஆம்."

"அப்படியானால் கைப்பற்ற ஏன் தயங்குகிறீர்கள்?"

"இறக்கும் தறுவாயிலிருப்பவன் ஆசையை உதறுவது நல்லது. அது அவனுக்கும் நல்லது, கரும்புக்கும் நல்லது!"

"கரும்பே உணர்ச்சிக் காற்றில் சாய்ந்தால்?"

"அதைச் சாயாமல் தடுப்பது சொந்தக்காரன் கடமை."

இமயவல்லியின் முகத்தில் அத்தனை வருத்தத்துடன் மகிழ்ச்சிப் பொலிவும் லேசாகப் படர்ந்தது. அவன் தன்னைச் சொந்தக்காரன் என்று சொல்லிக்கொண்டது அவளுக்குப் பெருமகிழ்ச்சியைத் தந்தது. பேசும் சக்தியைக்கூட இழந்து நின்றாள் அந்தச் சமயத்தில். இளமாறனே மேற்கொண்டு பேசினான்: "இமயவல்லி! நாம் சந்தித்து இரண்டு இரவுகள் ஆகின்றன. இது மூன்றாவது இரவு. இரண்டு இரவுகளில் நமக்குள் நடந்து இருக்கும் சம்பவங்கள் பெரும் கதையாகத் தோன்றுகிறது எனக்கு. அபாய காலங்களில், போர் நிகழ்ச்சி களின் ஆரம்பத்திலும் முடிவிலும் இத்தகைய நிகழ்ச்சிகள் ஏற்படுவது சகஜம். ஒரு நாட்டிலிருந்து இன்னொரு நாட்டை

ஊடுருவும் படை வீரர்கள் பெண்ணைக் காண்பதும் காதலை நுகர்வதும் இயற்கை. ஆனால், எந்த வீரனுக்கும் இதுவரை ஓர் இரவில் ஒரு மாமன்னன் சகோதரியைச் சந்தித்து அடுத்த இரவுக்குள் அவர்களுக்குள் காதல் முற்றி, மூன்றாம் இரவில் அந்த வீரனுக்கு மரணம் ஏற்படக்கூடிய நிலை ஏற்பட்டதை நான் கேட்டதுகூட இல்லை. ஆனால் அதைப்பற்றி நான் கவலைப்படவில்லை அரசகுமாரி. ஏனெனில், என் வாழ்க்கையே ஒரு கதை" என்றான் இளமாறன்.

இதைச் சொன்ன அவன் குரலில் துன்பம் தோய்ந்து கிடந்தது. அதைக் கவனித்த இமயவல்லி, "என்ன? உங்கள் வாழ்க்கையே ஒரு கதையா?" என்று வினவினாள்.

"ஆம் இமயவல்லி! அதைச் சொல்லத்தான் இங்கு வந்தேன்" என்ற இளமாறன், "இமயவல்லி! உன்னிடந்தான் முதன் முதலாக என் உள்ளத்தை ஒப்படைத்தேன். ஆகவே என் இதயத்தையும் திறந்துவிடுகிறேன். கேள் என் கதையை. நான் ஓர் அநாதை. தாய் தந்தையர் இல்லாதவன். சேரநாட்டு வீரர் ஒருவர் என்னை எடுத்து வளர்த்தார். சேர நாட்டின் ஒரு கிராமத்திலிருந்த நாங்கள் எனக்கு வயது வந்ததும் கருவூர் வஞ்சியில் வந்து ஒரு சிறு வீட்டில் குடியிருந்தோம். தகுந்த பருவத்தில் என்னை வளர்த்த வீரரே எனக்கு வாட்போர் பயலுவித்தார். என்னைக் கடைசியில் சேர மன்னன் படையிலும் சேர்த்தார். இரண்டு மூன்று போர்களையும் பார்த்திருக்கிறேன். தலையாலங்கானத்துக்கு மட்டும்தான் நான் வரவில்லை. என்னைக் கருவூரிலேயே அதிகப் பேருக்குத் தெரியாது. என் வளர்ப்புத் தந்தை என்னை அதிகமாக வெளியில் போகவிட்டதும் கிடையாது. படைப்பயிற்சிக்கு மட்டும் போய் வீட்டுக்கு வந்துவிடுவேன். அவ்வளவுதான். அந்த வளர்ப்புத் தந்தை தலையாலங்

கானத்துப் போருக்குச் சென்றார். திரும்பவில்லை. பல நாள்கள் அவரை எதிர்பார்த்து ஏமாந்தேன். அந்த ஏமாற்றத்தால் மனமுடைந்த ஒரு நாளில் புலவரின் அழைப்பு வந்தது. புலவர் என்னை எப்படி அறிந்தார்? என்னிடம் இப்பெரும் பணிக்கு என்ன திறமையைக் கண்டார்? ஏதும் தெரியவில்லை எனக்கு. உன்னிடம் ஏதாவது சொன்னாரா?" என்றான்.

இமயவல்லி அவன் சரிதையை வியப்புடன் கேட்டாள். கடைசியில் அவன் கேட்ட கேள்விக்கு, "ஒன்றும் சொல்ல வில்லை. 'அடுத்தபடி வருபவன் சேரநாட்டு வாலிபன் ஒருவன். அவன் பெயர் இளமாறன்!' என்று மட்டும் சொன்னார்" என்று பதில் கூறினாள்.

"அப்படித்தானிருக்கும் என்று நினைத்தேன். என்னைப் பற்றி ஏதோ தெரியும் புலவருக்கு. ஆனால், அதைச் சொல்ல மறுக்கிறார். அதைப்பற்றிக் கவலையில்லை. இப்பொழுது உன்னிடம் ஒன்று சொல்ல வந்தேன் இமயவல்லி. என் உயிர் ஒருவேளை மூங்கில் கோட்டையில் போகுமானால் கடைசி மூச்சுடன் உன் பெயரைத்தான் உச்சரிப்பேன். ஆனால், ஒரு வேண்டுகோள்," என்றான் இளமாறன் திடமான குரலில்.

"என்ன வீரரே?" என்று கேட்டாள் இமயவல்லி.

"நான் உயிருடன் திரும்பி வந்தால் நீ பாண்டிய நெடுஞ் செழியன் சகோதரியல்ல, அவனைவிடப் பெரிய அரசன் மகளானாலும் உன்னைக் கைப்பற்றாமல் பாண்டிய எல்லையை விட்டு நகரமாட்டேன். அப்படி வரவில்லை யென்றால் நமது இந்த இரண்டு நாள் தொடர்பை சொப்பனமாக நினைத்து மறந்துவிட வேண்டும்" என்றான் இளமாறன்.

"முடியாத காரியத்தைச் செய்யச் சொல்லுகிறீர்கள்," என்ற இமயவல்லி அவனை நோக்கி இரண்டடி எடுத்து வைத்தாள்.

"நில் அப்படியே இமயவல்லி! நீ வீரர் குலத்தில் பிறந்தவள். உணர்ச்சிகளுக்கு இந்தத் தருணத்தில் இடங் கொடுக்காதே. நான் திரும்பி வந்தால் இந்த இடைவெளி நம்மிருவரிடை இருக்காது. இல்லையேல் இடைவெளி நிரந்தரம். உன் வாழ்வை இதற்காக நாசப்படுத்திக் கொள்ளாதே. இது என் கடைசி வேண்டுகோள்" என்று கூறிய இளமாறன் அதற்குமேல் ஏதும் பேசாமல் குடிலின் கதவைத் திறந்துகொண்டு வெகு வேகமாக வெளியே நடந்தான். குடிலின் கதவருகில் வந்து நின்றுகொண்டு அவன் போவதைப் பார்த்துக்கொண்டேயிருந்தாள் இமய வல்லி. நீண்ட நேரம் பார்க்க முடியவில்லை அவளால். கண்களை நீர்த்திரை மறைத்தது. இளமாறன் உருவம் முதலில் மங்கிப் பிறகு அடியோடு மறைந்தது அவள் விழிகளுக்கு.

இமயவல்லியின் குடிலைவிட்டுக் கிளம்பிய இளமாறன் வீரமார்த்தாண்டன் தங்கியிருந்த கோட்டைக்குச் சென்றான். அங்கு வீரமார்த்தாண்டன் பயணத்துக்குத் தயாரா யிருந்ததைக் கண்டதும், "கிளம்பிவிட்டீர்களா?" என்று வினவிவிட்டு, எதிரேயிருந்த மஞ்சத்தில் சாவதானமாக அமர்ந்துகொண்டான். இளமாறன் போக்கைக் கண்ட சேர நாட்டுத் தளபதியின் விழிகளில் சினம் ஏறியது.

"உட்கார அவகாசமில்லை இப்பொழுதும் வீரனே!" என்றான் வீரமார்த்தாண்டன் அதிகாரமும் சினமும் ஒலித்த குரலில்.

“சற்று உட்காருங்கள்” என்று இளமாறன் கூறினான், படைத்தலைவனைவிடச் சற்றுக் கடுமையான குரலில்.

படைத்தலைவன் முகத்தில் கோபம் அதிகமாக ஏறியது. “படைத்தலைவனை எதிர்த்து வீரர்கள் பேசுவது போர் விதிகளுக்கு முரணானது” என்றான் வீர மார்த்தாண்டன்.

அந்தச் சினத்தை இளமாறன் சிறிதும் லட்சியம் செய்ய வில்லை. உட்கார்ந்திருந்த மஞ்சத்தைவிட்டு எழுந்திருக்கவும் முயலவில்லை. “நாம் இப்பொழுது போர்க்களத்திலோ படை அணிவகுப்பிலோ இல்லை படைத்தலைவரே. இப்பொழுது நாம் ஈடுபட்டிருப்பது ரகசியமான பணி. இதில் தங்களுக்கு ஏதும் நஷ்டமுமில்லை! ஆனால் எனக்கு நஷ்டம் இருக்கிறது...” என்று சொல்லிக்கொண்டு போன இளமாறனை இடைமறித்த வீரமார்த்தாண்டன், கோபத்தால் என்ன கேட்கிறோமென்பதை உணராமலே, “என்ன நஷ்டம்?” என்று சீறினான்.

இளமாறன் பதிலில் இகழ்ச்சி ஒலித்தது. “உயிர் நஷ்டம் அத்தனை பிரமாதமாகத் தங்களுக்குப் படவில்லை போலிருக்கிறது” என்றான் அவன்.

அப்பொழுதும் இளமாறனுக்கு இடங்கொடாத தளபதி, “உயிர் விடுதல் வீரர்கள் கடமை” என்றான்.

“தற்கொலையை சாஸ்திரங்கள் தடுக்கின்றனவே.”

“யார் உன்னைத் தற்கொலை செய்துகொள்ளச் சொன்னது?”

“இப்பொழுது செல்லும் பணி கிட்டத்தட்ட தற்கொலைக்கு ஒப்பானதுதானே?”

“எப்படித் தற்கொலையாகும் அது?”

"மூங்கில் கோட்டைக்குள் என்னைப் போகச் சொல்கிறீர்கள்?"

"ஆம்."

"கண்ணை மூடிக்கொண்டு தகவலறியாமல் உள்ளே நுழையச் சொல்கிறீர்கள்?"

"ஆம். உள்ளே நண்பர்கள் இருக்கிறார்கள். தவிர இதற்கு முன்பு சென்ற நால்வரும் இப்படிக் கேள்வி எதையும் கேட்கவில்லை."

இளமாறன் மெல்ல நகைத்தான். "இப்பொழுது புரிகிறதா உங்களுக்கு, நான் ஏன் கேள்விகள் கேட்கிறே னென்பது?" என்று வினவினான்.

அப்பொழுது புரிந்தது படைத்தலைவனுக்கு இளமாறனின் எண்ணம்.

அவன் புரிந்துகொண்டதை இளமாறன் தன் வாயால் சொன்னான்: "உங்களையும் புலவரையும் நம்பிக் கோட்டைக் குள்ளேயிருப்பதாக நீங்கள் சொல்லும் நண்பர்களை நம்பிச் சென்ற நால்வர் கதி உங்களுக்குத் தெரிகிறதல்லவா? ஆகையால் அப்படி யாரையும் நம்பாமல் என்னையே இந்த முயற்சியில் நம்ப நான் தீர்மானித்திருக்கிறேன் படைத் தலைவரே?" என்று.

இதற்குமேல் காலதாமதம் செய்யாத வீரமார்த்தாண்டன், "நேரம் ஓடுகிறது; சீக்கிரம் சொல். என்ன தெரியவேண்டும் உனக்கு?" என்று வினவினான்.

"உங்கள் திட்டத்தைச் சொல்லுங்கள்" என்று கேட்டான் இளமாறன்.

வீரமார்த்தாண்டன் திட்டத்தை விவரிக்கத் தொடங்கி னான். "இங்கிருந்து இரண்டு நாழிகை தெற்கு நோக்கி

நடந்தால் ஒரு பாழடைந்த மண்டபம் இருக்கிறது. அதன் நடுவிலிருக்கும் பாறையை நகர்த்தினால் அதிலிருந்து சூரன் கோட்டைக்கு, இப்பொழுது மூங்கில் கோட்டையென வழங்குகிறதே அதற்குச் சுரங்க வழி இருக்கிறது. அந்தச் சுரங்க வழியே சென்றால், சூரன் கோட்டையின் உள்ளே வீரர்களைப் புதைக்கும் மயானம் இருக்கிறது. அங்கு போய்ச் சேரலாம்..." என்றான் வீரமார்த்தாண்டன்.

"நேரே மயானத்திற்குத்தான் போக வேண்டுமா?" என்று வினவினான் இளமாறன் இகழ்ச்சிக் குரலில்.

அதைக் கவனிக்காத தளபதி சொன்னான்: "ஆம், அந்த இடத்திலும் பாறை இருக்கிறது. அதைக் கிளப்பினால் கோட்டையின் மதிலுக்கருகில் இருப்பாய். அங்கு காவல் கிடையாது. அங்கு உங்களை ஒருவர் சந்திப்பார்" என்று.

"யாரது?" என்று வினவினான்.

"எனக்குத் தெரியாது, புலவருக்குத்தான் தெரியும்."

"பிறகு?"

"அந்த வீரர் உங்களை எப்படியாவது மாந்தரஞ்சேரல் இரும்பொறை இருக்கும் அறையில் சேர்த்துவிடுவார்."

"பிறகு?"

"மன்னவரை நீங்கள் சென்ற வழியாக அழைத்து வருவது உங்கள் பொறுப்பு."

"நான் வராவிட்டால்?"

"நாளைக்கு மறுநாள் உங்கள் பிணத்தை மூங்கில் கோட்டைக்கு எதிரிலுள்ள காட்டில் வனவாசிகள் தேடுவார்கள்."

"அவர்களை ஏன் வனவாசிகள் என்று அழைக் கிறீர்கள்?"

"இந்தப் படையினருக்குப் புலவர் கொடுத்திருக்கும் பெயர் அது!"

"சரி. மேலே சொல்லுங்கள்."

"பிறகு உங்கள் சவத்தைச் சகல மரியாதைகளுடன் புதைப்போம்."

இளமாறன் இதழ்களில் புன்முறுவல் அரும்பியது. "மிக்க மகிழ்ச்சி" என்ற இளமாறன் மீண்டும் ஒரு சந்தேகம் கேட்டான்: "ஒருவேளை நான் வெற்றியடைந்து மன்னன் மீண்டால்?" என்று.

"நான் அவரை அழைத்துச் செல்ல எனது வீரர்களுடன் பாழடைந்த மண்டபத்தருகே காத்திருப்பேன். அங்கிருந்து இந்த இடத்திற்கு வருவோம். இந்தக் காடு இங்கிருந்து இரண்டு காததூரம் வடபுறமும் நீடிப்பதால் மன்னரைக் காத்துச் செல்ல காட்டு மூலமே போவோம். காட்டை அடுத்தது சோழநாட்டு எல்லை. பிறகு அதிக கவலை யில்லை" என்றான் வீரமார்த்தாண்டன்.

இளமாறன் யோசனையில் ஆழ்ந்தான். பிறகு ஒரு முடிவுக்கு வந்து, "சரி கிளம்புங்கள்" என்று மஞ்சத்தை விட்டு எழுந்திருந்தான். வீரமார்த்தாண்டன் இளமாறனை அடர்த்தியான காடு நிறைந்த பகுதிகளில் அழைத்துச் சென்று இறுதியில் ஒரு பாழடைந்த மண்டபத்துக்கு வந்து சேர்ந்தான். அந்த மண்டபத்துக்கு அருகில் கோயிலோ குளமோ ஏதுமில்லை. அப்படியிருக்க அங்கு எதற்காக ஒரு மண்டபத்தைக் கட்டினார்கள் என்று சிந்தித்துக்கொண்டு இளமாறன் நிற்கையில் அந்த மண்டபத்தின் நடுவிலிருந்த

பாறையொன்றை மெள்ள அசைத்து அசைத்துக் கிளப்பினான் வீரமார்த்தாண்டன். அதன் அடியில் படிகள் ஓடின. கையில் தயாராகக் கொண்டு வந்திருந்த பந்தத்தை இளமாறனிடம் கொடுத்த சேரநாட்டுத் தளபதி, "வீரனே, இறங்கிச் செல். ஆண்டவன் உனக்கு அருள் புரிவார்" என்று உணர்ச்சியுடன் கூறினான்.

இளமாறன் பந்தத்தைக் கையில் வாங்கிக்கொண்டு சொன்னான்: "படைத்தலைவரே! உமது உத்தரவுப்படி செல்கிறேன். ஆனால், இரண்டு நாள்கள் வரை என் பிணத்தைத் தேட வேண்டாம். மூன்றாவது நாள் தேடினால் போதும்" என்று.

"ஏனப்படி?" என்று வினவினான் வீரமார்த்தாண்டன்.

"இரண்டு நாள்கள் உயிருடன் இருக்கத் தீர்மானித்து விட்டேன்" என்று கூறிய இளமாறன் அந்தப் படிகளுக்குள் இறங்கினான். அவன் தலை மண்டபத்தின் தரை மட்டத்திலிருந்து மறைந்ததும் பாறையைத் திரும்பப் பழையபடி மூடிவிட்ட வீரமார்த்தாண்டன் சோகப் பெருமூச்சொன்றை விட்டு வந்த வழியே திரும்பி நடந்தான்.

## 19
## புலிக்குப் பிறந்தது

**பா**ழடைந்த மண்டபத்தின் நடுவிலிருந்த பாறாங் கல்லைப் புரட்டிக் கிளப்பி சூரன் கோட்டைக்குச் செல்லும் சுரங்க வழிக்குள் இளமாறனை இறக்கிவிட்டுத் தளபதியான வீரமார்த்தாண்டன், சாவை நோக்கிச் சென்ற அந்த சிற்றிளங்

காளையிடம் அனுதாபம் கொள்வதற்குப் பதில் மிகுந்த சீற்றத்துடனேயே திரும்பினான். பல போர்களைக் கண்ட தன்னிடம் அந்த வாலிபன் நடந்துகொண்ட முறையும், பேசின பேச்சும் சிறிதளவும் வீரமார்த்தாண்டனுக்குப் பிடிக்காததால், இளமாறன் திமிரைப்பற்றிய சிந்தனை களுடனேயே தளபதி திரும்பினான். புலவரின் பர்ண சாலைக்குத் தான் அதுவரை அழைத்துச் சென்ற நான்கு வீரர்களும் தன்னை ஏதும் கேள்வி கேட்காமல் சொன்னபடி நடந்திருக்க, இளமாறன் மட்டும் தன்னுடைய திட்டத்தையும் போகும் மார்க்கம் முதலியவற்றையும் கேட்டறிந்துகொண்ட பின்னரே புறப்பட்டதைத் தளபதியால் சகிக்க முடிய வில்லை. தவிர தன் திட்டத்தின் விவரங்களைப்பற்றி விவரித்தபோது இளமாறன் கேட்ட கேள்விகளும் அவற்றின் ஊடே விரிந்த இகழ்ச்சிப் புன்முறுவலும் பெரும் கோபத்தைத் தந்திருந்தது தளபதிக்கு. கடைசியில் சுரங்கத்தில் இறங்கும் சமயத்திலாவது இளமாறன் பயந்து அடக்கத்தைக் காட்டுவானென்று எதிர்பார்த்த வீரமார்த்தாண்டன் அதிலும் ஏமாந்ததால் அவன் சினமும் வெறுப்பும் சொல்லத் தரமற்றதாயின. இளமாறன் கடைசியாக “நான் இரண்டு நாள் உயிருடன் இருக்கத் தீர்மானித்து விட்டேன்” என்று கூறிவிட்டுச் சுரங்கத்தில் இறங்கியதை நினைத்த தளபதி, “திமிர் பிடித்தவன் ஒழியட்டும்” என்று உள்ளூரக் கறுவிக் கொண்டே பர்ணசாலைக்குத் திரும்பினான்.

அவன் வரவை ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண் டிருந்த புலவரும் இமயவல்லியும் அவன் பர்ணசாலைக்குள் நுழைந்ததுமே, “என்ன ஆயிற்று?” என்று ஏககாலத்தில் கவலை தொனித்த குரலில் வினவினார்கள்.

அவர்கள் காட்டிய அக்கறையும் கவலையும் வீர மார்த்தாண்டனுக்குத் திருப்தியை லவலேசமும் தராததால்,

“அனுப்பிவிட்டேன்” என்று வறண்ட குரலில் பதில் சொன்னான்.

உணர்ச்சியற்ற அந்தக் குரலை அனுதாபக் குரலாக அர்த்தம் செய்துகொண்ட புலவர் பெருமானும் தலை யசைத்துப் பெருமூச்செறிந்து பக்கத்திலிருந்த இமயவல்லியை நோக்கினார். இமயவல்லி சோகத்தின் உருவமாக நின்றாள். அவள் சந்திரவதனத்தைக் கவலை மேகம் பெரிதாகக் கவ்வி நின்று அதன் சோபையை ஓரளவு குறைத்திருந்தது. கண்களில் நீர் திரளவில்லைதான். திரளுவதற்கான அறிகுறிகள் மட்டும் நிரம்ப இருந்தன. அவள் சோக முகத்தை அதிக நேரம் பார்த்தால் தமது மனஉறுதியும் குறையும் என்பதை உணர்ந்த குறுங்கோழியூர்க்கிழார், முகத்தை வீரமார்த்தாண்டனை நோக்கித் திருப்பி, “வீரமார்த்தாண்டா! இளமாறன் அச்சமின்றிச் சுரங்கத்தில் இறங்கினானா?” என்று வினவினார்.

வீரமார்த்தாண்டன் புலவர் பெருமானை அடக்கத்துடன் நோக்கினாலும் அந்த அடக்கத்திலும் சினம் உள்ளூர ஊடுருவி நின்றதால், “அவன் உடம்பில் அச்சமேது புலவர் பெருமானே?” என்று கேட்டான் பதிலுக்கு.

“ஆம்; இல்லை இல்லை. அந்தக் குடும்பத்தில் அச்சத்துக்கு இடம் சிறிதுமில்லை. இருப்பினும் இளைஞன் ஆயிற்றே என்பதற்காகக் கேட்டேன்” என்று திருப்தியுடனும் பெருமிதத்துடனும் சொல்லிக்கொண்ட குறுங்கோழியூர்க் கிழார், “அப்படியானால் நாம் நாளன்றைவரைக்கும் காத்திருப்பதைத் தவிர வேறு வழியில்லை” என்றார்.

“இருக்கிறது” என்ற தளபதியின் வெறுப்புச் சொல் அவரைச் சற்று நிமிர்த்தி உட்கார வைத்தது.

"என்ன சொல்கிறாய் வீரமார்த்தாண்டா?" என்று வினவினார் புலவர்.

"இரண்டு நாள்களுக்குள் தன் பிணத்தைத் தேட வேண்டாமென்று சொன்னான் அவன்." வீரமார்த்தாண்டன் குரலில் வெறுப்பு மண்டிக் கிடந்தது.

"ஏன்? அதற்குள் காரியத்தை நிச்சயமாக முடித்து விடுவானா?" என்று மறுபடியும் ஆவலுடன் வினவினார் புலவர்.

"அதையும் திட்டமாகச் சொல்லவில்லை அவன்."

"வேறெதைத் திட்டமாகச் சொன்னான்?"

"எதையும் திட்டமாகச் சொல்லவில்லை. 'இரண்டு நாள்களுக்குள் தேட வேண்டாம்; மூன்றாம் நாள் தேடினால் போதுமெ'ன்றான்."

"என்ன காரணமென்று நீ கேட்கவில்லையா?"

"கேட்டேன். அவன் பதில் ஒழுங்காக வரவில்லை. 'இரண்டு நாள்களுக்குள் இறக்க இஷ்டமில்லை' என்று மட்டும் சொன்னான். இகழ்ச்சியுடன் என்னைப் பார்த்துப் புன்சிரிப்பும் சிரித்தான்" என்ற வீரமார்த்தாண்டன் தனது குரலில் கோபத்தை லேசாகக் காட்டினான்.

புலவர் முகத்தில் வருத்தமும் பெருமிதமும் கலந்த சாயையொன்று பரவியது. "அது அந்தக் குடும்பத்தின் போக்கு. சாவுக்குச் செல்லும்போது விஷமமாகப் பேசும் நெஞ்சுரம் அவன் தந்தைக்கும் உண்டு" என்றார் புலவர்.

அதுவரை மௌனமாயிருந்த இமயவல்லி தன் மௌனத்தைக் கலைத்துக்கொண்டு கேட்டாள் தீனமான குரலில், "அவர் தந்தை யார் புலவரே?" என்று.

"சொல்ல எனக்கு உரிமையில்லை மகளே! இருப்பினும் ஒன்று சொல்ல முடியும். தமிழகத்தின் பெரும் வீரர்களில் இவன் தந்தையும் ஒருவர் என்று மட்டும் அறிந்துகொள். ஆண்டவன் அருள் அந்தக் குடும்பத்துக்கு இருந்தால் இவன் தந்தை யாரென்பதை காலம் உணர்த்தும்" என்ற புலவர் சில விநாடி சிந்தனையில் ஆழ்ந்தார். பிறகு சொன்னார் வீரமார்த்தாண்டனை நோக்கி, "தளபதி! அந்த இளைஞன் பேச்சையும் இகழ்ச்சிச் சிரிப்பையும் நினைத்து சினத்தின் வசப்படாதே. உனது நாட்டுக்காக மரணத்தை நாடிச் சென்றுள்ள மாவீரன் அவன் என்பதை மட்டும் சிந்தையில் வைத்து நன்றியுணர்ச்சியுடன் நடந்துகொள். அவன் இரண்டு நாள் இறக்க மாட்டேன் என்று சொன்னால் நிச்சயமாக இறக்கமாட்டான். அந்த இரண்டு நாள்களில் அவனிட மிருந்து ஏதாவது செய்தி வந்தால் எனக்கு உடனடியாகத் தெரிவி" என்று.

வீரமார்த்தாண்டன் சினம் உள்ளூர அதிகப்பட்டாலும் அதை வெளிக்குக் காட்டாமலே, "இரண்டு நாள்களுக்குள் அவன் சாக இஷ்டப்படாவிட்டால் கோட்டைக்குள் இருக்கும் காவலர் பொறுத்திருப்பார்களா?" என்று வினவினான்.

அவன் பேச்சிலிருந்த விரோதத்தையும் ஏளனத்தையும் கவனித்த புலவர் சற்றே நிதானத்தை இழந்துவிட்டதற்கான அறிகுறி அவர் முகத்தில் தெரிந்தது. "வீரமார்த்தாண்டா! நம்மைவிடச் சிறந்த வீரர்களைப் பற்றிப் பேசும்போது நாம் நம்மிடமுள்ள அற்ப குணங்களை உதறிவிடவாவது கற்றுக் கொள்ள வேண்டும்" என்று உஷ்ணம் ஒலிக்க சொற்களை உதிர்த்த புலவர் இமயவல்லியை நோக்கி, "இமயவல்லி! நாம் புறப்படுவோம். மதுரைக்கு செய்தி ஏதாவது கிடைத்தால் திரும்பி வருவோம். சீக்கிரம் போய்ப் பயணப்படு" என்றார்.

அந்த உத்தரவைக் கேட்டுக்கொண்டுபோன இமய வல்லி சில நிமிஷங்களுக்குள்ளாகப் பயண உடை அணிந்து வந்தாள். இரவின் கடைசி ஜாமத்துக்குச் சற்று முன்பே புறப்பட்ட புலவரும் இமயவல்லியும் இரு வீரர்கள் வழிகாட்டி முன்செல்ல தூரன் கோட்டைக் காட்டினூடே சிறிது தூரம் சென்று குறுக்குப் பாதை யொன்றில் புகுந்து பாதையின் ஓரத்தில் மறைவிலிருந்த வண்டியொன்றில் அமர, வண்டி மதுரையை நோக்கிப் பறந்தது. வழிநெடுக இமயவல்லியும் புலவரும் மௌனமாகவே அக்கம் பக்கத்தில் அமர்ந்திருந்தார்கள். அந்த வண்டியில் ஆரம்பித்த மௌனம் அவர்கள் மகர மாளிகையை அடைந்த பின்பும் நீடித்தது. அடுத்த இரண்டு நாட்களில்கூட நிலைமை அபிவிருத்தி அடையவில்லை. அடியோடு மௌனம் இல்லையே தவிர அவ்வப்பொழுது ஓரிரண்டு சொற்களுடன் இருவர் சம்பாஷணையும் முடிந்து கொண்டிருந்தது.

இளமாறன் சுரங்கப்பாதையில் நுழைந்து நாள்கள் இரண்டு மட்டுமின்றி மூன்றும் ஓடிவிட்ட போதிலும் எந்தத் தகவலும் மகர மாளிகைக்கு எட்டாமற்போகவே பெரும் குழப்பத்துக்கும் பீதிக்கும் உள்ளானார் புலவர். மூன்றாம் நாளிரவு மூன்று முறை படுக்கையிலிருந்து எழுந்து தமது அறைக்கு முன்னிருந்த தாழ்வாரத்துக்கு வந்து, “இமயவல்லி! இமயவல்லி!” என்றழைத்தார். அந்த மூன்று முறையும் உடனுக்குடனே இமயவல்லி கீழிருந்து ஓடிவந்து, “என்ன புலவரே?” என்று ஆர்வத்துடன் கேட்டாள். “ஒன்றுமில்லை” என்று புலவர் சொல்ல, அவளும் திரும்பிச் சென்றுகொண் டிருந்தாள். நான்காம் முறை புலவர் அழைக்கவில்லை. அவளே மாடிப்படிகளில் ஏறிவந்து புலவர் அறையைத் தட்டினாள்.

கதவைத் திறந்த புலவர், " என்ன இமயவல்லி?" என்று ஆர்வத்துடன் கேட்டார். "ஒன்றுமில்லை" என அவர் மூன்று முறை சொன்னதை அவள் நான்காம் முறை திரும்பச் சொல்லி அறைக்குள் நுழைந்து அங்கிருந்த மஞ்சமொன்றில் உட்கார்ந்துகொண்டாள்.

அவளெதிரே தமது ஆசனத்தில் அமர்ந்த புலவர் பெருமான் அவளை நன்றாகக் கூர்ந்து நோக்கி அவள் மனோநிலைக்கும் தமது மனோநிலைக்கும் அதிக வித்தியாசமில்லை என்பதை உணர்ந்துகொண்டதால், "விசித்திரமாய் இல்லையா இது இமயவல்லி!" என்று கேட்டார் புலவர்.

"எது புலவரே?" என்ற இமயவல்லியின் குரல் அடியோடு சக்தியை இழந்து கிடந்தது.

"இளமாறன் விஷயம்" என்றார் புலவர்.

"விசித்திரமென்ன அதில்?" புலவர் தன் மனத்தின் ஆழத்திலுள்ளதை அறிந்துகொண்டுவிட்டாரே என்று பீதியால் சாதாரணமாகக் கேட்பதுபோல் கேட்டாள் அவள்.

"இதுவரை நான்கு வீரர்களை மூங்கில் கோட்டைக்கு அனுப்பி இருக்கிறோம் அல்லவா?" என்றார் புலவர்.

"ஆம்."

"ஒவ்வொருவரும் பெரும் போர்களைக் கண்டவர்கள்."

"ஆம்."

"அச்சத்தை அறியாதவர்கள்."

"ஆம்."

"இவனோ..." என்ற புலவரை, "வாலிபர்" என்ற இமய வல்லியின் சொல் இடைமறித்தது. அதில் தனிப்பட்ட இன்ப

ஒலி இருந்ததைப் புலவர் கண்டுகொண்டார். அதுவரை புரியாத பல விஷயங்கள் அப்பொழுது மிகத் தெளிவாகப் புரிந்தது புலவருக்கு. அடுத்து வந்த அவர் சொற்களில் அனுதாபம் பூர்ணமாகத் தொனித்தது. "ஆம் இமயவல்லி, ஏற்கெனவே சென்ற நால்வரை ஒப்பிட்டால் இவன் மிகவும் இளைஞன்; அதிக அனுபவம் இல்லாதவன்."

இமயவல்லி பதில் சொல்லாமல் ஆமென்பதற்கு அறிகுறியாகத் தலையை மட்டும் ஆட்டினாள். புலவரே மேற்கொண்டு சொன்னார்: "அத்தனை போர்ப் பயிற்சியும் திண்மை உடலும் பெற்ற மகாவீரர். நால்வரின் சடலங்களும் இரண்டு நாள்களுக்குள் கிடைத்துவிட்டன. இவன் போன சுவடே தெரியவில்லையே?"

இமயவல்லியின் இதயத்தில் திகில் எழுந்ததால் முகத்தையும் அந்தத் திகில் மேகம் மூடியது. "ஒருவேளை..." என்று துவங்கிய அவள் பேசமாட்டாமல் விக்கினாள்.

புலவர் அவள் நினைப்பது தவறென்பதற்கு அடையாள மாகக் கையை அப்புறமும் இப்புறமும் ஆட்டிவிட்டு, "கோட்டைக்குள்ளே கொன்று புதைத்திருப்பார்களென்று நினைக்கிறாயா? ஒருக்காலுமிருக்காது" என்றார் புலவர்.

"ஏன்?" துக்கம் தொண்டையை அடைக்கக் கேட்டாள் இமயவல்லி.

"நெடுஞ்செழியன் உத்தரவு அந்த விஷயத்தில் திட்டமா யிருக்கிறது. கொன்ற பின் காட்டில் சடலத்தைத் தூக்கி எறிந்துவிட வேண்டும் கோட்டை வீரர்கள்."

"எதற்கு?"

"இங்கும் நெடுஞ்செழியனின் பகைச்சுவையும் நகைச் சுவையும் இருக்கிறது."

"நகைச்சுவையா புலவரே?"

"மாந்தரஞ்சேரல் இரும்பொறையை சிறை மீட்க ஏதோ முயற்சி நடக்கிறது என்பது மட்டும் நெடுஞ்செழியனுக்குத் தெரியும். அப்படி நடப்பதாயிருந்தால் கோட்டையை அடுத்திருக்கும் காட்டின் மூலந்தான் அது நடக்க முடியும் என்பதும் அவனுக்குத் தெரியும். ஆகையால் சடலங்களைத் தூக்கி அங்கு எறியச் சொல்கிறான். 'உங்கள் ஆள் இதோ இருக்கிறான், தூக்கிச் செல்' என்று நெடுஞ்செழியன் பரிகசித்துச் சிரிக்கிறான். நெடுஞ்செழியனுக்கு நான் பயிலுவிக்கும் ஆசிரியர்தான். ஆனால், அவன் நெஞ்சாழத்தை என்னால் இன்னும் அளவிட முடியவில்லை இமயவல்லி. ஆகவே ஒன்று மட்டும் நிச்சயம். இதில் இளமாறன் இறக்கவில்லை. அவனை நெடுஞ்செழியன்தான் வேண்டுமென்று உயிருடன் விட்டு வைத்திருக்கிறானா, அல்லது இளமாறன்தான் அவன் கையிலகப்படவில்லையா என்பதுதான் எனக்குத் தெரியவில்லை" என்றார் புலவர்.

புலவர் விளக்கம் பெரும் ஆறுதலைத் தந்தது இமய வல்லிக்கு. வெடித்துவிட இருந்த இதயத்துக்கு நம்பிக்கை நீரை வார்த்தன, புலவரின் சொற்கள். இருப்பினும் இளமாறன் கதி என்ன ஆயிற்று, அவன் எங்கிருக்கிறான் என்பதை அறியாததால் இருவரும் பெரும் குழப்பத்துடனும் உறக்கம் பிடிக்காமலும் அந்த இரவைக் கழித்தனர். அடுத்த நாள் பகல் பூராவும் மெதுவாக நகர்ந்தது. அந்தப் பகலிலும் செய்தி ஏதும் வரவில்லை வீரமார்த்தாண்டனிடமிருந்து. ஆகவே அன்று மாலை ஒரு முடிவுக்கு வந்த புலவர் பெருமான், "இமயவல்லி! இன்றிரவு மூங்கில் கோட்டைக்குப் புறப்படச் சித்தமாய் இரு" என்றார்.

"அங்கு போய் என்ன செய்யப் போகிறோம்?" என்று கேட்டாள் இமயவல்லி.

"இளமாறனைப் பற்றி ஏதாவது தெரிகிறதா என்று பார்க்கலாம்."

"எப்படிப் பார்ப்பீர்கள்?"

"என் ஒற்றர்கள் இருவர் கோட்டைக்குள் இருக் கிறார்கள்."

"அவர்களை எப்படி அணுகுவீர்கள்?"

"அவர்களை வெளியே வரவழைக்க வழியிருக்கிறது."

"என்ன வழி?"

"நாமிருக்கும் இடத்திலிருந்து சருகுகளைச் சேர்த்துப் புகை கிளப்பினால் இரண்டு நா!ழிகைக்குள் ஓர் ஒற்றன் வருவான்."

அந்தச் செய்தி பெரும் ஆறுதலாயிருந்தது இமய வல்லிக்கு. அதை ஏன் இத்தனை நாள் புலவர் தன்னிடம் சொல்லவில்லை என்பதை நினைத்து ஓரளவு வியப்பும் கொண்டாள் இமயவல்லி. இதை வாய்விட்டும் கேட்டாள், "இதை இத்தனை நாள் என்னிடம் சொல்லவில்லையே" என்று.

"சொல்லவில்லை காரணமாக" என்றார் புலவர்.

"என்ன காரணம்?"

"ஒருமுறை ஒற்றன் வெளியே வந்தால் வந்ததுதான். திரும்ப முடியாது. இதுவரை இந்த முறையை நான் கையாள வில்லை. இப்பொழுதுதான் முதன் முதலாகக் கையாளு கிறேன்." அதற்குமேல் ஏதும் பேச இஷ்டப்படாத புலவர் பயணத்துக்கு ஏற்பாடுகளைச் செய்யவே இமயவல்லியும் கீழே இறங்கிச் சென்றாள். அந்த நாலாம் இரவின் முதல் ஜாம முடிவில் காட்டுப் பர்ணசாலையை அடைந்த புலவர்

பெருமான் சிறிதும் காலதாமதம் செய்யாமல் சருகுகளைச் சேர்க்கச் சொல்லித் தமது கையாலே அவற்றை நடு வெளியில் கொளுத்திப் புகையை உயரவிட்டார். இருட்டில் அந்தப் புகை எப்படிக் கண்ணுக்குத் தெரியப் போகிற தென்று வீரமார்த்தாண்டன் சந்தேகம் தெரிவிக்கவே, புலவர் சொன்னார்: "இரவில் மேகங்களைச் சாதாரண மக்கள் கூடப் பார்க்கிறார்கள். உளறாதே வீரமார்த்தாண்டா" என்று.

அப்படிக் கோபத்துடன் நீண்ட நேரம் புகை போட்ட புலவர் பெருமான் கடைசியாகச் சருகுகளின் நெருப்பை அணைக்கச் சொல்லிவிட்டு மீண்டும் பர்ணசாலைக்குள் வந்தவர், "இமயவல்லி! நீ உன் குடிசைக்குச் சென்று உறங்கு. ஒற்றன் வர பல நாழிகைகள் ஆகும். வந்ததும் சொல்லி அனுப்புகிறேன்" என்று கூறினார்.

இமயவல்லி அவர் உத்தரவுப்படி தனது குடிசைக்குச் சென்று அங்கிருந்த மஞ்சத்தில் படுத்தாள். வேதனை அவள் உள்ளத்தைச் சூழ்ந்து நின்றது. ஒற்றனை எதிர்பார்த்து நின்ற அவள் இதயம் மட்டுமல்ல, புலவரின் இதயமும் பெரும் கவலையாலும் சங்கடத்தாலும் பீடிக்கப்பட்டு நின்றது. நாழிகைகள் மிக மெதுவாக நகர்ந்தன. எந்த ஒற்றனையும் காணாததால் புலவர் கிழப்புலிபோல் தமது பர்ண சாலையில் உலாவிக்கொண்டிருந்தார். இரண்டாம் ஜாமம் முடிந்ததும் ஒற்றன் யாரும் வராததால் வியப்பும் கலவரமும் அடைந்தார் புலவர். வேறு வழியின்றி தமது அறையில் உலாவலை நிறுத்திக்கொண்டு தொப்பென்று கட்டிலில் விழுந்தார். கண்களையும் மூடினார்.

எத்தனை நேரம் அப்படி மூடிப் படுத்திருப்பாரோ தெரியாது, அவர் சிந்தனை பெரிதும் குழம்பிக் கிடந்தது.

புகை கிளப்பி ஒற்றனை வரவழைத்து விஷயம் அறியும் அந்தக் கடைசி அஸ்திரமும் பயனற்றுவிட்டால் இனி தான் செய்யக்கூடியதெல்லாம் அங்கிருந்த அந்த ரகசியப் படையைக் கலைத்துவிட்டு மாந்தரஞ்சேரல் இரும்பொறை யின் விடுதலை முயற்சிக்கும் முடிவு கட்டிவிட வேண்டியது தானென்று தீர்மானித்ததால் ஏக்கப் பெருமூச்சும் விட்டார். அவர் அப்படி ஏங்கிக்கொண்டிருந்த சமயத்தில் வெளியில் பர்ணசாலைக் கதவைச் சடசடவென்று இமயவல்லி தட்டுவதையும், "புலவரே, புலவரே" என்று அவள் அவசர மாகக் கூச்சலிட்டதையும் கேட்டுத் தூக்கி வாரிப்போட்டுக் கொண்டு கதவைத் திறந்த புலவர் அவள் முகத்திலிருந்த எல்லையற்ற வியப்பைக் கண்டு, "என்ன இமயவல்லி? என்ன நடந்தது?" என்று வினவினார்.

"சற்று முன்பு..." மூச்சு வாங்கியதால் படபடக்கப் பேசினாள் இமயவல்லி.

"சொல், சொல்."

"மெள்ள என் குடிசைக் கதவை யாரோ திறந்தார்கள்!"

"திறந்து என்ன?"

"இதை என் மஞ்சத்தின்மீது விட்டெறிந்தார்கள்?" என்று ஓர் ஓலைச் சுருளையும் அம்பையும் காட்டினாள் இமய வல்லி.

ஓலையை மட்டும் அவள் கையிலிருந்து பிடுங்கிக் கொண்ட புலவர் பர்ணசாலைக்கு உள்ளே சென்று தமது மஞ்சத்தில் உட்கார்ந்து ஓலையைப் பிரித்து விளக்கொளியில் படித்தார். படித்தவர் முகத்தில் விவரிக்க இயலாத உணர்ச்சிகள் தாண்டவமாடின. "நினைத்தேன். நினைத்தேன்! புலிக்குப் பிறந்தது பூனையாகாது" என்று கூறினார்.

இமயவல்லி ஓடி வந்ததையும் பர்ணசாலைக் கதவைத் தட்டியதையும் தனது இருப்பிடத்திலிருந்து கவனித்ததால், உடனே பர்ணசாலைக்கு வந்த வீரமார்த்தாண்டன், “யார் புலி? யார் பூனை?” என்று ஏதும் புரியாமல் வினவினான். பதிலுக்கு ஓலையை நீட்டினார் புலவர். ஓலையைப் படித்த வீரமார்த்தாண்டன் சிலையென நின்ற இடத்திலேயே நீண்ட நேரம் நின்றுவிட்டான்.

# 20
# அகல் விளக்கு அணுகிய ஆபத்து!

‘புலிக்குப் பிறந்தது பூனையாகாது’ என்று உணர்ச்சிகள் குமுறிப் பிரவகிக்கக் கூறிய புலவர் நீட்டிய ஓலையை வாங்கிப் படித்த வீரமார்த்தாண்டன், மிதமிஞ்சிய பிரமிப்பால் அசைவற்றுப் பல விநாடி நின்றுவிட்டான். கையில் பிடித்திருந்த ஓலையில் ஓடிய வரிகளைத் திரும்பப் படித்துப் பார்த்த பின்பும் அவை நம்பமாட்டாததால் விவரிக்க இயலாத வியப்புடன் புலவரை நோக்கித் தன் கண்களை உயர்த்தினான். அவன் கண்களில் விரிந்த பிரமிப்பையும் வியப்பையும் கவனித்த புலவரும் தலையை ஆட்டி, “ஆம் வீரமார்த்தாண்டா! நம்ப முடியாதது நடந்திருக் கிறது” என்று கூறி மீண்டும் ஓலையை அவனிடமிருந்து வாங்கித் திரும்பவும் அதை ஊன்றிப் பார்த்தார். “ஆம். ஆம். சந்தேகமில்லை. இது இளமாறன் எழுதிய ஓலைதான்” என்றும் கூறினார், அத்தனை விநாடிகளுக்குப் பின்பும் உணர்ச்சி குறையாமல்.

வீரமார்த்தாண்டனுக்கு அப்பொழுதும் பூர்ண நம்பிக்கை பிறக்காததால், "அத்தனை திட்டமாக எப்படிச் சொல்லமுடியும் புலவரே? நமது வீரர்களை அழிக்க எதிரிகள் செய்யும் சூதாக இந்த ஓலை ஏன் இருக்கக் கூடாது?" என்று வினவினான்.

புலவர் தமது விழிகளை அவனை நோக்கி உயர்த்தி, "இப்படி வா!" என்றழைத்து ஓலையின் அடிப்பாகத்தை விரலால் சுட்டி, "இதைப் பார். இது உங்கள் அரசர் முத்திரை அல்லவா?" என்று வினவினார்.

"ஆம்" என்று தலையை ஆட்டினான் வீர மார்த்தாண்டன்.

"முத்திரை சரியாகப் பொறிக்கப்பட்டிருக்கிறது, அதுவும் எழுத்தாணியைக் கொண்டு" என்று புலவர் மீண்டும் விளக்கினார்.

"ஆம்."

"இதே மாதிரிதான் நானும் பொறித்திருந்தேன் சேர மன்னன் முத்திரையை, இளமாறனுக்கு நான் ஓலை யனுப்பிய போதும்."

"அப்படியா!"

"ஆம்! வீரமார்த்தாண்டா! அதை முன்னிட்டுத்தான் இளமாறனும் ஓலையின் அடியில், எந்த மூலையில் நான் முத்திரையைப் பொறித்திருந்தேனோ அதே மூலையில் பொறித்திருக்கிறான். இது அவன் எழுதிய ஓலைதான். சந்தேகமில்லை. இதன்படி நாம் நடக்க வேண்டியதுதான்" என்ற புலவர் வீரமார்த்தாண்டன் கருத்தை அறிய அவன் முகத்தை நோக்கினார்.

வீரமார்த்தாண்டன் முகத்தில் அப்பொழுதும் சந்தேகக் குறி படர்ந்து நின்றது. "இதன்படி நடந்தால் ஏற்படக்கூடிய விளைவு என்ன என்பதை உணர்ந்தீர்களா புலவரே?" என்று வினவினான் சேரநாட்டுத் தளபதி.

"ஓலையில்தான் அது கண்டிருக்கிறதே, சேர மன்னர் விடுதலைதான் விளைவு" என்றார் புலவர்.

"இந்த ஓலையை அப்படியே நம்புகிறீர்களா?"

"ஏன் நம்பக்கூடாது?"

"ஏற்கெனவே சென்ற நால்வர் சாமான்ய வீரர்கள் அல்லர்."

"அல்லர்."

"அவர்களில் யாரும் சாதிக்காததை இந்த அனுபவ மில்லாத வாலிபன் சாதிக்க முடியுமா?"

புலவர் இதழ்களில் புன்முறுவல் அரும்பியது. அந்தப் புன்முறுவலின் சாயை முகம் பூராவும் படரவும் செய்தது.

"அவர்கள் சாதிக்க முடியாத காரியத்தை இவன் சாதிக்கவில்லையா, வீரமார்த்தாண்டா?" என்று வினவினார் புலவர்.

"எதைச் சாதித்துவிட்டான்?" என்று கேட்டான் தளபதி.

"அவர்களில் ஒருவர்கூட தங்கள் உயிரைக் காப்பாற்றிக் கொள்ளவில்லை. இவன் அதைக் காத்துக்கொண்டு விட்டானே" என்று சாதனையைச் சுட்டிக் காட்டினார் புலவர் பெருமான்.

அது பெரிய சாதனைதான் என்பது வீரமார்த்தாண்ட னுக்குத் தெரிந்திருந்தும் உள்ளூர எழுந்த பொறாமை அதை

ஒப்புக்கொள்ள மறுத்ததால் அவன் பதிலேதும் சொல்ல வில்லை. அவன் உள்ள உணர்ச்சிகள் புலவருக்கும் புரிந்ததால் அவர் ஓரளவு சினங்கொண்டார். இருப்பினும் அதை வெளிக்குக் காட்டாமல் சொன்னார்: "வீர மார்த்தாண்டா! சேர மன்னனை விடுவிக்க எத்தனைத் தந்திரங்களைக் கையாண்டோம் இதுவரை? ஏதாவது பலித்ததா? இப்பொழுது பலிக்கும்போது நம் சொந்த உணர்ச்சிகள் மகிழ்ச்சியில் குறுக்கிடாதிருக்கட்டும். இளமாறன் வாலிபன்தான். அனுபவமற்றவன்தான். ஆனால், அனுபவசாலிகள் சாதிக்க முடியாததை இவன் சாதித்திருக் கிறான். முதல் சாதனை அவன் இறக்காதது. இரண்டாவது சாதனை நான்கு நாட்களாகியும் அவன் மூங்கில் கோட்டைக்குள் உயிருடனிருப்பது. மூன்றாவது சாதனை அங்கிருந்து ஓலையும் அனுப்பியது. இந்த சாதனைகளே போதும் அவன் வீரத்துக்குக் கட்டியங்கூற. அவற்றுக்குச் சிகரம் வைத்ததுபோல் நமக்கு எவ்விதக் கஷ்டமுமில்லாமல் சேர மன்னனையும் நம்மிடம் ஒப்படைப்பதாகக் கூறுகிறான். இன்னும் என்ன எதிர்பார்க்கிறாய் அவனிடமிருந்து?" என்று அத்துடன் நில்லாத புலவர், "வீரமார்த்தாண்டா! இளமாறன் நமக்கு இடும் கட்டளைகளை நன்றாகக் கேட்டுக்கொள்"

என்றும் கூறிவிட்டு, இமயவல்லியிடம் ஓலையை நீட்டி, "இப்படி வா இமயவல்லி. இந்த விளக்கொளியில் மீண்டும்— ஓலையைப் படி, கேட்போம்" என்றார். இமய வல்லி தெளிவாகவும், திடமாகவும் படித்தாள். அதில் கீழ்க்கண்டபடி எழுதியிருந்தது.

*"புலவர் பெருமானே! இந்த ஓலை கிடைத்த மறுநாள் இரவு இரண்டாம் ஜாம ஆரம்பத்தில் சேர நாட்டுத் தளபதியுடனும் மற்றைய வீரர்களுடனும்*

*காட்டின் வடக்குப் பகுதியின் மூலையில் காத்திருங்கள். அந்தப் பகுதிக்கு எதிரேயுள்ள கோட்டைச் சுவரின் மீது ஓர் அகல் விளக்கு எரியும். அது அணைந்த ஒரு ஜாமத்திற்குள் சேர மன்னர் உங்களிடம் வருவார். மன்னரை சேரர் தளபதியும் வீரர்களும் பாதுகாத்து அழைத்துக்கொண்டு காட்டு மார்க்கமாக சோழநாடு நோக்கி விரையட்டும். நீங்களும் இமயவல்லியும் மதுரைக்குச் சென்று விடுங்கள். யாரும் காட்டில் தங்க வேண்டாம். ஆண்டவன் அருளிருந்தால் மீண்டும் சந்திப்போம்."*

*— இளமாறன்*

ஓலையை இமயவல்லி படித்து முடிந்ததும் தீர்க்காலோசனையில் இறங்கினார் புலவர் பெருமான். அவர் அடிக்கடி தலையை ஆட்டியதிலிருந்து ஓலையில் கண்ட செய்தியை அவர் பூர்ணமாக ஜீரணித்துக்கொள்ள முயல்வதாகத் தோன்றியது மற்ற இருவருக்கும். நீண்ட நேர யோசனைக்குப் பின்பு வீரமார்த்தாண்டனை நோக்கிய புலவர், "வீரமார்த்தாண்டா! ஓலை தெளிவாயிருக்கிறது. மன்னர் நாளை சிறை மீட்கப்படுவார். ஆகவே ஓலையில் கண்டதைச் செய்யச் சித்தப்படு" என்று உத்தரவிட்டார். இந்த உத்தரவைப் பிறப்பித்த புலவர் பார்வையிலும் குரலிலும் உறுதி பரிபூரணமாக இருந்தது. உத்தரவுக்கு எந்தவித ஆட்சேபணை தெரிவித்தாலும் புலவரின் சீற்றத்துக்கு இலக்காக நேரிடுமென்பதை உணர்ந்த வீரமார்த்தாண்டன் புலவருக்குத் தலைவணங்கி வெளியே சென்றான்.

அவன் சென்றதும் புலவரும் இமயவல்லியும் ஒருவரை யொருவர் பார்த்துக்கொண்டார்கள். இருவர் கண்களும் பரஸ்பரம் அவர்கள் உள்ளத்தில் ஓடிக்கொண்டிருந்த

எண்ணங்களை நன்றாகப் பிரதிபலிக்கவே செய்தன. அந்த எண்ணங்களின் விளைவாக சோகப் பெருமூச்சு விட்ட புலவர், தமது ஆசனத்தில் அமர்ந்துகொண்டு, "நான் தான் கவனித்தேனென்று நினைத்தேன். நீயும் அதைக் கவனித்தாயா?" என்று வினவினார்.

இமயவல்லியின் நாசியிலிருந்து பெருமூச்சு வெளி வந்தது. "கவனித்தேன்" என்றாள் அவள் தலைகுனிந்த வண்ணம்.

"சேர மன்னரை அழைத்து வருவேன் என்று எழுத வில்லை இமயவல்லி!" என்றார் புலவர் வருத்தந் தோய்ந்த குரலில்.

"ஆம்..." வேதனையே சொல்லாக வெளிவந்தது இமயவல்லியின் இதழ்களிலிருந்து.

"சேர மன்னர் உங்களிடம் வருவார் என்று எழுதி யிருக்கிறான்."

"ஆம் புலவரே!"

"ஆண்டவன் அருளிருந்தால் மீண்டும் சந்திப்போம் என்று குறிப்பிட்டு இருக்கிறான்."

இமயவல்லி மேற்கொண்டு பதிலேதும் சொல்ல வில்லையே தவிர, நின்றவண்ணமே குலுங்கிக் குலுங்கி அழுதாள். அவள் வேதனையைப் பார்த்த புலவருங்கூட அந்த வாலிபன் உயிரைப் பணயம் வைத்து சேர மன்னனை விடுவிக்க வேண்டியது அவசியம்தானா என்று தோன்றியது. அத்தகைய எண்ணம் உள்ளத்தில் எழுந்ததை ஒரே விநாடியில் உதறித் தள்ளினார் புலவர். "நாட்டு நலனுக்கு வீரர்கள் தியாகம் தேவையாய் இருக்கிறது. என்ன செய்வது?" என்று தமக்குள்ளேயே சொல்லிக்கொண்ட புலவர், இமய

வல்லியை நோக்கி, "நீ சென்று படுத்துக்கொள் இமயவல்லி. இனி நாம் செய்யக்கூடியது எதுவுமில்லை" என்றார். இமயவல்லி மேலும் பேசாமல் கண்ணீரை முந்தானையில் துடைத்துக்கொண்டு தனது குடிலை நோக்கிச் சென்றாள்.

உணர்ச்சிப் பெருக்கால் புலவரும் சரி, இமயவல்லியும் சரி, ஓலை கொண்டு வந்தது யார்? அதை ஏன் கையால் விட்டெறிந்தான்? வந்தவன் ஓலையை இமயவல்லி படுக்கையின் மீது எறிவானேன்? வந்தவன் எப்படி மறைந்தான்? ஏன் மறைந்தான்? என்ற விவரங்களைப்பற்றி யோசனையே செய்யவில்லை. இளமாறனைப்பற்றிய எண்ணங்களே அவர்கள் இதயங்களை அடைத்துக்கொண் டிருந்தன. ஆனால் இளமாறனிடம் எந்தவிதப் பாசம் ஏதுமில்லாத வீரமார்த்தாண்டன் மட்டும் இந்தக் கேள்வி களைத் தானே எழுப்பிக்கொண்டதன்றி, வந்தவன் இளமாறனைத் தவிர வேறு யாருமிருக்க முடியாதென்ற தீர்மானத்துக்கு வந்தான்.

ஆகையால், மறுநாள் காலையில் அதைப்பற்றிப் புலவரைக் கேட்டான். அதுவரை வந்தவனைப்பற்றிச் சிந்தனையில்லாத புலவரும் அவனைப்பற்றி யோசித்து சிறிது குழம்பினார். இருப்பினும் கடைசியில் திட்டமாகச் சொன்னார். "வீரமார்த்தாண்டா! ஓலையை யார் எறிந்தா லென்ன? ஓலையில் கண்ட விஷயம் முக்கியம். அதன்படி நடப்பதில் நமக்கு எந்தவித நஷ்டமுமில்லை. தவிர சேரமான் இப்பொழுது தப்பவில்லையேல் வேறு சமயம் தப்புவதும் சாத்தியமில்லை" என்று.

வீரமார்த்தாண்டன் சந்தேகம் அப்பொழுதும் தீரவில்லை. "ஒருவேளை இந்தக் கடிதம் சூதாயிருந்து நமது வீரர்கள் வளைத்துக்கொள்ளப்பட்டால் என்ன செய்வது?" என்று வினவினான் அவன்.

புலவர் நன்றாக நிமிர்ந்து நின்றுகொண்டு அவனை வெறுப்புடன் நோக்கினார். "போரில் எதிரிகளால் சூழப்பட்டால் என்ன செய்வாய்?" என்று வெறுப்புடன் வினவவும் செய்தார்.

"போரிடுவேன்" என்றான் வீரமார்த்தாண்டனும் கம்பீரத்துடன்.

"அதை இப்பொழுதும் செய்யலாம்" என்றார் புலவர் இகழ்ச்சியுடன்.

வீரமார்த்தாண்டன் அதற்கு மேல் ஏதும் பேசவில்லை. அன்று முழுவதும் வீரர்களைப் பயணத்துக்குத் தயார்ப் படுத்தினான். வீரர்கள் தங்கள் போர்க்கலங்களைப் பூண்டு போருக்குச் சன்னத்தமாக நின்றார்கள்.

மெள்ள மெள்ள இரவும் நெருங்கி வந்தது. முதல் ஜாமமும் வெகு வேகமாக நகர்ந்துகொண்டிருந்தது. அது நகர்ந்து நடுப்பாதிக்கு வந்த சமயத்தில் புலவர் பெருமான் தமது பர்ணசாலையிலிருந்து இமயவல்லியுடன் வெளிப் போந்து புறப்படத் தயாராக நின்ற வீரர்களை ஒருமுறை பார்த்தார். பிறகு அவர்களை நோக்கி, "வீரர்களே! சேர மன்னர் இன்னும் ஒரு ஜாமத்தில் உங்கள் வசம் ஒப்படைக்கப்படுவார். அவரைக் காத்து அழைத்துச் செல்லுங்கள். வாழட்டும் சேரநாடு, ஒழியட்டும் போர் இனி தமிழகத்தில்" என்று நா தழுதழுக்கச் சொல்லி உறுதியாகத் தமது கால்கள் நிலத்தில் பாவ அவர்களுக்கு வழிகாட்டி நடந்து சென்றார். இமயவல்லி அவருக்குப் பின்பும் அவர்களுக்குப் பின்பு வீரமார்த்தாண்டனும் சென்றார்கள். அவர்களை பின்பற்றி வீரர்கள் நடந்தார்கள்.

நல்ல இருட்டில் வானம் வீசிய சிறு இயற்கை வெளிச்சத்தைத் தவிர வேறு வெளிச்சம் ஏதுமின்றி அந்தக்

கோஷ்டி மௌனமாக நடந்து சென்றது. வீரர்களின் பாதங்கள் இலைச்சருகுகளில் பட்டதால் ஏற்பட்ட சலசலப்புச் சத்தத்தையும், காட்டு ஜீவராசிகள் கிளப்பிய நானாவித சப்தங்களையும் தவிர வேறு எந்த அரவமு மில்லாததால் மிதமிஞ்சிப் பயங்கரம் எங்கும் நிலவிக் கிடந்தது. அந்த இரவில் நிகழ இருந்த சம்பவங்களை நினைத்துச் சலனப்பட்டனபோல் மரத்தின் இலைகள்கூட காற்றில் சலசலத்து ஏதோ ரகசியங்களைச் சொல்லிக்கொண் டிருந்தன. அந்தச் சூழ்நிலையிலும் சிறிதும் கலங்காமலே நடந்தார் புலவர், வெற்றியை நாடிச் செல்லும் வீரத் தளபதிபோல. இமயவல்லியின் இதயம் பெரிதும் நெகிழ்ந்து கிடந்தது. அந்தச் சமயத்தில் அவள் சேர மன்னனையும் நினைக்கவில்லை, பாண்டிய மன்னனையும் நினைக்க வில்லை. தன் இதய மன்னனை நினைத்துக்கொண்டே நடந்தாள். காட்டின் வடக்குப் பகுதியை நோக்கி அவள் வைத்த ஒவ்வோர் அடியிலும் சோகம் பிரதிபலித்தது. அவள் மலரடிகள் சோகத்தால் அழுந்தி நடந்ததால் கீழே மடிந்து கிடந்த இலைச்சருகுகள் பொடியாகி மண்ணுடன் கலந்தன. மெள்ள மெள்ள இதய கனத்தால் கால்கள் அழுந்த அழுந்த, நடந்தாள் அவள். கனவில் நடப்பவள்போல நடந்த அவளுக்குக் காட்டின் வடக்குப் பகுதிக்கு வந்து விட்டதுகூடத் தெரியவில்லை. புலவர், "மகளே!" என்று அன்புடன் அழைத்த பின்பே அவள் கனவுலகத்திலிருந்து மீண்டாள்.

அப்படி மீண்ட பின்பும் உடலும் உள்ளமும் துவண்டு கிடந்ததால், "ஏன் புலவரே!" என்று நீளமான குரலில் கேட்டாள் இமயவல்லி.

"இளமாறன் குறிப்பிட்ட இடத்திற்கு வந்துவிட்டோம்" என்றார் புலவர்.

"சரி" என்றாள் இமயவல்லி உணர்ச்சியற்ற குரலில். மேற்கொண்டு இருவரும் பேசவில்லை. இருவர் கண்களும் எதிரே தெரிந்த கோட்டையை நோக்கின. கோட்டையை அடுத்துக் கிடந்த, பார்வைக்கு ஆபத்தற்ற, ஆனால் பயங்கர அகழிகளை உள்ளடக்கியிருந்த நிலப்பரப்பையும் கண்டன.

அந்தப் பொட்டல் வெளி இமயவல்லியின் உடலை ஒருமுறை ஆட்டியது. அதன் கீழே இருக்கும் பெரும் முதலை களின் சத்தம் அங்கு வெளிக்குக் கேட்கவில்லையாயினும் உள்ளே அவற்றின் பயங்கரச் சத்தம் எப்படி இருக்கு மென்பதை உணர்ந்திருந்ததால் அவள் பெரிதும் நடுங்கினாள். கருணை வள்ளலான தன் சகோதரன் நெடுஞ்செழியன் கேவலம் விரோதத்தால் எத்தகைய ஒரு பயங்கர கோட்டையை ஸ்தாபித்து விட்டான் என்பதை நினைத்து நினைத்து அவள் மனம் புழுங்கினாள். அந்த அகழியை நினைத்ததால் உண்டான பயம் இளமாறன் கதியை எண்ணியதால் ஏற்பட்ட இதய வெடிப்புக்கு இடம் கொடுக்கவே அவள் விழிகள் பயத்துடன் கோட்டையை நோக்கின. கண்களில் நீர் சுரக்கவில்லை. சுரக்க இருந்த நீர் உள்ளே எழுந்த வெப்பத்தால் வறண்டு போயிருக்க வேண்டும்.

புலவரும் இமயவல்லியும் அவரவர் எண்ண அலைகளில் உருண்டிருந்ததால் மற்ற வீரர்களுக்கு மெதுவாக நகர்ந்த இரவு அவர்களுக்கு மட்டும் வெகு வேகமாக ஓடியது. இரண்டாம் ஜாமமும் துவங்கியது.

இரண்டாம் ஜாமம் நெருங்கிவிட்டதையும் விண் மீன்களை ஒருமுறை நோக்கியதால் உணர்ந்துகொண்ட வீரமார்த்தாண்டன் இரண்டாம் ஜாமம் துவங்கிவிட்டதைப் புலவருக்குத் தெரியப்படுத்தினான். புலவரும் ஒருமுறை

ஆகாயத்தைப் பார்த்து அதை ஊர்ஜிதம் செய்துகொள்ளவே அனைவரையும் சன்னத்துடன் இருக்கும்படி எச்சரித்துக் கோட்டையின் மதில்மீது கண்களை நிலைக்கவிட்டார். நேரம் மட்டும் அவர் அவசரத்துக்குப் பணிய மறுத்து மெல்ல மெல்ல நகர்ந்தது. அப்படி நகர்ந்ததால் சாதாரண காலத்தில் வனத்தில் பட்சி ஜாலங்களின் சப்தங்களைக் கேட்டு ரசிக்கவல்ல புலவர் பெருமான் அவற்றிடம் சீற்றமே கொண்டு 'ச்சு' என்ற அலுப்புடன் சப்தம் கொட்டினார்.

நேரம் நகர நகர புலவரின் தீட்சண்யமான கண்கள் கோட்டையின் மதிலைத் துளைத்துவிடுவனபோல் பார்த்துக் கொண்டிருந்தன. இரண்டாம் ஜாமம் பாதி ஆகியும் எந்த அகல் விளக்கும் தெரியாதுபோகவே புலவர் இதயமும் 'திக்கு திக்கு' என்று அடித்துக்கொண்டது. 'ஒருவேளை வீரமார்த்தாண்டன் சொன்னதுபோல் கடிதம் சூதாக இருக்குமோ?' என்றுகூட எண்ணினார். அப்படி எண்ணிய அவர் வீரமார்த்தாண்டனைப் பார்க்கத் திரும்பியபோது, "அதோ!" என்ற இமயவல்லியின் மென்மைக் கூச்சல் புலவர் கண்ணைக் கோட்டையை நோக்கித் திருப்பியது.

கோட்டையின் கீழிருந்த ஒரு விளக்கு கிளம்பி கோட்டைச் சுவர்மீது உட்கார்ந்தது. மினுக்கென மிக இழிந்து எரிந்த அந்த விளக்கின் ஒளி திடீரெனச் சற்றுப் பெரிதாகச் சுடர் விடவே, யாரோ திரியைத் தூண்டுகிறார்கள் என்பதை மட்டும் புலவரும் இமயவல்லியும் புரிந்துகொண்டார்கள். சுடர் பெரிதான விளக்கு ஒரு விநாடிதான் எரிந்தது. மீண்டும் திரி பின்னால் இழுக்கப்பட்டு அணைந்தது. விளக்கு சுடரின் ஏற்றத்தையும் தாழ்வையும் மறைவையும் இமை கொட்டாமல் பார்த்துக்கொண்டிருந்த புலவர், வீரமார்த்தாண்டனை அணுகி, "தளபதி! வீரர்கள் எந்த

விநாடியிலும் விரையத் தயாராகட்டும்" என்று எச்சரித்து அவன் பக்கத்திலேயே நின்றார்.

நாழிகைகள் ஓடின. காட்டினூடே புகுந்து காற்றின் சத்தத்தையும் எங்கிருந்தோ கத்திய புலி, ஓநாய் இவற்றின் சப்தங்களையும் தவிர வேறு எவ்வித சப்தமும் இல்லாததால் வீரர்கள் மூச்சைப் பிடித்துக்கொண்டு வாளை உருவிக் கொண்டு நின்றனர். இரண்டாம் ஜாமமும் முடிந்து மூன்றாம் ஜாமம் துவங்கியதும் கோட்டைப் புறமிருந்து யாரும் வரும் வழியாகக் காணாததால் வீரமார்த்தண்டன் ஒரு சந்தேகம் கேட்டான், "கோட்டையில் இருந்து வெளிவர இந்தப் பகுதியில் வழி இருக்கிறதா?" என்று.

"எனக்குத் தெரிந்தவரையில் இல்லை" என்றார் புலவர்.

"உங்களுக்குத் தெரிந்த வழி?"

"பாழடைந்த மண்டபச் சுரங்க வழிதான்."

"பின் அங்கல்லவா நாம் காத்திருக்க வேண்டும்?"

"ஓலையில் குறிப்பிட்டிருப்பது இந்த இடத்தை" புலவர் திடமாக இப்படிச் சொன்னதால் வீரமார்த்தாண்டன் மேற்கொண்டு ஏதும் சொல்லவில்லை.

அடுத்தபடி எல்லோரும் மௌனமே சாதித்தார்கள். மூன்றாம் ஜாமம் துவங்கி நாழிகைகள் நான்கு ஓடியும் ஏதும் நடக்காததால் புலவர் பெரிதும் சங்கடப்பட்டார். அந்தச் சமயத்தில் இமயவல்லி திடீரென மூச்சை இழுத்துப் பிடித்துக்கொண்டாள். "புலவரே! அதோ அதோ!" என்று பொட்டல் வெளிப்பரப்பைச் சுட்டிக் காட்டினாள்.

அவளது வலதுகை காட்டிய இடத்தைப் புலவரும் மற்றோரும் ஊன்றிக் கவனித்தார்கள். பொட்டல் வெளியில் ஏதோ உருவம் அசைந்தது தெரிந்தது புலவருக்கு. அது சேர

மன்னன்தான் என்று எண்ணி முதலில் மகிழ்ந்த புலவர் திடீரெனப் பெரும் திகில் கொண்டார். “நான்கு உருவங்கள் அசைகின்றன இமயவல்லி! அதோ பார். அதோ! அதோ!” என்று சுட்டிக் காட்டினார்.

இமயவல்லியின் கண்கள் மட்டுமின்றி, வீர மார்த்தாண்டன் கண்களும் அந்த உருவங்களைத் தொடர்ந்தன. அந்தச் சமயத்தில் வீரமார்ததாண்டன் கேட்டான்: “புலவரே! அதோ நகரும் உருவங்கள் மனித உருவங்களா?” என்று. புலவருக்கும் அந்தச் சந்தேகம் எழுந்தது. ஒவ்வோர் உருவமும் மூன்றடிக்கு மேல் உயர மில்லை. தானும் அறியாத பேராபத்து வருகிறது என்பதை நிச்சயம் செய்துகொண்ட புலவர், “வீரமார்த்தாண்டா! வாளை · உருவிக்கொள். வீரர்களும் போருக்குத் தயாராகட்டும்” என்றார்.

மனித உருவத்தில் பாதி உருவம் பெற்றிருந்த அந்த நான்கு உருவங்களும் வெளியில் புலவரும் மற்றோரும் இருந்த இடத்தை நோக்கித் துரிதமாக நகர்ந்து வந்தன.

# 21

# சித்தரின் கோபம்

நல்ல இருட்டில் அந்தப் பொல்லாக் கோட்டையின் உட்கட்டடம் பெரும் பிசாசுகள்போல் பின்னணி அமைத்துக் கொடுக்க, எதிரேயிருந்த பொட்டல் வெளியில் அந்த மூன்றடி உயர உருவங்கள் குட்டிப் பிசாசுகளைப்போல் துரிதத்துடன் நகர்ந்துவர, அவற்றை நோக்கிய வண்ணம்

புலவரும் அவர் கூட்டமும் மூச்சை இழுத்துப் பிடித்தபடி விநாடி ஓடுவதை எண்ணி நிற்க, காலம் பயங்கரமாக மெள்ள நகர்ந்தது. அப்படிக் காலம் நகர நகர அந்த நான்கு உருவங்களும் கண்களால் சரியாகக் கவனிக்கக்கூடிய தூரத்தை அணுகிவிடவே புலவர் அவற்றை ஊன்றிக் கவனித்து அவற்றின் உயரம் ஆள் உயரத்தில் பாதி இருக்கும் காரணத்தைப் புரிந்துகொண்டார். அந்த நான்கு உருவங்களும் கோட்டையிலிருந்து பார்ப்பவர் கண்களுக்குப் புலப்படாதிருப்பதற்காக மண்டியிட்டும் தவழ்ந்தும் வந்த தாலேயே அவற்றின் உயரம் அத்தனை குறைவாயிருப்ப தையும், வந்த உருவங்கள் மனித உருவங்கள் என்பதில் சந்தேகமில்லை என்பதையும் உணர்ந்துகொண்ட புலவர் அதைப்பற்றி இமயவல்லியிடமும் தெரியப்படுத்தினார். அதை அவருக்கு முன்பே கவனித்துவிட்ட இமயவல்லி, "ஆம், ஆம், புலவரே! சேரநாட்டு வாலிபர் மிகுந்த சாகசத்துடன்தான் காரியத்தை முடித்திருக்கிறார்" என்று கூறினாள். அந்த உருவங்கள் தவழ்ந்து வருவதில் என்ன பெரிய சாகசம் இருக்க முடியுமென்பதை உணராத வீரமார்த்தாண்டன் மட்டும் கேட்டான், "இதில் என்ன அப்பேர்ப்பட்ட சாகசம் இருக்கிறது?" என்று.

"அதோ பார் வீரமார்த்தாண்டா! கோட்டைக்குள் இருக்கும் நடுக்கட்டடத்தின் நிழல் பொட்டல் வெளியில் இந்தப் பகுதியில் மட்டும் அதிக இருட்டை அடித்திருக்கிறது. அதில் எழுந்து நடந்தால் தலைமீது கோட்டை விளக்கு வெளிச்சம் விழும்! மனிதர் நடமாடுவது தெரியும். ஆகையால்தான் இவர்கள் மண்டியிட்டும் தவழ்ந்தும் வருகிறார்கள்" என்று புலவர் விளக்கினார். அதைத் தொடர்ந்து இமயவல்லியும் கூறினாள், "அதுமட்டுமல்ல, இந்தப் பொட்டல் வெளியின் தரை பொய்த்தரை. இதன்

மேலேயுள்ள மெல்லிய பொடிமண் பூச்சுக்குக் கீழே ஆங்காங்கு மூங்கில்கள் இருக்கின்றன. அவற்றில் எங்காவது கால்பட்டு மூங்கில் முறிந்தால் கீழிருக்கும் அகழியில் விழும்படியாயிருக்கும். தவழ்ந்து வருவதால் மனித எடை பரவலாகி விடுகிறது. மூங்கில் ஓரிடத்தில் முறிந்தாலும் சற்று நகர்ந்து சமாளித்துக்கொள்ளலாம் கைகளின் உதவியால்" என்று.

இதைக் கேட்ட புலவர் பெருமானின் விழிகள் ஆச்சரியத்தால் மலர்ந்தன. மதில்கோட்டையை அடைவதற்கு இதுவும் ஒரு வழிதான் என்பதை உணர்ந்துகொண்ட அவர் இளமாறன் புத்திக்கூர்மையை மிகவும் வியந்தார். யாருக்கும் புலப்படாத யுக்திகள் இளமாறன் தந்தைக்கு ஏற்படும் என்பதை அறிந்திருந்த புலவர், தந்தைக்குத் தகுந்த தனயன்தான் இளமாறன் என்றும் தனக்குள்ளேயே சிலாகித்துக்கொண்டார். இளமாறன் திறமையைப்பற்றிய இத்தனை பாராட்டுதலைச் செய்த அவர் மனம் இளமாறன் நிலை அந்தச் சமயத்தில் எப்படி இருக்கிறதோ என்ற சிந்தனையிலும் இறங்கவே அவர் உள்ளத்தில் திகில் மண்டியது.

"அதோ, தவழ்ந்து வரும் நால்வரில் இளமாறனும் ஒருவனாய் இருப்பானா?" என்று தன்னைத்தானே பலமுறை கேட்டுக்கொண்ட குறுங்கோழியூர்க்கிழார், வந்த நான்கு உருவங்களிலேயே கண்ணைப் பதித்துக்கொண்டு நின்றிருந்தார்.

அந்த உருவங்கள் நான்கும் எத்தனை வேகமாக தவழ்ந்துவர முடியுமோ அத்தனை வேகமாகவே தவழ்ந்து வந்தன. நேரம் ஆக ஆக ஆபத்தும் அதிகமாகுமென்பதை உணர்ந்த புலவர், அவர்கள் தவழ்ந்த வேகம் போதாது

என்றே நினைத்தார். அவர் இதயம் படபடக்கென்று அடித்துக்கொண்டது.

அதே சமயத்தில் கோட்டைக்குள் திடீரெனப் பரபரப்பு ஏற்பட்டது. தீபங்கள் மிகத் துரிதமாகக் கொளுத்தப்பட்டன.

அடுத்த சில விநாடிகளில் கோட்டைக்குள் பெரும் கூச்சலும் கேட்டது. மாந்தரஞ்சேரல் இரும்பொறை தப்பி விட்டதைக் கோட்டைக் காவலர் கவனித்து விட்டார்கள் என்பதற்கு அறிகுறியாகப் பந்தங்கள் எங்கும் நடமாடத் தொடங்கின. கோட்டைச் சுவர்மீதும் பலர் ஏறினார்கள். அதிக நேரம் தாமதித்தால் தவழ்ந்து வரும் நான்கு பேர் மீதும் ஈட்டிகளும் அம்புகளும் கோட்டையிலிருந்து பறந்து வரும் என்பதை உணர்ந்த புலவர் பெருமான் நடுங்கினார். கோட்டைச் சுவர்மீது சில நிமிஷங்களுக்கெல்லாம் பந்தங்களைப் பிடித்த காவலர் உலாவி, பந்தங்களைப் பொட்டல் வெளிப்பகுதிகளில் வீசினார்கள். பந்தங்களின் வெளிச்சம் தவழ்ந்து வந்தவர்களின் இடம்வரை வராததைக் கண்ட புலவர் பெருமான் ஆசுவாசப் பெருமூச்சு விட்டார். வந்த உருவங்களும் சீக்கிரம் காட்டின் முனைப் பகுதியை அடைந்துகொண்டிருந்தன. திடீரெனக் கோட்டையில் அரவம் அதிகமாகியது. அதன் கதவுகள் திறக்கப்பட்டு வீரர்கள் வெளியே ஓடி வந்தனர்.

துரிதமான நிகழ்ச்சிகள் தொடர்ந்தன. "அந்தப் புறம் போக வேண்டாம். நில் நில்!" என்று வெளியே வந்த வீரர்களை எச்சரித்த குரல் ஒன்று கோட்டையின் உள்ளிருந்து கிளம்பியது. இதையும் கேளாது ஆத்திரத்தில் ஓடி வந்த சில வீரர்கள் திடீரென, "ஐயோ!" எனக் கதறினார்கள். அகழியை மறைத்த மூங்கில்கள் பல இடங்களில் படேல் படேலென முறிவது காதில் கேட்டது.

அவை முறிந்த அடுத்த விநாடியில் அகழியில் கோபக் கூச்சலுடன் விழுந்த வீரர்கள் இரண்டொருவரின் அலறல் வானைப் பயங்கரமாகப் பிளந்தது. அதே சமயத்தில் தவழ்ந்து வந்த உருவங்கள் வேகத்துடன் எழுந்தன. அந்த உருவங்களில் ஒன்று கீழே ஓரிடத்தைத் தோண்டிக் கையிலிருந்த இரு கற்களைத் தட்டி நெருப்பை இடவே பூமியிலிருந்து பெரும் ஜ்வாலை திடீரெனக் கிளம்பியது. அந்த ஜ்வாலையின் ஒளியில் நால்வர் ஓடுவதைப் புலவர் கவனித்தார். மூவர் அவர் இருந்த இடத்தைவிட்டுக் காட்டின் மற்றொரு பகுதியை நோக்கி ஓடினார்கள். ஓர் உருவம் மட்டும் வெகு வேகமாக ஓடி வந்து திடீரென நின்று தள்ளாடித் தள்ளாடிப் புலவரை நோக்கி வந்தது. புலவர் அந்த உருவத்தைத் தமது கையில் தாங்கினார். முகத்தை உற்று நோக்கினார். அருகிலிருந்த பந்தத்தின் வெளிச்சத்தில், யானைக்கண்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை அவருடைய கரங்களில் விழுந்து கிடந்தான். அவன் உடலில் இரண்டோர் இடங்களில் புதிதாகக் கத்திபட்ட காயங்கள் இருந்தன. சேரமன்னனை சில விநாடியே உற்றுப் பார்த்த புலவர் அவன் முகத்தைக் கையால் தடவிக்கொடுத்து சுரணை வரச் செய்து, "மன்னனே! நீ வாழி! சேரநாடு வாழி!" என்றார்.

யானைக்கண்சேய் கூர்மையான தன் சிறு கண்களைக் கொண்டு புலவரை நோக்கினான். "புலவரே! நீர் வாழி பாட வேண்டியது எனக்கல்ல; நீர் அனுப்பினீரே அந்த வாலிபனுக்கு" என்று கூறி, "விடுங்கள் என்னை, நான் செல்ல வேண்டும்" என்று எழுந்து நிற்க முயன்றான்.

அவன் எண்ணத்தைப் புரிந்துகொண்ட புலவர் பெருமான், "எங்களுக்குக் கட்டளை திட்டமாயிருக்கிறது மன்னவா! நீ போக வேண்டியது சேரநாடு. இதோ உன்

படைத்தலைவரும் வீரரும் உன்னை அழைத்துச் செல்லக் காத்திருக்கிறார்கள்" என்று துரிதப்படுத்தினார்.

யானைக்கண்சேய் அசையவில்லை. "நான் இப்பொழுது செல்லவேண்டிய இடம் சேரநாடல்ல" என்று பிடிவாதமாகக் கூறினான் சேர மன்னன்.

"வேறெங்கு செல்ல வேண்டும் மன்னவா?" புலவர் குரலில் கோபம் ஒலித்தது.

"என்னைக் காப்பாற்றிய இளைஞன் சென்ற இடத்துக்கு." மன்னன் குரல் உறுதியாயிருந்தது.

"எந்த இடம் அது?" புலவர் கேட்டார் கோபத்துடன்.

"எனக்குத் தெரியாது. எதிர்ப்புறம் ஓடிய மூவரில் அவன் ஒருவன்; அந்த மூவரும் பேராபத்தில் இருக்கிறார்கள்."

"என்ன ஆபத்து?"

"அவர்கள் ஓடுமிடம் கோட்டையின் ரகசிய வாயிலை நோக்கி. அங்கு அவர்களை நசுக்கப் படை காத்திருக்கிறது."

"உங்களுக்கெப்படித் தெரியும் அது?"

"அவனே சொன்னான். நான் வேறு போக்குக் காட்டி பாண்டியனிடம் சிக்கிக் கொள்கிறேன், நீங்கள் தப்பி விடுங்களென்று."

புலவர் பெருமூச்செறிந்தார் ஒரு விநாடி. அடுத்த விநாடி தம்மைத் திடப்படுத்திக்கொண்டு, "மன்னவா! என்னை நம்பு. அவன் பாண்டியனிடம் சிக்கினாலும் அவனுக்கு ஆபத்து ஏதும் ஏற்படாது. உன்னைத் தப்புவிக்க அவ்வன் பட்டுள்ள கஷ்டம், சமாளித்திருக்கும் ஆபத்து, மிக மிக அதிகம். அவன் காரியத்தை வியர்த்தமாக்காதே. புறப்படு

சேரநாட்டுக்கு. அவனைக் காக்கும் பொறுப்பை என்னிடம் விட்டுவிடு" என்று சமாதானம் சொன்னார்.

அதற்கு யானைக்கண்சேய் மசிந்தானில்லை. "காத்தவனை எதிரியிடம் கொடுத்துவிட்டு, தன்னுடலைக் காப்பாற்றிக்கொள்ளும் கயவன் என்றா சேரனை நினைத்தீர் புலவரே!" என்று சீறினான் மன்னன்.

புலவர் முகத்தில் கோபக்குறி சுடர்விட்டது. "மன்னா! உன்னைவிட அந்த இளைஞன் எனக்கு வேண்டியவன். அவனைக் காக்கும் வழி எனக்குத் தெரியும். அவன் சென்ற பக்கம் இப்பொழுது நீ சென்றால் அவனுக்கும் அழிவு; உனக்கும் அழிவு. அவன் சேவையை பயனற்றதாக அடிக்கும் நீ பண்புள்ள மன்னனாக முடியாது. கேள் என் வார்த்தையை. அவன் சொற்படி உன் வீரர்களுடன் செல்; இல்லையேல்..." புலவர் சொற்களில் எச்சரிக்கை இருந்தது.

"இல்லையேல்?" மாந்தரஞ்சேரல் கேட்டான் வெறுப்புடன்.

"உன்னைப் புகழ்ந்த என் நாக்கு இனி உன்னை இகழும். உன்னைப் பாராட்டிப் பாடிய நாக்கு உன்னைக் காத்த இளைஞனுக்கு நீ நன்றியற்று நடந்து அவனையும் அழித்து உன்னையும் அழித்துக்கொண்ட கதையைப் பாடும்?" என்ற புலவர் ருத்திரன்போலக் காட்சியளித்தார். அத்துடன் நன்றாக நிமிர்ந்துகொண்டு உத்தரவிட்டார், "செல் உன் நாட்டுக்கு மன்னா! எந்த ஒருவருக்காகவும் நாடு வாழ்வதில்லை. நாட்டுக்காகவே மன்னன் வாழவேண்டும்" என்று. அத்துடன் வீரமார்த்தாண்டனையும் விளித்து, "உன் மன்னனை அழைத்துச் செல், பாண்டிய வீரர் இப்புறம் வருமுன்பு" என்றும் கூறினார்.

யானைக்கண்சேய் தள்ளாடி நின்றான், புலவர் சீற்றத்துக்கு முன்பு பதிலேதும் சொல்ல வகையின்றி. வேண்டா வெறுப்புடன் நடந்து சென்ற அவனை வீர மார்த்தாண்டன் ஒரு புரவி மேலேற்றினான். பிறகு புலவரிடம் விடை பெற்று வீரர்களைக் காட்டினூடே விரையக் கட்டளையிட்டான். சேர வீரர் கூட்டம் காட்டின் வடபுறத்துக்குள் நுழைந்துவிட்ட சில விநாடிகளுக்கெல்லாம் தென்பகுதியில் பெரும் சத்தம் கேட்டது. சத்தம் வந்த திசையை நோக்கி நடந்தார் புலவர் பெருமான், இமய வல்லியுடன். சுமார் இரண்டு நாழிகைப் பயணத்துக்கும் பிறகு அந்தப் பகுதியை அடைந்தவர் எதிரே விரிந்த காட்சியைக் கண்டு அசைவற்றுப் பல விநாடிகள் நின்று விட்டார். பிறகு இமயவல்லியுடன் சற்று எட்ட இருந்த புதரில் மறைந்துகொண்டு அடுத்து நடப்பனவற்றைக் கவனிக்கத் தொடங்கினார். இளமாறனையும் தமது ஒற்றர்கள் இருவரையும் சூழ்ந்து பாண்டியப் படை வீரர்கள் உருவிய வாளுடன் நின்றிருந்தனர். இளமாறன் தோளிலும் மற்ற இரு ஒற்றர்கள் உடல்களிலுமிருந்த காயங்களிலிருந்து உக்கிரமான சண்டை அந்த இடத்தில் சில விநாடி களுக்காவது நடந்திருக்கவேண்டுமென்பதைப் புலவர் ஊகித்துக்கொண்டார். இமயவல்லி வேதனைப் பெரு மூச்சு விட்டாள். இனி இளமாறன் கதி அதோகதிதா னென்பது அவளுக்குச் சந்தேகமறப் புரிந்தது. அவனைக் காக்கும் வழி தனக்குத் தெரியுமென்று சேர மன்னனிடம் புலவர் சொன்னது வெறும் புரட்டுப் பேச்சென்று தீர்மானித்த அவள் புலவரைச் சுட்டுவிடுவதுபோல் பார்த்தாள். ஆனால் அவள் பார்வையைப் புலவர் கவனிக்கவில்லை. எதிரேயிருந்த கூட்டத்தின்மீதே அவர் பார்வை நிலைத்திருந்தது.

நிராயுதபாணியாக்கப்பட்ட இளமாறன் முன்பு நின்ற பாண்டிய சேனாதிபதி மருதன் உக்கிரத்துடன் கேட்டான்: "இப்பொழுது சொல், சேர மன்னர் எங்கே?" என்று.

பதிலுக்கு அவனை நோக்கி நகைக்கவே செய்தான் இளமாறன். "அவரை உன்னிடம் காட்டிக் கொடுக்கத்தான் சிறைமீட்டேனென்று நினைக்கிறாயா?" என்று வினவவும் செய்தான் அலட்சியமாக.

"பயங்கரமான காரியத்தைச் செய்திருக்கிறாய் வாலிபனே! இதன் விளைவு என்ன தெரியுமா உனக்கு?" என்று இரைந்தான் மருதன்.

"தெரியும். மரணதண்டனை" என்றான் இளமாறன்.

"இந்தச் சிறு வயதில் உயிரை இழப்பது விவேகமா?"

"உயிர்த் தியாகம் வயதைப் பொறுத்ததல்ல, பணியைப் பொறுத்தது."

"பாண்டிய மன்னருக்கெதிராகச் செய்யப்படும் பணி சிறந்த பணியா?"

"பாண்டிய வீரர்களுக்குச் சிறந்த பணியாகாது. ஆனால், நான் சேரநாட்டைச் சேர்ந்தவன். சிந்தித்துப் பார்."

இதைக் கேட்ட மருதன் வேங்கையைப்போல் சீறினான். "எப்படியும் சேரன் எங்களிடமிருந்து தப்ப முடியாது. இந்தக் காடு முழுவதையும் சோதனையிட என் வீரர்கள் விரைந் திருக்கிறார்கள். மீண்டும் சேர மன்னர் இந்தக் கோட்டைக்கு வந்து சேருவார்" என்று மார்தட்டினான் மருதன்.

"சற்றுத் திரும்பிக் கோட்டையைப் பாருங்கள் தளபதி" என்று கூறிச் சிரித்தான் இளமாறன்.

அவன் சொற்படி திரும்பிப் பார்த்த பாண்டிய சேனாதிபதியின் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தது.

பொட்டல் வெளியிலிருந்த பல இடங்களில் மூங்கில்கள் பற்றி எரிந்துகொண்டிருந்தன. அவற்றைப் பரவவிட்டால் கோட்டையே தீப்பிடிக்கும் என்பதை உணர்ந்த பாண்டிய சேனாதிபதி, “இது யார் வேலை?” என்று கூவினான்.

“நான்தான். சில இடங்களில் முன்னதாக மண்ணை அகற்றி வைத்திருந்தேன். இன்று வரும்போதுதான் தீ வைத்தேன்” என்றான்.

பாண்டிய சேனாதிபதியின் கோபம் எல்லை கடந்தது. “இவர்களை இழுத்துச் செல்லுங்கள் மதுரைக்கு. நான் தீயை அணைக்க ஏற்பாடு செய்துவிட்டு வருகிறேன்” என்று உத்தரவிட்ட சேனாதிபதி திடீரெனத் திரும்பி வீரர் நால்வருடன் கோட்டையை நோக்கி விரைந்தான். மற்ற வீரர்கள் இளமாறனையும் மற்ற இருவரையும் கட்டி இழுத்துப் புரவிகளில் ஏற்றிக் கையையும் காலையும் பிணைத்து அழைத்துக்கொண்டு சென்றனர்.

சில நிமிஷங்களில் அடியோடு காலியாகிவிட்ட காட்டில் புலவரும் இமயவல்லியும் மட்டும் தனித்து நின்றார்கள். புலவர் முகம் மார்பைத் தொட்டுக்கொண்டிருந்தது. அந்த வயதிலும் சாதாரண காலத்தில் கம்பீரமாயிருந்த அவர் உடல் அன்று அவரது வயோதிகத்தைப் பூர்ணமாகக் காட்டியது. அவர் விட்ட பெருமூச்சில் சோகத்தின் எல்லை இருந்தது. “பெரும் பணி முடிந்துவிட்டது இமயவல்லி” என்றார் புலவர்.

இமயவல்லி மௌனமாயிருந்தாள். புலவரே மறுபடியும் சொன்னார்: “இனி நீ எந்த வீரனுடனும் இங்கு வர வேண்டிய அவசியமில்லை” என்று நா தழுதழுக்க.

இமயவல்லிக்குத் துக்கம் தொண்டையை அடைத்துக் கொண்டது. “ஐந்தாவது பலியும் கொடுத்துவிட்டோம் புலவரே” என்றாள் அவள் கண்களில் நீர் சுரக்க.

"மனதைத் தளரவிடாதே இமயவல்லி. இன்னும் இந்தப் புலவன் உயிருடன் இருக்கிறான். இவன் நாக்கு இன்னும் கவி பாடும்" என்றார் புலவர், வருத்தத்தின் ஊடே துணிவையும் காட்டி.

"பாட்டினால் இவர் தப்புவாரா?" துக்கத்துடன் ஏளனத்தையும் காட்டினாள் இமயவல்லி.

"வாளினால் ஆகாதது தமிழகத்தில் பாட்டினால் ஆகியிருக்கிறது."

"அப்பொழுது சேர மன்னனை விடுவிக்க வாளின் உதவியை ஏன் தேடினீர்கள்?"

"பாட்டினால் சேரன் தப்ப இசையாததால்."

"சேரன் பிடிவாதத்துக்காக இந்த வாலிபரைப் பலி கொடுக்கத் துணிந்தீர்!"

"அதற்காக அல்ல இமயவல்லி."

"வேறெதற்காக?"

"நாட்டு நன்மைக்காக, தமிழகத்தின் அமைதிக்காக மீண்டும் போர்கள் ஏற்பட்டு மக்கள் மடியாதிருப்பதற்காக."

இமயவல்லி புலவர் காரணத்தை ஒப்புக்கொள்ள மறுத்தாளானாலும் அவள் மேற்கொண்டு ஏதும் பேச வில்லை. புலவரும் அதிகப்படியாக ஏதும் பேச இஷ்டப் படாமல் காட்டினூடே நடந்து தமது பர்ணசாலை இருக்கு மிடம் வந்தார். அதன் வாயிலிலிருந்த காட்சி அவரைத் திகைக்க வைத்தது. எந்த மூடுதேரில் இளமாறனை இமயவல்லி அழைத்து வந்தாளோ, எந்த மூடுதேர் அச்சு முறிந்து காட்டில் சாலையில் கிடந்ததோ, அதே மூடுதேர் செப்பனிடப்பட்டுப் புரவிகளுடன் நின்றிருந்தது. அதே சாரதி அதன்மீது அமர்ந்து பயணத்துக்குத் தயாராகக்

கையில் சாட்டையைப் பிடித்துக்கொண்டிருந்தான். புலவரையும் இமயவல்லியையும் கண்டதும் தலைதாழ்த்திய தேரோட்டி அவர்களிருவரையும் ரதத்தில் ஏறும்படி சைகை செய்தான்.

"ரதத்தை யார் அனுப்பியது?" என்று வினவினார் புலவர்.

"சித்தர்" என்று பதில் வந்தது சாரதியிடமிருந்து.

"அவருக்கு இந்த இடம் எப்படித் தெரியும்?"

"அவரைக் கேட்டால்தான் தெரியும்."

"எங்கே அவர்?"

பதிலுக்கு சாட்டையைத் தேரின் உட்புறம் காட்டினான் சாரதி. இரண்டு எட்டில் ரதத்தை அடைந்து உள்ளே தலையை நீட்டினார். தலையை நீட்டியவர் நீண்ட நேரம் தலையை வெளியே இழுக்கவேயில்லை. "நீயா! நீயா!" என்ற குரல் மட்டும் இருமுறை அவர் வாயிலிருந்து வியப்புடன் வெளிவந்தது. அடுத்த நிமிடம் அவரும் இமயவல்லியும் ரதத்தில் அமர, ரதம் மதுரையை நோக்கிப் பறந்தது. விடியற் காலைக்குச் சற்று முன்பே மகர மாளிகைக்குள் நுழைந்த மூவரில் சித்தர் மட்டுமே சிந்தை கலங்காதிருந்தார். மற்ற இருவர் முகமும் பேயறைந்ததுபோல் கிடந்தது.

மகர மாளிகையில் நீராடி புத்தாடை புனைந்து சிற்றுண்டி அருந்திய பின்பு புலவர் அறையில் கூடிய அந்த மூவரில் சித்தரே துவங்கினார் கதையை, "என்னை இன்னாரென்று நீங்கள் அறியவில்லை புலவரே!" என்று.

"எப்படி நான் ஊகிக்க முடியும்? எப்படி ஊகிக்க முடியும்?" என்று இருமுறை கூவிய புலவர் முகத்தில் வியப்பும் திகிலும் மண்டிக் கிடந்தன.

சித்தரின் இதழ்களில் இகழ்ச்சி நகை புரிந்தது. "முடியாதுதான் புலவரே, முடியாதுதான். இருப்பினும் என் குடும்பத்தில் கைவைக்கு முன்பு, நீர் தீர யோசித்திருக்க வேண்டும்" என்ற சித்தரின் இளநகை கோப நகையாக மாறியது.

## 22

## வீரனின் காதலி

**பு**லவர் பெருமானான குறுங்கோழியூர்க்கிழாருக்கும் சித்தருக்கும் இடையே நடந்த உரையாடலைக் கேட்ட இமய வல்லி ஏதும் புரியாமல் நிலைகலங்கி நின்றாளானாலும் அந்த இருவர் பேச்சில் அவர்கள் இருவருக்கும் மட்டுமே தெரிந்த பெரும் ரகசியம் ஏதோ புதைந்திருக்கிறதென்பதை மட்டும் மேலெழுந்தவாரியாக அறிந்துகொண்டாள். யாருக்கும் எதற்கும் அஞ்சாத புலவர் பெருமான் எழுந்து கம்பீரமாக மிக உயரமாகச் சீற்றம் நிறைந்த கண்களுடன் நின்ற சித்தர் முன்பு ஓரளவு திகிலுடன் உட்கார்ந்திருந்ததும் வியப்பாயிருந்தது, பாண்டியன் நெடுஞ்செழியன் சகோதரிக்கு. அந்த வியப்பு அவர்கள் மேற்கொண்டு பேசப் பேச அவளுக்கு எல்லை மீறி விரிந்தது. "என் குடும்பத்தில் கைவைக்கு முன்பு நீர் தீர யோசித்திருக்க வேண்டும் புலவரே" என்று சித்தர் கோபத்துடன் கூறியதும் அதிலிருந்து தப்பவோ என்னவோ, புலவர் பெருமான் இமயவல்லியை நோக்கித் திரும்பி, "மகளே! இவர் யார் என்பதை நீ அறியமாட்டாய்..." என்று துவங்கினார்.

அதைக் கேட்ட இமயவல்லி, "சித்தரை எனக்குத் தெரியும்" என்றாள் ஏதோ பதில் சொல்ல வேண்டும் என்பதற்காக.

"இவரைச் சித்தராகத்தான் உனக்குத் தெரியும். இவர் சித்தர் ஆவதற்கு முன்பு இருந்த நிலையை நீ உணர மாட்டாய்" என்றார் புலவர்.

"இவருடைய பூர்வ வாழ்க்கை எனக்குத் தெரியாதது உண்மைதான்..." என்று மேலும் ஏதோ சொல்லப்போன இமயவல்லியை இடைமறித்த குறுங்கோழியூர்க்கிழார், பெரும் வெடி ஒன்றை எடுத்து வீச முற்பட்டு, "இமயவல்லி! பல நாட்களாகப் புரியாத மர்மம் நேற்றிரவுதான் எனக்குப் புரிந்தது. பாண்டிய மன்னன் வில்லாசிரியரும் போர்த் தந்திரங்களை அவனுக்குச் சொல்லிக் கொடுத்தவருமான சித்தர் தமிழகத்தின் மாபெரும் தளபதியென்பதை நான் முன்பே அறிந்திருந்தால் நான் நடந்து கொண்டிருக்கக் கூடிய முறை வேறு. இவர் சேர மன்னனின் பழைய தளபதி விஜயமார்த்தாண்டன். படைகளை இயக்குவதிலும் முன்னேறித் தாக்குவதிலும் இணையற்றவர்" என்று கூறினார்.

இமயவல்லி பல விநாடி திக்பிரமை பிடித்து சித்தரையே பார்த்துக்கொண்டு நின்றாள். விஜயமார்த்தாண்டன் கதை தமிழகம் அறிந்தது. யானைக்கண்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை அவருக்கு இழைத்த அநீதியை மக்கள் சமீபகாலம் வரை பேசிக்கொண்டிருந்தார்கள். அவருக்குச் சேரன் இழைத்த அநீதியே அவன் வீழ்ச்சிக்கு அடிகோலியது என்பதையும் மக்கள் வாய்விட்டுப் பேசியதுண்டு. அந்த விவரங்களை அறிந்த இமயவல்லி நீண்ட நேரத்திற்குப் பிறகு, "இவரா அவர்!" என்று விசாரித்தாள் வியப்பு குரலில் எல்லை மீறி ஒலிக்க.

புலவர் வருத்தத்துடன் தலையை அசைத்து, "ஆம் இமயவல்லி! இவர்தான் விஜயமார்த்தாண்டன். சேரக் குடும்பத்தில் இணையிலாப் பற்றும் பக்தியும் கொண்ட இவர் மீதுதான் வீணர்கள் பேச்சைக் கேட்டு யானைக்கண் சேய் ராஜத் துரோகக் குற்றஞ்சாட்டினான். நாட்டை விட்டும் கடத்தினான். விஜயமார்த்தாண்டன் அன்று சேரன் அவையில் சீறிச் சென்றதை இன்றும் மக்கள் பேசுகிறார்கள் அல்லவா?" என்றார்.

விஜயமார்த்தாண்டன் சுமார் பதினெட்டு வருஷங்களுக்கு முன்பு சேரன் அவையில் பேசிய சொற்கள் அவை. அவற்றை மக்கள் வேதம்போல ஓதிக்கொண்டிருந்தார்கள் பல நாட்கள் வரை. "நீ விஜயமார்த்தாண்டனைப் புறக் கணிக்கவில்லை மன்னா! உன் நாட்டைப் புறக்கணிக் கின்றாய். உன் நாட்டை விட்டுச் செல்வது உன் தளபதியல்ல. சேரநாட்டு வாளொன்றும் செல்கின்றது இப்பொழுது. இனி இது காப்பாரற்ற நாடு. உன் காதில் பொய்களை ஓதி என்னிடம் உனக்கு விரோதத்தை ஏற்படுத்திய வீணர்கள் உன்னையும் காக்க மாட்டார்கள். இந்நாட்டையும் காக்க மாட்டார்கள். வீணர்கள் சொல்லுக்குச் செவி சாய்த்த மன்னன் எவனும் வாழ்ந்ததில்லை!" என்ற சொற்களைக் கர்ஜித்துவிட்டு விஜயமார்த்தாண்டன் சேரன் அரசவையி லிருந்து மறைந்தார்.

எங்கு போனார், என்ன ஆனார் என்பதை யாரும் அறியவில்லை. சேரமான் விடுதலைக்குப் பிறகு அந்த மகர மாளிகையில்தான் புலவரும் இமயவல்லியுங்கூட அறிந்தார்கள். சித்தர் மர்மத்தை அறிந்த இமயவல்லி அவர் சேரன் அவையில் சொன்ன வீரச் சொற்களை மீண்டும் புலவர் முன்னிலையில் ஓதினாள்.

அதைக் கேட்டதும் சித்தர் கோபம் ஓரளவு குறைந்தது. இமயவல்லியை நோக்கிய அவர் மெள்ளப் புன்முறுவலும் செய்தார். "குழந்தாய்! நான்கூட மறந்துவிட்டேன் அந்தப் பேச்சை. நீ நன்றாக நினைப்பில் வைத்துக்கொண்டிருக் கிறாயே?" என்று கூறினார்.

"நான் மட்டுமென்ன! உங்கள் வீரச் சொற்களைத் தமிழகமே மறக்கவில்லை" என்றாள் இமயவல்லி.

இந்த இருவர் பேச்சுக்குமிடையே புகாதிருந்த புலவர் அப்பொழுதுதான் மெள்ளப் புகுந்து, "விஜயமார்த்தாண்ட தளபதி தமது சொற்களைத்தான் மறந்தார் இமயவல்லி..." என்றார்.

"வேறெதை மறக்கவில்லை?" சித்தரின் குரல் கோபத்துடன் ஒலித்தது.

"கோபத்தை மறக்கவில்லை. பிறந்த நாட்டுக்கும் மன்னனுக்கும் பெரும் துரோகம் செய்திருக்கிறீர் சித்தரே" என்றார் புலவரும் மெள்ள வெறுப்பைக் காட்டி.

"நீர் என்ன செய்திருப்பீர் புலவரே! சேரர் குடும்பத் துக்காகத் தலைமுறை தலைமுறையாகப் போரிட்ட என் குடும்பத்துக்கு மாசு கற்பிக்கிறான் சேரன். என்னையும் அவை நடுவே அவமானப்படுத்துகிறான். நாட்டை விட்டுக் கடத்துகிறான். நான் ஊர் ஊராக அலைகிறேன். என் மனைவி அநாதையாக இருக்கிறாள். என் மகன் பிச்சைக் காரன் போல் வளர்கிறான், என் வீரன் ஒருவன் துணை கொண்டு. இந்த நிலையில் நீர் என்ன செய்திருப்பீர்?" என்று கர்ஜித்தார் சித்தர்!

அவருடைய கண்களில் கண்ட சீற்றத்தைத் தாள முடியாமல் தலையைக் கீழே குனிந்துகொண்டார் புலவர் பெருமான். சித்தரே மேற்கொண்டு பேசினார்: "ஏன்

புலவரே மௌனம்? சேரனின் வீரத்தைப் பாடிய உமது நாவு ஏன் பேசவில்லை? யானைக்கண்சேயின் அநீதியை நீர் ஏன் எதிர்க்கவில்லை? விஜயமார்த்தாண்டன் ஒழிந்தான் என்று நினைத்தீரல்லவா? அவன் ஒழியவில்லை; துறவி யானான். பாண்டியன் தலைநகரில் மடம் அமைத்தான் என்பதை நீர் உணரவில்லை புலவரே! அன்று நான் சேர அவையில் தனித்து நின்றேன். இங்கு மடம் அமைத்தும் அவனையும் தனியாக நிற்க வைக்கத் தீர்மானித்தேன். பாண்டியன் நெடுஞ்செழியனுக்கு விற்போரும் மற்போரும் வாட்போரும் சொல்லி வைத்தேன். பாண்டிய நெடுஞ் செழியன் சிறுவன்தான். ஆனால் வீரன். நெறி தவறாதவன். அறிவுமிக்கவன். அந்தச் சிறுவனைத் தாக்கிவிடலாம் என்று சேரனும் சோழனும் நினைத்தார்கள். ஐந்து வேளிர்களையும் துணை கொண்டார்கள். இது அநீதியல்லவா? இதை ஏன் நீர் தடுக்கவில்லை? புலவரே! சிறுவனை நசுக்க எழுவர் எழுந்தார்கள். ஏழு யானைகள் எழுந்தன. யானைகளின் தலைவனும் ஒரு யானைக்கண்சேய்தான். ஆனால் அவர்களை எதிர்க்கச் சென்றது இளஞ்சிங்கம் என்பதை அவர்கள் உணரவில்லை. அந்த இளஞ்சிங்கத்தின் ஆசான் வெறும் சித்தன், துறவியென்று நினைத்தது தமிழகம். அவன் விஜயமார்த்தாண்டன். பழிவாங்கக் காத்திருந்த தளபதி என்பதை உணரவில்லை."

"இந்தச் சொற்களைக் கடுஞ்சினத்துடன் உதிர்த்த சித்தர், "காரணமாகவே நான் பகல் வேளைகளில் வெளிவருவ தில்லை புலவரே! என் சஞ்சாரமெல்லாம் இரவில்தான். ஆகையால்தான் நான் யாரென்பதை யாராலும் ஊகிக்க முடியவில்லை. நான் யாரையும் கவனிக்கவில்லை. உம்மை மட்டும் கவனித்து வந்தேன். என் மகனை நீர் அழைத்த அன்றே புரிந்துகொண்டேன் உமது திட்டத்தை. என் மகன்

அழிந்தால் என் குடும்பம் அழிந்திருக்குமே, அதை யோசித்தீரா?" என்று கூறினார்.

இமயவல்லிக்கு மெள்ள மெள்ள விஷயங்கள் புரியலாயின. 'இளமாறன் சேரர் தளபதியும் இணையற்ற வீரருமான விஜயமார்த்தாண்டனின் குமாரன்! அந்த வீரர் குடும்பத்தில் பிறந்தவன்தான் சேர மன்னனைக் காக்க முடியும் என்பதை உணர்ந்ததால்தான் புலவரே அவனை வரவழைத்திருக்கிறார்' என்று தனக்குள்ளேயே இருமுறை சொல்லிக்கொண்டு வியப்பின் வசப்பட்டு வாயடைத்து நின்றாள்.

அதுவரை சித்தரின் சினத்தைக் கண்டு பேசாதிருந்த புலவரும் தமது ஆசனத்தை விட்டு எழுந்து சித்தரை நிமிர்ந்து நோக்கினார். அவர் கண்களில் பெரும் ஒளி வீசியது. சொற்களும் திடமாக வெளிவந்தன. அவர் உதடுகளிலிருந்து, "விஜயமார்த்தாண்டா! இந்த விஷயங்களில் உன் பார்வை வேறு, என் பார்வை வேறு" என்றார் மிகவும் உறுதியாக.

"என்ன பார்வை உமது?" என்று வினவினார் சித்தர்.

"நீ உன் குடும்பத்தை மட்டும் பார்க்கிறாய். நான் தமிழகத்தைப் பார்க்கிறேன். இருக்கும் மன்னர் மூவர் இந்தத் தமிழ் கூறும் நல்லுலகத்தில். இவர்களிடம் அடிக்கடி ஏற்படும் அகாரணச் சண்டையால் பெருவாரியான மக்கள் சாகிறார்கள். பாண்டியன் நெடுஞ்செழியன் வீரம் மகத்தானது. அத்துடன் உமது போர்த் தந்திரமும் சேர்ந்து சேரனை மூங்கில் கோட்டையில் சிறைப்படுத்திவிட்டது. ஒரு யானையைப் பிடித்தடைப்பதுபோல் பாண்டியன் நெடுஞ்செழியன் சேரனை அடைத்து வைத்தான். அந்த அவமானத்தைச் சேர மக்கள் தங்கள் சொந்த அவமானமாக

நினைக்கிறார்கள். இப்பொழுது சென்று பார் விஜய மார்த்தாண்டா உன் நாட்டுக்கு. சேர மக்கள் பாண்டியனை விஷம்போல் வெறுக்கிறார்கள். இதுவரை அரசரிருவருக்கும் இருந்த விரோதம் இப்பொழுது பாண்டிய—சேர மக்களிடம் பரவி இருக்கிறது. இது தமிழகத்திற்கு நல்லதல்ல. பிற்கால போர்களுக்குத்தான் வித்து இது. அந்த வித்தை நாசப்படுத்த, மக்களிடை விரோதத்தை அகற்ற, சேரனை விடுவிப்பதுதான் ஒரே வழி. என் ஒரு சொல்லுக்குப் பாண்டியன் பணிந் திருப்பான்; சேரனை விடுதலையும் செய்திருப்பான். ஆனால் அத்தகைய விடுதலையை சேரன் விரும்பமாட்டான். ஆகவே அந்த நாட்டின் வீரன் கையாலேயே செய்து முடிக்க எண்ணினேன்; ஆகையால் உன் மகனைத் தேர்ந் தெடுத்தேன். சேரநாட்டைப் பலமுறை காத்திருக்கும் விஜய மார்த்தாண்டன் மகனைவிட இதற்குத் தகுதியுள்ளவன் யார்?" என்று புலவர் அழுத்தந் திருத்தமாகப் பேசினார்.

"என் மகன்தான் இளமாறன் என்பது உமக்கு எப்படித் தெரியும்?" சித்தர் கேட்டார் வெறுப்புடன்.

"உன் குடும்பத்தில் அக்கறையுடையவன் நான் என்பது உனக்குத் தெரியாதா? உன் மகன் வளர்ச்சி மீது ஒரு கண் வைத்துக்கொண்டே இருந்தேன். சமயம் வந்து பலபேரை மூங்கில் கோட்டைக்கு ஏவிப் பார்த்து தோல்வியடைந்தேன். கடைசியாகத்தான் உன் மகனைத் தேர்ந்தெடுத்தேன்!" என்றார் புலவர்.

"அவன் இந்த முயற்சியில் இறந்திருந்தால்...?" சித்தரின் கேள்வி கடுமையுடன் எழுந்தது.

புலவர் அச்சமின்றி ஏறிட்டு நோக்கினார் சேரநாட்டுப் பழைய தளபதியை. "நீ இன்னும் சேரநாட்டுத் தளபதியா யிருந்து உன் மகன் ராஜ சேவைக்குத் தேவையாயிருந்தால் என்ன செய்வாய்?" என்று வினவவும் செய்தார்.

சித்தர் தலைகுனிந்தார். "அந்தச் சந்தர்ப்பத்தில் நான் சந்தோஷமாக என் மகனைப் பணிக்கு அனுப்பிப் பலியும் கொடுப்பேன்" என்று உள்ளூர சொல்லிக்கொண்டார்.

அவர் எண்ணங்களை அறிந்த புலவர் சொன்னார்: "ஆம் விஜயமார்த்தாண்டா, அரச வேலைக்கு நீ கண்டிப்பாய் மகனைப் பலி கொடுத்திருப்பாய். அதையே தான் நானும் செய்தேன். ஆனால், அவன் பலியாகா திருப்பதற்காக வேண்டிய அனைத்தையும் செய்தேன்" என்று.

"என்ன செய்தீர்?"

"இமயவல்லியை அவனுடன் துணைக்கு அனுப்பி னேன்."

"மற்றவர்களுக்கும்தான் துணை அனுப்பினீர்."

"மற்றவர்களுடன் தனியாக அனுப்பவில்லை" என்று சுட்டிக் காட்டினார் புலவர்.

அதன் உட்கருத்தைப் புரிந்துகொண்ட இமயவல்லி தலையைத் தொங்கப் போட்டுக்கொண்டாள். புலவரும் விஜயமார்த்தாண்டனும் தங்கள் பரஸ்பர சந்தேகங்களைத் தீர்த்துக்கொள்ளப் பேசினார்கள். "ஆமாம்! இவர்களுக்கு எதற்காக மயக்க மருந்து கொடுத்தாய்?" என்று கேட்டார் புலவர்.

"என் மகனை இந்தப் பணிக்கு நீர் ஏவியது தெரிந்ததும் வழியில் இவர்கள் ரதத்தை மடக்கி என்னிடம் அழைத்துச் சென்றேன். இவர்கள் புறப்பட்டதை நெடுஞ்செழியன் உடனே உணர்ந்திருப்பானென்பது எனக்குத் தெரியும். ஆகையால் அவன் ஒற்றர்களை ஏமாற்ற என் இருப்பிடம் அழைத்துச் சென்றேன். மயக்கம் கொடுத்து இருவரையும் உமது வனவாசிகள் கண்டுபிடிக்கும் இடத்தில் படுக்க

வைத்தேன். ரதத்தை அச்சு முறித்து ஓரிடத்தில் போட்டேன். சாரதியை மண்டையிலடித்துக் காயப்படுத்தி என்னிடம் அழைத்துச் சென்றேன். அடுத்த இரண்டு நாள்கள் இளமாறனையும் இமயவல்லியையும் பாண்டிய வீரர்கள் தேடிக்கொண்டிருந்தார்கள். இமயவல்லி மட்டும் மகர மாளிகை திரும்பிவிட்டதாக அறிந்தேன். ஆனால் என் மகன் உமது பணியை மேற்கொண்டுவிட்டான் என்பதையும் உணர்ந்தேன். ஆகவே என் மகன் உதவிக்கு விரைந்தேன்" என்றார் சித்தர்.

"உமது உதவியால்தான் இளமாறன் தப்பினானா?" என்று விசாரித்தார் புலவர்.

"இல்லை புலவரே! என் மகன் தானாகவே தனது திட்டத்தை வகுத்துக்கொண்டான். வீரமார்த்தாண்டன் அவனை அந்தப் பாழடைந்த மண்டபச் சுரங்கத்தில் இறங்கி விட்டானல்லவா?"

"ஆம்."

"இளமாறன் அந்த வழி செல்லவில்லை."

"ஏன்?"

"அந்த வழியில் போனவர்கள் யாரும் மீளாததால் அவ்வழியை நிராகரித்துவிட்டதாக அவனே சொன்னான் என்னிடம்."

"பின் எப்படிச் சென்றான்?"

"வீரமார்த்தாண்டன் சென்றதும் அவன் மீண்டும் பாறையை நகர்த்தி வெளியே வந்தான். பிறகு அன்று இரவு கோட்டைக்கு வெளியிலிருந்த பொட்டல் வெளியில் நடந்து பார்த்தான். சில இடங்களில் மூங்கில் மளுக் மளுக்கென்ற தாம். பிறகு தவழ்ந்து பார்த்திருக்கிறான். அப்பொழுது

கீழ்த்தரையில் மூங்கிலும் தாங்கின. ஆகவே இருமுறை அந்தப் பொட்டல் வெளியில் தவழ்ந்து கோட்டை வரையில் வந்திருக்கிறான். பிறகு தன்னைத் திடப்படுத்திக்கொண்டு அடுத்த நாளிரவு இரண்டாம் ஜாமத்தில் முழங்கால்களால் தவழ்ந்து வந்து கோட்டைச் சுவரில் ஏறி உள்ளே குதித்திருக்கிறான். அவன் தீர யோசித்துச் செய்திருக்கிறான், இந்த சாகசப் பணியைப் புலவரே! பொட்டல் வெளியில் பாண்டிய வீரர், யாரையும் எதிர்பார்க்க மாட்டார்கள் என்பது அவனுக்குத் தெரியும். ஆகவே அந்தப் பகுதியில் அதிகக் காவலும் கோட்டைக்குள் இருக்காது என்பது அவனுக்குத் தெரியும்."

"இதையும் அவன் சொன்னானா?"

"ஆம். கோட்டைக்குள் நான் அவனைச் சந்தித்தேன். இரவில் நான் புலவர் ஒற்றனென்று கூறினேன். நம்பினான். ஆனால், நான் சொன்ன எதையும் அவன் கேட்கவில்லையே! அவனிஷ்டப்படியே திட்டமிட்டுச் சேர மன்னனை விடுவித்தான். சேர மன்னன் சிறை அறையைக் காத்து நின்ற இரு வீரர்களை வெட்டியும் போட்டுவிட்டான்." இதைச் சொன்ன சித்தர் பெருமூச்சு விட்டார் சோகத்துடன்.

புலவர் முகத்திலும் கவலையின் சாயை படர்ந்தது. "இப்பொழுது அவன் பாண்டியன் வசம் சிக்கியிருக்கிறானே விஜயமார்த்தாண்டா!" என்றார் புலவர் மிதமிஞ்சிய கவலை யுடன்.

"ஆம் புலவரே!" என்றான் விஜயமார்த்தாண்டன் சோகத்தால் சற்றே உடல் நடுங்க. "இத்துடன் என் மகன் ஆயுளும் முடிந்தது" என்றும் கூறினார் சித்தர்.

"இல்லை முடியவில்லை. இந்தப் புலவன் இருக்கும் வரை முடியாது" என்றார் புலவர்.

"ஒற்றர்களுக்குக் கிடைக்கக்கூடிய தண்டனை உமக்குத் தெரியுமல்லவா?" என்று கேட்டான் விஜயமார்த்தாண்டன் புலவரை நோக்கி.

"தெரியும். மரண தண்டனை" என்றார் புலவர்.

"அதுதான் கிடைக்கும் என் மகனுக்கு. என் மகன் அழிந்தான் புலவரே. என் குடும்பம் நசிந்தது. உமது மனோரதம் நிறைவேறியது" என்ற சித்தரின் கண்களில் நீர் சுரந்தது.

புலவர் சில விநாடி சித்தரையும் இமயவல்லியையும் உற்றுப் பார்த்தார். பிறகு அறையின் ஒரு மூலைக்குச் சென்று இரண்டு ஓலை நறுக்குகளை எடுத்து எழுத்தாணியால் ஏதோ கிறுகிறுவென்று எழுதினார். பிறகு பெரும் சால்வையொன்றை எடுத்துப் போர்த்திக் கொண்டார். "வாரும் சித்தரே! நெடுஞ்செழியனிடம் போவோம்" என்று கூறிக் கொண்டு கிளம்பினார். சித்தர் எதிரேயிருந்த இமயவல்லியை நோக்கினார். அவள் அவ்விருவரையும் வெறித்துப் பார்த்தாள். "நீயும் வருகிறாயா பாண்டிய சகோதரி?" என்று கேட்டார் சித்தர்.

"நான் வரவில்லை. நீங்கள் செல்லுங்கள்" என்றாள் இமயவல்லி பெரு வெறுப்புடன் இருவரையும் நோக்கி.

"ஏன்?" என்று புலவர் வினவினார்.

"என் காதலர் வீரர். பிறர் அவருக்கு உயிர்ப்பிச்சை கேட்பதை விரும்பமாட்டார். வீரன் அன்பைப் பெற்ற நானும் விரும்பவில்லை அதை. பிச்சைக்காரர்களாகிய நீங்களே செல்லுங்கள்" என்று கூறிய இமயவல்லி திடீரென எழுந்து அவர்களிருவரையும் தள்ளிக்கொண்டு அறைக்கு வெளியே சென்று படிகளில் இறங்கித் தடதடவென்று ஓடினாள்.

# 23

# நெடுஞ்செழியன் நீதி!

வீரனான காதலனுக்கு உயிர்ப்பிச்சை கேட்பதை விரும்பாத வீரப் பெண்மணியான இமயவல்லி தங்களைத் தள்ளிக்கொண்டு கீழே ஓடிவிட்டதும் புலவரும் சித்தரும் ஒரு கணம் வியப்பின் வசப்பட்டார்களென்றாலும், அடுத்த விநாடி பாண்டியன் சகோதரியைப்பற்றிச் சிறிதும் சிந்தியாத வர்களாய் இளமாறனுக்கிருந்த ஆபத்தே உள்ளத்தில் மேலெழுந்து நிற்க, மன்னன் நெடுஞ்செழியன் அரண்மனையை நோக்கி வெகு வேகமாகச் சென்றனர். அப்பொழுது பொழுது புலர்ந்து எட்டு நாழிகைக்கு மேலாகி விட்டதால் கதிரவன் கிரணங்கள் பாண்டியனின் அரண்மனைச் சிகரங்களிலிருந்த தங்கக் கலசங்களில் பிரதிபலித்துப் பாண்டியன் கீர்த்தியைப்போல ஜாஜ்வல்லிய மாகப் பிரகாசித்துக்கொண்டிருந்தன. அவன் அரண்மனை யின் ஆரம்பக் கட்டுகளிலிருந்த யானைக் கூடங்களில் கேட்ட யானைகள் பிளிறும் ஒலிகளும், குதிரை மண்டபத்தில் கேட்ட புரவிகளின் கனைப்புச் சத்தங்களும் அவன் படை பலத்துக்குச் சான்று கூறின. வைகையிலிருந்து நீராடி வந்து கொண்டிருந்த அந்தணர் வேதமோதிய சப்தமும், ஓதுவார் களின் தமிழிசை ஒலிகளும், அறநெறி தவறாத, மதத்தில் பற்றுடைய மாமன்னன் ஆட்சியை வலியுறுத்தின. பண்டக சாலைகளின் வணிகர் கூச்சலும், வயலுக்குச் செல்லத் துவங்கிய கால்நடைகளின் கழுத்துக்களில் ஆடிய மணி களின் அரவமும், அருட்செல்வம் பொருட்செல்வத்தோடு கால்நடைச் செல்வமும் பாண்டியன் நாட்டில் வளர்ந்து நாட்டை வளப்படுத்தியதைக் குறிப்பிட்டன.

இப்படிப் பல செல்வமும் பொருந்திய மதுரையம் பதியில் எத்தனையோ நாட்கள் புலவர் நடந்திருக்கிறார்.

நடந்த சமயங்களில் இந்தச் செல்வங்களைக் குறிப்பிட்ட ஆதாரங்களைக் கண்டு மகிழ்ந்திருக்கிறார். கவிதைகளும் இயற்றியிருக்கிறார். ஆனால் இளமாறனை மீட்கச் சென்ற இந்த தினத்தில் அவர் எதையும் கண்டாரில்லை, கேட்டாரில்லை. மகிழ்ந்தாரில்லை.

உள்ளே துன்பப் புனல் அள்ளித் தெளிக்க, சித்தருடன் மதுரை வீதிகளில் நடந்து பாண்டியன் அரண்மனையின் பல கட்டுகளையும் கடந்து சென்று ஆஸ்தானத்தை அடைந்த புலவர் பெருமான் அங்கிருந்த கட்டியங்காரனை விளித்து, "புலவர் வந்திருப்பதாகத் தெரிவி புரவலனிடம்" என்று ஆணையிட்டு அங்கிருந்த ஆசனமொன்றில் அமர்ந்து, சித்தரையும் அமரச் சொன்னார் மற்றோர் ஆசனத்தில். சித்தர் அமரவில்லை. மைந்தன் உயிருக்குப் பரியவந்த அந்தச் சமயத்திலும், முகத்தில் உணர்ச்சிகள் தெரியவொட்டாமல் மனத்தை இரும்பாக்கிக்கொண்டு கைகளை மார்பில் கட்டியவண்ணம் நின்றுகொண்டே இருந்தார். அவர்களை அதிக நேரம் காக்க வைக்காமல் நெடுஞ்செழியன் வெகு விரைவில் தன் ஆஸ்தான அந்தரங்க மண்டபத்தை அடைந்தான். ஆசனத்தில் அமர்ந்தான். மன்னன் வந்ததும் புலவர் எழுந்து தலை வணங்கினார். சித்தரும் சிரம் தாழ்த்தினார்.

பத்தொன்பது ஆண்டுகளே பூர்த்தியாகி இருபதை எட்டிப் பார்த்துக்கொண்டிருந்ததால் இளம் முகத்துடன் குழந்தைபோல் காட்சியளித்த பாண்டியன் நெடுஞ்செழியன் இதழ்களில் இலேசாகப் புன்முறுவல் விரிந்தது. "இரண்டு ஆசிரியர்களையும் ஒரே சமயத்தில் வணங்கும் வாய்ப்பு

இன்றுதான் கிடைத்தது எனக்கு" என்று கூறிய பாண்டிய மன்னனும் தலைவணங்கினான் அவர்களுக்கு. பாண்டியனின் புன்முறுவல் விரிந்த இன்முகங் கண்ட இரு ஆசிரியர்களும் சில விநாடி சொல்லிழந்து நின்றனர். ஆகவே நெடுஞ்செழியனே கேட்டான் தொடர்ந்து, "இந்தப் பாக்கியத்தை நான் அடைய நேர்ந்ததற்குக் காரணம் ஏதாவதிருக்கிறதா?" என்று.

சித்தர் பதிலேதும் சொல்லவில்லை. புலவரே சமாளித்துக்கொண்டு பேசினார்: "மன்னா, நீ வாழி! உன் கொற்றம் வாழி!" என்று வாழ்த்துச் சொற்களைக் கூறிய புலவர், "மன்னா! உன்னிடம் உன் ஆசிரியர் இருவரும் இரக்க வந்திருக்கிறோம்" என்றார்.

நெடுஞ்செழியன் பதிலேதும் சொல்லாமலே புன்முறுவலே செய்தான். புலவர் மேற்கொண்டு சொன்னார்: "மன்னா! இரப்போருக்குக் கொடுத்துச் சிவந்த உன் கை மீண்டும் சிவக்கட்டும்" என்று.

"பொன் வேண்டுமா புலவரே; நிரம்பத் தருகிறேன்" என்றான் மன்னன்.

"பொன்னிலும் உயர்ந்தது வேண்டும்" என்றார் புலவர்.

"நிலம் வேண்டுமா?"

"அதனிலும் உயர்ந்தது."

"என் உயிர் வேண்டுமா?"

"உன் உயிரால் பல உயிர்கள் வாழ்கின்றன. தமிழ் வாழ்கின்றது. அது வேண்டாம் எனக்கு."

"வேறென்ன வேண்டும்?"

"பிச்சை வேண்டும். உயிர்ப்பிச்சை வேண்டும்" என்றார் உணர்ச்சியுடன் புலவர்.

"யாருக்கு?" நெடுஞ்செழியன் சர்வசாதாரணமாகக் கேட்டான்.

புலவர் சித்தரைச் சுட்டிக்காட்டி, "இவர் மகனுக்கு" என்றார். இதைக் கேட்ட நெடுஞ்செழியன் வியப்பின் வசப்படுவானென்று எதிர்பார்த்த சித்தரும் புலவரும் ஏமாந்தே போனார்கள். "யாருக்கு? இளமாறனுக்கா?" என்று வினவினான் நெடுஞ்செழியன், எந்தவித வியப்பும் குரலில் காட்டாமல். சித்தரும் புலவரும் பிரமை பிடித்து நின்றார்கள்.

"மன்னா! மன்னா! எங்கள் மீதும் நீ ஒற்றர்களை ஏவுகிறாயா!" என்று திகிலுடனும் கோபத்துடனும் கேட்டார் புலவர்.

நெடுஞ்செழியன் ஆசனத்திலிருந்து எழுந்து நின்ற புலவரை நோக்கினான். "புலவரே! நான் பெரிய அரசை நிர்வகிக்க வேண்டியிருக்கிறது. ஏராளமான மக்களின் உயிருக்கும் நலனுக்கும் நான் பொறுப்பாளி. அதற்கு இடையூறு ஏற்படும் எந்த விஷயத்திலும் நான் எச்சரிக்கை யுடனிருக்கிறேன். இது அரசன் கடமையல்லவா?" என்று கேட்டான்.

புலவர் ஆமென்பதற்கு அறிகுறியாகத் தலையை அசைத்தார். பாண்டியன் மேலும் தொடர்ந்து சொன்னான்: "எனக்கும் என் குடும்பத்தாருக்கும் கல்வி கற்பிக்க உமக்கு மகர மாளிகையை அளித்தேன். அந்தப் பகுதிக்கு யாரும் செல்லக் கூடாதென்றும், அரவம் ஏதும் அந்தப் பகுதியில் கேட்கக் கூடாதென்றும், உமது அமைதிக்கு எந்தவிதத்திலும் பங்கம் வரக்கூடாதென்றும் உத்தரவிட்டேன். ஆனால் புலவரே! உமது கல்விக்கூடம் சதிக்கூடமாயிற்று. சிறுவனான என்னை, 'யானைக்குட்டியைப் பிடிப்பதுபோல் பிடிப்பேன்' என்று பறைசாற்றிய சேரனை விடுவிக்க அங்கு

ரகசியமாக வீரர்களை வரவழைத்தீர். நான் அப்பொழுதும் தலையிடவில்லை. என் சகோதரியின் ரதத்தை எந்த வீரனும் தடுக்க முடியாதாகையால் அவளையும் உமக்குத் துணை சேர்த்துக்கொண்டீர். இத்தனையிலும் நான் தலையிட வில்லை. நான்கு வீரர்களை ஒருவர் பின் ஒருவராக மூங்கில் கோட்டைக்கு அனுப்பினீர். அங்கு அவர்களுக்குக் கிடைத்த கதியிலும் நான் தலையிடவில்லை. உள்ளே சிறைப்பட்ட வீரனை என்ன செய்வதென்று கோட்டைக் காவலர்கள் கேட்டார்கள். ஒற்றர்களுக்கு உண்டான தண்டனையை அளிக்கும்படியும் பிணத்தை மட்டும் காட்டுப்பகுதியில் எறிந்து விடும்படியும் கூறினேன். வீரர்கள் யாராவது இருந்தால் காட்டுப் பகுதியில்தான் இருக்கவேண்டும் என்று எனக்குத் தெரியும். அவர்களை நான் தாக்க உத்தரவிட வில்லை. தாக்க அவசியமில்லை என்று விட்டு வைத்தேன். நான்கு பேர் மரண தண்டனை அடைந்து பிணங்கள் காட்டில் எறியப்பட்டால் நீங்கள் உங்கள் முயற்சியைக் கைவிடுவீர்களென்று நினைத்தேன். நீங்கள் கைவிடவில்லை. அதற்கு மாறாக இப்போது சிறையிலிருக்கும் வாலிபனை வரவழைத்தீர்கள். அவன் திறனை முதல் நாளிரவே நான் புரிந்துகொண்டேன். அவனுக்கும் சித்தருக்கும் ஏதோ சம்பந்தமிருப்பதையும் புரிந்துகொண்டேன். மருதன் கத்தியை நிமிஷ நேரத்தில் தன் வாளால் சுழற்றி எறிந்தான் இளமாறன். அந்த வாள் சுழற்றும் முறையை சித்தர் எனக்கு மட்டுமே கற்பித்திருந்தார்.

இந்த இடத்தில் சற்று சம்பாஷணையை நிறுத்திய பாண்டியன் மற்ற இருவர் மீதும் கண்களைத் திருப்பி னான். இருவரும் பதில் சொல்லாது போகவே அவனே சொன்னான்: "அப்படியொரு பயிற்சியைப் பார்த்தவுடன் உண்மையை ஆராயத் தொடங்கினேன். இளமாறனை

மூங்கில் கோட்டைக்குச் செல்லும் வழியில் தடுக்க மருதனை அனுப்பினேன். பலிக்கவில்லை. மேற்கொண்டு முயன்றிருப்பேன். சித்தர் கையாண்ட முறைகளால் ஏமாந்தேன். வண்டி அச்சு முறிந்து கிடந்த காரணம் இப்பொழுது எனக்குத் தெரிகிறது. எப்படியும் சேரமான் தப்பிவிட்டான், இளமாறன் உதவியாலும் சித்தரின் உதவியாலும்."

பிறகு சித்தர் மீது தன் விழிகளை நிலைக்கவிட்டு, "உம்மைச் சித்தரென்று அழைக்கட்டுமா, பழைய பெயர் சொல்லி அழைக்கட்டுமா, தளபதியாரே?" என்று வினவினான்.

புலவரும் விஜயமார்த்தாண்டனும் பிரமை பிடித்து நின்றார்கள். இத்தனையும் தெரிந்திருந்தும் சேரனை ஏன் தப்பவிட்டான் பாண்டியன் என்று தங்களுக்குள்ளேயே கேட்டுக்கொண்டார்கள். "நான் தப்பவிடவில்லை சேரமானை, புலவரே! இளமாறன் தந்திரத்தால்தான் சேரமான் தப்பினான். கோட்டைக் காவலர் பழைய சுரங்க வழியில் இளமாறனை எதிர்பார்த்தார்கள். யாரும் எதிர் பார்க்காத, ஏற்கெனவே சேரநாட்டு யானைப்படை வீழ்ந்து மடிந்த பொட்டல் வெளி அகழிகளின் வழியில் அவன் வந்தான், அதுவும் இரண்டு நாள் கழித்து. அந்த இரண்டு நாளில் இடையிடையே மண்ணைக் கலைத்து, மூங்கில்களை வெளியில் தெரியும்படி செய்திருந்தான். பிறகு அவனும் சேரனும் தப்பியபோது வீரர் அம்பு எய்வதைத் தடுக்க மூங்கில்களைப் பற்றவும் வைத்தான். மூங்கில் கோட்டையின் பாதுகாப்புக்கு அத்தியாவசியமான மூங்கில் அகழிகள் பெரிதும் சேதப்பட்டுவிட்டன புலவரே. இஷ்டப்பட்டிருந் தால் நான் சேரனைத் தடை செய்திருக்க முடியும். ஆனால்

செய்யவில்லை. ஏன் தெரியுமா?" என்று விளக்கினான் பாண்டியன்.

"ஏன்?" என்றார் புலவர் நா தழுதழுக்க.

"வீரத்துக்கு வணங்கினேன். இளமாறன் வீரத்தை வீணடிக்க நான் இஷ்டப்படவில்லை" என்றான் நெடுஞ்செழியன்.

புலவர் முகத்தில் சிறிது தைரியக்குறி தோன்றியது. "அப்படியானால் இளமாறனை மன்னித்து விடுகிறாயா மன்னா?" என்று ஆவலுடன் வினவினார் புலவர்.

நெடுஞ்செழியன் முகத்தில் சித்தரோ புலவரோ ஊகிக்க முடியாத உணர்ச்சி பரவியது. "எப்படி மன்னிக்க முடியும் புலவரே? இந்த நாட்டில் நீதியென்பது ஒன்றுண்டு. அதை மன்னனான நான் எப்படி மீற முடியும்?" என்று வினவினான்.

புலவர் முகத்தில் வருத்தக்குறி படர்ந்தது. அதைக் கண்ட நெடுஞ்செழியன் உறுதியான குரலில் கூறினான்: "வருந்திப் பயனில்லை புலவரே! இளமாறன் செய்தது குற்றம் குற்றந்தான். பாண்டிய நாட்டு விரோதியை விடுவித்திருக் கிறான். கோட்டையின் காவலர் சிலர் சேரனாலும் இளமாற னாலும் மாண்டிருக்கின்றனர். ஆகவே இளமாறனுக்கு நீதி வழங்கப்படும் இந்த நாட்டு விதிகளின்படி" என்று.

"பாண்டியா! நெடுஞ்செழியா! உனக்கு நானளித்த வித்தைக்குக் குருதட்சணை கேட்கிறேன். அவன் உயிரை எனக்குத் தட்சணையாகக் கொடு" என்று மன்றாடினார் புலவர்.

"உயிருக்கு ஆபத்தில்லை அவனுக்கு" என்ற பாண்டியன் "உயிருக்கு ஆபத்தில்லை புலவரே! அவன்

நிலையில் நானிருந்தால் நான் செய்திருக்கக் கூடியதும் அதுதான். சேரநாட்டவன் சேரனை விடுவித்தான். ஆகவே அவனுக்கு ஆயுட்சிறை அளித்துவிட்டேன்" என்ற பாண்டியன், "அது கிடக்கட்டும் புலவரே! நீர் ஏதாவது பாட்டெழுதியிருப்பீரே, சேரமான் விடுதலைபற்றி" என்றும் வினவினான்.

புலவர் தமது மடியிலிருந்த இரு ஓலை நறுக்குகளை எடுத்து மன்னன் கையில் கொடுத்தார். மன்னன் உரக்கப் படித்தான்:

"மாப்பயம்பின் பொறை போற்றாது
நீடுகுழியகப்பட்ட பீடுடைய ஏறுழ்முன்பின்
கோடு முற்றிய கொல்களிறு
நிலைகலங் குழிகொன்று இணைபுல்கத் தலைக்கூடியாங்கு
நீ பட்ட அருமுன் பின் பெருந்தளர்ச்சி பலருவப்ப"

இதுவரை படித்ததும் தலையசைத்த பாண்டியன், "நன்று புலவரே! நன்று! படுகுழி வீழ்ந்த யானையொன்று குழியிலிருந்து தப்பி மீண்டும் தன் இனம் சேர்ந்து மகிழ்ந்ததை உவமையாகக் காட்டியிருக்கிறீர். அது மட்டுமா, இதோ பின்னர் இனிச் சேரமானின் பகைவர் அவனுக்குப் பணிவாரேயன்றி, பகைமை காட்டார் என்று கவி புனைந் திருக்கிறீர். சிறப்புக் கவிதான் புலவரே! ஆனால் இதை நீர் பாடவேண்டிய இடம் மதுரையல்ல. கேட்க வேண்டியவனும் நானல்ல."

புலவர் முகத்தில் குழப்பம் தெரிந்தது. "என்ன சொல்கிறாய் பாண்டியா?" என்று வினவினார் புலவர்.

"சேரமானுக்கு இந்தக் கவிதையைச் சமர்ப்பியுங்கள்" என்று ஓலை நறுக்குகளைப் புலவரிடம் நீட்டினான் நெடுஞ்செழியன்.

புலவர் ஸ்தம்பித்து நின்றார். "என்னை நாடு கடத்து கிறாயா பாண்டியா?" என்று வினவினார் கோபத்துடன்.

"அது சேரன் குணம். இதோ தளபதியை நாடு கடத்த வில்லை. சேரமானிடம் அன்புள்ள புலவரை அங்கு செல்லப் பணிக்கிறேன். உங்களுக்கு இன்று பகலில் ரதம் வரும் மகர மாளிகைக்கு" என்றான்.

புலவர் வாயடைத்து நின்றார். "என்னை என்ன செய்ய உத்தேசம்?" என்று கேட்டார் சித்தர்.

"நீர் எனக்கெதிராகச் சதி ஏதும் செய்யவில்லை. உமது மகனுக்கு ரகசிய வழியைக் காட்டக்கூட முனையவில்லை நீர். ஆகவே நீர் திரும்ப மடத்திற்குச் சென்று வழக்கம்போல் மக்களுக்குப் பணி செய்யும்" என்றான் நெடுஞ்செழியன்.

"என் மகன்?"

"அவனுக்குத்தான் ஆயுள் சிறை விதித்திருக்கிறேனே!"

"எங்கிருக்கிறான் அவன்?"

"சிறையிலிருக்கிறான். இப்பொழுதுதான் அவனது காவலாளியை அனுப்பினேன், வாருங்கள்" என்ற பாண்டியன் அவ்விருவரையும் அழைத்துக்கொண்டு அரண்மனையின் ஒரு மூலையில் இருந்த ஒரு சிறு சிறைக்கூடமொன்றுக்கு வந்தான். சிறைக்கூடக் கதவு திறந்தே இருந்தது. காவலாளி யாரையுங் காணோம். "எங்கே காவலர்?" என்றார் சித்தர். அறைக்குள் நுழைந்து ஓரிடத்தில் நின்ற பாண்டியன் நெடுஞ்செழியன், "அதோ" என்று தூர இருந்த அறையைக் காட்டினான்.

அங்கு கண்ட காட்சியைக் கண்டு புலவரும் சித்தரும் பிரமித்தனர். அந்த அறையில் இளமாறனும் இமயவல்லியும் ஒருவரையொருவர் இமைகெட்டாமல் பார்த்துக்கொண்டு

நின்றிருந்தனர். அவர்கள் கைகள் பிணைந்து நின்றன. “இவள்தான் காவலாளி சித்தரே! இவன் சிறைக்கூடம் இனி இவளிருப்பிடம்” என்று கூறிய நெடுஞ்செழியன் சிறைக் கூடத்தை விட்டுச் சென்றான்.

புலவரும் சித்தரும் ஒருவரையொருவர் பார்த்து விழித்தனர். “சேரமானை மீட்கச் சதி செய்த எனக்கு நாடு கடத்தல். துறவியான உமக்கு மடம். வீரனுக்கு அவன் விரும்பிய பரிசு! பாண்டியா! நெடுஞ்செழியா! உன் நீதியின் நேர்மை என்ன! வாழி நீ!” என்றார் புலவர். சித்தர், நெடுஞ்செழியன் சென்ற திசைநோக்கித் தலைவணங்கினார்.

இவை எதையும் பரஸ்பரம் சிறைப்பட்டுக் கிடந்த இளமாறனும் இமயவல்லியும் கவனிக்கவில்லை. கண்கள் கண்களைக் கவ்வி நின்றமையால் உலகத்தில் வேறெதையும் பார்க்கச் சக்தியற்றன.

❖

பாலாஜி ஆப்செட் பிரிண்டர்ஸ்
23633094 -23631794